பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி

# கல்வியின்
# தத்துவ அடிப்படை

பகுதி II

01202

பட்டப் பின் ஆசிரியர் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் தத்துவ அடிப்படை

8–11 அத்தியாயங்கள்

பட்டப்பின் ஆசிரியர் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம், மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளடக்கம்** **பக்கம்**

**8ஆம் அத்தியாயம்**

சமயக் கல்வித் தத்துவம் ........................................ 3

**9ஆம் அத்தியாயம்**

கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும் .............. 47

**10ஆம் அத்தியாயம்**

பாடவிதான அபிவிருத்தி ........................................ 71

**11ஆம் அத்தியாயம்**

கல்வியும் அபிவிருத்தியும் ........................................111

1990 – தேசிய கல்வி நிறுவகம்
பதிப்பு 1.1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் அத்தியாயம்

# சமயக் கல்வித் தத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயக் கல்வித் தத்துவம்

**உள்ளடக்கம்**

| | | பக்கம் |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 5 |
| 2.0 | சிறப்பு நோக்கங்கள் | 5 |
| 3.0 | முற்சோதனை | 6 |
| 4.0 | சமயக் கல்வித் தத்துவம் | 6 |
| 4.1 | பௌத்த கல்வித் தத்துவம் | 6 |
| 4.2 | இந்து கல்வித் தத்துவம் | 15 |
| 4.3 | கிறீத்தவ கல்வித் தத்துவம் | 21 |
| 4.4 | இஸ்லாமிய கல்வித் தத்துவம் | 29 |
| 5.0 | சாராம்சம் | 41 |
| 6.0 | பிற்சோதனை | 42 |
| 7.0 | விடைகள் | 45 |
| 8.0 | ஒப்படைகள் | 45 |
| 9.0 | கலைச் சொற்றொகுதி | 46 |
| 10.0 | மேலதிக வாசிப்புக்கான நூல்கள் | 46 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

மனிதன் தனது ஆன்மீகத் தேவைகளைச் சமயச் சிந்தனையின் ஊடாகவே நிறைவு செய்து கொள்கின்றான். மனித நாகரிகத்தின் ஆரம்பம், பரம்பல், நிலைபேறு ஆகியவற்றில் சமய பக்தி எல்லையின்றிப் பங்களிப்புச் செய்கின்றது. அறிந்தோ அறியாமலோ ஒவ்வொரு மனிதனும் ஏதேனுமொரு சமயத்தின் துணையை நாடுகிறான். எனவே சமயச் சிந்தனை, கல்வி சார்ந்த விழுமியத்தைக் கொண்டதாகும்.

"செல்ல வேண்டிய பாதையை அறியாத தலைவர்களைத் தோற்றுவிக்கின்ற கல்வி பயனற்றது" என ரிசார்ட் லிவிங்ஸ்டன் பிரபு குறிப்பிடுகின்றார். 'பாடசாலை உளத்துக்கான போசிப்புக்குரிய சரியான வழியைக் காட்டுகின்ற வாழ்க்கைக் குறிக்கோள்களை வெளிக்கொணர்ந்து தருகின்ற யதார்த்தமாகவே இருத்தல் வேண்டும்' என்பது அவரது கருத்தாகும்.

இக்கருத்துக்கு அமைய எந்த மதமாயினும் அது பாரியதொரு கல்விச் செயன்முறையாகும். பௌதிக ஆசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் உலகாயத விடயங்களைக் கற்பதன் மூலம் பெற முடியும். எனினும், வாழ்க்கைக்குத் தேவையான, ஆன்மீக வழிகாட்டல், உளப்பாதுகாப்பு, மனிதத்துவத்தின் உயர் பெறுபேறுகள் என்பன, சமயச் சிந்தனையின் மூலம் தெளிவுபடுத்திக் கொடுக்கப்படும் ஆன்மீக மதிப்பீட்டின் மூலமே கிடைக்கப் பெறுகின்றன என்பதை வலியுறுத்திக் கூற வேண்டியுள்ளது. நாம் வாழும் சமூகத்தில் மனித நடத்தையை நல்வழிப்படுத்தவும், மனிதனை ஒழுக்கமுள்ளவனாக மாற்றுவதற்கும், மனிதப் பண்புகளின் அடிப்படையில் சிறப்பான பரஸ்பர தொடர்புகளை விருத்தி செய்து உயர்வான வாழ்க்கை வாழ்வதற்கும் சமயச் சிந்தனை பெரிதும் உதவுகின்றமையை மறந்துவிடலாகாது. எனவே உலகில் தோன்றிய ஒவ்வொரு சமயமும் உயர்வான கல்விசார்ந்த சக்திகளாகும் எனக் கருதுதல் வேண்டும். கல்வி நோக்கு, கல்வித் தத்துவம் என்பன தொடர்பான தெளிவான அறிவைப் பெற்றுக் கொடுப்பதே இப்பாட அலகின் நோக்கமாகும்.

# 2.0 சிறப்பு நோக்கங்கள்

1. பௌத்த, கிறீத்தவ, இந்து, இஸ்லாமிய சமய தத்துவங்களை இனங்காணல்.
2. அத்தத்துவங்களின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல்.
3. இலங்கையில் கல்வியின் சமயத் தத்துவார்த்தப் பின்னணியை விளங்கிக் கொள்ளல்.
4. ஒவ்வொரு சமயமும் மிக உயர் குறிக்கோளொன்றினை மையமாகக் கொண்டுள்ளமையை ஆய்ந்தறிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 முற்சோதனை

பின்வரும் ஒவ்வொரு கூற்றினாலும் குறிப்பிடப்படும் கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களாயின் "√" எனவும், ஏற்றுக்கொள்ளாவிடின் 'X' எனவும் அடைப்புக்குறிக்குள் குறிக்க.

1. அறியாமையானது காரிருளை விடப் பயங்கரமானது. ( )

2. தத்துவார்த்தம், மனிதனது பொறுப்புக்களையும் உரிமைகளையும் தெளிவுபடுத்துகின்றது. ( )

3. தத்துவார்த்தம் அறிவாளிகளுக்கேயுரித்தானதாகும்; மாறாக சமூக வியலாளர்களுக்கல்ல. ( )

4. ஒவ்வொரு சமூகத் தத்துவமும் மனிதனுக்கு வேண்டிய ஒழுக்க விதிக்கோவையொன்றினை முடிவு செய்கின்றது. ( )

5. பௌத்தக் கல்வியானது ஒவ்வொரு சமயத்தினதும் பின்னணியாக அமைந்துள்ளது. ( )

6. கிறீத்தவ சபையின் கல்வி நடவடிக்கைகள் பாடசாலைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டவையாகும். ( )

## 4.0 சமயக் கல்வித் தத்துவம்

மனித வாழ்க்கைக்கான கல்வி சார்ந்த ஒரு சக்தியாக சமயத்தைத் தொடர்பு படுத்திக் கொள்வதன் மூலம் ஆன்மீக வழிகாட்டலையும் உளப்பாதுகாப்பையும் பெற்றுக்கொள்ள வழி கிடைக்கும்.

### 4.1 பௌத்த கல்வித் தத்துவம்

புத்த பெருமானைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பல சொற்கள் திரிபிடகத்தில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் "ஸத்தா" எனும் சொல் மிக மிகப் பிரபல்யம் வாய்ந்ததாகும். ஆசிரியர் அதாவது உலகின் கஷ்டங்களிலிருந்து பிராணிகளை-உயிரினங்களைக் கரை சேர்க்கும் வழிகாட்டி என்பதே 'ஸத்தா' எனும் சொல்லின் கருத்தாகும். உலகாயத அறிவுகள் உலகாயதத்துக்கு அப்பாற்பட்ட அறிவுகள் ஆகிய அனைத்து வகை அறிவுகளையும் அறிந்தவராதலால் அவருக்கு 'ஸத்தா' எனும் பெயர் வழங்கப்படுகின்றது. அவர் மனிதர்களதும் தெய்வங்களதும் ஆசிரியரானார் என்பது பௌத்த சூத்திரங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளது. (ஸத்தா தேவ மனுஸ்ஸானங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடநூல்களில் புத்தபெருமானைக் குறிப்பதற்காக விசேடமான நான்கு சொற்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் பகுத்தாய்கையில், அவரிடத்தே, ஆசிரியராகச் சிறப்புப்பெறும் அடிப்படை இயல்புகள் தெட்டத் தெளிவானதாகக் காணப்பட்டமையை அறிய முடிகின்றது. அனைத்தையும் நன்கு அறிந்தவர் (ஜானதா), அனைத்தையும் நன்கு காணக் கூடியவர் ("பஸ்ஸதா"), உயர்வான மனப்பாங்குகளை நிறையப் பெற்று தீய அழுக்குகளைக் களைந்தவர் (அரஹதா); உலகில் உள்ள அனைத்தையும் சிறப்பாக, சுய அறிவினால் விளங்கிக் கொண்டவர் (ஸம்மா ஸம்புத்தா) என்பனவே அவையாகும். புத்த பெருமான் பெரும்பாலாக, உயர்வான அறிவு (விஜ்ஜா). உயர்வான மனப்பாங்குகள் (வரண) ஆகியவை ஒருங்கமையப்பெற்ற மிக உயர்வான ஓர் ஆசிரியராகவே குறிப்பிடப்படுகின்றார். அதுமட்டுமன்றி, உள, உடல் திறன்கள் (கொஸல்ல) நிரம்பப்பெற்ற அவர் சிறப்பான ஓர் ஆசிரியர் என்பது தெளிவாகின்றது. அடக்க முடியாதோரைக்கூட அடக்கியமையினால் "அதனதானங் தமெதாரங்" அவர் மிக உயர்வான ஆசிரியரானார். சீலங்கெட்டவர்கள், நல்லவர்கள், கெட்டவர்கள், தபசிகள், கொலைஞர்கள், கொடைவள்ளல்கள், உலோபியர்கள், வழிப்பறி கொள்ளைக்காரர்கள், ஒழுக்கசீலர்கள், சண்டியர், அரக்கர்கள், முரடர்கள் போன்ற ஒவ்வொரு பிரிவினர்க்கும் சிறப்பாக போதனை புரிந்து அவர்களை நன்மக்களாக மாற்றுவதற்கும், கஷ்டத்திலிருந்து மீட்பதற்கும், நற்பிரஜைகளாக மாற்றுவதற்கும், வேண்டிய அபார ஞானசக்தியையும், மனப்பாங்குப் பொக்கிசத்தையும் பூரணமான திறமைகளையும் கொண்டிருந்தமையால் புத்தர் பெருமான் அவர்கள் மிக மிக உயர்வான ஆசிரியராகக் குறிப்பிடப்படுகின்றார்.

**செயற்பாடு 1**

1. புத்தர் பெருமானிடத்துக் காணப்பட்ட சிறப்பான ஆசிரியர்க்குரிய இயல்புகளை விளக்குக.

2. "பாடவிடயங்கள் தொடர்பான ஆழ்ந்த அறிவு, மனித நடத்தைகள் தொடர்பான சிறப்பான விளக்கம் என்பன ஆசிரியரிடத்தே கட்டாயமாகக் காணப்பட வேண்டிய தகைமைகளாகும்." கலந்துரையாடுக.

பௌத்த மதம் ஓர் ஆயுள்காலக் கல்விச் செயன்முறையாகும். அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் என்பன ஒருவரின் வாழ்க்கையின் முடிவு வரையில் இடையீடின்றிப் பரம்பிச் செல்ல வேண்டும் என்பது பௌத்த கல்வித் தத்துவத்தின் அடிப்படை. அந்தகர் ஒருவர் ஒரு நாள் வினவிய வினாவொன்றுக்கு விடையளித்த புத்த பெருமான், வாழ்தல் அதாவது வாழ்க்கை நடத்துதல் செயற்படல் (கிரிய வாதங்), செயற்படாதிருத்தல் (அகிரிய வாதங்) ஆகிய பிரதானமான காரணிகளின் மீது கட்டியெழுப்பப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என வலியுறுத்திக் கூறினார். (அ.நி. 1.62) பத்து வகை நற்கருமங்களை அடிப்படையாகக் கொண்ட நன்னடத்தை, ஒவ்வொருவராலும் சதா காலமும் பின்பற்றப்பட வேண்டும் எனவும் தீச்செயல்களை அடிப்படையாகக் கொண்ட தீய நடத்தைகள் தொடர்பாக விழிப்பாக இருத்தல் வேண்டும் எனவும் அவற்றை எப்போதும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெளிவாக விளக்கியுள்ளார். பௌத்த மதத்தில் இடம்பெற்றுள்ள நடத்தைப் பண்புகளை ஒன்று திரட்டிக் காட்டி, 'அரிஅட்டங்கிக மங்க' (அரியோ அட்டங்கிகோ மக்கோ) எப்போதும் விழிப்பாகப் பின்பற்றுவதால் மனிதன், உலகம் என்பன தொடர்பான உண்மை நிலையை (யதார்த்தத்தை) ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள முடியும் என அவர் காட்டியுள்ளார். எனவே பௌத்த மதத்தைப் பொருளுள்ளதாக்கும் கல்வித் தத்துவமானது, இவ்வுலகிலேயே, இக்கணத்திலேயே இச்சமூகத்திலேயே நல்லொழுக்கமுடைய குடிமக்களைத் தோற்றுவிப்பதற்கான ஆதாரமாக அமையும் வாழ்நாட்காலக் கல்விக் கருமமொன்றாகும் என ஐயமின்றி வலியுறுத்திக் கூறலாம். கொள்கையைவிட பயன்பாட்டை மதித்தல், பிறரிடத்தேயன்றி, தன்னிலேயே அசையா நம்பிக்கை வைத்தல், மன எழுச்சிகளுக்கு அடிமைப்படாது மனிதன், அகிலம் என்பன தொடர்பாக உள்ளதை உள்ளவாறு விளங்கிக்கொள்ளல், சுதந்திரம், தன்னம்பிக்கை, ஆக்கபூர்வ திறன்கள் ஆகியவற்றைத் தனதும் சமூகத்தினதும் நன்மைக்காகப் பயன்படுத்தல் போன்றவற்றுக்குத் தேவையான அறிவு வகைகள், மனப்பாங்கு வகைகள் திறன் வகைகள் என்பன பௌத்த கல்வித் தத்துவம் பூராகவும் பொதிந்து காணப்படுகின்றன. கற்றல் - கற்பித்தல் ஆகியவற்றுக்கான ஆராய்ச்சிகளை, வெவ்வேறு கருத்து வலைப்பின்னல்களைப் பற்றிப் பிடித்துக்கொள்வதற்காக அன்றி, மனதை அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக எப்போதும் பிரயோகித்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (நித்தரணத்தாய நொ கஹணதாய) இதற்கு ஏற்ப பௌத்தக் கல்வி ஓர் இடையீடற்ற பயன்படு கருமத்தொடராகும்.

செயற்பாடு 2

பௌத்தக் கல்வி வாழ்நாள் பூராவும் நீடிக்கும் ஒரு செயற்றொடராகும் என்பதை நிரூபிக்க.

உலகில் காணப்படும் உயிர் உள்ள, உயிர் அற்ற ஒவ்வொரு பொருளும் காரண காரியங்களின் கட்டமைப்பின் அடிப்படையில் அமைந்தவையாகும் என்பது பௌத்த தத்துவத்தினால் தெளிவாக்கப்படுகின்றது. கூர்ப்பு (பரிணாமம்), மாற்றமடைதல் என்பன ஒவ்வொரு பொருளுக்கும் உரித்தான இயல்பாகும் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. அதற்கேயுரித்தான காரண காரியங்களால் தோன்றும் ஏதேனுமொன்று நீடூழிகாலம் நிலைப்பதில்லை. கணத்துக்குக் கணம் அவை மாற்றமடையும். எனவே உலகில் நிலவும் ஒவ்வொரு பொருளும் உள்ளடங்கும் மூன்று தத்துவங்கள் தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த தத்துவம் தெளிவாக விளங்குகின்றது. நித்தியமின்மை அதாவது சதாவும் மாற்றமடையும் தன்மை (அனிச்ச) அவற்றுள் முதலாவதாகும். கூர்ப்படைதல் (பரிணாமமடைதல்), மாற்றமடைதல் ஆகிய கொள்கைகளுக்கு உள்ளாகின்ற உலகிலுள்ள அனைத்தும் கஷ்டத்துக்கு உள்ளாகின்றன. இதற்கேற்ப உலகில் உள்ள அனைத்தும் துன்பத்துக்கு (துக்க) உள்ளாகின்றன என்பது இரண்டாவது கொள்கையாகும். உலகில் காணப்படும் ஒவ்வொன்றும் நித்தியமற்றதாகையாலும் அவ்வாறே துன்பத்துக்கு உள்ளாகின்றமையினாலும், அவற்றுக்கு நித்தியமான - சதாகால ஆன்மா கிடையாது. எனவே மூன்றாவது கொள்கை 'அனத்தா' என அழைக்கப்படுகின்றது. இதன்படி உலகில் நிலவும் அனைத்தும் அனிச்ச, துக்க, அனத்த ஆகிய இயல்புகளைக் கொண்டன என்பது பௌத்த தத்து வத்தின் அடிப்படையான கற்பித்தலாகும்.

புத்த தருமத்துக்கு இயைய, பிராணிகள், மனிதன், தனியாள், ஆளுமைத் தனித்துவம் ஆகிய எண்ணக் கருக்களால் மாற்றமடைந்தபடி நிலவும் தற்காலிகமான ஒரு நிலையே விளக்கப்படுகின்றது. பிராணி என்பது, பெயர், உருவம் அதாவது உள, உடற்பகுதிகள் ஐந்தினைக் கொண்டு ஆக்கப்பட்ட தற்காலிகமான ஒரு நிலைமையாகும். உருவம் என்பது படவி, அபோர, தேஜோ, வாயோ ஆகிய பௌதிகப் பகுதிகளின் தற்காலிக கூட்டிணைப்பால் ஆக்கப்பட்ட தோன்றுதும். இங்கு இடம்பெற்றுள்ள பெயர் எனும் பகுதி, உள மூலம் தொடர்பான நான்கு நிலவுகைகளையே குறிக்கின்றது. அதாவது, வேதனை (வேதனா), அறிவுசார் சக்தி (ஸஞ்ஞா), செயற்களைச் சேகரிக்கும் திறமை (ஸங்கரா), விழிப்புணர்வு (விஞ்ஞான), ஆகிய உளவடிப்படையான நான்கு திறன்களாகும். ரூப, வேதனா, ஸஞ்ஞா, ஸங்கர, விஞ்ஞான ஆகிய இவ் வைந்து பகுதிகளாலும் ஆக்கப்பட்ட உளவடிப்படையிலான, பௌதிக அடிப்படையிலான நிலைமையே பிராணி என அழைக்கப்படுகின்றது. மனிதன் தொடர்பான விளக்கமும் இதே கருத்தையே தருகின்றது.

இதற்கு அமையச் சிந்திக்கும் போது, வகுப்பறையில் கற்கும் மாணவனும், கணத்துக்குக் கணம் மாற்றமடைகின்றமையைக் (வளர்ச்சியடைதல், முதிர்ச்சியடைதல், உருவிற் பருத்தல்) கருத்திற் கொள்ளல் வேண்டும். கொள்கையை நன்கு விளங்கிக் கொள்ளலானது, ஆய்ந்தோய்ந்து மேற்கொள்ளும் கற்றல்-கற்பித்தல் செயற்றொடரின் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கும் ஆசிரியரின் பெரும் பொறுப்பாகும் என்பது பௌத்த தத்துவத்தினால் வலியுறுத்தப்படுகின்றது.

**செயற்பாடு 3**

"உலகில் காணப்படும் அனைத்தும் சதாவும் மாற்றமடைகின்றன" எனும் கொள்கை, கல்விச் செயற்றொடரில் மிகமிக முக்கியத்துவம் பெறுவதேன் என ஆய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த கல்வி நோக்கங்கள்

பௌத்த தத்துவத்தின் பிரதானமான இலட்சியம் ('நிவன') மோட்சம், அதாவது பரிபூரண விடுதலை பெறுவதாகும். மோட்சம், விடுதலை, ஓய்வு, ஆகிய ஒவ்வொரு தத்துவக் கருத்தின் மூலமும் கருதப்படுவது மனித வாழ்க்கை தொடர்பான கஷ்டங்கள் துன்பங்கள் அனைத்திலுமிருந்து பரிபூரணமாக விடுபடுவதாகும். பிறப்பது துக்கம், வயோதிபமடைவது துக்கம், நோய்வாய்ப்படுவது துக்கம், இறப்பது துக்கம், அன்பர்களைப் பிரிவது துக்கம் என்றவாறான மனித வாழ்க்கை தொடர்பான அனைத்துக் கஷ்டங்களிலுமிருந்தும் விடுபட்டு நித்திய விடுதலையைப் பெற்றுக்கொள்ளலே பௌத்தமதத்தின் அடிப்படை நோக்கமாகும் என்பது தெளிவாதல் வேண்டும். இதற்கேற்பக் கவனிக்கும்போது, கூட்டுமொத்தமான கல்விச் செயற்பாடானது உலகாயத ரீதியிலும் பரலோக ரீதியிலும் மனிதனைச் சுகப்படுத்துவதற்காகவே பிரயோகிக்கப்படுவதொன்றாகும்.

பொருளாதார, அரசியல், கலாச்சார, சமூக அடிப்படையில் மனிதனுக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்தல், அவன் சிறப்பான நல்வாழ்க்கை வாழச் செய்தல், தனக்கும் சமூகத்துக்கும் பயனுடைய உயரிய அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் ஆகியவற்றைக் கொண்ட நற்பிரசையாக மாற்றுதல், என்பனவே பௌத்தக் கல்வியின் அடிப்படை நோக்கங்களாகும் என இதன் மூலம் முடிவுசெய்யலாம். பௌத்த கல்விச் செயற்றொடருக்கு அமைய, வாழ்க்கைய உயர் பண்புகளின்பால் முகப்படுத்தக்கூடிய இரண்டு முறைகள் உள்ளன. பூரணமாகத் துறவு வாழ்க்கை வாழ்தல் அவற்றுள் ஒரு முறையாகும். ஒரு விதத்தில் நோக்கும்போது இது முற்றுமுழுதாக, ஆன்மீகக் குணவியல்புகளை வளர்த்து விடுதலையை மிகமிக விரைவாக அடைவதற்காகப் பின்பற்றும் ஒரு வழிவகையாகும். முழுமையான இல்வாழ்க்கை வாழ்ந்து துன்பத்திலிருந்து விடுதலைபெற்ற பூரணமான இல்லற விடுதலைக்காக முயற்சித்தல் மற்றுமொரு வழிவகையாகும். இவ்விரு முறைகளில் பல பொது இயல்புகள் அடங்கியுள்ளன. தனிப்பட்ட ரீதியில் சிறப்பான வாழ்க்கை வாழ்தல், கல்வியின் ஊடாக விவேகத்தை வளர்த்துக்கொள்ளல் (போதி), உயரிய மனப்பாங்குகளை விருத்தி செய்து கொள்ளல் என்பன அவற்றுள் சிலவாகும். அத்தோடு, உலகாயதப் பிடிகளிலிருந்து விடுபட்டு, மோட்சம் பெற வேண்டுமெனும் குறிக்கோளைக் கொண்டுள்ள தனியாள், தான் வாழும் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகத் தன்னை அர்ப்பணித்தலும் அவசியமாகும். சரியான தொழிலில் ஈடுபடல், சமூகத் தலைமைத்துவத்துக்கான தகைமைகளைப் பெறல், ஏனையோரின் நலன்களுக்காகத் தனது அறிவு, பொருள், நேரம் ஆகியவற்றை இயன்ற அளவுக்கு விரயஞ் செய்தல் போன்றவையே சமூகசேவையாகும் எனப் புத்த தருமம் வலியுறுத்திக் குறிப்பிடுகின்றது. இதற்கமைய தனிப்பட்ட முறையிலும், பொதுவான ரீதியிலும், சமூக முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் கல்விச் நோக்கத் தொகுதியொன்று உள்ளது என்பது தெளிவாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு 4**

பௌத்த கல்வி நோக்கங்களின் தன்மையை உதாரணங்காட்டி விளக்குக.

**ஆசிரிய மாணவர் தொடர்பின் அடிப்படை**

வெற்றிகரமான-செயற்றிறனுடைய கற்றல்-கற்பித்தல் செயற்றொடருக்காகச் சிறப்பான ஆசிரியர்-மாணவர் தொடர்புகள் முக்கியமானவையாகும் என புத்தர் பெருமான் வலியுறுத்தியுள்ளார். ஆசிரியர் தனது மாணவர்களை - சீடர்களை-பிள்ளைப் பாசத்துடன் கவனித்தல் வேண்டும், எனவும் மாணவர் தனது ஆசிரியரைப் பிதாபோற் கருதுதல் வேண்டும் எனவும் பௌத்த மூலாதாரங்களில் பரவலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, மாணவனை இருளிலிருந்து ஒளியின்பால் முகப்படுத்துதலே ஆசிரியரின் கருமமாகும் (தமொ ஜொதி பராயனே) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நுட்பங்களையும் சாத்திரங்களையும் நன்கு கற்பித்தலும் அறிவுரைகள் அறிவுறுத்தல்கள் வழங்குதலும் நற்கருமங்களில் ஈடுபடுத்துதலும் மாணவனை நன்கு கண்காணித்துப் பேணலும் ஆசிரியரின் பொறுப்புக்களாகும் எனப் புத்த பெருமான் வலியுறுத்தியுள்ளார். அத்தோடு, மாணவனும், ஆசிரியரின் அறிவுறுத்தல்களை உரியவாறு பின்பற்றல், நன்கு கற்றுக்கொள்ளல், சமூக ஒழுக்கங்களை பண்புடன் காத்தல், உயரிய நல்லொழுக்கத்துடனும் நேரத்தை வீணாக்காதும் நுட்பங்களையும் சாத்திரங்களையும் கற்றல் ஆகியவற்றைத் தனது பெரும் பொறுப்புக்களாகக் கருதுதல் வேண்டும். மேற்படி, ஆசிரிய-மாணவர் தொடர்புகள், தற்கால நவீன கல்விச் செயற்றொடரில் மிகப் பெருமளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றன என்பது தெட்டத்தெளிவாகின்றது.

**செயற்பாடு 5**

"சிறப்பான ஆசிரியர்-மாணவர் தொடர்பு, கல்விச் செயற்றொடருக்கு அடிப்படையாக அமைகின்றது." ஆய்க.

**மாணவனைப் பாடத்தின்பால் தூண்டுவித்தல்**

கற்றலும் கற்பித்தலும் உளரீதியிலான ஒரு செயற்பாட்டுத் தொடராகும். எனவே செயற்றிறனுடைய ஆசிரியராக மாறவேண்டுமெனின், மாணவர்களது மனதின் தன்மை, அது செயற்படும் விதம், அதன் செயற்பாட்டுக்கான ஆதாரப்படையாக அமையும் உளப்பாங்கு என்பன தொடர்பான தெளிவான விளக்கத்தை அவர் பெற்றிருத்தல் வேண்டும் என வலியுறுத்திக் கூற வேண்டியுள்ளது. தன்னிடத்தே வந்த வெவ்வேறு தரங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்களைப் பாடத்தின்பால் தூண்டுவிப்பதற்காக புத்த பெருமான் அவர்கள் பொருத்தமான உளவியல் முறைகள் பலவற்றைக் கையாண்டமைக்கான பல ஆதாரங்கள் பௌத்த தருமம் தொடர்பான பல மூலாதாரங்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில முறைகள் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. மாணவனுடன் நட்புறவுடன் உரையாடல்.

02 மாணவனிடத்தே தனிப்பட்ட குறைபாடுகள் காணப்படின் அவை பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல்.

03. அடிப்படைத் தேவைகள், உணவு, போக்குவரத்து வசதிகள், வதிவிடத் தேவைகள் போன்ற தேவைகள் உள்ளனவா என வினவியறிதல்.

04. உளஞ்சார்ந்த பிரச்சினைகள், உள நமைச்சல் போன்றவற்றினால் அவதியுறுகின்றாரா என ஆய்ந்தறிதல்.

05. புறக்காரணிகள் தொடர்பான சிறு கலந்துரையாடல்களில் ஈடுபடல்.

06 பொருத்தமான பாடத்தைத் தெரிவு செய்தல்.

07 பாடத்தை ஒழுங்காகத் தயார்ப்படுத்திக் கொள்ளல்.

08. அப்பாடத்தை வகுப்புக்குச் சமர்ப்பித்தற்குப் பொருத்தமான நுட்பமுறையைத் தெரிவு செய்துகொள்ளல்.

09. பொருத்தமான கட்புல, செவிப்புல சாதனங்களைத் தெரிவுசெய்து கொள்ளல்.

10. பாடத்தைத் தருக்கரீதியில் சமர்ப்பித்தல்.

11. பாடத்தின் ஆரம்பம், நடுப்பகுதி, ஈற்றுப்பகுதி ஆகிய ஒவ்வொன்றும் சம அளவு இனிமையுடன் பிரவாகிக்கக் கூடியவாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளல்.

**செயற்பாடு 6**

பாடமொன்றின்பால் மாணவர்களது கவனத்தை முறையாக ஈர்த்துக்கொள்ளல் தொடர்பாக, பௌத்தக் கல்வியின் ஊடாக கிடைக்கப்பெற்ற பங்களிப்பை விளக்குக.

**புத்தபெருமானின் கற்பித்தல் நுட்பமுறைகள்**

கற்றுக்கொள்ள வழிகாட்டுவதே ஆசிரியரின் பிரதானமான பொறுப்பாகும். 'அக்காதாரோ ததாகதா' என்பது புத்த பெருமானினால் எடுத்துக்காட்டப்பட்ட கற்பித்தல் முறைகளுள் பொதிந்திருக்கும் அடிப்படையான சிறப்பியல்பாகும். இதன் மூலம் சுயமாக விளக்கம் பெறலுக்கு முதலிடம் கிடைக்கப்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கத்துக்காக அதாவது உணர்ந்து கொள்வதற்காக (படிவேதாய பகவா தம்மங் தெஸெதி) அன்றி, விடயங்களைச் சேகரிப்பதற்காகவோ, இரசிப்பதற்காகவோ புத்தபிரான் ஒருபோதும் கற்பிக்கவில்லை. இருளிலிருந்து ஒளியின்பால் முகப்படுத்துவதற்காக (தமொ ஜொதி பராயனொ) பொருத்த மானவாறு பாடத்தை ஒழுங்குபடுத்திக் கற்பித்தலில் ஈடுபட்ட புத்தபிரானினால் கையாளப்பட்ட கற்பித்தல் முறைகள் பெரும்பாலும், தற்கால நவீன கற்பித்தல் முறைகளையும் விடச் சிறப்பான பெறுபேறுகளைக் கொடுத் துள்ளமைக்கான போதிய சான்றுகள் உள்ளன.

புத்தபிரானினால் ஆக்கப்பட்ட பல கற்பித்தல் முறைகள் பௌத்த மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச் சிறப்பான, மிகப் பிரபல்யம் வாய்ந்த சில முறைகள் வருமாறு:

1. விரிவுரை முறை
2. கலந்துரையாடல் முறை
3. படிப்படியான முறை
4. உத்தி முறை
5. உரையாடல் முறை
6. வினா-விடை முறை
7. குழு முறை
8. பிரச்சினை தீர்க்கும் முறை

இவ்வொவ்வொரு முறை தொடர்பான மூலாதாரங்களும் பௌத்த சூத்திரங் களில் இடம்பெற்றுள்ளன. இம்முறைகளின் தோற்றம், அவற்றை ஒழுங்க மைத்துக் கொள்ளும் விதம் என்பன தொடர்பான மேலதிக விபரங்களைத் தேடிப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

தாம் கட்டியெழுப்பிய கற்பித்தல் நுட்பமுறைகளுள் தான் சிறைப்பட்டிருக்கவில்லை என்பது, ஓர் ஆசிரியர் என்ற வகையில் புத்தபிரான் வெளியிட்ட மிக முக்கியமானதொரு கருத்தாகும். பொதுவாக ஒரு முறையை அன்றி, ஒரு குறிப்பிடப்பட்ட பாடத்துக்காக ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளைப் பயன்படுத்துவதே அவரது வழக்கமாக இருந்தது. எனவே பாடத்தில் இடம் பெறும் அனைத்து விடயங்களும் மாணவருக்கு இனிமையூட்டுவனவும் பொருளுள்ளவையும் விளங்கிக்கொள்வதற்கான ஆதாரமாக அமைவனவுமாகும் என்பது தெளிவாகின்றது. சிறப்பான ஆசிரியர், ஆக்கபூர்வமான ஒரு சிந்தனையாளராவார். அவர் ஒரு சுயாதீனமான விமர்சகராவார். மறைந்துள்ளவற்றைப் பொருளுள்ள விதத்தில் விவரிக்கக்கூடிய சிறப்பான விவரணையாளராவார். எனவே தற்கால-நவீன ஆசிரியர் இக்கற்பித்தல் முறைகளின் மூலம் பேருதவி பெற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு 7

01. புத்தபெருமானின் கற்பித்தல் நுட்பமுறைகளின் அடிப்படைத் தன்மைகளை விளக்குக.

02. புத்த பெருமானின் கற்பித்தல் நுட்பமுறைகளின் ஊடாகத் தற்கால-நவீன ஆசிரியர்கள் பெறக்கூடிய பயன்கள் யாவை?

**பௌத்த ஒழுக்கக் கல்வி**

மனிதன், அக, புற நோக்கங்களின் (ஆரம்மண) இடை யீடற்ற தாக்கங்களுக்கு உள்ளானவாறு வாழ்கின்றான். அக நோக்கங்கள் எனப்படுபவை மனதினுள்ளேயே பிறக்கும் எண்ணத் தொகுதியாகும். புற நோக்கங்கள் எனப்படுபவை புறத்தேயிருந்து மனதை நோக்கி வரும் உருவங்களைப் போன்ற நோக்கங்களாகும். இவற்றுடன் இடையீடின்றி முட்டிமோதும் மனிதன் அமைதியின்றிக் காணப்படுவான். நல்லது-தீயது, நன்மை-தீமை, செம்மையான-சிக்கலான என்றவாறு நடத்தையையோ தோற்றப்பாடுகளையோ வகுத்து நோக்கக்கூடிய விவேகம் அடக்கப்படுகின்றது. எனவே உயர் நடத்தையை அதாவது ஒழுக்கத்துடன் கூடிய நடத்தையை ஆய்ந்தோய்ந்து கட்டியெழுப்பிக் கொள்ள முடியாது என்பதைப் புத்த பெருமான் வலியுறுத்தினார். உள்ளம், உடல், வாக்கு ஆகிய மூன்று வாயில்களையும் ஒழுக்கப்படுத்திக்கொள்ளலும், அவற்றை நல்லவிதமாகப் பேணலும் சமூகத்தில் பரஸ்பரத் தொடர்புகளை ஒழுங்காகப் பேணலுக்காகக் கட்டுப்படுத்திக் கொள்ளலுமே நல் ஒழுக்கம் அதாவது உயரிய ஒழுக்கம் என்பதால் கருதப்படுவதாகும். கற்றலின் முதலாவது படி, மூன்று பாகங்களையும் கட்டுப்படுத்திக் கொள்ளலாகும். 'ஸீலே பதிட்டாய நரொ ஸபஞ்ஞா' என்பது பௌத்த மூலாதாரங்களில் வலியுறுத்தப்படுவதாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளல் அவசியமாகும்.

செயற்பாடு 8

1. சுய ஒழுக்கம் என்பதால் கருதப்படுவது யாது?

2. "அகத்தைக் கட்டுப்படுத்துவதால் வெளிக்கொணரப்படுவதே சரியான ஒழுக்கமாகும்" ஆய்க.

**பௌத்த கல்வியும் நவீன ஆசிரியரும்**

பல காலங்களாக, மேற்கத்திய கல்வித்தத்துவம், கல்வி முறையியல், கல்வி உளவியல், பாடவிதான அபிவிருத்தி ஆகியவற்றின்பால், விசேட ஆர்வத்துடன் துலங்கலைக்காட்டிய இலங்கையரான எமக்கு, தேரவாத பௌத்த மூலாதாரங்களில் பொதிந்து காணப்படும் உயரிய கல்விசார்ந்த அறிவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிசத்தைத பெறுமதி மிக்க அறிவுக் களஞ்சியமாக இனங்கண்டு கொள்ள இயலாமற்போனமை ஆச்சரியப்படத்தக்கதொன்றல்ல. சார்ந்துநிற்கும் சிந்தனைச சம்பிரதாயங்களிலிருந்து விடுபட்டு புத்திரீதியில் ஆய்ந்து நோககுபவருக்கு, பௌத்த மூலாதாரங்களில் அடங்கியுள்ள கல்விச் சிந்தனைகளின் உயர்வினை நன்கு உணர்ந்துகொள்ள முடியும் என்பதையும் அவற்றின் மூலம் தமது தொழில்சார் அறிவை மேன்மேலும் விருத்திசெய்து கொள்வதற்காக மிகமிகப் பாரிய பங்களிப்பைப் பெறமுடியுமென்பதையும் ஈண்டு குறிப்பிட வேண்டியுள்ளது.

பௌத்த கல்விச் சிந்தனையின் உள்ளீட்டைக் கவனமாக ஆய்வுசெய்யும் ஒருவருக்கு, மேலைத்தேயக் கல்விச் சிந்தனைக்கும் பௌத்தக் கல்வித்தத்துவத்துக்கும் இடையிலான முக்கியமான வேறுபாடு தெளிவாகப் புலப்படும். புறச் சுற்றாடலை ஒழுங்கமைத்தலின் மூலம் மாத்திரம், மனிதனிடத்தே, ஆழ்ந்த அறிவு, ஆய்வு ரீதியான ஞானம், விழுமியங்கள் தொடர்பான விழிப்புணர்ச்சி என்பன தோன்றி தொழினுட்ப அறிவுசார்ந்த உள்ளடக்கங்களை விளங்கிக் கொள்ளலுக்கும், அவற்றை விளங்கிக் கொள்வதற்கும் உதவும் என்பது மேலைத்தேயக் கல்வியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்றாகும். இது தனியே, பௌதக அடிப்படையில் நிலைத்திருந்து, மேற்கொள்ளும் ஒரு பொதுமைப்பாடாகும் என்பதை ஆளுமை வளர்ச்சி தொடர்பான பௌத்தச் சிந்தனையை ஆய்வு செய்வோர் தெளிவாக விளங்கிக் கொள்வர். பௌத்தக் கல்வித் தத்துவம், இதனைவிட முற்றிலும் மாறுபட்ட ஒரு கருத்தை உரிய ஆதாரங்களுடன் முன்வைக்கின்றமை தெளிவாகத் தென்படுகின்றது. மனிதன் தொடர்பான யதார்த்தமான அதாவது உண்மையான வளர்ச்சியானது மனிதனது சொந்தச் சிந்தனைக் கோவையின் ஊடாக அதாவது மனிதனின் அகத்தில் இருந்தே ஏற்படுகின்றது என்பது பல்வேறு பௌத்த மூலாதாரங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சரியான சிந்தனை, சரியான உளக்கருமங்கள், சரியான எண்ணங்கள், என்பவற்றின் மீது கட்டியெழுப்பப்படும் சரியான நடத்தையே உண்மையான வளர்ச்சியின் அடிப்படையாகும் என்பது பௌத்த கல்வித் தத்துவத்தின் மூலம் நிரூபிக்கப்படுகின்றது. புறச்சுற்றாடலை எவ்வாறு ஒழுங்கமைப்பினும், மனிதனின் விருப்பு வெறுப்புக்கள் போன்ற சிந்தனைகளின் அடிப்படையிலேயே அவை ஒழுங்கமைக்கப்படுகின்றமையால், சரியாகச் சிந்திக்கப்பழக்குவதும், சரியான எண்ணக் கருக்களைக் கட்டியெழுப்புவதும், சரியான திறன்களை விருத்தி செய்வதுமே சரியான கல்விச் செயற்றொடரின் அடிப்படையாக அமைய வேண்டும் என்பது தெளிவாகிறது. இவ்வாறாக நோக்கும்போது, மனித சமூகத்தினுள் ஒத்துழைப்பையும் ஒன்றிய வாழ்வையும் சமாதானமான கருத்துக்களின் மீது கட்டியெழுப்புவதற்காக கல்வியியலாளர்களுக்கு, பௌத்த தத்துவத்தின் ஊடாகப் பெறக் கூடிய உதவிகள் எண்ணிலடங்காதவையாகும் என்பதை மனதிலிருத்திக் கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன சமூகத்தில் நிலவும் உளநமைச்சல், போட்டி, பரஸ்பரம் எதிர்ப்போக்குகள், ஆகியன அனைத்தும் மனித சிந்தனைத் தொகுதியை மையமாகக் கொண்டு கல்வி வழங்கப்படாமையால் தோன்றுவனவாகும். தம்மிடத்தே சமாதானமான கருத்துக்கள் கட்டியெழுப்பப்படும்போது, அதற்கு ஏற்றவாறு புறச் சூழல் கட்டியெழுப்பப்படும் என்பதைக் கல்வியியலாளர்களுக்கு எடுத்துக்காட்டி நிரூபிப்பதே பௌத்த கல்வித் தத்துவத்தின் ஒரே குறிக்கோளாகும் என்பது தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டியதொன்றாகும்.

**செயற்பாடு 9**

1. "பௌத்தக் கல்வியின் அடிப்படைக் குறிக்கோள், சரியான சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு மனித எண்ணங்களை ஒழுங்கமைத்தலாகும்." இதனை மெய்ப்பிக்க.

2. பௌத்த கல்விச் சிந்தனையின் மூலம் நவீன ஆசிரியர் பெறக்கூடிய பயன்களை ஆய்க.

## 4.2 இந்துக் கல்வித் தத்துவம்

இந்துக்கள் பின்பற்றும் சமயம் இந்து சமயம் என அழைக்கப்படுகின்றது. பொதுவாக நோக்கும்போது இந்தியாவில் காணப்படும் சிவ சமயம், விஷ்ணு சமயம் ஆகிய அனைத்துச் சமயங்களையும் குறிப்பதற்காக, இந்து தத்துவம் எனும் பெயர் பிரயோகிக்கப்படுகின்றது. "இந்து தத்துவம்" என்பது சைவசித்தாந்தம், வேதாந்தம் ஆகியவற்றைக் குறிப்பதற்குப் பொருத்தமான ஒரு பிரயோகமாகக் கருதப்படுகின்றது. இதுவரையில் முடிவு எடுக்கப்படாத, சைவக் கொள்கைத் தத்துவத்தின் ஆரம்பக் காலப்பகுதி தொடர்பாக ஆராய்ச்சியாளர்களே முடிபு மேற்கொள்ள வேண்டியுள்ளது. 'சமய' இலக்கியத்தில், சைவக் கொள்கைத் தத்துவம் பற்றிய விபரங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. ஆய்வுப் பொக்கிசத்தில், நடத்தை, செயற்பாடு, யோகங்கள், ஞானம் ஆகிய நான்கு வகை வழிகள்- சதுர் மார்க்கங்கள்- விளக்கப்பட்டுள்ளன. பரம்பொருளை உணர்ந்து கொள்வதே வாழ்க்கையின் முக்கிய இலட்சியமாகும் எனக் கொண்டு மனிதர்கள் இவ்வுலகில் பிறக்கின்றனர். பரம்பொருள் என்பது சர்வ வல்லமையடைந்த கடவுளையே குறிக்கின்றது. கடவுள் ஒருபோதும் மனித வடிவில் பிறக்கவில்லை என்பதையும் அவர் மனிதன் விருப்பு வெறுப்புகளுக்கு ஒருபோதும் ஆளாகவில்லை என்பதையும் அறிந்து உணர்ந்து கொள்ளும் திறன் (நல்ல-கெட்ட கருமங்களின் பெறுபேறுகளுக்கு அமைய) மறுபிறப்பு பெறும் ஆன்மாவுக்குக் கிடைக்கப்பெறுகின்றது. ஆன்மா மலம் - (ஆணவ மலம்) ஆகியவற்றுடன் தொடர்புடையதாக தொடர்ந்தும் நிலவுகின்றமையால் மோட்சம் அதாவது கடவுள் பற்றிய முழு விளக்கம் கிடைக்கப்பெறும் வரை புனர்ஜென்மம் (மறுபிறப்பு) தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம்-பிறப்பு மாத்திரமன்றி, பெற்றோர், சுகபோகங்கள், உடலியல்புகள், உடலுறுப்புக்கள், ஆன்மா-தோன்றும் உலகம் ஆகிய அனைத்துமே முற்பிறப் பின்போது ஆற்றிய கருமங்களுக்கு இயையவே கிடைக்கப்பெறுகின்றன. பிள்ளை பிறந்த கணம் தொட்டு செயற்படத் தொடங்குகின்றது. ஆரம்ப உணவை உட்கொள்ளல் என்பது உடலினுள் அக்கணத்திலேயே ஆன்மா தோன்றியுள்ளது என்பதற்கான ஆரம்ப அறிவித்தலாகும். உடல், நோய்களுக்கு உள்ளாகி வயோதிபமடைந்து இறப்புக்குள்ளாகின்ற போதிலும், ஆன்மா ஒருபோதும் இறப்புக்குள்ளாவதில்லை. எனினும் ஆன்மா என்பது கடவுள் அல்ல. கடவுள் ஒருபோதும் ஆன்மாவாக மாற மாட்டார். சகல விதமான சுக போகங்களையும் அனுபவிப்பதன் மூலம் கிடைக்கப் பெறும் இன்பம் தற்காலிகமானது. உலகத்தின், உண்மை நிலை உணரப்படுகின்றமையினாலும் உலகாயத சுகபோகங்கள் அழிந்துவிடக்கூடுமாதலாலும், அவற்றை நுகருவதன் மூலம் நித்திய சுகத்தைப் பெறமுடியாது என்பதும் ஆன்மாவுக்கு விளங்கும். உலகாயத சுகபோகங்களைக் கைவிட்டுவிடும் போது, சர்வ வல்லமை பொருந்திய கடவுளின் கருணை ஆன்மாவுக்குக் கிடைக்கின்றமையால் ஆன்மா மறுபிறப்பிலிருந்து மீட்சியடைகின்றது.

**செயற்பாடு 10**

"இந்து தத்துவம் கடவுள் பக்தியையே அடிப்படையாகக் கொண்டுள்ளது". இதன் கல்வி சார்ந்த விழுமியத்தை வெளிக் கொணர்க.

கடவுள் தொடர்பான உண்மையை அறிந்துகொள்வதற்காக உயிர்க் கொலையிலிருந்து நீங்கியிருத்தல் வேண்டும் என சைவ தத்துவம் அறிவுறுத்துகின்றது. கடவுள், சகல பிராணிகளையும் சமனாகக் கருதுகின்றமையால், உணவுக்காக வேண்டிக்கூட உயிர்க்கொலை புரிதல் தடையாகும். உண்மையை அடைவதற்கு உளத்தூய்மை வழிகோலுகின்றது. ஒவ்வொரு பாவச் செயலுக்கும் ஏதுவாக அமைவது எண்ணமாகும், சிந்தனையாகும். உளப்பரிசுத்தமானது வாக்குப் பரிசுத்தத்துக்கும், கருமப் பரிசுத்தமானது முழு மனித வர்க்கத்தையும் சாதி பேதமெதுவுமின்றிக் கருணையுடன் கவனிப்பதற்கும் வழி வகுக்கின்றது. மொஹென்ஜதாரோ, ஹறப்பா நாகரீகத்தின் அளவுக்குப் பண்டைய சைவக் கொள்கைத் தத்துவங்கள் கடவுள், ஏனைய பிராணிகள் என்பன தொடர்பாக உயரிய கௌரவம் வழங்குகின்றன. அக்கலாசாரம் நிலவிய பிரதேசத்தை அகழ்ந்தபோது கிடைக்கப்பெற்ற தேவ உருவங்களினால் வெளிக்காட்டப்படும் தகவல்களின் மூலம் இக்கருத்து மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

வேதாந்தத் தத்துவமானது, கடவுள் என்பது நானே எனும் பெருவாக்கியத்தில் அடங்கியுள்ள தத்துவத் தொகுதியைச் சமர்ப்பித்தது. உபநிடதத்தில் இது 'அது நீயே' என்னும் பொருளைத் தருகின்ற "தத்துவம் அசி" என்பதன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. பிற்காலத்தில் அத்வைத எண்ணக்கருக்களாக விருத்தியடைந்த கருத்துக்களும் இவையையாகும்.



Form No. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேதாந்தத் தத்துவத் தொகுதி காரணமாகவே, கடவுள் தாமேயாதலால், வணங்கப்படுவதற்காக வேறொருவர் கிடையாது எனும் கருத்தைப் பிற்காலத்தில் சில சிந்தனையாளர்களால் பரப்ப முடிந்தது. "கடவுள் என்பது" ஆன்மாவே யாகையால், வணங்கப்பட வேண்டியவர்கள் வேறு எவரும் கிடையாது என்பதே வேதாந்தத் தத்துவத் தொகுதியின் கற்பித்தலாகும்.

"பூரணம் அத பூரணம் இத
பூரணந்தி பூரணம் உதுச்சதா
பூரணஸ்ய பூரணம் அத்ய
பூரணம் ஏவ அவசிஷ்யதே."

கடவுள் பூரணமானவர் எனும் வேதாந்தக் கருத்து இச்சுலோகத்தினால் வெளியிடப்படுகின்றது. ஆன்மாவும் பூரணமானதாகும். பூரணத்தினால் பூரணத்தை உணரும் போது எஞ்சி நிற்பதும் பூரணமேயாகும்.

வேதாந்த தத்துவத்துக்கு அமைய ஆன்மா எனப்படுவது சர்வ வல்லமை பொருந்திய கடவுளின் ஒரு பகுதியாகும். எனவே இறுதியில், ஆன்மாவே கடவுளாகின்றது. கடவுள் என்பதும் ஆன்மா என்பதும் ஒன்றேயாயின், எவரேனுமொருவர் இவ்வுலகில் பிறப்பதற்கும், மற்றொருவர் இவ்வுலகிலிருந்து அப்பாற்பட்டுப் பிறப்பதற்கும் ஏதுவாக அமையும் காரணங்கள் யாவை என்பது பற்றிச் சிந்திப்பதற்கு இக்கருத்து காலாக அமைந்தது. கிருஷ்ணன் என்பது விஷ்ணுவாகும். விஷ்ணு என்பது மனித உருவில் பிறந்த கடவுளாகும். அவர் மீண்டும் கடவுளாக மாறுவார் எனும் கருத்தின் மீது வேதாந்திகள் திருப்தியடைகின்றனர். இவ்வாறாகவே மனிதனும் கடவுளாக மாற முடியும். எனவே மோட்சத்தை அடைவதற்காக எவரையும் வணங்கத் தேவையில்லை.

வைதீக காலம், பௌத்தத்துக்கு முந்திய காலப் பகுதியை உள்ளடக்கியதாகும். வேதாந்தத் தத்துவம்கூட பௌத்தத்துக்கு முந்திய காலத்தைச் சேர்ந்ததாகும். பிரஹ்மன் வாதத்துக்கு எதிரான தத்துவமாகவே பௌத்த தருமம் தோன்றியது. சித்தார்த்த புத்தர் புத்த நிலையை அடைய முன்னர் வேதாந்தத் தத்துவமும் சைவ சித்தாந்தமும் அறியப்பட்டிருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. வேதாந்த தத்துவத்தை எதிர்த்த அவர், சைவ சித்தாந்தத் தத்துவத்தின் சில அம்சங்களை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுகின்றது.

**செயற்பாடு 11**

"தனியாள் நல்லொழுக்கமுடையவராக மாறும் அளவுக்கு சமூகமும் ஒழுக்கமுடையதாக மாறும்" இக்கூற்றில் அடங்கியுள்ள கல்வி சார்ந்த பெறுமானத்தை இந்து சமயத்தின் துணையுடன் ஆராய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது எமது முன்னிலையில் உள்ள சைவக் கொள்கைத் தத்துவம் மொஹென்ஜதாரோ, ஹறப்பா நாகரீக யுகம் தொடக்கம் பாதுகாக்கப்பட்டுள்ளது. கடவுள், அன்பின் திருவுருவுமாவார் எனச் சைவக் கொள்கைத் தத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையான அன்பின் மூலமே மனிதன் நிலைத்திருக்க முடியும். சைவக் கொள்கைத் தத்துவத்தில் குரோதத்துக்கு எவ்வித இடமும் இல்லை. இவ்வுலகில் வாழும் மனிதர்கள், தமது வாழ்க்கை சுயாதீனமானதல்ல எனவும் சர்வ வல்லமை பொருந்திய கடவுளின் கருணையின் கீழ் வாழ்கின்றனர் என்பதையும் உணர்ந்து கொள்கின்றனர். கடவுளின் கருணையை அடைவதற்காக, மனிதர்கள் தாம் கடவுள் அல்ல என்பதை முதலில் உணர்ந்துகொள்ளல் வேண்டும். தானே கடவுள் என மனிதன் கருதினால், விளக்கம் பெறவேண்டியவர் யார், விளக்கம் அளிப்பவர் யார் என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன. சைவ சித்தாந்தம் இப்பிரச்சினையைத் தீர்த்து வைத்துள்ளது.

விளக்கம் தாமாகவே பெற்றுக்கொள்ள வேண்டியதொன்றாகும். அடைய வேண்டுமென எதிர்பார்க்கும் செயற்றிறன் மட்டத்தை அடைவதற்காக, சுயமுயற்சி பெரிதும் துணையாகின்றது. இவ்வுலகு ஒரு மாயையாகும் என்பதை உணர்ந்துகொள்வதற்காக ஒவ்வொரு தனியாளும் பெரிதும் முயற்சித்தல் வேண்டும். முதன் முதலாக மனது இம்மையிலிருந்து விடுபடவேண்டும். பின்னர், நல்ல செயல்களையும் தீய செயல்களையும் ஆய்ந்தோய்ந்து ஏற்றுக்கொள்வதற்காக மனதைப் பயிற்றுவித்தல் வேண்டும். தெய்வீக நிலையை அடைவதற்காக, மனிதன் எதனையும் ஆய்ந்தோய்ந்து பார்க்கும் நிலையை அடைதல் வேண்டும். சர்வ வல்லமை கொண்ட கடவுளின் துணையினால் மட்டுமே மனிதன் மறுபிறப்பிலிருந்து மீட்சிபெறலாம். மனிதனிடத்தே காணப்படும் 'நான்' என்ற அகங்காரத்தை விட்டு நீங்குவது மிகக் கடினமானதொரு கருமமாகும். தேவ வலிமையின் மூலம், 'நான்' என்ற அகங்காரத்தைச் செயலிழக்கச் செய்யலாம். எனினும் அதனை வேரோடு களைய முடியாது. எனவே ஆன்மா ஒருபோதும் பரிசுத்தமானதாக மாட்டாது. எனினும் கடவுள் மாத்திரமே பரிசுத்தமானவராவார். எனவே பரிசுத்தமற்ற ஆன்மாவுக்கு, பரிசுத்தமான கடவுளாக மாறமுடியாது என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடாகும். மிகத் தெளிவான இவ்வியல்பை விளங்கிக் கொண்ட தனிநபர், இயற்கையிலேயே உயர்ந்த நிலையை அடைவதோடு, ஒவ்வொரு மனிதனுக்கும் சம அளவில் அன்புகாட்டுபவராகவும் மாறுவார்.

ஐம்புலன்களுடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள மனமானது, எப்போதும் பயன்படக் கூடியதும், இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியனவுமான சுகபோகங்கள் அனைத்தையும் அனுபவிப்பதில் விருப்புக் காட்டும். உலகாயதச் சிக்கல்கள் ஒருபோதும் முடிவுற மாட்டா. ஒரு தடவை அனுபவித்த சுகத்தை மீண்டும் அனுபவிப்பதில் மனித மனம் விருப்புக் காட்டுகின்றது. பௌதிக நயப்பு காரணமாக, உளம் கட்டிவிடப்படுகின்றமையால், மேற்குறிப்பிட்ட பழக்கங்களுக்கு மனிதன் அடிமையாகின்றான். உலகாயத சுகங்கள் நித்தியமற்றவை என உணர்ந்துகொள்ளும் போது மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக சாந்தி பற்றித் தேடியறிய முனைகிறான். இங்கு அவன் தெய்வீக சாந்தியைத் தேடிச் செல்பவனாக மாறுகின்றான். இந்தத் தெய்வீக சாந்தியின் ஊடாக நிலைத்த சாந்தியைப் பெறுவதற்கும், ஈற்றில் நித்திய சுகத்தை அடைவதற்கும் மனிதனுக்கு வழிகிடைக்கின்றது. இவ்வுலகில் மனிதனாக உருவெடுத்தமையின் முக்கிய குறிக்கோள் இந்நிலையை அடைவதாகும். இந்தப் பிறப்பில் அந்நிலையை அடைய முடியாது போய் விடின் செய்த நன்மை-தீமைகளின் அளவுக்கு அமைய மறுபிறவி எடுக்க வேண்டியேற்படுகின்றது. நித்திய சுகத்தைப் பெறும் இச் சந்தர்ப்பம் தவறவிடப்படின் தனது அடுத்த பிறப்பு எது என்பது பற்றி உறுதியாகத் தான் அறிந்து கொள்ள முடியாது. மனிதர்கள் அனைவரும் சர்வ வல்லமை பொருந்திய மனிதனின் நிலையை அடைவதற்காகவே மனிதத்துவத்தைப் பெறுகின்றமையால் அந்த ஈற்று நோக்கத்தை எய்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் எமது கடமையாகும் என்பதைச் சைவ சித்தாந்தக் கோட்பாடு உறுதியாகக் குறிப்பிடுகின்றது.

### செயற்பாடு 12

"மனதை அடக்குவது இந்துக் கல்வித் தத்துவத்தின் பிரதானமான இலட்சிய மாகும்." ஆய்க.

இவ்வுலகம், ஆன்மா, கடவுள் ஆகிய விடயங்கள் பற்றி சைவசித்தாந்த தத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உடல், ஐம்பெரும் பூதங்களால் ஆக்கப்பட்டுள்ளமையால், அது அழியக்கூடியதாகும். அழியாத் தன்மையுடைய ஆன்மா எனப்படுவது உடல் அல்ல. எனவே உடலினுள் அமைந்துள்ள ஆன்மா புலனாகக் கூடியதொன்றாகையால் தான் உடலினால் தொழிற்பட முடிகின்றது. உடலினுள் வாழ்வதற்காக, ஆன்மாவுக்குக் கடவுளின் கருணை தேவைப்படுகின்றது. எனவே ஆன்மா காரணமாக உடலும், சர்வ வல்லமை பொருந்திய கடவுளின் கருணை காரணமாக ஆன்மாவும் நிலைத்திருக்கின்றன. எனினும் கடவுள் சுயாதீனமானவராவார். இவ்வுண்மைகளை உணர்ந்துகொண்டு, நித்திய சுகத்தை நுகருவதற்காக தெய்வ நிலையை அடைதல் ஆன்மாவின் பொறுப்பாகும். இதுவே சைவக் கொள்கையின் சாராம்சமாகும்.

### செயற்பாடு 13

1. இந்து தத்துவத்தைப் பொருளுள்ளதாக்குகின்ற, பொதுக் கல்வி நோக்கங்களின் பட்டியலொன்றினைத் தயாரிப்படுத்துக.
2. இந்துக் கல்வி நோக்கங்கள் ஆசிரியர்க்குப் பயனுடையதாக அமையும் விதத்தை உதாரணங்காட்டி விளக்குக.
3. பௌத்த, இந்து கல்வித் தத்துவங்களுக்கிடையே தெளிவாகப் புலப்படும் சில வேறுபாடுகளை ஆய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 கிறித்தவ கல்வித் தத்துவம்

பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற கிரேக்க ஞானிகளின் காலம்தொட்டு இன்றுவரை கல்வி தொடர்பான பல்வேறு வரைவிலக்கணங்கள் தோன்றின என்பதை நீங்கள் அறிவீர்கள். மனிதனைக் கிறித்தவ பூரணத்துவத்தின்பால் கொண்டு செல்கின்ற, அவனது இயற்கையான அருஞ் சக்தியினால் அபிவிருத்தியடைகின்ற, அவனது செயற்படுநிதியான (Active) மிதமான (Passive) முன்னேற்றத்துக்கு ஏதுவாக அமைகின்ற அந்த அடிப்படைக் கருமத்தொடரை ஆக்குகின்ற, ஒரு பூரணமான செயற்றொடராகவே கிறிஸ்தவன் கல்வியை விளங்கிக் கொள்கின்றான். அச்செயற்றொடரின் காரணமாக, தான் பூரணத்துவத்தை நோக்கிச் செல்லும் பயணத்தின்போது, தனக்குச் சரியான முதிர்ச்சியுடன் கூடிய வழிகாட்டல் கிடைக்கப்பெறுகின்றது என்பது கிறித்தவனின் உணர்வாகும். (கல்வியின் அண்மித்த குறிக்கோள்கள்–கெவின் ஜே.ஒபிரயன்)

கல்வியைப் புகட்டுபவரின் பிரதானமான பொறுப்பு, கலை, விஞ்ஞானம், இலக்கியம், தேவ வெளியீடுகள் ஆகியனவற்றின் ஊடாகப் பெருக்கெடுத்துவரும் பல்வேறு ஒத்தாசைகளைப் பிரயோகித்து மனிதனின் பயன்பாடு, அவனது பாதுகாப்பு ஆகியவற்றின் கீழ், பௌதிக அகிலத்தையும் அவ்வகிலமும் மனிதனும் தொடர்பான தேவ எண்ணக்கருவுக்கும் ஒழுங்கமைப்புக்கும் இடையேயான ஒற்றுமையையும் கூட்டுத் தொடர்பையும் தோற்றுவித்தலாகும்.

கல்வி தொடர்பான மேற்படி வரைவிலக்கணம் மனித ஆளுமையின், தன்மையிலேயே தங்கியுள்ளது. இதோ கவனியுங்கள்!. அரிஸ்டோட்டிலின் கருத்துக்கு அமைய ஆன்மா–உடல் ஆகியவற்றின் கூட்டிணைப்பான மனிதன், மரணிக்காத ஆன்மாவுடன் கூடிய பௌதிக அதி- பௌதிகத் தன்மைகளைக் கொண்ட பிராணியாகக் கருதப்படுகின்றான். இவ்வாறாக விவேகம், சுதந்திரம், உணர்வுகள் ஆகியவற்றைக் கொண்ட, மனித தனித்துவத்தை ஆக்கபூர்வமாகச் செயற்படுத்தக்கூடிய ஒரு காரணியாகவும் அவன் அமைகின்றான். அவன் பல்வேறு உரிமைகளையும் கடமைகளையும் கொண்டுள்ளான். தனியாள்களுக்கிடையிலான தொடர்புகளைத் தோற்றுவிக்குந் திறனை அவன் தன்னகத்தே கொண்டுள்ளான். அதுமட்டுமன்றி உலகில் உள்ள விசேட கருமமொன்றுக்காக அவன் அழைக்கப்படுகிறான். எனவே கிறித்தவ நோக்குக்கு அமையக் கல்வியானது பூரணமான மனித ஆளுமையின் முன்னோக்கிய பயணமாகும் என்பது தெளிவாகின்றது.

அண்மையில் வெளியிடப்பட்ட புனித திருச்சபை வெளியீடொன்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "உண்மையான கல்வித்தத்துவம், மனித ஆளுமையின் தன்மையின் அடிப்படையில் அமையவேண்டுமென்பதையும் எனவே அவ்வொவ்வொரு தனியாளினதும் உடல், ஆன்மீக சக்திகளைக் கவனத்திற்கொள்ள வேண்டுமென்பதையும் சமூகத்துக்குச் சேவையாற்றுவதற்காக, அவ் ஒவ்வொருவரும் அழைக்கப்படுவர் என்பதையும் விளங்கிக் கொள்வதற்காக, எதிர்கால ஆசிரியர்களுக்குத் துணையாக அமைதல் வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவ ஆளுமையின் அடிப்படையிலான கிறித்தவ பரம்பொருள். ஆளுமை என்பன தொடர்பான மனித எண்ணக்கரு இவ்வாறாகத் தொடர்புபடுத்தப்படுகின்றது. பிறிதொரு விதமாகக் கூறினால், அக்கிறித்தவ திருவுருவம், மானிட ஆளுமையில் தங்கியிருக்கும் கல்விக் கோலத்தில் ஆரம்பித்து, உலக வழங்குகைகள், பண்புகள், பெறுமானங்கள் ஆகியவற்றின் மூலம் மெருகு பெற்று மனிதன் பெறும் உலகாயத அழைப்பைத் தெளிவாகக் காட்டுகின்றது. (கத்தோலிக்க பாடசாலைக் கல்வியின் சமய வரைமுறை தொடர்பான வெளியீடு - 63)

பொதுமக்கள் கல்வியின் வருகையுடன், கல்வியை ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல் ஆகியவற்றில் அரசும் முக்கியமானதொரு பங்கினைப் பொறுப்பேற்றமையினால், சில முக்கியமான கல்விப் பெறுமானங்கள் மனதிலிருந்து நீங்கியதோடு மட்டுமன்றி, பொருள் சார்ந்த கண்ணோட்டப் பண்புகள் கல்வித் துறையில் இடம்பிடித்துள்ளமையையும் நீங்கள் அறிவீர்கள். கல்வி, தற்போது, பெருமளவுக்குத் தொழில்சார்ந்ததாக மாறியுள்ளது. அது மாத்திரமன்றி, உயர்கல்வியின் போது மனிதனது ஆன்மீக அழைப்பு கருதாது தவிர்க்கப்பட்டுள்ளது. இது ஒரு பேரிழப்பாகும்.

அரச திணைக்களமொன்றினால் நெறிப்படுத்தப்படுகின்ற, தேசிய திட்டமொன்றின் மீது ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கல்வி தொடர்பான எண்ணக்கருக்கள் எந்த அளவுக்கு எமக்குப் பரிச்சயமானவை என நோக்கும் போது ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்திய கல்விக் கோலத்தை மீள நினைவூட்டும்போது மனது பெரும் பாடு பட வேண்டியுள்ளது. இன்று பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணிக்கும் விதம், அரசினால் கட்டுப்படுத்தப்படும் முகாமைத்துவம், ஆசிரியர்களும் மாணவர்களும் அரச அதிகாரிகளின் மேற்பார்வைக்கு ஆளாதல் ஆகிய அனைத்தும் எமக்குப் புதியவையல்ல. எனினும் அண்மைக்காலந்தொட்டே கல்வியின் பால் அரசு இவ்வாறாக ஆதிக்கஞ் செலுத்தத் தொடங்கியது.

பிரான்சில் இவ்வாதிக்கம், பிரான்சியப் புரட்சி (1792-1793) வரை பிரவாகிக்கின்றது. இதற்கு முன்னர் பரிசுத்த திருச்சபையே கல்வித்துறையில் ஆதிக்கஞ் செலுத்தியது. பரிசுத்த திருச்சபை, ஐந்தாம் நூற்றாண்டு தொடக்கம் பாடசாலைக் கல்வியைப் புகட்டியது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவ்வாறான பாடசாலைகள், தேவாலயம், வழிபாட்டு மண்டபம் போன்றவற்றுக்கு அண்மையில் கட்டியெழுப்பப்பட்டன. கிராமியப் பிரதேசங்களில் ஆரம்பித்து, பல்கலைக்கழக மட்டம் வரையிலான கல்வி, மத்திய கால பரிசுத்த திருச்சபையின் அனுசரணையுடன் வழங்கப்பட்டமையையும் நீங்கள் அறிவீர்கள்.

ஆரம்பக்கல்வி தொடர்பான "லதாரன கருத்தரங்கு" வெளியீடுகள் (1179-1215) பிரபல்யமானவையாகும். இதற்கு ஏற்ப, சிறுவர்களுக்கு எவ்வித கட்டணமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவிடாது கல்வி புகட்டுவதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்ய வேண்டு மெனவும் அக்கல்வி தொடர்பாக ஆய்ந்தறிவதற்காக, தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்தல் வேண்டுமெனவும் அதற்கான (நிதி) வளங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும், கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அக்கல்வி அதிகாரி 'மாஸ்ரர் ஒஃப் ஸ்கூல்ஸ்' (Master of Schools) என அழைக்கப்பட்டார்.

கி.பி. 1524இல் மாட்டின் லூதர் ஜேர்மனிய நகர நிருவாகிகளுக்கும் சபைகளுக்கும் பிரசித்தமான கடிதமொன்றினை அனுப்பி, பாடசாலை அமைப்பதும் அவற்றைப் போசிப்பதும் அவசியமாகும் என வெளியிட்டார். விவிலிய நூலை ஜேர்மன் மொழியில் பெயர்த்து, கீதப் புத்தகமொன்றினைத் தயார்ப்படுத்தி, சிறிய ஞானஉபதேசப் புத்தகமொன்றினை எழுதிய லூதர், அக்காலக் கல்விக்கு குறிப்பிடத்தக்க அளவு சேவை ஆற்றியுள்ளார்.

அக்காலத்திய கத்தோலிக்க ரெபரமாது நாடுகளில் கிறித்தவ சமயக் கல்விக்கு முதலிடம் கிடைக்கப்பெற்றமை இப்போது உங்களுக்கு விளங்கியிருக்கும். உறுதியான சமயக் கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் கல்வியின் பிரதானமான கொள்கையாக அமைந்தது. இவ்வெண்ணக்கருவை (இங்கிலாந்தில்) தெளிவாகக் காட்டிய பெருங்கவிஞர் மில்ரன் பின்வருமாறு எழுதினார். 'கடவுள் தொடர்பான சரியான அறிவைப் பெற்று, இருமுது குரவர்கள் விளைவித்த அழிவுகளை வெற்றிகொள்வதற்கும், அவ்வறிவின் காரணமாக கடவுளிடத்தே அன்பு காட்டுவதற்கும் எம்மாலான அளவுக்கு அவரைப் பின்பற்றுவதற்கும் அவர் போன்றே மாறுவதற்கும் வழிவகுப்பதே கல்வியின் குறிக்கோளாகும்'.

(கல்வி அறிக்கை - மில்டன் பதிப்பு - 1895 பக்கம் 4)

அக்காலத்தில், சமயம் தனியே பாடவிதானத்தின் ஒரு பாடமாக மாத்திரமன்றி, பாடசாலையின் கட்டுமொத்தமான சுற்றாடலாகவும் அமைந்துள்ளது என்பதை இப்போது நீங்கள் புரிந்திருப்பீர்கள். பாடசாலையில் கற்பித்த ஒவ்வொரு விடயத்திற்கும் அடிப்படையாயும் பின்னணியுமாக அமைந்தது சமயமாகும். எனவே கத்தோலிக்க நாடுகளில் கல்வியும் சமயமும் ஒன்றிணைந்தமையினால் கற்பித்தல் (பொதுவான ஏற்றுக்கொள்கைக்கு அமைய) பாதிரியிடம் ஒப்படைக்கப்பட்டது. மாணவர்களை உண்மையான கிறித்தவர்களாக மாற்றுவதே அவர்களது பிரதானமான நோக்கமாக அமைந்தது. இதற்காக சமயத்தையும் நல்லொழுக்கத்தையும் கடைப்பிடித்தலே - அதாவது கல்வி புகட்டுவதே அவர்களது குறிக்கோளாக இருந்தது.

**செயற்பாடு 14**

கிறித்தவக் கல்வியின் அடிப்படையை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சியப் புரட்சிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட அனைத்தும் பொதுவானவையாகக் கருதப்பட்டன. எனினும் கடந்த மூன்று தசாப்தங்களுள் கல்வி நோக்கங்களில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. கல்விமுறை படிப்படியாக உலகுடன் தொடர்புடையதாக மாறிற்று. கல்வியின் உண்மையான நோக்கமும், கிறித்தவப் பாடசாலைகளை அமைப்பதன் குறிக்கோளும் சமய ஒழுங்கமைப்பை ஏற்படுத்துவதாகும் என்பதையே, திருச்சபை அவ்வப்போது வெளியிட்டது; அவ்வாறே இப்போதும் வெளியிடுகின்றது.

கத்தோலிக்க அதாவது கிறித்தவக் கல்வி என்பது மனிதனைத் தனது ஏக இறுதி இலட்சியத்தின்பால் கொண்டு செல்வதாகும் என முக்கியமான பரிசுத்த வெளியீடுகள் பலவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறித்தவ இளைஞர்களின் கல்வி தொடர்பாக எழுதிய 1வது பியூஸ் பாப்பரசர் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். "மனிதன் என்ன செய்ய வேண்டும் அவனுக்குரிய இலட்சியத்தை (இறுதியை) அடைவதற்காக அவன் உலகில் யாது செய்தல் வேண்டும் என்பவற்றை அறிந்துகொள்வதற்காகக் கல்வியே தயார் நிலையாக அமைகின்றமையால் மனிதனின் ஈற்றுநிலையின்பால் முடுகாதவாறு உண்மையான கல்வி தோன்ற முடியாது. அதுமட்டுமன்றி, இன்று நடைமுறைப்படுத்தப்படும் தேவ விதிகளுக்கு அமைய, கடவுளானவர், சுயமான, தனித்துப் பிறந்த புத்திரராக எமக்குக் காட்சியளித்தமையினாலும், அப்புத்திரரே எமது வழியும் உண்மையும் வாழ்க்கையுமாதலாலும், கிறித்தவமல்லாத பரிபூரணமான கல்வியெதுவும் உலகில் தோன்ற முடியாது." (கிறித்தவ இளைஞர்க்கான கல்வி - 1936 பக்கம் 4-5, XI வது பியூஸ்)

தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கும் பாப்பரசர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். கிறித்துவக் கல்வியின் உண்மையான உடனடிக் குறிக்கோள், பரிபூரணமாக கிறித்தவரொருவரை ஆக்குவதில் தேவ வரப்பிரசாதத்துடன், கூட்டிணைந்து செயற்படுவதாகும். அதாவது, ஞானஸ்நானத்தினால் தோன்றியோரிடத்தே கிறித்தவ திருவுருவம் கட்டியெழுப்பப்படுவதாகும். பரிசுத்த பாப் அவர்கள் இதனை வலியுறுத்திக் கூறுகின்றார். "எனது பிள்ளைகளே, உங்களிடத்தே கிறித்தவப் பண்புகள் ஒழுங்கமையப் பெறும்வரை உங்களுக்காக வேண்டி நான் மீண்டும் பிரசவ வேதனையை அனுபவிப்பேன்" (கலாநிதி - 4/ 19); XI வது பியூஸ் பக்கம் 35-36)

பி.ப. 1949இல் இத்தாலிய நாட்டு ஆசிரியர் சங்கத்தை விழித்த XII ஆவது பியூஸ் பாப் அவர்கள் பரிபூரணமாகக் கிறித்தவர்களை ஆக்குகையில், சமகாலப் பிள்ளையை மெய்ப்பொருளாக்கிக் கொள்ளவேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். "அவன் ஒரு பிரசையாவான். அவன் தேசிய வாழ்க்கைக்குப் புதியவனல்லன். அவன் பொது வாழ்க்கையில் ஈடுபடுகின்றான்" (கத்தோலிக்க முயற்சி XXXI ஒற்றோபர் 1949, 18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவக் கல்வி பற்றிக் கற்பிக்கும் 11வது வத்திக்கான் இதழ். இவ்விடயம் தொடர்பான வெளியீட்டில் கல்வி நோக்கங்களைப் பின்வருமாறு சமர்ப்பிக்கின்றது. "கிறித்தவக் கல்வி நாம் முன்னர் குறிப்பிட்டவாறு முதிர்ச்சியடைந்த மனித ஆளுமையை விருத்தி செய்வது மட்டுமன்றி, ஞானஸ்னானம் பெற்றவர்களைப் படிப்படியாக, மீட்சிபெறும் இரகசியம் தொடர்பான ஆழ்ந்த அறிவின்பால் நுழையச் செய்து தாம் பெற்ற நம்பிக்கையின் கொடையை உயர்வானதாகக் கருதுவதற்கும் தூண்டுவதாகும்". (இல. 02)

மிக அண்மைக்காலத்தில் வெளியிடப்பட்ட ஒரு வெளியீட்டில் கத்தோலிக்கப் பாடசாலைகள் பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. கத்தோலிக்கப் பாடசாலை, திருச்சபையின் கருமப் பொறுப்புக்களின் ஊடாகப் பங்களிப்பைப் பெறுகின்றது. அப்பாடசாலை, விசுவாசம், கலாச்சாரம், வாழ்க்கை என்பன ஒன்றிணைக்கப்படும் கல்விப் பின்னணியொன்றின் மீது தங்கியுள்ளது. மீஸம அதாவது பிரதேச கிறித்தவ சங்கம் கூபஏடு வழங்குவதும் கல்வியூட்டியபடி தமது அங்கத்தவர்களிடத்தே நல்லொழுக்கத்துடன் கூடிய வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியெழுப்புவதும் பாடசாலையினூடாகவேயாகும். 11வது ஜுவாம் (ஜோன்) போல் போப் அவர்களின் கருத்துப்படி இரட்டைக் குறிக்கோளை எய்துவதில் கத்தோலிக்கப் பாடசாலை துணை நிற்கின்றது. இயற்கையிலேயே மனித கிறித்தவ பரிபூரணத்துவத்தின்பால் ஆண்களையும் பெண்களையும் கொண்டு செல்லும் கத்தோலிக்கப் பாடசாலையானது தமது விசுவாசத்தின் வழியே மேற்செல்வதற்கு உதவுகின்றது. இது கிறித்தவர்களது ஒரே மெய்ப்பொருளின் இரு பக்கங்களாகும்." (கத்தோலிக்கப் பாடசாலைக் கல்வியில் கிறித்தவப் பரிணாமம்-ரோம் 1988).

"கிறித்தவக் கல்வியின் உண்மையான குறிக்கோள் கிறித்தவப் பூரணத்துவமாகும்" எனக் குறிப்பிடும் வெள்ளையர் பிதாக்கள் தமது மதிப்பீட்டுக்கு அமைய முக்கியமானதாகக் கருதும் உண்மையைப் பற்றி வெளியிடுகின்றனர். இது மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்ட ஓர் தோற்றப்பாடாகும். பல காலமாகக் கட்டியெழுப்பப்பட்ட கிறித்தவ மரபுகளை வெளியிடுவது மாத்திரமே பாப்பரசர்களால் மேற்கொள்ளப்படுவதாகும். இதனை நினைவில் வைத்திருப்பது மிகப் பொருத்தமானதாகும். நாம் 7வது நூற்றாண்டைச் சற்றுக் கவனிப்போம். பிரான்ஸ் நாட்டில், கி.பி. 614இல் தேவாலயங்களுக்கு அண்மையில் அமைக்கப்பட்ட 112 பாடசாலைகள் காணப்பட்டன. அவற்றிலும், "மாணவர்களது நல்லொழுக்க, ஆன்மீக நடத்தைப் பயிற்சியே" முக்கிய இடம்பெற்றது என்பது தெளிவாகின்றது.

**செயற்பாடு : 15**

நற்பிரசைகளைத் தோற்றுவிப்பதற்கும் பொருத்தமான கிறித்தவக் கல்விக் குறிக்கோள்களின் பட்டியலொன்றினைத் தயாரிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியின் இறுதி நோக்கம்

இது மனிதனது சுய ஈற்றுப் பூரணத்துவ நிலையின்பால் செல்வதற்கு உதவுவதொன்றாகும். மனித வாழ்க்கை நோக்கங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அது ஒரு வெறும் பயணமாக அன்றி இலக்கொன்றினை நோக்கிச் செல்வதொன்றாகையால், பொருளுள்ள தொன்றாக அமைகின்றது. அந்நிலையைத் தாண்டிச் செல்லக்கூடிய வேறெதுவுமில்லை. கல்வியானது மனித வாழ்க்கையின் இறுதி இலக்கை அடைவதற்கு வழிகாட்டுவதாக அமைதல் வேண்டும். அதன்பால் முடுகுவதாக இருத்தல் வேண்டும். உண்மையிலேயே கல்வியின் ஊடாக ஏற்படும் இந்த "உயிர்வது வளர்ச்சி" வாழ்க்கையின் ஈற்று நோக்கத்துக்கு இசைவானதாகும் என்பது உங்களுக்கு விளங்கியிருக்கும். எனவே பிள்ளைகளை அவ்வீற்று நிலைவரை கொண்டு செல்லாத கல்வியியலாளர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோர் துரோகிகளாவர் எனக் குறிப்பிடப்படல் ஆச்சரியப்படத்தக்கதொன்றல்ல என்பதும் உங்களுக்குத் தெளிவாக விளங்கியிருக்கும்.

## மனிதனின் ஈற்றுப் பூரணத்துவம்

இது யாது? இது பரிபூரணமான இன்பத்தை வெற்றிகொள்ளலாகும். உண்மையை அடைதலாகும். இது தெளிவானது. எனினும் இவ்வின்பம்-மகிழ்ச்சி- ஆனந்தம் என்பன எதன் மீது தங்கியுள்ளது. அது எவற்றை கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பற்பல கருத்துக்கள் நிலவுகின்றன. இவை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுபவை அல்ல. சிலரின் பரிபூரண இன்பம் பொருளின்மீது தங்கியுள்ளது. மற்றுஞ் சிலர் சௌகரியங்கள் மூலம் அதனை அடைகின்றனர். மற்றும் சிலர் புகழையும் ஆதிக்கத்தையுமே பரிபூரண இன்பமாகக் கருதுகின்றனர். எனினும் ஆக்கப்பட்ட பொருள்களுள் ஈற்று இன்பத்தைப் பெறாத சிறித்தவனின் உச்ச ஆனந்தமானது, ஆக்கப்படாத, நன்மையேயாகும். அதாவது கடவுளே சிறித்தவனின் ஈற்றுப் பரம்பொருளாகும். அதாவது ஈற்று முடிவாகும் என்பதாகும்.' (சீதாவலி 102/ 5)

இதனை வாசிக்க

> எனது இதயமே இறைவனைப் புகழ்.
> அவரது சகல உதவிகளையும் மறக்க வேண்டாம்.
> அவர் எனது சகல பாவங்களையும் போக்குவார்.
> எனது நோய்கள் அனைத்தையும் தீர்ப்பார்.
> எனது வாழ்க்கையைப் பாதாள உலகிலிருந்து மீட்பார்.
> அன்பு கருணை ஆகிய கிரீடங்கள் மூலம் என்னை அலங்கரிப்பார்.
> கழுகு போன்று
> எனது இளமைப்பருவத்தைப் புதுப்பிப்பதற்காக
> உயிருள்ள காலமெல்லாம்
> என்னை நல்லவற்றைக் கொண்டு திருப்திப்படுத்துவார்.
>
> (சீதாவலி 103/ 1-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவ சிந்தனைக்கு அமைய கடவுள் மாத்திரமே மனிதனின் ஈற்று முடிவாகும் என்பதை நீங்கள் இப்போது விளங்கியிருப்பீர்கள்.

மனிதன் இதனை எவ்வாறு வெற்றிகொள்ளலாம்? எல்லையற்ற அன்புடன் செயலாற்றும் கடவுள், மனிதனை மீட்சி நிலைக்குக் கொணர்ந்து அவனுக்குப் பூரணத்துவத்தை வழங்குகின்றார். அதுவே சுவர்க்கத்தில் வாழும் கடவுளைக் காண்பதும் அவரை அடைவதுமாகும். இது "பெயாறிபிக் விஷன்" அதாவது "சுவர்க்கத்திலுள்ள கடவுளைக் காணல்" என அழைக்கப்படுகின்றது. அத்தத்துவமும், அதனைக் காணலும் மனிதனுக்குப் பரமானந்தமாக அமையும். அதனிடத்தே மனிதனைக் கொண்டு செல்வதே கல்வியின் உண்மையான நோக்கமும் குறிக்கோளுமாகும் என்பது இப்போது உங்களுக்கு விளங்கியிருக்கும்.

**கல்வியின் அண்மித்த நோக்கம்**

ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு xi ஆம் பியுஸ், xii ஆம் பியுஸ் பாப்பரசர்கள், பரிபூரணமாக கிறித்தவனை ஆக்குதல், அதற்காக தேவ வரப்பிரசாதத்துடன் கூட்டாகக் கருமமாற்றல் என்பனவே கிறித்தவக் கல்வியின் முக்கிய நோக்கமாகும் எனக் குறிப்பிட்டுள்ளனர். இதற்காகக் கட்டாயமாக அமைகின்ற காரணிகளை (ஏதுக்களை)ப் பின்வருமாறு சமர்ப்பிக்கலாம்.

1. மனித சக்திகளின் பூரணமான முன்னேற்றம் (வளர்ச்சி, விவேகம்). இவை தனியே புலனுணர்வுப் பிரிவில் மாத்திரமன்றி உள-சிந்தனைப் பிரிவுடனும் தொடர்புற்றுக் காணப்படுகின்றது.

2. நற்பண்புகளை விருத்திசெய்தல், ஒழுக்க வளர்ச்சி: இதன் மூலம் மனித சக்திகள் செயற்படுவது மட்டுமல்லாது தேவத்துவத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதையும் அது இலகுவாக்குகின்றது.

3. நிறைவேறும் வரப்பிரசாதச் செயற்பாடு: இது மனித ஆன்மாவில் பொதிந்துள்ள உலகாயதப் பண்பாகும்.

4. செயற்பாடுடைய அன்பும் கருணையும்:
   கடவுளுக்கும் அயலவர்க்கும் அன்பு செலுத்துதல்.

5. கிறித்துபிரானுடன் ஒன்றிணைதல்:
   அதாவது கிறித்துவின் துணையுடன் கிறித்து மயமாதல்.

6. தேவ விருப்புக்கு அமைய முற்றுமுழுதான படைப்பையும் நெறிப்படுத்தியபடி அதனை இறுதி முடிவு வரை வழிநடத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவப் பூரணத்துவம் இவற்றை உள்ளடக்கியதாகும் என்பதை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். கிறித்தவக் கல்வியின் முக்கிய (அண்மித்த) நோக்கமும் இதுவேயாகும் என்பதையும் நீங்கள் விளங்கியிருப்பீர்கள்.

கிறித்தவக் கல்வி முற்று முழுதாக "மறு உலகத்தை மையமாகக் கொண்டுள்ளதா" என நீங்கள் கேட்கக்கூடும். உண்மை அதுவல்ல. தனது இயற்கையான சக்திகளை மழுங்க வைத்துக் கொள்ளாத, கிறித்தவன், பொதுவான உலக வாழ்க்கையிலிருந்து பதுங்கிச் செல்வதில்லை. எனினும் தனது சுயமான இயற்கையான திறமைகளையும் ஆளுமைச் சக்திகளையும் யதார்த்தத்துடன் கூடிய தொடர்புடனேயே வளர்த்துக் கொள்கின்றான். அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் (பியுஸ்) பாப்பரசர் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார். "பிரசித்தமாகவே மறு உலகை மையமாகக் கொண்டிருத்தல் கிறித்தவக் கல்வியின்பால் சுமத்தப்படும் ஒரு குறையாகும்". உலகின் நிலைமை, வாழ்க்கை, மனிதத் தொழிற்பாடு ஆகியன அக்கல்வியின் போது கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படுவதில்லை எனவும் சிலர் கூறுகின்றனர். எனினும் இவ்வாறாகக் குறை கூறல் நியாயமாகாது. உண்மை நிலை அதுவன்று. "மறுஉலகுக்கு முதலிடம் வழங்கும் நாம், இவ்வுலகுக்கும் முதலிடம் வழங்குகின்றோம். எனினும் பரலோகம், இவ்வுலகம் ஆகிய இரண்டின்பாலும் நாம் கவனஞ் செலுத்துகின்றோம். பரலோகமானது இவ்வுலகின் துணையுடன் சுற்றிச் சுழல்கின்றது. (கிறித்தவ இளைஞர் கல்வி பக்கம் 37)

நவீன கிறித்தவ சபைக் கற்பித்தல்களுக்கு அமைய, இவ்விமர்சனம் மறுத்துரைக்கப்படுகின்றது. தற்கால உலகின் திருச்சபை, இல்லற அபோஸ்தலர் சேவையையும் கிறித்தவக் கல்வியையும் பற்றிக் கற்பிக்கும் 11வது வத்திக்கான் வெளியீடுகளில், கிறித்தவ அழைப்பு உலகாயத வழிமுறையைத் தழுவுகின்றமையையும் கலாச்சார, பொருளாதார, அரசியல் உலகுடன் தொடர்பைக் காட்டுகின்றமையையும் தெளிவாகக் காட்டுகின்றது.

அண்மைக்கால சபை ஆவணங்களில் இடம்பெற்றுள்ள பின்வரும் பந்தியை வாசியுங்கள். "மனிதக் கலாசார உலகம், சமய உலகம் என்பன ஒரு போதும் சந்திக்க முடியாத சமாந்தரமாகச் செல்லும் ஒரு யதார்த்தமல்ல. இடைப்பிணைப்புச் சக்திகள் மனிதனிடத்திதேயே பிறக்கின்றன. நம்பிக்கையாளன் மனிதனேயாவான். எனினும் அவன் நம்பிக்கை கொள்வோனாவான். கலா சாரத்தை வெற்றிபெறச் செய்பவனாவான். எனினும் ஒரு மதத்தைப் பின் பற்றுபவனாவான். கத்தோலிக்க பாடசாலைகளில் மாத்திரமன்றி, ஒவ்வொரு பாடசாலையிலும், கடவுள் ஓர் அதிதியாகவோ தேவையின்றிப் பலவந்தமாக நுழைபவராகவோ அமைய மாட்டார். தான் படைத்த அண்டம் பற்றிக் கற்ப தற்காக விரைவோரின் முன்னே கஷ்டங்களை வைத்தல், படைக்கும் கடவு ளின் பண்பல்ல." இல. 51. நவீன விஞ்ஞான, தொழினுட்ப கல்வி தொடர் பாகவும் இதனையே கூற வேண்டியுள்ளது. "நம்பிக்கை, விஞ்ஞான பூர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு என்பவற்றுக்கிடையேயான சிக்கல் நிலை ஏற்படவும் இடமுண்டு. இவ்விரு பிரிவுகளுக்கும் பொதுவாக அமையும் மூலாதாரம் கடவுளாவார்." (இல. 54)

இவ்வாறாக் கிறித்தவக் கல்வி காரணமாக, கிறித்தவனுக்கு நவீன கலாச்சாரம், விஞ்ஞானபூர்வ முன்னேற்றம், தொழினுட்பச் சேவைகள் என்பன கிடைக்காமற் போவது கிடையாது. அவை கிறித்தவக் கல்வியின் இரண்டாவது நோக்கத்தை விடக் குறைவானதாக அமையாது என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

இன்று சம்பிரதாயபூர்வ கிறித்தவ நாடுகளில் காணப்படும், கல்வி நிலையை நோக்கும்போது கிறித்தவக் கல்வி வெற்றியடையவில்லை என நீங்கள் வினாவக் கூடும். அவ்வாறன்று, இதோ கவனியுங்கள், திருச்சபையின் இணைக்கத்துக்கு அமையக் கல்வியானது குடும்பத்தின் பிரதானமான பொறுப்பாகும். அம்முயற்சியில் பெற்றோரின் பொறுப்பு கட்டாயமானதாக அமைகின்றது. கல்வி தொடர்பாக அரசுக்கும் சமூகத்துக்கும் ஒப்படைக்கப்படும் பொறுப்பு, துணையாக அமையும் கருமம் மாத்திரமேயாகும். திருச்சபையும் கல்விக்குக் கைகொடுக்க வேண்டும் என்பது கிறிஸ்தவக் கல்வி தொடர்பான 11வது வத்திக்கான் வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாயாக அமைகின்ற திருச்சபையின் மீதே தனது பிள்ளைகளின் கல்வி தொடர்பான பொறுப்பு சார்ந்துள்ளது. அத்தாயினது தொழிற்பாட்டின் மீதே அதன் அங்கத்தவர்கள் (பிள்ளைகள்) கிறித்துவப் பண்புகளால் போசிக்கப் பெறுகின்றனர். இது அவர்களது முழு வாழ்க்கையிலும் பங்களிப்புச் செய்யும் ஒரு பிரதானமான காரணியாகும். (திருச்சபை வழங்கும் கல்வியின் காரணமாக, மனித ஆளுமையுள் சமநிலையான பூரண தத்துவத்தைக் கட்டியெழுப்பவும், அதன் மூலம் உலகில் நற்சமூகமொன்றினைக் கட்டியெழுப்பவும் மனிதனுக்கு மிகப் பொருத்தமான உலகமொன்றினைக் கட்டியெழுப்பவும் சகலருக்கும் உதவி கிடைக்கின்றது. (இல. 3)

**செயற்பாடு 16**

"நல்லொழுக்க சீலம் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் அடிப்படையே தேவ பக்தியாகும்." கிறித்தவக் கல்வியைத் துணையாகக் கொண்டு ஆய்க.

## 4.4 இஸ்லாமிய கல்வித் தத்துவம்

"சமூகம் தொடர்பான யதார்த்தம், தனியாள்களின் பொறுப்புக்கள், சமூக சட்டதிட்டங்கள், சமூகத்தின் எதிர்கால நிலவுகை, என்பனவற்றினாலேயே இஸ்லாமிய சமயம் சூழப்பெற்றுள்ளது" இதற்கு அமைய இஸ்லாமிய சிந்தனையை மையமாகக் கொண்டே முஸ்லிம் கல்வி கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இக்கல்விமுறையின் ஆரம்பம் தூய அல்குர்ஆனைக் கற்றலாகும். சமூக முடுகலின் மீதே கல்வி ஆரம்பமாகின்றது என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய நாகரிகத்தின் மேம்பாடும், அதனுடன் தொடர்புடைய சகல அம்சங்களும் சமயத்துடன் தொடர்புடையதாகவே கட்டியெழுப்பப்பட்டுள்ளன. மருத்துவம், இரசாயனவியல், கணிதம், வானியல், தத்துவம் போன்ற துறைகள், இஸ்லாமிய நாகரிகத்தின் உச்சக்கட்டத்திலேயே விரிவடைந்தன. இவ்வொவ்வொரு துறையையும் சேர்ந்த பாடங்களைக் கற்கும் மையநிலையமாக விளங்கிய இடம் பள்ளிவாசலாகும். இஸ்லாமியர்களின் முதன்முதலான பாடசாலை பள்ளிவாசலாகும் என்பது தெளிவாகின்றது.

இஸ்லாமிய சமூகத்தில் ஆசிரியர் மிக முக்கிய இடத்தை வகித்தார். அவர் மாணவனின் ஆன்மீகப் பிதாவாக மதிக்கப்பட்டார். கற்பித்தல் கடவுளின் விருப்புக்கு இயைய அமைகின்றது. அது உலகாயத ஆசைகளை அடைவதற்காக மேற்கொள்ளப்படுவதில்லை. அது பணத்துக்காகவோ வேறெவ்வித கட்டணம் அல்லது கொடுப்பனவையோ பெறும் நோக்குடனோ மேற்கொள்ளப்படும் கருமமுமல்ல. கடவுளின் பெயரால் அறிவைப் பரப்பும் கருமத்துக்காகவே ஆசிரியரின் முழு வாழ்க்கைக் காலமும் ஒதுக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில், நூல்களைப் பிரதி செய்வதும், அவற்றை விற்பனை செய்வதுமே அவர்களின் சீவனோபாயமாக அமைந்தது. பிற்காலத்தில் பாடசாலைகள் அமைக்கப்பட்டதோடு, ஆசிரியர்க்குச் சம்பளம் வழங்கவும் ஆரம்பிக்கப்பட்டது.

தீர்க்கதரிசிகளின் கருத்துக்கு அமைய தனியாளின்-மனிதனின் சீரழிவு இரு வழிகளில் நிகழலாம்.

1. நல்லொழுக்கஞ் சீர்குலைதல்.
2. முட்டாள்தனமான நம்பிக்கை காரணமாகச் சீர்குலைதல்.

என்பவை அவையாகும்.

தனியாள் அபிவிருத்தியின் பிரதானமான வழிவகை, வேலையில் காட்டும் ஆர்வமும் விருப்புமாகும். சரியான மாணவனின் பிரதானமான தேவை அறிவை வளர்த்துக் கொள்வதாகும்.

**செயற்பாடு 17**

"முஸ்லிம்களின் பள்ளிவாசல் பிரதானமான கல்வி நிறுவனமாகும்" விளக்குக.

**இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியரிடத்தே காணப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படும் பண்புகள்.**

1. கடவுளான அல்லாஹ்வுக்காக சகல கற்பித்தல்களுக்கும் தன்னை அர்ப்பணித்தல்.
2. தூய்மை.
3. நேர்மை
4. வேலையில் காட்டும் விருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பொறுமை.

6. ஆழ்ந்த தன்மையும் மதிப்பளித்தலும்

7. ஆசிரியர் பிதாவுக்குச் சமனானவராயிருத்தல்.

8. ஆலோசகராக இருத்தல்.

9. நிபுணத்துவம் பெறுவதற்காகத் தொடர்ந்தும் கற்றல்.

மாணவர்களுக்காகவும் அவர்களது கல்விக்காகவும், ஆசிரியர் தனது அறிவையும் சேவையையும் முற்றுமுழுதாக அர்ப்பணித்தல் வேண்டும் என இஸ்லாமிய சமயம் கற்பிக்கின்றது. இக்கருத்து, தற்கால நவீன கல்வி முறையுடன் நன்கு பொருந்துகின்றது. பாடசாலையானது முழு நேர ரீதியில் மாணவரின் மேம்பாட்டுக்காகக் கருமமாற்றுதல் வேண்டும் என்பது நவீன கல்வியியலாளரின் கருத்தாகும். இஸ்லாமிய தத்துவத்தின் மூலம் ஆசிரியர், வகுப்பறைத் தொழிற்பாடுகளில் மட்டுமன்றி, பாடசாலையினுள்ளும், பாடசாலைக்கு வெளியேயும் பாடவெளிவேலைகளிலும் ஈடுபட வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. நவீன கல்வியியலாளர்களால் கூட, மாணவர்களின் பூரண வளர்ச்சிக்காக, அவனது வகுப்பறைக் கல்விக் கருமத் தொடரிலும், அதற்கு வெளியே விளையாட்டு, மெய்வல்லுநர் விளையாட்டுக்கள், அழகியற்றொழிற்பாடுகள் போன்ற நயப்புப் பிரிவைச் சேர்ந்த தொழிற்பாடுகளிலும் மாணவனை ஈடுபடுத்த வேண்டும் என்பது பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மாணவனின் கல்விக்காக ஆசிரியர் அர்ப்பணிப்புடன் கருமமாற்ற வேண்டியது அவசியம் என்பது தற்காலக் கல்வியியலாளர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொன்றாகும். இக்கல்விக் கருத்துக்கள், இஸ்லாமிய சமயத்தினால் மெருகு பெற்ற கல்விச் சிந்தனையிலும் பொதிந்துள்ளமை நன்கு தெளிவாகின்றது.

இஸ்லாமிய தத்துவத்தில் சுத்தம் அதாவது தூய்மை முக்கிய இடம் பெறுகின்றது. ஆசிரியர் உடல் ரீதியில் தூய்மையைப் பேண வேண்டும் என்பது அவர்களது கருத்தாக அமைந்தது.

அத்தோடு, பொறாமை, தந்திரம், வஞ்சனை போன்ற துர்க்குணங்கள், துர்மனப்பாங்குகள் போன்றவற்றிலிருந்து நீங்கி, உளத்தூய்மையை விருத்தி செய்து கொள்ளல் வேண்டும். அதுமட்டுமன்றி ஆசிரியர் தொழிலுக்குரிய விசேட ஒழுக்க நெறிக் கோவையொன்றுக்கு அமைவாக நடந்துகொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது தற்போதைய ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் விதிகள், ஒழுக்க நெறிக் கோவை என்பவற்றைப் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றது.

இஸ்லாமிய தத்துவமானது, தனியாள் வேலையில் காட்டும் நேர்மை, ஆர்வம் என்பவற்றை உயர் பண்புகளாக மதிக்கின்றது. தான் குறிப்பிடுபவற்றைத் தனது செயல்கள் மூலம் காட்டுவதும், தனது செயலே தான் குறிப்பிடுபவையாக அமைவதுமே இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரிடத்தே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவுகின்ற பண்புகளாகிய, கருமங்களில் உறுதிப்பாடு, குறிப்பிடுபவைகளின் உறுதிப்பாடு, விவேகம் என்பனவற்றை ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் பொறுமையைக் கடைப்பிடித்தல், மனவெழுச்சியைக் கட்டுப்படுத்தல், கோபத்தை அடக்குதல் போன்ற பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது இஸ்லாம் சமயத்தில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அவர் மூட நம்பிக்கைகளைத் தவிர்த்து, தவறான, பிழையான மனப்பாங்குகளைக் களைவதற்கான வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். மேலும் ஆசிரியர் வழிகாட்டியாகக் கருமமாற்றும்போது அவர் மாணவரின் பல்வேறு பண்புகளையும், நடத்தைக் கோலங்களையும் நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும். அதற்கு ஏற்ப, அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி வழிகாட்டுதல் வேண்டும். போதைப்பொருள் பயன்பாடு, கீழ்த்தரமான பாலியற் சஞ்சிகைகள், சினிமா, மற்றும் பல்வேறு ஊழல்கள் பல்கிப் பெருகியுள்ள தற்கால சமூகத்திற்கு வழிகாட்டல் மிக அவசியமாகின்றது என்பது தெளிவு. மாணவரின் கற்றலில் ஆதிக்கஞ் செலுத்தும் குறைபாடுகளை இனங்கண்டு அவர்களது ஆளுமையை விருத்திசெய்வதற்கு வழிவகுத்தலானது நவீன கல்வி முறையில் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒரு கருமமாகும். இந்நோக்கம் இஸ்லாமிய சமயத்தினால் மெருகூட்டப்பட்ட இஸ்லாமிய கல்வித் தத்துவத்தின் மூலமும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஆசிரியர், கௌரவத்தின் சின்னமாக அமைதல் வேண்டும். அவர், மாணவருடனும் அவர்களது பெற்றோருடனும் நல்லெண்ண நற்றொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்ளல் வேண்டும். இஸ்லாமிய சமயத்தில் வலியுறுத்தப்படுவதும் இதுவேயாகும். மாணவர்களை அவதானித்து அவர்களது அசாதாரண குணாதிசயங்களை இனங்கண்டு அவை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய குறை நீக்கல் நடவடிக்கைகள் தொடர்பாகப் பெற்றோருக்கு வழிகாட்டுதல் வேண்டும். அத்தோடு மாணவர்களைத் தலைமைத்துவத்துக்குப் பழக்குதலும், அவர்களுக்கு வழிகாட்டுதலும் ஆசிரியரின் பொறுப்பாகக் கருதப்படுகின்றது.

மேலும் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே சிறப்பான இடைத் தொடர்புகள் கட்டியெழுப்பப்படல் வேண்டும். ஆசிரியர் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கூடிய கவனமும் அவதானமுஞ் செலுத்தி மாணவர்கள் தொடர்பான நடத்தைக் கோலங்களைப் பதிவுசெய்து அவ்வவ தானங்களுக்கு அமைய, தேவையான போது அறிவுறுத்தல்கள் வழங்கி அவர்களது கல்விக் கருமத்துக்குத் துணைபுரிதல் வேண்டும்.

தற்கால உளவியலாளர்கள் பிள்ளையின் அடிப்படையான உளத் தேவைகள் தொடர்பாகச் சமர்ப்பித்துள்ள பல கருத்துக்கள் இஸ்லாமிய சமயத்தில் பொதிந்து காணப்படுகின்றன. மாணவனுக்குக் கருணை காட்டல், அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துதல், அனுசரணை வழங்குதல் அவனது சுகதுக்கங்களில் பங்கேற்று அவனது குறைபாடுகளை நிவிர்த்திக்க உதவுதல் என்பன இஸ்லாமிய சமயத்தின் மூலம் கற்பிக்கப்படுவனவாகும்.

கல்வியானது தொடர்ச்சியானதொரு செயற்றொடராகும். அது, மாற்றமடையும் சமூகத்தினது தேவைகளை நிறைவு செய்தவாறு முன்னேறிச் செல்லல் வேண்டும். அத்தோடு மாற்றமடையும் சமூகத்துக்கு இயைய கல்வி எண்ணக் கருக்களும் மாற்றமடைதல் வேண்டும். புதிய எண்ணக் கருக்களில் கருத்துக்கள் உரியவாறே பொதிந்துள்ளன. அவற்றின் பெறுபேறுகள் நேரடியாகவே மாணவனின் மீது ஆதிக்கஞ் செலுத்துகின்றமையால் அவ்வெண்ணக் கருக்கள் ஆசிரியர் கல்வியின் ஊடாகவும் வெளிக்காட்டப்படல் வேண்டும். எனவே ஆசிரியரின் அறிவும் காலத்துக்கு இயைய மாற்றமடைய வேண்டும். அவர், காலத்துக்குரிய கல்வித் தேவைகளை நிறைவு செய்யத் தயாராக இருத்தல் வேண்டும். இஸ்லாமிய சமயம் மிகப் பழைமை வாய்ந்ததாக இருந்தபோதிலும் அதன் மரபுரீதியான கல்வி எண்ணக்கருக்கள் மேற்குறிப்பிட்ட கருத்துக்களுடன் பொருந்துவதைக் காண முடிகின்றது.

செயற்பாடு 18

1. இஸ்லாமிய சமயத்துக்கு அமைய சரியான ஆசிரியரின் தன்மைகளை விளக்குக.
2. "அறிவுறுத்தலை விட முன்மாதிரியே சிறந்ததாகும்" ஆய்க.
3. நவீன ஆசிரியன், இஸ்லாமிய ஆசிரிய மாதிரியுருவினால் பெறக்கூடிய பங்களிப்பு பற்றி ஆய்க.

## இஸ்லாமியக் கல்வியில் மாணவனது உரிமைகளும் பொறுப்புகளும்

இஸ்லாமியக் கல்விச் சிந்தனையாளர்கள் ஆசிரியர்களின் உரிமைகளையும் பொறுப்புக்களையும் பற்றி மட்டுமன்றி மாணவர்களின் உரிமைகளையும் பொறுப்புக்களைப் பற்றிக்கூடக் கருத்துத் தெரிவித்துள்ளனர். கல்விக் கருமத் தொடரில் ஈடுபடும் மாணவன் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய ஒழுக்கவிதிக் கோவையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இப்னு ஜுபைர் எனும் பிரயாணி, இஸ்லாமியக் கல்வியில் மாணவன் பெறும் இடம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம்கள் அறிவியல் துறைகள் பற்றிக் கௌரவபூர்வமான உணர்வைக் கொண்டிருந்தனர். மிகமிக உயர்வான ஆய்வு கல்வியைத் தேடிச் செல்லலாகும் என அவர்கள் கருதுவதே இதற்கான காரணமாகும். அறிவைத் தேடிச் செல்லும் மாணவர்களை அவர்கள் மதித்தனர். அறிவைத் தேடிச் செல்லும் தனியாள், சுவர்க்கத்தை நோக்கிச் செல்கின்றான் என அவர்கள் கருதினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய தத்துவத்துக்கு அமைய மாணவர்கள் பின்பற்ற வேண்டிய அவர்களது பொறுப்புக்களாக அமைகின்ற கருமங்களின் பட்டியலொன்று வருமாறு.

1. மாணவன் தனது மனச்சாட்சிக்கு அமைய தீய எண்ணங்களிலிருந்தும் தீச்செயல்களிலிருந்தும் விடுபட வேண்டும். உண்மை, நேர்மை, அடக்கம், கிடைத்ததைக் கொண்டு திருப்தியுறல் போன்ற உயர் பண்புகளை அவன் வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

2. கடவுளை-அல்லாஹ்வை அண்மிப்பதற்காக நற்கருமங்களின் கூடாக, ஆன்மாவைச் சுத்திகரித்துக் கொள்ளல் வேண்டும்.

3. அறிவைத் தேடிச் செல்வதற்காகப் பிரயாணத்தில் ஈடுபடத் தயாராக இருத்தல் வேண்டும். ஆசிரியரொருவர் தேவைப்படுமிடத்து, ஆசிரியரை அடைவதற்காக தூர தேசங்களுக்கேனும் பிரயாணஞ் செய்ய மாணவன் தயாராக இருத்தல் வேண்டும்.

4. அவ்வப்போது ஆசிரியரை மாற்றிக் கொள்ளாது அவசியப்படும்போது மாத்திரம் ஆய்ந்தோய்ந்துபார்த்து தீர ஆலோசித்த பின்னரே ஆசிரியரை மாற்றிக் கொள்ளல் வேண்டும்.

5. கடவுளான அல்லாஹ்வின் பெயரால் ஆசிரியர் மதிப்பளிக்கப்பட வேண்டியவராகக் கருதப்படவும், அவ்வாறு மதிப்பளிக்கப்படவும்.

6. ஆசிரியருக்குக் கஷ்டம் விளைவிக்கவோ தடைகள் இடவோ கூடாது.

7. ஆசிரியரின் இரகசியங்களை ஏனையோருக்கு வெளியிடக் கூடாது.

8. பெருமுயற்சியுடனும், பின்வாங்காமலும், தைரியத்துடன் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும்.

9. தனது சகபாடிகளையும் ஒரே பிதாவின் பிள்ளைகள் போல கருதி அவர்களிடத்தே கருணையும் அன்பும் காட்ட வேண்டும்.

10. ஆசிரியருக்கு மதிப்பளித்துக் கௌரவித்தல் வேண்டும்.

11. வாழ்நாள் பூராவும் கற்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இஸ்லாமிய சமயத்தின்படி எதிர்பார்க்கப்படும் ஆசிரியர்-மாணவர் தொடர்பு எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். அவை வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த நடத்தையை வளர்த்துக் கொள்ளலானது கற்றலைவிட வலிமை மிக்கதாகும். ஆசிரியர்-மாணவர் கருமப் பொறுப்பின் வெற்றிகரமான தன்மையின் அடிப்படை நடத்தை தூய்மையேயாகும்.

ஆசிரியர் போதிப்பவற்றை மாணவன் உரியவாறே ஏற்றுக்கொள்ளல் வேண்டும். கற்றலையும் கற்றோரையும் மேலான மதிப்பு வழங்கிக் கௌரவித்தல் வேண்டும். மாணவன் தனது முழு நேரத்தையும் கற்றலுக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் செலவு செய்தல் வேண்டும்.

இஸ்லாம் மதத்தின் பிரதானமான முயற்சி, ஆளுமையைக் கட்டியெழுப்புவதும் நட்பு அடிப்படையில், ஆசிரியர்-மாணவர் நல்லெண்ண நட்புறவை வளர்த்துக் கொள்ள இடமளிப்பதுமேயாகும். இஸ்லாமிய அறிவியல்ஞானி இமாம் கஸ்ஸாலி அவர்கள் குறிப்பிடுவதற்கு இயைய, ஆசிரியரின் பொறுப்புக்கள் சிலவற்றைக் கவனிப்போம்.

"குறைபாடுகளைக் கொண்ட மாணவர்களுடன் அவர்களுடைய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியபடி கதைக்காதீர்கள். அவர்களது குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதன் காரணமாக அவர்களிடத்தே கற்றல் கோளாறுகள் தோன்றக்கூடும்" என ஆவர் எடுத்துக்காட்டினார். அவர்கள் உளரீதியிலும் நமைச்சலுக்கு உள்ளாவதால், கற்றலில் அவர்கள் காட்டும் குறைவுகள் கோளாறுகள் போன்றன மேன்மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் அவர் காட்டியுள்ளார்.

இஸ்லாமிய சமயத்துக்கு இயைய உயர்வான மனிதன் என ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனின் கற்றவற்றை அவன் மீண்டும் மீண்டும் பின்பற்றல் வேண்டும். கற்றலை விருத்தி செய்து கொண்ட தனியாள் அதன் வழி ஒழுகி நடப்பதை விருத்தி செய்து கொள்ளாவிடின் அவன் கடவுளிடமிருந்து - அல்லாஹ்விடமிருந்து விலகிச் சென்றுவிடுவான் எனத் திருத்தூதர் நபிபெருமானார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**செயற்பாடு 19**

1. இஸ்லாமிய சமயத்துக்கு அமைய, சிறந்த மாணவனொருவனின் பண்புகளை ஆய்க.

2. இஸ்லாமிய தத்துவத்தில் இடம்பெற்றுள்ள ஆசிரிய-மாணவர் தொடர்பின் பெறுமானம் தற்காலத்துக்குப் பொருத்தமாயமைவதேனென விளக்குக.

3. இஸ்லாமிய சமயத்துக்கு இயைய சரியான அறிவாளியின் பண்புகளை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமியத் தத்துவத்தின் அடிப்படையிலான கற்பித்தற் தத்துவங்கள்.

* கல்வியை ஆரம்பிப்பதற்கான வயது வரையறை எதுவும் கிடையாது; ஆரம்பப் பாடசாலையில் கழிக்க வேண்டிய காலப்பகுதியும் குறித்துக் காட்டப்படவில்லை.

* கல்வி முறைகளில் பல்வகைகள் காணப்படுகின்றன.

* எளிதான உதாரணங்கள் மூலம் பொருள்விளக்கமளித்தல் வேண்டும்.

* மாணவர்க்குக் கடினமான பாடங்களைக் கற்கும்படி அவர்களை வலி யுறுத்தக் கூடாது. அது மாணவர்களிடத்தே உளத்தாக்கத்தையும், கல்வி, கற்றல் ஆகியவற்றில் விருப்பின்மையையும் ஏற்படுத்தக் கூடும்.

* முதன் முதலில் அரபு மொழியைக் கற்றுக்கொள்ளல் வேண்டும். பின் னர் புனித அல்குர்ஆனைக் கற்றுக்கொள்ளல் வேண்டும். இவ்வாறாகவே கல்வி ஆரம்பமாகின்றது.

* பிள்ளைகளின் திறன்களையும் ஆர்வங்களையும் கவனத்திற்கொண்டு, அவர்கள், தொழிலின்பால் முகப்படுத்தப்படும் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு வழி காட்டப்படுகின்றது.

* விளையாட்டும் ஓய்வும் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

* பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்குப் பொருத்தமானதெனக் கருதும் வயதில் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கான சுதந் திரம் பெற்றோருக்கு உண்டு.

நல்லொழுக்கம், பிரார்த்தனை போன்றவற்றை 7 வயதிலேயே விளங்கிக் கொள்ள முடிகின்றமையால், கல்வியை ஆரம்பிப்பதற்கு அதுவே பொருத்தமான வயது என அல் அப்தார் கருத்துத் தெரிவித்துள்ளார். அவ்வயதுக்கு முன் னர் பிள்ளைகளைக் கல்வி பெற அனுப்புவதானால் அவர்களைப் பாலர் வகுப்புக்கு அனுப்ப வேண்டும். அங்கு அவர்கள் விளையாட்டுக்களின் ஊடாக கற்கச் செய்ய வேண்டும். இக்கருத்து புதிய கல்வி முறையுடன் பொருந்துகின்றது.

இஸ்லாமியக் கல்வியில் சிறுவர்க்குக் கற்பிக்கும் முறைகள், முதியோருக்குக் கற்பிக்கும் முறையை விடப் பெரிதும் வேறுபட்டதாகும். 20ஆம் நூற்றாண்டில் இது மிக முக்கியமானதொரு தத்துவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான திறனும், திருப்பமும் வயது அதிகரிக்கையில் வளர்ச்சியடைகின்றது என இப்னு கல்தூன் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிதானவற்றிலிருந்து சிக்கலானவற்றுக்குச் செல்லல் தொடர்பான இப்னு கல்தூனின் கல்வி முறை தற்காலக் கற்பித்தல் முறைகளுடன் நன்கு பொருந்துகின்றது. வெற்றிகரமான தன்மையின் ஊடாகவே கற்றலின் முன்னேற்றத்தை எய்துவதை இவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

இஸ்லாமிய தத்துவத்துக்கு அமைய பிள்ளைகளுக்கு அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கான தொழிலைத் தெரிவு செய்துகொள்வதற்கு வழிகாட்டுகையில், அவர்களது உள்ளார்ந்த திறன்களும் ஆர்வங்களுமே பிரதானமானவையாகக் கருதப்படுகின்றன. பெற்றோரும் பாதுகாவலர்களும், ஆசிரியர்களும் மாணவர்களால் மேற்கொள்ள இயலாத கருமங்களில் அவர்களை வலியுறுத்தி ஈடுபடுத்துதல் கூடாது. பிள்ளையிடத்தே காணப்படும் உள்ளார்ந்த திறன்களின் அடிப்படையிலேயே அவன் ஆற்றும் கருமத்தின் வெற்றி-தோல்வி தங்கியுள்ளது.

மேலும் அல் றஹுமான், இப்னு அல் ஜவ்ஸி ஆகியோர் கட்டிளம் பருவத்தினரின் இயல்புகளை விளக்க முயற்சித்துள்ளனர். கட்டிளம் பருவத்தினர் தொழிற்பாடுகளில் காட்டும் விருப்புக்குப் பெற்றோர் தடைவிதித்தல், அதனை வரையறைப்படுத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் அப்பிள்ளைகள் பெற்றோரை வெறுப்பதோடு, பெற்றோருடன் தொடர்ந்தும் நெருங்கி உறவாடுவதையும் வெறுக்கின்றனர் என இவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இக்கருத்துக்கள் இன்றைய உளவியலில்கூட நிரூபிக்கப்பட்டுள்ளன.

பிள்ளைகள் விளையாட்டிலும் ஓய்விலும் காட்டும் ஆவல் தொடர்பாக இஸ்லாமியக் கல்வியிலும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. சுவாரசியமற்ற, மரபு ரீதியான கல்வி முறைகளால் பூரண திருப்தியுறாத மாணவன் புத்துணர்வு பெறுவதற்கு விளையாட்டுக்களும் ஓய்வும் துணையாக அமைகின்றன. பிள்ளைகளை விளையாட்டுக்களிலிருந்து தடுத்து, தொடர்ந்தும் கற்கச் செய்வதன் மூலம் அவனது ஆன்மா அழிக்கப்பட்டு வாழ்க்கை சுவாரசியமற்றதாக மாறி விவேகக் குறைபாட்டு நிலைகூட ஏற்படக்கூடும் என அல் கஸ்ஸாலி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். பிள்ளை கற்பதால் களைப்புறுவதனால் ஓய்வு பெறுவதற்காக, வாரந்தோறும் வியாழக்கிழமை மாலை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை வரை விடுமுறை வழங்கும் முறை பின்பற்றப்பட்டது. தீர்க்கதரிசியான நபி பெருமானாரின் பிறந்த தினம், ஈதுல்-ஃபிதர்-நோன்புப் பெருநாள் ஆகிய தினங்களில் விடுமுறை வழங்கப்படுவதன் காரணமும் இதுவாகும்.

செயற்பாடு 20

1. இஸ்லாமிய கல்வித் தத்துவங்கள் தற்காலத்துக்கு எவ்வாறு பொருந்துகின்றன என விளக்குக.

2. ஆளுமை விருத்திக்காக பாட-வெளி வேலைகளை எவ்வாறு பிரயோகிக்கலாம் என, ஆய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய கற்பித்தல் நுட்பமுறைகள்

கல்விக்கான ஒழுங்குமுறையொன்று இவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

* மௌனம்
* செவிமடுத்தல்
* மனனம் செய்தல்
* விளங்கிக் கொள்ளல்
* சமயத்தைப் பரப்புதல்

அல்முபாறக் அவர்களின் கருத்து இதனைவிடச் சற்று வேறுபட்டதாகும்.

1. ஆய்தல்
2. செவிமடுத்தல்
3. விளங்கிக்கொள்ளல்
4. பொதுமையாக்கம்
5. பயன்பாடு
6. சமயத்தைப் பரப்புதல்

என்பனவே இவர் குறிப்பிடும் ஒழுங்கு முறையாகும்.

பிள்ளைகளிடத்தே கற்றலுக்காக விருப்பு ஏற்பட வேண்டும் எனவும் அவன் ஊக்கத்துடன் தூண்டுதலுடன் கற்றலை ஆரம்பிக்க வேண்டும் எனவும் தற்கால உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

1. கற்றலுக்கு ஆயத்தமாதல்.
2. கற்றலில் தூண்டல்-ஊக்கம் காணப்படல்.
3. பாடத்தில் கவனஞ் செலுத்துதல்.
4. கிரகித்துக்கொள்ளல்.
5. அறிவைப் பிரயோகித்தல்.

என்பனவே இங்கு குறிப்பிடப்படும் ஒழுங்காகும்.

உளவியலாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ள கற்றல் செயன்முறையானது இஸ்லாமியக் கல்வி முறையைப் பெரிதும் ஒத்துள்ளது என்பது தெளிவாகின்றது.

தனியாள்களிடத்தே நல்லொழுக்கப் பழக்கவழக்கங்களை வளர்ப்பதற்கான பிரதானமானதொரு ஊடகமாக முஸ்லிம்கள் பாக்களை-கவிதைகளைப் பிரயோகித்தனர் மனனம் செய்து அவற்றின் பொருளை விளங்கிக் கொண்டு உயர் மனப்பாங்குகளைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்காக இக்கவிதைகள் துணையாகக் கொள்ளப்பட்டன.

**செயற்பாடு 21**

இஸ்லாமியக் கல்வியில் இடம்பெற்றுள்ள கற்பித்தல் முறைகள் தற்காலக் கல்விக்கு எந்த அளவுக்குப் பொருத்தமுடையதாக அமைகின்றது என விளக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான சுதந்திரம், சனநாயகத்தன்மை என்பன இஸ்லாமியக் கல்வியின் மிக உயர்வான சிறப்பியல்பாகும். அறிவுத் தாகத்தைக் கொண்டுள்ளோருக்கு, தடைகள் ஏதும் இன்றி வரையறைகள் ஏதும் இன்றி உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான சுதந்திரம் உண்டு. கட்டிளம் பருவத்திலேயே உயர் கல்வி ஆரம்பிக்கின்றது. பிள்ளை ஐந்து வருட காலத்துக்கு உயர்கல்வியைப் பெறல் வேண்டும்.

எவரேனும் பிள்ளை தொடர்ந்தும் கல்வி பெறுவதில் ஆர்வம் காட்டுவதாக இருப்பின், இக்கால வரையறை 10 வருடங்களாக அதிகரிக்கப்படும். இதற்காக உயர்கல்வி நிறுவனங்களுள் எவ்வித தடையோ வரையறையோ இன்றிச் சேர்ந்து கொள்ளலாம். தூரதேசங்களுக்குச் சென்றேனும் கல்வியைப் பெற்றுக் கொள்ள மாணவர்கள் தூண்டப்பட்டனர். அறிவைத் தேடிச் செல்பவர்களை முஸ்லிம்கள் இஸ்லாமிய மக்களின் புத்திரர்களாகக் கருதினர். சனநாயக ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட கல்வியில் காணப்பட்ட சுதந்திரத்தின் மூலம் பிரயாணத்துக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் காரணமாக செயன்முறை அறிவும், விவேகமும் கலாச்சாரமும் விருத்தியடைந்தன. மேலும் முதியோர் கல்வியிலும் அபிவிருத்தி காணப்பட்டது. தனியாள் இடைத் தொடர்புகள், போறல், நேரடி அனுபவங்கள் என்பனவே இதற்கான ஏதுக்களாக அமைந்தன.

பிரயாணஞ் செய்தல் காரணமாக, அறிஞர்கள், பெயர் பெற்ற எழுத்தாளர்கள், சிறப்புப் பெற்ற தனியாள்கள் போன்றோரை அவ்வவ் நாடுகளில் சந்திப்பதனால் அறிவு வளர்ச்சி ஏற்படுகின்றது என்பது அவர்களது நம்பிக்கையாகும்.

மாணவர்க்குத் தத்தமது ஆசிரியர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கான சுதந்திரமும் வழங்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் பெரும்பாலான ஆசிரியர்கள் நூல்களைத் துணையாகக் கொள்ளாது ஞாபகத்தின் மூலமே கற்பித்து அவர்களது நிபுணத்துவத்தை வெளிக்காட்டினர்.

போதனையாளர்களின் பொறுப்புக்களும் இத்தத்துவத்தின் ஊடாகத் தெளிவாகக் காட்டப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. வெவ்வேறு கருத்துக்களை எடுத்துக்காட்டி விடயங்களை விளக்குதல்.
2. தனிப்பட்ட கருத்துக்களைச் சமர்ப்பித்து உதாரணங்களின் துணையுடன் விடயங்களை உறுதிப்படுத்தல்.
3. சமர்ப்பிக்கும் கருத்துக்களை – அபிப்பிராயங்களை ஒன்றையொன்று ஒத்த பாடங்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக்காட்டி, விளக்குதல்.
4. வினாக்கள் வினவுவதற்கான வாய்ப்பை மாணவர்க்குப் பெற்றுக் கொடுத்தல்.
5. பாடம் முற்றுப்பெறும் வரை கற்பித்தல், இடையில் படிப்பை நிறுத்தாதிருத்தல்.
6. பாடத்தைப் படிப்படியாக விருத்தி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் கருமத் தொடரின்போது, பாடத்தின் அடிப்படைக் கொள்கைகளை முதலில் சமர்ப்பித்துப் படிப்படியாகப் பாடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது அவர்களது கருத்தாகும். எளிதானவற்றிலிருந்து சிக்கலானவற்றுக்குச் செல்வதும், முதலில் அடிப்படைக் கருத்தைக் குறிப்பிட்டுப் பின்னர் விசேட விடயங்கள் தொடர்பான கற்பித்தல் முறைகளைப் பிரயோகித்தலும் தற்போதைய கற்பித்தல் முறைகளுடன் மிக நெருங்கிய ஒற்றுமையைக் காட்டுவனவாகும்.

மேலும் கற்பித்தலில் விவாதங்களுக்கு முதலிடம் வழங்கப்படுகின்றது. இதன் ஊடாக பேச்சு வன்மை, தன்னம்பிக்கை, வாதிக்கும் திறன் என்பன வளர்ச்சியடைகின்றன. நிஸாமுல் முல்க் இன் பாசறையில் அறிஞர்கள் நடத்திய விவாதங்கள் பற்றி நூல்களில் எழுதப்பட்டுள்ளது. போதிய விளக்கமின்றி எதனையும் எழுதக் கூடாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும்.

இஸ்லாமியக் கல்வி முறையில் பரீட்சைகள் கட்டாயமாக அமையாமை அதன் மற்றுமொரு விசேட தன்மையாகும். மாணவரிடம் வாய்மொழிமூலம் வினாக்கள் வினவி, விவேகத்திறன்களை வெளிக்காட்டிய மாணவர்க்குச் சான்றிதழ்களோ அனுமதிப்பத்திரங்களோ வழங்கப்பட்டன.

இச்சான்றிதழ்கள் முகாமையுடன் தொடர்புடையன அல்ல. மாறாக, ஆசிரியரால் மாணவர்க்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் வழங்கப்படும் சான்றிதழாகவே காணப்பட்டது. அது யாதேனும் நிறுவனத்தின் பெயரோ, அறிவியல் சார்ந்த தலைப்புக்களோ குறிப்பிடப்படாத சான்றிதழாகும். எனவே அறிவியற் கல்விக்கு முறைமையான சான்றிதழ்கள் வழங்குவதை அவர்கள் முக்கியமானதாகக் கருதவில்லை.

அபுல் ஹஸன் அல் நதாவி அவர்கள் குறிப்பிடுவதற்கு இயைய, இஸ்லாமியக் கல்வி முறையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படினும் அதனை ஆக்கியோர் புகுத்திய சமயப்பாங்கு காரணமாக அதற்கே உரித்தான பெறுமானத் தொகுதியுடன் ஒலிக்கும் விசேட தன்மைகள் அதில் காணப்படுவதை அறிய முடிகின்றது. அத்தோடு இஸ்லாமிய தத்துவப் பின்னணியில் கட்டியெழுப்பப்பட்ட, இஸ்லாமியக் கல்வி முறையானது, நவீன கல்வி எண்ணக்கருக்கள், உளவியற் கோட்பாடுகள் ஆகியவற்றுடன் நெருங்கிய ஒற்றுமையைக் காட்டுகின்ற அரிய உள்ளடக்கத்தைக் கொண்டிருத்தல் அதன் மற்றுமொரு சிறப்பாகும்.

**செயற்பாடு 22**

(1) இஸ்லாமிய கல்வித் தத்துவத்தின் அடிப்படையை விளக்கி, தற்காலத்துக்கு அதன் பொருத்தப்பாட்டை ஆய்க.

(2) சுய நல்லொழுக்கத்துக்கும், முன்மாதிரி நடத்தைக்கும் இஸ்லாமியக் கல்வியில் வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை விளக்குக.

(3) கூட்டுமொத்தமாகக் கவனிக்கையில், இஸ்லாமிய கல்வித் தத்துவத்தின் மூலம் தற்கால ஆசிரியர் பெறக்கூடிய பயன்களைப் பட்டியற்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 சாராம்சம்

பௌத்தக் கல்விச் சிந்தனை வாழ்நாள் பூராவும் நீடிக்கும் ஒரு கருமத் தொடராகும். பயன்பாட்டுக்கு முதலிடம் கொடுக்கும் பௌத்த சிந்தனையானது, மாணவனின் மனம், உடல், வாக்கு ஆகியவற்றை நல்வழிப்படுத்துவதை வலியுறுத்துகின்றது. சிறப்பான, ஆசிரியர்-மாணவர் தொடர்புகளின் ஊடாக, மாணவரைப் பாடத்தின் பால் கவரவும், அவர்களிடத்தே ஒழுக்கத்தை வளர்க்கவும் முடியும். ஆசிரியர் தன்னைப் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் பரந்த விளக்கத்தைக் கொண்டிருத்தல் அவசியம் என பௌத்த கல்வித் தத்துவம் கூறுகின்றது.

இந்துத் தத்துவம் இந்து சமயத்தவர்களின் தத்துவமாகும். அது இந்துக்களின் சமயமாகும். சைவ சித்தாந்தம், வேதாந்தக் கொள்கை என்பன அதன் பிரதானமான இரு பிரிவுகளாகும். சைவ சித்தாந்த தத்துவத்துக்கு அமைய ஆன்மா தெய்வநிலையை அடைகின்றது. சைவக் கொள்கைத் தத்துவத்துக்கு அமைய முற்பிறப்பில் செய்த கருமங்களுக்கு அமைய மனிதனாகத் தோன்றி, அக்கருமங்களுக்கு இயைய சுக-துக்கங்களை அநுபவிக்கின்றான். இப்பிறப்பில் நற்கருமங்கள் புரிந்தால் சர்வ வல்லமை மிக்க கடவுளின் ஆசீர்வாதம் கிடைக்கின்றது இவ்வுலகில் பிறப்பதன் நோக்கம் அதுவேயாகும்.

கிறீத்தவர்களும் தெளிவான கல்வித் தத்துவத்தைக் கொண்டுள்ளனர். திருச்சபை ஆரம்பிக்கப்பட்ட நாள் தொட்டே கல்வியையே தமது பிரதானமான பொறுப்பாகக் கருதியுள்ளது. கிறித்தவத் தத்துவத்துக்கு அமைய கல்வியின் உண்மையான நோக்கம் பூரண கிறித்தவத் தத்துவத்தை அடைவது அதாவது மனிதனைத் தனது பூரணமான இறுதி முடிவின் (தேவனின்) பால் கொண்டு செல்வதாகும்.

இஸ்லாமிய சமயத்துடன் தொடர்புடைய இஸ்லாமியக் கல்வி புனித அல்குர்ஆனைக் கற்பதுடன் ஆரம்பமாவதொன்றாகும். ஆரம்பக்கல்வி, 'குத்தாபி' எனும் சிறு பாடசாலையில் பெறப்பட்டது. ஆரம்பக் கல்விக்கும் உயர் கல்விக்கும் இடையே தொடர்புகள் காணப்படவில்லை. சமயக்கல்வி, இரசாயனவியல் ஆகியவற்றின் விருத்தியுடன் உயர்கல்வி தோன்றி விருத்தியடையத் தொடங்கியது. முதிர்ச்சிக்கு அமையக் கல்வி ஆரம்பிக்கப்படல், கல்வியின் மூலம் கிடைக்கப்பெறும் வெற்றியின் மீதே வளர்ச்சி ஏற்படல், நடத்தைத் தூய்மை பரப்பப்படல், பயணங்கள் மூலம் அறிவைத் தேடிச் செல்லல், தாம் எதிர் காலத்தில் புரியவிருக்கும் தொழிலுக்குப் பொருத்தமான கல்வியைப் பெறுவதற்கான சனநாயக-சுதந்திரம் கிடைக்கப்பெறல் என்பன இஸ்லாமியக் கல்வியின் சிறப்பியல்புகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய தத்துவத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட இக்கல்வி முறையானது நவீன கல்வி எண்ணக்கருக்கள், உளவியற் கொள்கைகள் போன்றவற்றுடன் நெருங்கிய ஒற்றுமையைக் காட்டுகின்ற அதேவேளை அரிய உள்ளடக்கங்களையும் கொண்டிருத்தலானது அதன் சிறப்பம்சமாகும்.

## 6.0 பிற்சோதனை

பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான தேர்வைத் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

1. பௌத்தக் கல்வியின் அடிப்படை நோக்கம்.

(i) உலகாயத வாழ்க்கையை வசதியுள்ளதாக்கிக் கொள்வதற்காகக் கல்வி புகட்டுவதாகும்.

(ii) பாடவிடயங்களைக் கற்பித்து நற்பிரசைகளை உருவாக்குவதாகும்.

(iii) மாணவரின் உள்ளம், உடல், வாக்கு ஆகியவற்றை ஒழுக்கமுறச் செய்வதாகும்.

(iv) ஆழமான தருமங்கள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொடுத்தலாகும்.

2. கற்பித்தல் முறைகளின் பயன்பாடு தொடர்பாக பௌத்த தத்துவத்தின் மூலம் வலியுறுத்தப்படுவது யாது?

(i) புதிய ஆராய்ச்சிகளின் ஊடாகச் சமர்ப்பிக்கப்படும் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தல் வேண்டும் என்பதாகும்.

(ii) அவ்வப்பாடப் பகுதிகளுக்காக குறிப்பிட்ட கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதாகும்.

(iii) மாணவர் விரும்பும் கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தல் வேண்டும் என்பதாகும்.

(iv) கட்டியெழுப்பப்பட்ட கற்பித்தல் முறைகளுள் ஒரு போதும் சிறைப்பட்டிருத்தலாகாது என்பதாகும்.

3. கிறித்தவக் கல்வியின் அண்மித்த நோக்கங்கள்.

(i). பரிபூரணமான கிறித்தவனை உருவாக்குவதாகும்.
(ii) ஆரோக்கியமான பிரசைகளை உருவாக்குவதாகும்.
(iii) நாட்டுக்குப் பயனுடைய பிரசைகளை உருவாக்குவதாகும்
(iv) நாட்டின் அபிவிருத்திக்காக கற்றறிந்த பிரசைகளை உருவாக்குவதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மார்ட்டின் லூதர் கல்விக்காக செய்த பணி யாது?

(i) பரிசுத்த விவிலிய நூலை ஜேர்மன் மொழியில் பெயர்த்து, சமய உபதேச நூல்கள் எழுதினார்.

(ii) நாடு பூராவும் சத்திய வசனத்தைப் பரப்பினார்.

(iii) சமய நூல்களை எழுதினார்.

(iv) சமய உபதேசங்களைப் பயிற்றுவித்தார்.

5. கிறித்தவப் பாடசாலையானது, நம்பிக்கை, கலாச்சாரம், வாழ்க்கை ஆகியவற்றை ஒன்றிணைக்கும் கல்வித் தத்துவத்தினை மூலாதாரமாகக் கொண்டதாகும்.

(i) இது, மனிதனின் இறுதிக் குறிக்கோளுக்கு எதிரானது.

(ii) இது பரிபூரணமான கிறித்தவனை உருவாக்கும்.

(iii) இது உலகாயதத்தை மையமாக் கொண்ட ஒரு நோக்கமாகும்.

(iv) இது திருச்சபையின் சந்தர்ப்பவசமான ஒரு கூறாகும்.

6. சமயக் கல்வியில் சரியான விதத்தில் ஈடுபடும் மனிதன்.

(i) எளிமையான நல்வாழ்க்கை வாழ்வான்.

(ii) சமயம் சார்ந்த விடயங்களைக் கலந்துரையாடுவான்.

(iii) மனிதனாகப் பிறந்ததன் குறிக்கோளை விளங்கிக் கொள்வான

(iv) ஏனைய மதங்களை இழிவுபடுத்துவான்.

7. பல சமயங்களைக் கொண்ட நாட்டில் வாழும் மனிதன் ஏனைய சமயங்களைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம்.

(i) பிரபல்யம் வாய்ந்த சமயப் பேச்சாளராவான்.

(ii) பிற சமயத்தைச் சேர்ந்தோர்களிடையே பிரபல்யமடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) ஏனையோருடன் சேர்ந்து ஒற்றுமையுடனும் சமாதானத் துடனும் வாழ்வான்.

(iv) தனது அறிவை மதிப்பான்.

8. பௌத்த தத்துவமானது,

(i) வேதாந்த, சைவக் கொள்கைத் தத்துவத்திலிருந்து தோன்றியது.

(ii) சூனிய நிலையிலிருந்து தோன்றியது

(iii) பௌதிக வாதத்திலிருந்து தோன்றியது.

(iv) சுயாதீனமாகத் தோன்றியது.

2. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.

1. இஸ்லாமியக் கல்வி, மாணவருக்குத் தமது ...................... தெரிவு செய்து கொள்வதற்கு வழிகாட்டுகிறது.
(தத்துவத்தைத் / தொழிலைத் / ஆசிரியரைத்)

2. இஸ்லாமிய தத்துவத்துக்கு அமைய அறிவைத் தேடிச் செல்லும் ஒரு வழி முறையாக ......................அதிக தூண்டுதல் கிடைக்கப் பெற்றது.
(ஆராய்ச்சிக்கு/ பயணஞ் செய்வதற்கு/ எழுதுவதற்கு)

3. இஸ்லாமியக் கல்வி முறையில் பரிட்சைகள் நடத்துவது ..........
(கட்டாயமானதாகும். / கட்டாயமானதல்ல.)

4. அல் கஸ்ஸாலி அவர்கள் மிகப் பிரசித்தமான ஒரு ..............
(பயணியாவார். / தத்துவஞானியாவார். / அறிஞராவார்.)

5. இஸ்லாமிய தத்துவத்துக்கேயுரித்தான சிறப்பான இயல்பு ...........
(சுதந்திரமும் சனநாயகத் தன்மையும் ஆகும். / விளங்கிக் கொள்வதும் சுதந்திரமுமாகும். / விளங்கிக் கொள்வதும் சமயப் பிரசாரமுமாகும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.0 விடைகள்

| முற்சோதனை | | பிற்சோதனை |
|---|---|---|
| 1. | √ | 1.(1) iii |
| 2. | X | (2) iv |
| 3. | X | (3) i |
| 4. | √ | (4) i |
| 5. | X | (5) ii |
| 6. | √ | (6) i |
| | | (7) iii |
| | | (8) iv |

2.(1) தொழிலைத்

(2) பயனைஞ் செய்வதற்கு

(3) கட்டாயமானதல்ல

(4) அதிநேராவார்

(5) சுதந்திரமும் சனநாயகத்தன்மையும்

## 8.0 ஒப்படைகள்

1.(i) "பௌத்த கல்வித் தத்துவமானது, நற்பிரஜைகளைத் தோற்று விப்பதற்கான அடிப்படையாக அமைகின்றது" உதாரணங்காட்டி ஆய்க.

(ii) பௌத்த கல்வியைப் பொருளுள்ளதாக்குகின்ற ஆசிரியர்-மாணவர் தொடர்புத் தத்துவம் தற்காலத்துக்கு எந்த அளவுக்குப் பொருத்தமாக அமைகின்றது எனக் காரணங்காட்டி ஆய்க.

(iii) "அக ஒழுக்கமானது, வெளிச் சமூகத்தினது சமாதானத்தின் அடிப்படையாக அமையும்" ஆய்க.

2. கிறித்தவக் கல்வியானது மனித ஆளுமை, மனித வாழ்க்கையின் நோக்கங்கள் ஆகிவற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதை விளக்கி, திருச்சபை வரலாற்றில் இக்கூற்று மெய்ப்பிக்கப்பட்டுள்ள விதத்தைக் காட்டுவதற்காக 300 சொற்களைக் கொண்ட கட்டுரையொன்றினை எழுதுக.

3. பின்வரும் தலைப்பு பற்றி ஏறத்தாழ 500 சொற்களுக்கு உட்பட்ட விவரணமொன்றினை எழுதுக.

"வேதாந்த, சைவக் கொள்கைத் தத்துவங்களில் பௌத்த தத்துவத்தின் மூலாதாரங்கள் பொதிந்துள்ளன."

4. இஸ்லாமிய சமூகத்திலும் தற்கால சமூகத்திலும், ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் கருமங்கள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இஸ்லாமியக் கல்வியின்படி, மாணவர்களது உரிமைகள், பொறுப்புக்கள் ஆகியவற்றைப் பட்டியற்படுத்துக.

6. இஸ்லாமிய கற்பித்தல் முறைகள் தற்போதைய கற்பித்தல் முறைகளுடன் எந்த அளவுக்குப் பொருந்துகின்றன என ஒப்பிடுக.

## 9.0 கலைச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆன்மீக | – | Spiritual |
| 2. | ஒன்றிணைக்கப்பட்ட | – | Integrated |
| 3. | போறல் | – | Imitation |

## 10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள்


01. வீரசிங்ஹ ஹென்றி -கல்வி எண்ணக்கருக்கள் -கீழைத்தேய, மேலைத்தேய - அரச அச்சகம், கொழும்பு, 1983.

02. வீரசிங்ஹ ஹென்றி - கல்விக் கோட்பாடுகள் - கட்டுரைகள், உதய வெளியீடு, ராஜகிரிய - 1980.

03. Weerasinghe Henry - Facts of Life - A Buddhist Perspective - The Classic Printers, Nugegoda, 1986.

04. Mookerji, Radh, Kumud - Ancient Indian Education - Delhi - 1978.

05. Thomson, Ian - Religion - Sociology in Focus, London - 1957

06. Radhakrisnan, S. - The Hindu View of Life, London - 1957.

07. Swami Vivekananda - Hinduism - Madras, 1963.

08. Swami Ranganathananda - Education and Traditional Values - Culcutta - 1965.

09. Krishnamoorthi, J - Education and the Significance of Life, London - 1959.

10. பிதா அன்ரன் டீ.ஜே. - கிறித்தவக் கல்வி, வத்திக்கான் சபை வெளியீடு, கத்தோலிக்க அச்சகம்.

11. பியூஸ் பாப்பரசர் xi - கத்தோலிக்க இளைஞர் கல்வி - 1958.

12. Don Peter, W.L.A. - Studies in Christian Education - Colombo - 1974.

13. Al Attas, S.N. Aims and Objectives of Islamic Education, Series. King Abdulayin University - Jeddah - 1979.

14. El-Nachlawi, A. - The Basis of Islamic Educaiton - Dar Alfikar Damuscus - 1979.

15. Taiara - A. - The Essence of the Islamic Religion - Dar-Al-ain - Beirut - 1987.

16. கல்வி நூற்றாண்டு மலர் - பகுதி 1-11, கல்வி அமைச்சு, அரச அச்சகம் - 1968.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாம் அத்தியாயம்
# கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும்

| உள்ளடக்கம் | | பக்கம் |
|---|---|---|


1.0 அறிமுகம் ........ 49

2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 49

3.0 முற்சோதனை ........ 49

4.0 கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும் ........ 50

4.1 கல்வி பற்றிய வரைவிலக்கணங்கள் ........ 50

4.2 நோக்கங்கள், குறிக்கோள்கள் என்பன யாவை? ........ 54

4.3 கல்வி நோக்கங்களை எவ்வாறு கட்டியெழுப்பலாம்? ........ 55

4.4 நோக்கங்களின் பாகுபாடு ........ 56

4.5 கல்வி நோக்கங்களும் தேசிய அபிவிருத்தியும் ........ 59

4.6 வெவ்வேறு நாடுகளின் கல்வி நோக்கங்கள் ........ 60

4.7 இலங்கையின் கல்வி நோக்கங்கள் ........ 64

5.0 சாராம்சம் ........ 66

6.0 பிற்சோதனை ........ 67

7.0 விடைகள் ........ 68

8.0 ஒப்படைகள் ........ 68

9.0 கலைச் சொற்றொகுதி ........ 68

10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள் ........ 70




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

கல்வியியலாளர்கள், எப்போதும், கல்வி நோக்கங்கள், கல்விக் குறிக்கோள்கள் பற்றிக் கவனஞ் செலுத்துகின்றனர். இது தொடர்பாகப் பல்வேறுபட்ட கருத்துக்களும் அபிப்பிராயங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே இச் சொற்கள் பற்றியும் இவ்வெண்ணக்கருக்கள் பற்றியும் ஆய்வு செய்து இவற்றால் குறிப்பிடப்படுபவை யாவை என்பது பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் மிக முக்கியமானதாகும்.

"கல்வி என்பதால் கருதப்படுவது யாது" என்பதை அறிந்து கொண்டதன் பின்னரே, கல்வி நோக்கங்கள் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். எனவே "கல்வி" எனும் எண்ணக்கருவைப் பற்றி முதலில் ஆய்வோம்.

# 2.0 சிறப்பு நோக்கங்கள்

1. "கல்வி" எனும் எண்ணக்கரு தொடர்பாகத் தத்துவார்த்தியில் ஆய்தல்.
2. கல்விக் குறிக்கோள்களுக்கும் கல்வி நோக்கங்களுக்கும் இடையிலான வேறுபாட்டைத் தெளிவுபடுத்திக் கொள்ளல்.
3. கல்விக் குறிக்கோள்களைக் கட்டியெழுப்பிக் கொள்ளும் விதத்தை விளங்கிக் கொள்ளல்.
4. குறிக்கோள்கள் வகைப்படுத்தப்படும் விதத்தை விளங்கிக் கொள்ளல்.
5. தேசிய அபிவிருத்திக்கும், கல்விக் குறிக்கோள்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றிய விளக்கத்தைப் பெறல்.
6. வெவ்வேறு நாடுகளின் கல்விக் குறிக்கோள்கள் தொடர்பான அடிப் படை விளக்கத்தைப் பெறல்.

# 3.0 முற்சோதனை

இப்பாடத்தை வாசிக்க முன்னர் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. உங்கள் விடைகள் சரியானவையா எனப் பாடத்தின் இறுதியில் சோதித் தறிக.

1. "கல்வி" எனும் எண்ணக்கருவுக்குரிய அர்த்தங்கள் மூன்று தருக.
2. கல்வியியலாளருக்குரிய மூன்று கருமங்களைக் குறிப்பிட்டு அக்கருமங்க ளுக்கும் விவசாயியின் கருமங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நீங்கள் அறிந்து வைத்துள்ள கல்வித் தத்துவஞானிகள் இவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் எந்தெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிடுக.

4. எந்தெந்த நோக்கங்களை எய்துவதற்காக நீங்கள் கல்வி புகட்டுகிறீர்கள்?
முதலில் அந்நோக்கங்களைப் பட்டியற்படுத்திப் பின்பு அவற்றை முன்னுரிமை ஒழுங்குப்படி வரிசைப்படுத்துக.

5. கல்வி நோக்கங்கள் யாரால் தீர்மானிக்கப்படல் வேண்டும் என நீர் கருதுகின்றீர்?

# 4.0 கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும்

## 4.1 கல்வி பற்றிய வரைவிலக்கணங்கள்

"கல்வி" எனும் சொல்லை நாம் மிகச் சுயாதீனமாகப் பயன்படுத்திய போதிலும், அதனால் கருதப்படுவது யாது என வினாவப்பட்டால், அதற்காக வழங்கக்கூடிய குறித்த விடை ஏதும் கிடையாது. அது ஒரு கருத்துப் பொருளான (abstract) எண்ணக்கருவாக அமைந்திருப்பதே அதற்கான காரணமாகும். வெறுங் கண்ணால் காணக்கூடிய மற்றொருவருக்கு அது பற்றி விளக்கக்கூடிய ஒன்றாகிய - கூட்டுப் பதத்தைவிட கருத்துப் பொருளான சொல்லுக்கு எளிதான வரைவிலக்கணங் கூறுவது இலகுவானதொன்றல்ல.

கல்வி என்பதால் கருதப்படுவது யாது? எனும் வினாவைக் கல்வித் தத்துவஞானியே எழுப்புகின்றான். இதற்கான பற்பல விடைகள் கிடைக்கப்பெறலாம். அவ்வொவ்வொரு விடையையும் கவனத்திற்கொண்டு அப்பதத்தினால் கருதப்படுவது யாது என ஆய்ந்தறிவது பொருத்தமானதாகும். "கல்வி என்பது அறிவைப் பெற்றுக் கொள்வதாகும்" என்பது ஒரு விடையாகும். அறிவைப் பெற்றுக்கொள்ளல் என்பது யாது? இவ்வினாவுக்கு விடையளிக்க முன்னர், "அறிவு" எனும் சொல்லுக்கான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அறிவு என்பது புறத்தேயிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதொன்றா? இன்றேல் தமது உள்ளத்திலிருந்து வெளிக் கொணர்ந்து கொள்ளும் யாதேனுமொரு சக்தியா. அறிவை உளத்துக்கு வெளியேயிருந்து பெற்று கொள்ள முடியுமா? அறிவு வெளியே இருந்து உள்ளே இறக்குமதி செய்யக்கூடியதா? விடயங்களா? நிகழ்வுகளா? இவ்வாறாக நோக்கும்போது அறிவு என்பது, புறத்தேயிருந்து கொணரப்பட்டு, உட்புகுத்திக் கொள்ளப்படும் விடயங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றின் ஊடாகக் கட்டியெழுப்பப்படும் ஒரு சக்தியாகும்." எனக் குறிப்பிடலாம். கல்வி என்பது இவ்வாறாக அறிவைப் பெற்றுக் கொள்வதுதானா? அறிவு வளர்ச்சி என்பது விவேக வளர்ச்சியாகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விவேக வளர்ச்சி ஏற்படுவதே கல்வி" எனவும் குறிப்பிடலாம். "அறிவு" எனும் சொல்லினால் கருதப்படுவது யாது எனக் குறிப்பாகக் கூற முடியாமையைப் போன்றே, விவேகம் என்பது யாது எனவும் குறிப்பாகக் கூறிவிட முடியாது. விவேகம் என்பது யாது? புத்தி என்பது பிரச்சினை தீர்க்கும் திறமையா? புத்தி எனபது தர்க்கிக்கும் திறனா? சரியாகக் கடமை யாற்றும் திறனா? இவ்வாறாக, விவேகந் தொடர்பான பல திறன்களை ஒன்று திரட்டிக் குறிப்பிடுவதைத் தவிர, இப்பதத்தினால் கருதப்படுவதை விளக்கிக்கூறுவது கடினமானதொன்றாகும். விவேகத்தைக் குறிப்பதற்காகப் பல வரைவிலக்கணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அவ்வாறெனில் கல்வி என்பது யாது? தனியே அறிவைப் பெற்றுக் கொடுப்பது தான் கல்வியா? அல்லது விவேக வளர்ச்சியை ஏற்படுத்துவது தான் கல்வியா? எந்த அளவு அறிவைப் புகட்டிய பின்னர் ஒருவர் கல்வி பெற்றுள்ளார் எனக் குறிப்பிடலாம்? அறிவுத்துறை மிகமிக விரைவாக வளர்ச்சியடையும். இக்காலத்தில் எந்த அளவு அறிவைப் பெற்ற ஒருவரைக் கல்வி பெற்ற ஒருவர் எனக் குறிப்பிடலாம்?

கல்வி பெற்ற ஒருவரைக் குறிப்பதற்காகவோ, கல்வி எனும் சொல்லின் சரியான பொருளை அறிந்து கொள்வதற்கோ அறிவு, விவேகம் ஆகிய சொற்களின் பொருள்களை அறிந்துகொள்வது போதுமானதா? கல்வி என்பது அறிவைப் பெற்றுக்கொடுத்தல், அறிவைப் பெறல் என்பன மாத்திரம் தானா? தனியே அறிவை மாத்திரம் பெற்ற ஒருவரைக் கல்வி பெற்ற ஒருவர் எனக் ஏற்றுக்கொள்ளலாமா? அறிவை மாத்திரம் விருத்தி செய்துகொண்ட ஒருவரைக் கல்வி பெற்ற ஒருவர் எனக் குறிப்பிட முடியாது. எனவே அறிவுடன், மனப்பாங்குகளையும் வளர்த்துக்கொள்ளல் வேண்டும் எனும் கருத்து வழங்கப்படலாம். தனியே அறிவை மாத்திரம் கொண்டுள்ள ஒருவர் கல்வி பெற்றுள்ளார் என ஏற்றுக் கொள்ள முடியுமா? பண்டைய சமூகங்களில், பற்பலவற்றை அறிந்து வைத்திருந்த தனியாள்கள் கற்றறிந்தோர் எனக் கருதப்பட்டனர். எனினும் தற்காலத்தில் தனியே அறிவை மட்டும் பெற்ற, பற்பல விடயங்களை அறிந்து வைத்துள்ள நபர்கள் கல்வி பெற்றவர்கள் எனக் கருதப்படுகின்றனரா? அறிவுடன் கூட்டிணைந்துள்ள நன்மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும் என்பது தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தன்னைப் பற்றியும் சமூகத்தின் ஏனையோர் தொடர்பாகவும் உயரிய மனப் பாங்குகளைக் கொண்டுள்ள தனியாள்கள் கற்றோர் எனக் கருதப்படுகின்றனர். அன்பு, கருணை, பொறுமை, நேர்மை, இதமான மனம் எனும் குணாதிசயங்களுடன் உயரிய ஆக்கங்களை இரசிக்கும் திறன், நுணுகிய தன்மை, மனிதத்தன்மை ஆகியவற்றை வளர்த்துக்கொள்ளலும், கற்றறிந்தமையை வெளிக்காட்டும் முக்கியமான அம்சங்களாகும்.

இவ்வாறாகக் கவனிக்கும்போது, கல்வி என்பது, தனியே அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் ஆகியவற்றை மட்டும் ஏற்படுத்திக் கொள்வது தானா? மற்றொருவிதமாக நோக்கும்போது, அறிவு மனப்பாங்குகள் என்பன ஒன்றுக்கொன்று சமனாக வளர்ச்சியடை வேண்டுமா? இன்றேல், அறிவை விடக் கூடுதலாக மனப்பாங்குகள் விருத்தியடைய வேண்டுமா? இது ஆய்ந்தறிய வேண்டிய முக்கியமானதொரு வினாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய சமூகங்களில், திறன்கள் பலவற்றை வளர்த்துக்கொள்வதே கல்வி எனக் கருதப்பட்டது. விலங்கொன்றினைக் கொல்லுதல், தேன்வதையொன்றினை உடைத்தல், ஆபத்துக்களைத் தவிர்த்துப் பயணஞ் செய்தல் போன்றவை ஆரம்பப் பருவக் கல்வியாகக் கருதப்பட்டது. தற்காலத்திலும் கூட, தொழிற்படுந் திறமையை அதாவது திறன்களை வளர்த்துக் கொள்ளலானது கல்விசார்ந்த மதிப்பைக் கொண்டதொன்றாகக் கருதப்படுகின்றது. இதற்கு ஏற்ப, அறிவு, மனப்பாங்கு, திறமைகள் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளலானது, சரியான கல்வியுடன் தொடர்புடைய கருமத்தொடராகும் எனச் சிலர் கருதுகின்றனர்.

கல்வி என்பது யாதேனும் இலக்கை அடைதல் அல்லது இலக்கை எய்துதல் ஆகும் என ஆர். எஸ். பீடர்ஸ், கருதுகின்றார். யாதேனுமொன்றினை எய்துதல் என்பதால் கருதப்படுவது யாது? இவ்வரைவிலக்கணத்தை மேலும் மேலும் விளங்கிக்கொள்வதற்காக நாம் கல்விக் கருமத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் அல்லது வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவரின் கருமங்களைப் பகுப்பாய்வு செய்து நோக்கலாம்.

வைத்தியரொருவரின் கருமம், யாதேனும் நோய் நிலைக்குள்ளாகிய அதாவது இயற்கை நிலையிலிருந்து இயற்கைக்கு மாறான நிலையை அடைந்த ஒருவரை மீண்டும் முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவருதாகும் எனக் குறிப்பிடலாம். 98.4$^0$F ஆக இருக்க வேண்டிய ஒருவரது பொதுவான உடல் வெப்பநிலை 100$^0$F ஆக மாறும்போது, அவ்வெப்பநிலையை மீண்டும் 98.4$^0$F ஆகக் குறைப்பதே வைத்தியரின் கருமமாகும். அதாவது அவரது உடல் வெப்பநிலையை முன்னிருந்த நிலைக்கு - சரியான நிலைக்குக் கொண்டு வருவதே அவரது கருமமாகும். எனினும், கல்வியியலாளரின் கருமம் இவ்வாறாக முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவருகின்ற ஒரு கருமந்தானா? இல்லை. கல்வியிலாளர் தனது மாணவனை, அறியப்படாத ஓர் இலக்கை நோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமென எதிர்பார்க்கின்றார். இதன் வரையறை யாது? இவ்வாறாக நோக்குகையில் கல்வி என்னைக் கருத்தினை வரைவிலக்கணப்படுத்தும் போது மேற்படி வரைவிலக்கணமும் தெளிவற்றதாகின்றது.

கல்வியியலாளரின் கருமம் குறிப்பானதொன்றல்ல. மேலே கலந்துரையாடப்பட்டவாறு வைத்தியரின் கருமம் தெளிவானதாகும். விவசாயியின் கருமத்தைக் கவனிக்கையிலும், இதனை விளங்கிக் கொள்ளலாம். விவசாயியின் கருமம் யாதேனும் தானிய வகையை - பயிர் வகையை தயார்ப்படுத்திய - அதாவது பண்படுத்திய நிலத்தில் விதைத்து அறுவடையைப் பெற்றுக் கொள்ளலாகும். இதற்காக விவசாயி பின்பற்ற வேண்டிய குறிப்பான செயற்பாட்டுத் தொடர் உண்டு. செயற்பட வேண்டிய விதம் தொடர்பான விளக்கமும் உண்டு. அவ்வாறாகச் சரியான பசளை வகைகளை இட்டு, உரிய வேளையில் உரிய கருமங்களை ஆற்றினால் கிடைக்கும் அறுவடை பற்றிய விளக்கத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இவ்வொவ்வொரு கருமத்திலும் ஒரு குறித்த உறுதியான தன்மை காணப்படுகின்றது. ஆசிரியரின் கருமம் யாது? அவ்வாறாக முன் கூட்டியே எதிர்வு கூறல்களை மேற்கொள்ள முடியுமா? ஆசிரியர் ஏதேனும் குறித்த முறைகளுக்கு அமையத் தொழிற்படும்போது விவசாயி பெற்றுக் கொண்டதைப் போன்று குறித்த பெறுபேற்றை அவரால் பெற்றுக் கொள்ள முடியுமா? அது உறுதியானதல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறித்த மாணவர் குழுவினருக்குக் கற்பிக்கும் முறையிலேயே மற்றுமொரு மாணவர் குழுவுக்குக் கற்பித்துச் சமமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்க முடியாது. முற்றிலும் வேறுபட்ட பெறுபேறுகள் கிடைக்கவும் கூடும்.

இவ்வாறாகக் கல்வி எனும் எண்ணக்கருவின் மூலம் கருதப்படுவது யாது என மேன்மேலும் ஆழமாகப் பகுத்தாய முடியும். தத்துவார்த்தப் பகுப்பாய்வுக்குள்ளாக்குகையில் கல்வி எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணப் படுத்தும் போது எழும் கஷ்டங்கள் மேன்மேலும் தெளிவாகின்றன. இவ்வாறான பகுப்பாய்வுக்குள்ளாக்கும்போது "கல்வி" எனும் சொல்லில் பொதிந்துள்ள ஆழ்ந்த - விரிந்த கருத்தை விளங்கிக் கொள்ளலாம். விவேகி, அறிஞன் போன்ற சொற்களைக்கூட இவ்வாறாகத் தத்துவார்த்தப் பகுப்பாய்வுக்குள்ளாக்கும் போது, கல்விக் கருமத் தொடருடன் தொடர்புடைய தனியாள்களிடத்தே யாதேனும் விழிப்புணர்வு- ஞானப் புத்துணர்வு ஏற படுகின்றது. தனியே குறுகிய வரைவிலக்கணத்தை வழங்குவதற்குப் பதிலாக, விவரமான பகுத்தாய்வை மேற்கொள்ளலே கல்வித் தத்துவார்த்தத்தின் முயற்சியாகும். கல்விக் கருமத் தொடரில் ஈடுபட்டுள்ள அனைவரிடத்தேயும் அவ்வாறான பகுத்தாய்வு ரீதியிலான கருத்துக்கள் காணப்படல் வேண்டும்.

கல்வி என்பது யாது எனக் குறித்துக்கூறுதல் கடினமானதொரு கருமம் என்பது தெளிவாகின்றது. அதனை வெவ்வேறு கண்ணோட்டங்களின் ஊடாகப் பகுப்பாய்வு செய்து விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். கல்விக் குறிக்கோள்கள் என்பன யாவை என வரைவிலக்கணம் கூறுவது கூட இவ்வாறானதொரு கடினமான கருமமாகும். கல்விக் குறிக்கோள்கள் யாவை எனக் குறித்துக் கூறுவதற்காக மேற்கொள்ளும் முயற்சி பொருளற்றதொன்றாகும் எனக் கூறுவோரும் உள்ளனர்.

கல்வி நோக்கங்கள் யாவை எனக் குறித்துக் கூற, அது தொடர்பான முடிபுகளை மேற்கொள்ள - முயற்சித்தல் கடினமானதொரு கருமமாக இருப்பினும், கல்வியியலாளர்கள் சதாவும் அதற்காக முயற்சிக்கின்றர். எனவே இது தொடர்பான பல கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக கல்வியியலாளர்கள், கல்வியின் குறிக்கோள்களைக் குறித்துக் காட்டுவதற்காக எப்பொழுதும் முயற்சி மேற்கொள்வதிலிருந்து அதன் முக்கியத்துவம் தெளிவாகின்றது.

இம்முக்கியத்துவம் - இத்தேவை யாது? கல்விக்குக் குறிக்கோள்கள் தேவை தானா? எப்பொழுதும் மாற்றமடைகின்ற தன்மையைக் கொண்ட சமூகத்தில் மாற்றமடையாத குறிக்கோள்களை வைத்திருக்கலாமா? அது பொருளுள்ள ஒரு முயற்சியாக அமையுமா? போன்ற வினாக்களை எவரும் எழுப்பலாம். இவ்வினாக்கள் மிக முக்கியமானவையாகும்.

இது வரை நீங்கள் கற்ற பகுதி தொடர்பாக உங்களது அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பின்வரும் பயிற்சியில் ஈடுபடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு : 1

1. "கல்வி என்பது யாது" என விளங்கிக் கொள்வதற்காக, மேலே தரப்பட்ட வரைவிலக்கணங்களைக் கோவைப்படுத்திப் பட்டியலொன்றினைத் தயாரிக்க.

## 4.2 நோக்கங்கள், குறிக்கோள்கள் என்பன யாவை?

நோக்கங்கள் (Aims) எனும் சொல் யாதேனும் கருமத்தொடரின் மூலம் எய்தக் கூடிய முடிபு நிலையைக் குறிக்கின்றது. இது பரந்த பொருளைத் கொண்டுள்ளது. நல்லொழுக்கமுடைய தனியாளை உருவாக்குதல், நற்பிரசை ஒருவரை உருவாக்குதல், போன்ற இலக்குகள் நோக்கங்கள் வகையைச் சேர்ந்தனவாகும். நற்பிரசை என்பவர் யார்? இது தொடர்பாகப் பல வரைவிலக்கணங்களைக் கூறலாம். நற்பிரசை ஒருவர் தொடர்பாக, பூசகர் ஒருவர் கொண்டுள்ள கருத்துக்கும் அரசியல்வாதி ஒருவர் கொண்டுள்ள கருத்துக்கும் இடையே பெரும் வேறுபாடு காணப்படக் கூடும். இவ்வாறாக ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விதமான கருத்து காணப்படக்கூடும். அவ்வொவ்வொரு வரைவிலக்கணமும் உத்தேச அர்த்தத்துக்கு அமைந்தானவையாக இருக்கக்கூடும். இதற்கு ஏற்ப, நோக்கம் என்பது பரந்த அர்த்தத்தைக் கொண்டதும், யாதேனும் செயற்றொடரின் மூலம் எதிர் பார்க்கப்படும் இலக்குமாகும் எனக் குறிப்பிடலாம்.

குறிக்கோள்கள் (Objectives) எனும் சொல் முன்னையதை விடக் குறுகிய பொருளைத் தருவதொன்றாகும். இறுதி நோக்கங்களை எய்த முன்னர், எய்தப்பட வேண்டிய, சிறுசிறு குறுகிய இலக்குகளைக் குறிக்கோள்கள் எனக் குறிப்பிடலாம். பரந்த இலக்கு யாது எனக் கவனிப்பதன் மூலமே இக்குறுகிய இலக்குகளைத் தீர்மானித்துக் கொள்ளலாம். நற்பிரசையொருவரிடம் காணப் படவேண்டிய பண்புகளை - குணாதிசயங்களை நாம் பகுதிகளாக வகுத்துக் கொள்ளலாம். எழுத்துக்களை எழுதும் திறன், வாசிக்குந் திறன், பொறுமை, கருத்துக்களை வெளியிடும் திறன், தேசியப்பிரச்சினைகள் யாவை என இனங்காணக்கூடிய தன்மை, தேசிய வளங்களை இனங்காணக் கூடிய தன்மை, வாக்குரிமையைச் சுதந்திரமாகப் பயன்படுத்தக்கூடிய திறமை என்றவாறு நற்பிரசையொருவரிடத்தே காணப்பட வேண்டிய பண்புகளைப் பல பகுதிகளாக வகுத்துக்காட்டலாம். இவ்வுப பகுதிகளைக் குறிக்கோள்கள் எனக் குறிப்பிடலாம்.

ஆண்டு ஒன்றில் கற்கும் மாணவர், ஆண்டிறுதியில் எண்களை எழுதுதல், கணக்கிடுதல், கூட்டுதல், கழித்தல், பெருக்குதல், வகுத்தல் போன்ற திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது பொதுக் குறிக்கோள்களுள் ஒன்றாகும். இவ்வுப குறிக்கோள்களுள் ஒரு பகுதியினை, ஒரு பாடத்தின் ஊடாகக்கூட எய்த முடியும். யாதேனும் பாடம் முடிவடையும் போது $1+2=3$ என்பதை எழுதிக்காட்டுவது அவ்வாறானதொரு குறிக்கோளாகும். இவ்வாறாக குறிக்கோள்களை மீண்டும் சிறுசிறு குறிக்கோள்கள் வரை பகுதி பகுதியாக வகுத்துக் காட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நீங்கள் அறிந்து வைத்துள்ள கல்வித் தத்துவஞானிகள் ஐவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் எந்தெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிடுக.

4. எந்தெந்த நோக்கங்களை எய்துவதற்காக நீங்கள் கல்வி புகட்டுகிறீர்கள்?
முதலில் அந்நோக்கங்களைப் பட்டியற்படுத்திப் பின்பு அவற்றை முன்னுரிமை ஒழுங்குப்படி வரிசைப்படுத்துக.

5. கல்வி நோக்கங்கள் யாரால் தீர்மானிக்கப்படல் வேண்டும் என நீர் கருதுகின்றீர்?

# 4.0 கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும்

## 4.1 கல்வி பற்றிய வரைவிலக்கணங்கள்

"கல்வி" எனும் சொல்லை நாம் மிகச் சுயாதீனமாகப் பயன்படுத்திய போதிலும், அதனால் கருதப்படுவது யாது என வினாவப்பட்டால், அதற்காக வழங்கக்கூடிய குறித்த விடை ஏதும் கிடையாது. அது ஒரு கருத்துப் பொருளான (abstract) எண்ணக்கருவாக அமைந்திருப்பதே அதற்கான காரணமாகும். வெறுங் கண்ணால் காணக்கூடிய மற்றொருவருக்கு அது பற்றி விளக்கக்கூடிய ஒன்றாகிய - கூட்டுப் பதத்தைவிட கருத்துப் பொருளான சொல்லுக்கு எளிதான வரைவிலக்கணங் கூறுவது இலகுவானதொன்றல்ல.

கல்வி என்பதால் கருதப்படுவது யாது? எனும் வினாவைக் கல்வித் தத்துவஞானியே எழுப்புகின்றான். இதற்கான பற்பல விடைகள் கிடைக்கப்பெறலாம். அவ்வொவ்வொரு விடையையும் கவனத்திற்கொண்டு அப்பதத்தினால் கருதப்படுவது யாது என ஆய்ந்தறிவது பொருத்தமானதாகும். "கல்வி என்பது அறிவைப் பெற்றுக் கொள்வதாகும்" என்பது ஒரு விடையாகும். அறிவைப் பெற்றுக்கொள்ளல் என்பது யாது? இவ்வினாவுக்கு விடையளிக்க முன்னர், "அறிவு" எனும் சொல்லுக்கான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அறிவு என்பது புறத்தேயிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதொன்றா? இன்றேல் தமது உள்ளத்திலிருந்து வெளிக் கொணர்ந்து கொள்ளும் யாதேனுமொரு சக்தியா. அறிவை உளத்துக்கு வெளியேயிருந்து பெற்று கொள்ள முடியுமா? அறிவு வெளியே இருந்து உள்ளே இறக்குமதி செய்யக்கூடியதா? விடயங்களா? நிகழ்வுகளா? இவ்வாறாக நோக்கும்போது அறிவு என்பது, புறத்தேயிருந்து கொணரப்பட்டு, உட்புகுத்திக் கொள்ளப்படும் விடயங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றின் ஊடாகக் கட்டியெழுப்பப்படும் ஒரு சக்தியாகும்." எனக் குறிப்பிடலாம். கல்வி என்பது இவ்வாறாக அறிவைப் பெற்றுக் கொள்வதுதானா? அறிவு வளர்ச்சி என்பது விவேக வளர்ச்சியாகுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட கல்விக் நோக்கங்கள் தொடர்பான பல்வேறு அபிப்பிராயங்களைச் சமர்ப்பித்துள்ளனர். இவ்வொவ்வொரு அபிப்பிராயத்திலும் யாதேனும் சாரம் அடங்கியுள்ளது. தத்துவார்த்த அபிப்பிராயங்கள், ஒவ்வொரு நாடும் தத்தமது கல்வி நோக்கங்களைக் கட்டியெழுப்பிக்கொள்கையில் பெருந்துணையாக அமைகின்ற கலங்கரை விளக்கங்களாகக் காணப்படுகின்றன. இத்தத்துவ ஞானியர்கள் யாதேனும் நாட்டுக்கோ, இனத்துக்கோ - மக்கட்கூட்டத்துக்கோ வரையறைப்பட்டவர்கள் அல்லர். அவர்களது அபிப்பிராயங்கள் ஒவ்வொருவருக்கும் வழி காட்டுகின்றன. அவ்வாறாயின் இத்தத்துவார்த்த அபிப்பிராயங்களைப் பயன்படுத்திக் கல்வி நோக்கங்களைக் கட்டியெழுப்ப முடியாதா?

கல்விக்காக, முழு அண்டத்துக்கும் பொதுவான நோக்கமொன்றினைக் குறிப்பிடுவதற்காக மேற்கொள்ளும் முயற்சி பெருந்தோல்வி கண்டுள்ளது என்பது சேர் பன்சிநன் என்பாரின் கருத்தாகும். ஒவ்வொரு கல்விநோக்கமும் அவ்வந்நாட்டின் வாழ்க்கைத் தத்துவத்துடன் பின்னிப் பிணைந்திருப்பதே இதற்கான காரணமாகும். ஒரு நாட்டின் வாழ்க்கைத் தத்துவம் மற்றொரு நாட்டின் வாழ்க்கைத் தத்துவத்திலிருந்து வேறுபடுகின்றது. எனவே யாதேனும் நாட்டின் கல்வி நோக்கத்தை தீர்மானிக்கையில், அந் நாட்டின் விசேடமான தன்மைகளை- பண்புகளைக் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

### தேசியத் தேவைகள்

மேலே குறிப்பிட்டதற்கிணங்க, கல்விக்காக, முழு அண்டத்துக்கும் பொதுவான நோக்கங்களைக் கட்டியெழுப்புவது கடினமானதாகும். அவ்வந் நாடுகளின் வாழ்க்கைத் தத்துவம், தேசியத் தன்மை என்பன அதன்பால் பங்களிப்புச் செய்வதே இதற்கான காரணமாகும். தத்துவார்த்த வழிகாட்டலுக்கும் அந்நாட்டின் அரசியல் பொருளாதார, சமய, சமூக கலாசார பங்களிப்புகளுக்கும் அமைய கல்விக் நோக்கங்கள், பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கள் ஆகிய அனைத்தையும் கருத்திற் கொண்டு, அவ்வந்நாடுகள் தத்தமது கல்விநோக்கங்களைக் கட்டியெழுப்பிக் கொள்கின்றன. இதற்கேற்பத் தத்தவார்த்தப் பங்களிப்பு, வழிகாட்டல், ஆகியவற்றுடன் அந்தந்த நாட்டுக்குரிய சிறப்பான கல்வி நோக்கங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். இவ்விரு காரணிகள் காரணமாக, அவ்வந்நாடுகளின் கல்விக் நோக்கங்களில் சில ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளும் காணப்படலாம். இது இயற்கையானதாகும். எனவே அந்தந்த நாடுகள், தத்துவார்த்த வழிகாட்டலின் வழியே பொருத்தமான நோக்கங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு நாட்டுக்கும் தெளிவான கல்வி நோக்கங்கள் இருப்பதானது, கல்விக் கருமத் தொடரைத் திட்டமிடுவதில் பெருந் துணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## 4.4 நோக்கங்களின் பாகுபாடு

கல்வி நோக்கங்களைப் பல்வேறு அடிப்படைகளில் வகைப்படுத்தலாம். இதுவரை சமர்ப்பிக்கப்பட்டுள்ள அபிப்பிராயங்களைப் பிரதானமான மூன்று பகுதிகளாக வகுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தனியாள் நோக்கங்கள்.
2. சமூக (பொது) நோக்கங்கள்.
3. தனியாள், சமூக (பொது) நோக்கங்கள்.

### தனியாள் நோக்கங்கள்

கல்வியில் தனியாளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டுமா அல்லது சமூகத்துக்கு முதலிடம் வழங்க வேண்டுமா என்பது தொடர்ச்சியாக விவாதத்துக்குள்ளான ஒரு விடயமாகும். சில தத்துவஞானியர்கள் தனியாளின் சக்திகளையும் உள்ளார்ந்த திறன்களையும் உச்ச அளவுக்கு வளர்ச்சியடையச் செய்வதே கல்வியின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கம் எனக் குறிப்பிடுகின்றனர். மற்றொருசாரார், தனியாள் நோக்கங்களை விட, சமூக நோக்கங்களுக்கே முக்கியத்துவமளிக்க வேண்டும் எனத் தர்க்கிக்கின்றனர். மற்றுமொரு சாரார் இவை இரண்டுமே சம அளவு முக்கியத்துவமுடையன என எடுத்துக் காட்டுகின்றனர்.

தனியாள் அபிவிருத்தியை முக்கியமானதாகக் கொண்ட நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கிய தத்துவஞானிகள், "ஆரோக்கியமான உடலினுள் ஆரோக்கியமான உள்ளம்", "நடத்தை வளர்ச்சியே ஆளுமை வளர்ச்சி" போன்றவற்றை மதித்தனர். உலகம் பூராவிலும், சனநாயகக் கருத்துக்கள் பரவிச்செல்லத் தொடங்கிய பின்னர், தனியாள் அபிவிருத்தியின் பால் கூடிய கவனஞ் செலுத்தப்படலாயிற்று. "ஒவ்வொரு தனியாளிடத்திலும் ஆளுமையை உச்ச அளவில் வளர்த்தல்" போன்ற எண்ணக்கருக்களுடன் அந்தந்தத் தத்துவஞானியர்களுடன் வரைவிலக்கணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. ஆளுமை – தனித்தன்மை – பிரதான இடம்பெறும் கல்வியை ஊட்டுவதே ரூஸோவின் கருத்தாக இருந்தது. பிள்ளையின் தேவைகளை அடிப்படையாகக்கொண்டே கல்வி புகட்ட வேண்டும். கல்வியின் ஊடாக, பிள்ளையின், சுயாதீனம், அடிமைப்படாத்தன்மை என்பன பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதை அவர் வலியுறுத்துகின்றார். ஒவ்வொரு தனியாளினதும் தலை, உள்ளம், கைகள் ஆகிய மூன்று அம்சங்களையும் சம அளவில் வளர்த்தலே கல்வியின் நோக்கமாக அமைதல் வேண்டும் என மகாத்மா காந்தி குறிப்பிட்டார். அண்மைக் காலத்தில் தனியாள் நோக்கங்களுக்குச் சார்பாகக் கருத்து வெளியிட்டவர்களுள் ஒருவரான சேர் பர்சிவல் பின்வருமாறு வலி யுறுத்துகின்றார்.

ஆண், பெண் இரு சாராரினதும் தனிப்பட்ட சுயாதீனமான தொழிற்பாட்டின் ஊடாகவன்றி மனித குலத்தத்துக்கு ஏதேனும் நன்மைகள் கிடைக்கப்பெறமாட்டாது எனும் தீர்மானத்தில் நாம் ஆரம்பத்தொட்டே காலூன்றியிருத்தல் வேண்டும். இவ்வுண்மையுடன் பொருந்தும் வண்ணம் கல்விக் கருமத்தை ஒழுங்கமைத்தல் வேண்டும். மனிதன், தனது சகபாடிகள் தொடர்பான பொறுப்புக்களைத் தவறவிட்டுவிட வேண்டுமென்பது இதன் கருத்தல்ல. ஒவ்வொரு தனியாளினதும் வாழ்க்கை மெய்ப்பொருளானது, ஏனையோரிடமிருந்து பெறும் திருப்தியின் மீது கட்டியெழுப்படுகின்றதெனினும், ஒவ்வொருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தமது சுயசக்தியின்மீது அபிவிருத்தியடைய வேண்டும் என்பதே உண்மையான நிலையாகும். வாழ்க்கை தொடர்பான ஒரு விசேட மெய்ப்பொருள் உள்ளடங்கும் வண்ணம் தயாரிப்படுத்தப்பட்ட யாதேனும் நோக்கம், முழு அண்டத்துக்கும் பொருத்தமான கல்வி நோக்கமாக அமைய முடியாது.

இவ்வாறாக, தனியாள் நோக்கங்களை வெளிக்கொணர்ந்து தமது கருத்துக்களை வெளியிடும் தத்துவஞானியர்கள் "கல்வியின் முற்றுமுழுதான குறிக்கோள் உயிர்ப்பான ஞானத்தைத் தோற்றுவிப்பதாகும்" எனக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறாகத் தனியாள் நோக்கங்ககளை மையமாகக் கொண்டு அதனைச் சூழக் கல்வி நோங்கள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும் எனும் கருத்துக்கு முன்னுரிமை வழங்கும் தத்துவஞானியர்களின் தருக்கமானது. தனியாளின் பரிபூரணமான முழு வளர்ச்சி, அரசுக்கு அர்ப்பணிக்கப்படின், அவனூடாக வெளிக்காட்டப்படும் கல்வி நோக்கங்கள் பொருத்தமுடையனவாகும் என்பதாகும்.

### சமூக நோக்கங்கள்

அரசுக்கு நன்மை பயத்தல், அதாவது பொது, சமூக நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்குதலானது தனியாள்களுக்கு நன்மை பயத்தலை விட முக்கியமானது "எனும் கருத்தைக் கொண்டிருந்த தத்துவஞானியர்களும் காணப்பட்டனர். பிளேட்டோ, அரிஸ்டோட்டல், போன்ற தத்துவஞானியர்கள் தனிப்பட்ட நோக்கங்களை விட, பொது நோக்கங்களுக்கே முன்னுரிமை வழங்குதல் வேண்டும் எனக் குறிப்பிட்டனர். இலட்சிய சமூகம் தொடர்பாக நம்பிக்கை கொண்டிருந்த பிளேட்டோ அவ்வாறானதொரு அரசுக்கு ஏற்ற பிரசையை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாக அமைதல் வேண்டும் என வலியுறுத்தினார்.

தனியாள் வளர்ச்சியானது சமூக வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது எனும் கருத்தைக் கொண்டிருந்த தத்துவஞானியர்கள் பொது நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கினர். சமூகம் சரியாக ஒழுங்கமையின் தனியாளைச் சரியாக ஒழுங்கமைத்துக் கொள்ள முடியும் என்பதே அவர்களின் கருத்தாக அமைந்தது. பொதுச் சமூக அபிவிருத்தி இன்றேல், தனியாள் அபிவிருத்தி என்பது ஒரு மாயையாகவே அமையும் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது.

### தனியாள், சமூக (பொது) நோக்கங்கள்

கல்விச் செயற்றொடரின்போது தனியாள், சமூகம் என இரு பிரிவாகக் குறித்துக் காட்டுவது பொருத்தமற்றது. அத்தோடு அது தேவையற்ற ஒரு கருமமாகும் எனக் குறிப்பிடும் ஒரு சிலர், "மனித , பௌதிக வளங்களை உச்ச அளவில் விருத்தி செய்து அதன் பயன்களைப் பொதுவாகவும் நியாயமான விதத்திலும் பகிர்ந்தளிப்பதே கல்வியின் நோக்கமாக அமைதல் வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றனர். இக்கருத்து, தனியாள் நோக்கங்களையும், சமூக நோக்கங்களையும் வலியுறுத்துகின்றது. மனித, பௌதிக வளங்களை உச்ச அளவில் வளர்த்து, அவற்றின் பெறுபேறுகளை நியாயமாகப் பகிர்ந்தளிக்கும் கருத்தைச் சமர்ப்பித்த பொதுவுடைமைச் சிந்தனையுடன், இந்த தனியாள் சமூக (பொது) நோக்கங்கள் ஆகிய இரண்டுக்கும் சம.



Form 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் வழங்கவேண்டும் எனும் கருத்து மேன்மேலும் முக்கியத்துவம் பெற்றது. கல்வி முறையின் ஊடாக நாட்டுக்குத் தேவையான அறிவு, மனப்பாங்குகள், திறமைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுத்து அதன் மூலம் வேலையையும், வேலை செய்யும் மக்களையும் விரும்பும் மனிதனைத் தோற்றுவிக்க முயற்சித்தல் வேண்டும், எனும் கருத்துக்களினால் மேற்படி அபிப்பிராயம் மேன்மேலும் உறுதியாகின்றது.

இதுவரையில் கலந்துரையாடப்பட்டதற்கிணங்க, தத்துவார்த்த அபிப் பிராயங்களின் பங்களிப்பைப் போன்றே, சமய அபிப்பிராயங்களின் மூலமும் வலிமையான பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்வி நோக்கங்களைத் தீர்மானிக்கையில், ஆதிகாலந்தொட்டே சமயத்தின் பங்களிப்பு பிரபலமானதாகக் காணப்பட்டது.

ஆதிகாலத்தில் சமய வணக்கத்தலங்களிடமே கல்வி ஒப்படைக் கப்பட்டிருந்தமையால், கல்வியின் மீது சமயம் கட்டாயமாகப் பங்களிப்புச் செய்தது. கல்வி நோக்கங்களைத் தீர்மானிக்கையில், தத்துவார்த்த சமய அபிப்பிராயங்களின் மூலம் பேருதவி கிடைக்கப்பெறுகின்றது. ஏனையோர் அனைவரையும்விட, தத்துவஞானியர்களே, தனியாள் விருத்தி, தனியாள் விடுதலை, தனியாள் பரிபூரண நிலை எனும் எண்ணக்கருக்களின்மீது தமது விமர்சன ரீதியான கண்ணோட்டத்தைச் செலுத்தினர். எனவே கல்வி நோக்கங்களைத் தீர்மானிக்கையில் எக்காலத்திலும் தத்துவார்த்தத்தின் பங்களிப்பு பிரதானமானதாக இருந்து வந்துள்ளது

## 4.5 கல்வி நோக்கங்களும் தேசிய அபிவிருத்தியும்.

மேலே குறிப்பிட்ட, முழு உலகுக்கும் பொதுவான முழு அண்டத்துக்குமுரிய நியாயமான, எக்காலத்திலும் பங்களிப்புச் செய்யக்கூடிய தத்துவார்த்த வழிகாட்டலின் வழியே சென்று அவ்வந்நாடுகள் தத்தமது நாடுகளின் புவியியல், அரசியல், சமூக, கலாச்சாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய - உள்நாட்டுப் பழக்க வழக்கங்கள், அபிப்பிராயங்கள் நல்லொழுக்க விதிகள் போன்றவற்றை மதித்தபடி பொருத்தமான கல்வி நோக்கங்களைக் கட்டியெழுப்பிக் கொண்டுள்ளன. அந்நோக்கங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றமையே இதற்கான காரணமாகும். பல நாடுகளின் கல்விநோக்கங்களைக் கவனிக்கும் போது இது மிகத் தெளிவாகின்றது.

இது தவிர்ந்தவிடத்து, யுனெஸ்கோ போன்ற சருவதேச நிறுவனங்களின் மூலமும், தேசிய மட்டத்தை மீறிச் சென்ற கல்விக் நோக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் மனித உரிமைகள் தொடர்பான வெளியீடு, கொமியூனிஸ்ற் வெளியீடு போன்ற பொதுக் கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படும் கருத்துக்கள் தேசிய கல்வி நோக்கங்களைத் தயார்ப்படுத்துகையில் துணையாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யுத்தம் மனிதனின் உள்ளத்திலேயே தோன்றுகின்றது. எனவே சமாதானமும் அவனது மனதிலேயே பாசறை கொள்ளல் வேண்டும்." எனும் கூற்றுடனே யுனெஸ்கோ விஞ்ஞாபனம் ஆரம்பிக்கின்றது. யுனெஸ்கோவின் கல்வி நோக்கங்களை அவ்விஞ்ஞாபனத்திலிருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம். உலக சமாதானமும், சருவதேச புரிந்துணர்வைப் பரப்புவதும் அதன் பிரதானமான குறிக்கோளாகும். உலகிலிருந்து அறியாமையைக் களைவதற்கும் விஞ்ஞான- தொழினுட்ப அறிவைப் பரப்புவதற்கும் சருவதேச புரிந்துணர்வை வளர்த்தபடி உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் யுனெஸ்கோ பணியாற்றுகின்றது.

உலகம், ஓர் அகில (பிரபஞ்ச)க் கிராமமாக, பொதுக் கிராமமாக, மாறியுள்ளது. சருவதேச ஆதிக்கம் முன்னரை விட அதிகரித்துள்ளது. எனவே தெளிவான கல்வி நோக்கங்களைத் தயாரிப்படுத்துவது அவசியமாகும். எனினும் பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளின் கல்வி, பொருத்தமான, தெளிவான நோக்கத்தின் வழியே செல்வதாகத் தெரியவில்லை. பிரதானமான சில நாடுகளின் கல்விக் நோக்கங்களை விளங்கிக் கொள்வதன் மூலம் இவ்விடயத்தைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

## 4.6 வெவ்வேறு நாடுகளின் கல்வி நோக்கங்கள்

### சோவியத் நாடு

நன்கு திட்டமிடப்பட்ட கல்வி முறைமை அமுற்படுத்தப்படும் சோவியத் நாட்டின், கல்வி நோக்கம் அறிவு, திறன்கள், பொதுவுடைமை மனப்பாங்குகள் போன்றவற்றைக் கொண்ட, கொமியூனிஸ்ற் சமுதாயமொன்றினை உருவாக்குவதாகும். சகல விதத்திலும் மனிதனின் ஆளுமை அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு உலகில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட கல்வி முறைமை சோவியத் கல்வி முறைமையாகும். பல நூற்றாண்டு காலமாகக் கண்ட கனவுகளின் பெறுபேறு இதுவாகும். தன்னிடத்தே ஆன்மிக வளங்கள், நல்லொழுக்கத் தூய்மை, உடல் அபிவிருத்தி போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய மனிதனொருவனை உருவாக்கும் இலக்குடன் தொடர்புடையதாகின்றது. இந்நோக்கத்தை அடைவதற்காகவே சோவியத் நாட்டுக்கல்வி முற்றுமுழுதாக முனைகின்றது.

இவ்வாறாக, தனியாள் அபிவிருத்தி, தேசிய அபிவிருத்தி ஆகிய இரு அம்சங்களும் நன்கு கூட்டிணைக்கப்பட்டே சோவியத் கல்வி நோக்கங்கள் கட்டியெழுப்பட்டுள்ளன. இக்கல்வி முறையின் மூலம் உழைப்பின் மகத்துவமும் அதன் விழுமியங்களும் வலியுறுத்தப்படுகின்றன. அனைவரும் வேலைசெய்கின்ற - அனைவரும் கற்றறிந்தவர்களான ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிப்பதே சோவியத் கல்வியின் நோக்கமாகும். மாக்ஸிச கல்வித் தத்துவத்தின் அடிப்படையில், சோவியத் நாட்டின் சமூகத் தேவைகளைக் கவனத்திற்கொண்டே இக்கல்விநோக்கங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான வழிகாட்டல் கிடைக்கப்பெறுகின்மையால் கல்வியைத் திட்டமிடுவோருக்கும் கல்விக் கருமத்தொடரில் ஈடுபடுவோருக்கும் அதன் மூலம் பேருதவி கிடைக்கப்பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மக்கள் சீனா

1949 இல் மாவோ சேதுங் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் புத்துயிர் பெற்ற மக்கள் சீனா மார்க்ஸ் வாத தத்துவத்தின் அடிப்படையில், மாவோ சேதுங் இனது தத்துவார்த்தக் கருத்துக்களுக்கு அமைய ஒழுங்கமைக்கப்பட்ட கல்விமுறைமை திட்டமிடப்பட்டது. "ஒவ்வொருவருக்கும் நல்லொழுக்கம் விவேகம், உடல் வளர்ச்சி என்பன கிடைக்கப்பெறவும் உயரிய சமூகக் கருத்துக்களைக் கொண்ட தொழிலாளியாக மாறுவதற்கு வேண்டிய திறன்களைப் பெறுவதற்கும் வழிவகுப்பதே மாவோசேதுங்கின் கருத்தாக அமைந்தது. இவ்வழிகாட்டலின் ஊடாக, மக்கள் சீனா தனது கல்விக் குறிக்கோள்களைத் தயார்ப்படுத்தியுள்ளது.

அரசியலையும், கலாசாரத்தையும் புரிந்துகொண்ட உள உழைப்பு, உடல் உழைப்பு ஆகியவற்றை மதிக்கின்ற தனியாள்களை உருவாக்குவதே சீனாவின் கல்விக் குறிக்கோளாகும். இவ்வடிப்படைக் குறிக்கோள்களை வெற்றிகரமான தாக்கிக் கொள்வதற்காக - எய்துவதற்காகத் தயார்ப்படுத்தப்பட்ட கல்வி வேலைத்திட்டமொன்றின் மீதே சீனக் கல்விமுறை அமுற்படுத்தப்படுகின்றது. ஆரம்பந்தொட்டு வாழ்க்கையுடன் தொடர்புடையதாகவே கல்வி புகட்டப் படுகின்றது. 9 வயது தொடக்கம், பொருளுள்ள ஒரு கருமத்தில் வாரத்துக்குக் குறைந்த பட்சம் 4 மணி நேரத்துக்காவது ஈடுபடுவதற்கான பயிற்சி வழங்கப்படுகின்றது. சிறப்பான உடலுழைப்பு மனப்பாங்குகளை வளர்ப்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

### யப்பான்

நவீன உலகில், மிக மிக விரைவாக முன்னேறிச் செல்லும் - அபிவிருத்தியடையும் யப்பானின் கல்விக் கருமத்தொடர் குறிப்பான நோக்கங்களைக் கொண்டுள்ளது. நோக்கங்களைத் தீர்மானித்து அதற்கு ஏற்ப தமது கல்விக் கருமத் தொடரை ஒழுங்குபடுத்திக் கொண்டுள்ள பொதுவுடைமை நாடுகளைப் போன்றே யப்பானும் குறித்த தீர்க்கமான நோக்கங்களின் வழியே தனது கல்வியை வழிநடத்துகின்றது.

1947ஆம் வருடம் மார்ச் 31ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட 25 ஆம் இலக்கக் கல்விச் சட்டத்தின் 1ஆம் பந்தியில் யப்பானின் கல்விக் குறிக்கோள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"சமாதானமாக அரசையும், சமூகத்தையும் கட்டியெழுப்புவோராக சுயாதீன வாழ்க்கையைக் கொண்ட, உண்மையையும் நியாயத்தையும் விரும்புகின்ற, தனியாளின் தனித்துவத்திலிருந்து விழுமியத்தை மிக முக்கியமாகக் கருதுகின்ற, உழைப்பின் மகிமையை மதிக்கின்ற, பொறுப்புக்கள் தொடர்பான ஆழ்ந்த உணர்வைக் கொண்ட, உடல் உள ஆரோக்கியத்தைக் கொண்ட, மக்களைத் தோற்றுவிப்பதும், பூரண ஆளுமையை விருத்தி செய்வதுமே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும்" இந்தத் தீர்க்கமான நோக்கமே யப்பானியக் கல்விக்கு வழிகாட்டியுள்ளது. செல்ல வேண்டிய -காலடியெடுத்து வைக்க வேண்டிய வழிகள் அனைத்தையும் நன்கு இனங்கண்டு கொண்டுள்ளமை யினால் கல்வியின் ஊடாக உலகை வெல்லும் நிலையை யப்பானியர்கள் அடைந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஐக்கிய நாட்டினது கல்வி நோக்கங்களில் தனியாள் நோக்கங்களுக்கே கூடுதலான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. அந்நாட்டுக் கல்வியின் பரந்த நோக்கங்களில் "அந்நாட்டின் தேசிய யாப்பில் அடங்குகின்ற அரசியல், சமூக, பொருளாதார நோக்கங்களின் ஊடாக, அதனைவிட வலிமையுடைய ஒன்றிணைக்கப்பட்ட இராச்சியத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ளல், பொதுப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளல், பொது நன்மையை ஏற்படுத்திக்கொள்ளல், நாட்டுமக்களுக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் சுதந்திரமான வாழ்க்கையை உறுதிப்படுத்தல்" என்பன இடம்பெற்றுள்ளன.

அறிவைப் பாதுகாத்தல், அதனை விருத்தி செய்தல், பரப்புதல், ஒவ்வொரு தனியாளதும் மேன்மையை (Integrity) ஏற்றுக்கொண்டு, பாதுகாப்பதும் ஒவ்வொருவரதும் நல்வாழ்க்கைக்கு வழியமைத்து, அதனை வளர்ப்பதற்கு வேண்டிய மனப்பாங்குகள், திறன்கள், நுட்பமுறைகள் ஆகியவற்றை வளர்ப்பதுமாகும்.

இவ்வாறாக அமெரிக்க ஐக்கியக் குடியரசு தமது கல்வியை நெறிப்படுத்துவதற்கான பரந்த நோக்கங்களைத் தீர்மானித்துள்ளது. இப்பரந்த நோக்கங்களை மேன்மேலும் சிறப்பாக விளக்குவதற்காக, கல்விக் கொள்கைகள் தொடர்பான கமிசன், நான்கு உபநோக்கங்களைக் குறிப்பிட்டுள்ளது.

1. **தன்னை உணர்ந்துகொள்ளல் தொடர்பான நோக்கங்கள்.**
   ஆய்வுரீதியான விவேகம், பேச்சு, வாசிப்பு, எழுத்து, கணிதம், சுகாதார பழக்க வழக்கங்கள், அழகியல் ஆர்வங்கள், நடத்தை போன்ற அம்சங்களை விருத்தி செய்தல்.

2. **மனிதத் தொடர்புகள் பற்றிய நோக்கங்கள்** -
   மனித குலத்துக்கு மதிப்பளித்தல், ஆப்த நட்பு, ஒத்துழைப்பு, ஒழுக்கம் போன்றவை.

3. **பொருளாதாரச் செயற்றிறன் தொடர்பான நோக்கங்கள்.**
   வேலையும், தொழில்சார் தகவல்களும், தொழிலைத் தெரிவு செய்தல், தொழில் வினைத்திறன், தனியாள் சிக்கனம் போன்றன.

4. **சமூகப் பொறுப்புக்கள் தொடர்பான நோக்கங்கள்**
   சமூக நியாயம், சமூக உணர்வு, ஆய்வு செய்து முடிவு மேற்கொள்ளல், பொறுமை, சட்டத்தை மதித்தல் போன்றன. மேலே தரப்பட்ட பரந்த இலக்குகள், அவற்றின் ஊடாக முடிவு செய்யப்பட்ட நோக்கங்கள் ஆகியவற்றின் வழியே அந்நாட்டின் கல்விக் கருமத்தொடர் செயற்படுத் தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐக்கிய இராச்சியம்

தனியாளின் பூரண விருத்திக்கு இடமளித்து அதனூடாகச் சமூகத்தை அபிவிருத்தி செய்வதிலேயே ஐக்கிய இராச்சியம் நம்பிக்கை கொண்டுள்ளது. பாடசாலை செல்லும் வயதைக் கொண்ட சகல பிள்ளைகளுக்கும் அவர்களது வயது, திறன்கள், சவால்கள் என்பனவற்றுக்கு உகந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பதும், பாடசாலையை விட்டுச் சென்ற அனைவர்க்கும் பொதுவான - தொழில்சார் பாடநெறிகளின் மூலம் பயன் பெறக் கூடிய நிலைமையை உறுதிப்படுத்துவதுமாகும்.

பிள்ளைகளை அவர்கள் வாழும்- வளரும் சமூகத்துக்குப் பொருத்தமுடையவாறு உகப்பானவாறு தயார்ப்படுத்துவதே ஆரம்பக்கல்வியின் நோக்கமாகும் என பிளவ்டன் கமிட்டி அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் தனியாளின் ஒவ்வொரு அம்சத்தையும் வளர்ச்சியடையச் செய்வதற்காக, சமகால சமூகத்துக்குத் தேவையான அடிப்படைத் திறன்களைப் பெற்றுக் கொள்ளவும், சமூக ஒழுக்க விருத்தி, உடல் வளர்ச்சி, இயக்கத்திறன்களின் விருத்தி என்பன ஏற்படல், வீட்டுக்கும் பாடசாலைக்குமிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன ஆரம்பப் பருவத்தின் நோக்கங்களாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனி, பின்வரும் தொழிற்பாட்டில் ஈடுபடுங்கள்.

நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய "கல்வி நோக்கங்கள்" தொடர்பாக நீங்கள் பெற்ற அறிவை உறுதிப்படுத்திக்கொள்ள இத்தொழிற்பாடு துணையாக அமையும்.

**செயற்பாடு : 3**

இவ்வட்டவணையைப் பூரணப்படுத்துக.

| கல்விநோக்க வகை | நோக்க வகையின் கருத்து சுருக்கமாக | நோக்க வகை தொடர்பான கருத்துக்களைச் சமர்ப்பித்த தத்துவ ஞானிகள் | நோக்க வகையை ஏற்றுக் கொண்ட நாடுகளும் அவ்வவ் நாட்டின் அடிப்படை இலக்குகளும். |
|---|---|---|---|
| 1. தனியாள் நோக்கம் | | | |
| 2. சமூக (பொது) நோக்கம் | | | |
| 3. தனியாள்- சமூக நோக்கம் | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.7 இலங்கையின் கல்வி நோக்கங்கள்

இலங்கையின் கல்வி நோக்கங்கள் யாவை எனத் தீர்மானமாகக் குறித்துக்காட்டும் அறிக்கைகள் எதுவும் கிடையாது. 1944இல் கன்னங்கர அறிக்கையைச் சமர்ப்பித்த குழு அதன் நோக்கங்களைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. "சனநாயக வாழ்க்கைக்குப் பொருத்தமுடைய கல்வியின் அபிவிருத்தியை நாம் எவ்விதத்திலும் வரையறைப்படுத்தவில்லை. அத்தோடு, பிரதானமான இந் நோக்கங்களான, நடத்தைப் பயிற்சி, சிறந்த பிரசையாக வாழ்தல் ஆகியவற்றைக் கற்பித்தலை நாம் வெகுவாக நினைவூட்டுகின்றோம்.

1964இல் தேசியகல்வி முறைமையொன்றுக்கான பிரேரணைகளைச் சமர்ப்பித்த கல்வி வெள்ளை அறிக்கையும், 1966இல் பொதுக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி ஆகியவற்றைச் சீரமைப்பதற்கான பிரேரணைகளைச் சமர்ப்பித்த குழுவின் அறிக்கையும் தனித்தனியே வெவ்வேறு கல்வி நோக்கங்களைக் குறிப்பிட்டுள்ளன.

1979 இல் போகொட பிரேமரத்ன அவர்களின் பங்களிப்புடன் தயார்ப்படுத்தப்பட்ட "கல்வியின் பொருத்தப்பாட்டை நோக்கி..............." எனும் அறிக்கையிலும் கல்வியின் நோக்கங்கள் என, ஒரு தொகுதி நோக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை வருமாறு.

1. வரையறைக்குட்பட்ட வளங்களைக் கொண்ட உலகிலே, வாழ்க்கைத் தேவைகளுக்குத் தேவையான அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் ஆகியவற்றுடன் சுற்றாடல் தொடர்பான உணர்வையும் விருத்தி செய்தல்.

2. ஆரோக்கியமான பூரணமான வாழ்க்கைக்குத் தேவையான பழக்க வழக்கங்களை வளர்த்தல்.

3. சமூக வாழ்க்கை, சமூக உணர்வு ஆகியவற்றுக்குத் தேவையான மொழித் திறன்களையும் வெளியீட்டுத் திறன்களையும் வளர்த்தல்.

4. இலங்கை மக்களின் சமய, கலாசார பாரம்பரியங்கள் தொடர்பான உணர்வும் அவற்றை மதித்தலும்.

5. சிறப்பான, ஆக்கபூர்வமான, சமாதானமான, நீதி நியாயமான செயற்படு பிரசைக்குரிய பண்புகளை வளர்த்தல்.

6. கலை, விஞ்ஞானம், இலக்கியம், தொழில்நுட்பம் போன்ற அம்சங்களைக் கற்றலில் ஈடுபட்டிருப்போரின் சவால்களுக்கு அமையத் துலங்கும் தன்மைகளை விருத்திசெய்தல்.

7. பிறரின் சொத்துக்கள், கருத்துக்கள், வாழ்க்கைக் கோலம் போன்றவற்றை மதித்தல்.

8. மனித சமூகம் எதிர்நோக்கும் பொதுப் பிரச்சினைகள், அவை இந்நாட்டின் வாழ்க்கை முறையில் ஆதிக்கஞ் செலுத்தும் விதம் என்பனவற்றை உணர்ந்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982 இல் சமர்ப்பிக்கப்பட்ட "கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள்", எனும் பெயரிலான வெள்ளை அறிக்கையில், கல்வி நோக்கம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "பிள்ளையின் வளர்ச்சி இயல்பாக ஏற்பட இடமளித்து அதன் மூலம் பிள்ளையைச் சமூகத்துக்கும் சமூகத்தின் தொழிலொன்றுக்கும் பொருத்தமானவனாக மாற்றுவதே கல்வியின் நோக்கமாகும்." பொதுக்கல்வியின் மூன்று படிகளின் போதும் அதாவது ஆரம்ப, கனிட்ட இடைநிலை, சிரேட்ட இடைநிலை ஆகிய மூன்று பருவங்களுள் ஒவ்வொரு படியின் போதும் பாடசாலையிலிருந்து பிள்ளைக்குக் கிடைக்கும் உதவி உச்ச அளவில் கிடைக்கப்பெறுவதை நோக்காகக் கொண்டு, அச்சந்தர்ப்பங்களின் சட்ட அமைப்பும் அதற்குத் தேவையானவாறு பாவிதானங்களும் பொதுவான நூல்களும் வழங்கப்படுகின்றன. எவ்வாறெனினும் தெளிவான தீர்க்கமான கல்வி நோக்கங்கள் குறிப்பிடப்படவில்லை. எனவே தெளிவான நோக்கத் தொகுதியொன்றின் வழியே கல்வி அமுல்படுத்தப்படுவதில்லை.

இலங்கையின் கல்வி நோக்கங்கள் தொடர்பாக நீங்கள் பெற்ற அறிவைப் பின்வரும் தொழிற்பாட்டைப் பூர்த்தி செய்வதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்க.

செயற்பாடு :4

1. கடந்த நான்கு தசாப்தங்களுள் இலங்கையில் தோன்றிய பின்வரும் கல்வி ஆணைக்குழு அறிக்கைகள், கல்வி வெள்ளையறிக்கைகள், கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி நோக்கங்களையும் கல்விக் குறிக்கோள்களையும் பட்டியற்படுத்துக.

   1. 1943 கன்னங்கர அறிக்கை (1943- 43வது நிகழ்ச்சி அறிக்கை)

   2. 1964 கல்வி வெள்ளை அறிக்கை.

   3. 1966 பொதுக்கல்வி, தொழிநுட்பக் கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள்.

   4. 1972 கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள்.

   5. 1981 கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள்.

   6. ஆரம்பக் கல்விப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 சாராம்சம்

இவ்வத்தியாயத்தில், கல்வி எண்ணக்கருக்கள் தொடர்பாக தத்துவ ரீதியில் ஆராயப்பட்டது. கல்வி என்பதால் கருதப்படுவது யாது என்பது தொடர்பாக எளிதான ஒரு வரைவிலக்கணத்தைக் குறிப்பிட முடியாது எனவும் கருத்துப் பொருளான எண்ணக் கருவாகிய கல்வி என்பதற்குப் பல்வேறு வரை விலக்கணங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடப்பட்டன.

கல்வி நோக்கங்கள், கல்விக் குறிக்கோள்கள் என்பவற்றால் கருதப்படுபவை யாவை என்பது பற்றியும் ஆராயப்பட்டது. நோக்கம் என்பது பரந்து விரிந்த பொருள்படும் சொல் எனவும் குறிக்கோள் என்பது அதனை விடக் குறுகிய, குறைந்த காலத்தில் எய்தவேண்டும் என எதிர்பார்க்கும் உப நோக்கம் ஆகும் எனவும் கண்டோம்.

வகுப்பறையில் கல்வி புகட்டும் ஆசிரியரும் கல்விக் கருமத்துடன் தொடர்புடைய மற்றைய அனைவரும் கல்வி நோக்கங்கள் கல்விக் குறிக்கோள்கள் தொடர்பான விளக்கத்தைக் கொண்டிருத்தல் மிக முக்கியமானதாகும்.

கல்விக் நோக்கங்களை அமைத்துக் கொள்கையில், தத்துவார்த்த அபிப்பிராயங்கள், தேசியத் தேவைகள் என்பன தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் என்பது பற்றியும் அவ்வடிப் படையின்மீது நிலைபேறடைந்து அவ்வந் நாடுகளால் தத்தமது நாட்டுக்குரிய பொருத்தமான கல்விக் நோக்கங்கள் தயாரிப்படுத் துப்பட்டுள்ள விதம் பற்றியும் ஆராயப்பட்டன.

இதற்கு ஏற்ப, சோவியத் நாடு, மக்கள் சீனா, அமெரிக்க ஐக்கியக் குடியரசு, யப்பான், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளின் கல்வி நோக்கங்கள் ஒன்றிலிருந்தொன்று வேறுபடும் விதமும் சில அம்சங்களில் அவை ஒற்றுமையைக் காட்டும் விதமும் விளக் கப்பட்டன.

இலங்கைக்குப் பொருத்தமான கல்வி நோக்கங்களைக் கட்டியெ ழுப்பிக் கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட அடிப்படை அவசி யமாகின்றது. இலங்கையில் சில கமிசன் சபை அறிக்கைகளிலும் கல்வி வெளியீடுகளிலும் கல்வி நோக்கங்கள் எனப் பல விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தேசிய நோக்கங்களைக் குறிப்பாக இனங்கண்டு, கல்விக் நோக்கங்களுக்கு அமைய அவற்றை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும் எனவும், தேசி யக் கல்விக் கருமத்தொடரை அதற்கு அமைய நெறிப்படுத்த வேண்டும் எனவும் முடிவு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.0 பிற்சோதனை

இனி இப்பிற்சோதனைக்கு விடையளியுங்கள். பின்னர் உங்களது விடைகளுடன் மாதிரி விடைகளை ஒப்பிட்டு உங்களது அறிவைச் சுயமாகவே மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

பின்வரும் வாக்கியங்களைப் பூரணப்படுத்துவதற்கு, பொருத்தமான சொற்களைக் கீழே தரப்பட்டுள்ள சொற்றொகுதியிலிருந்து தெரிவு செய்க.

1. ஆதிகால சமுதாயங்களில் ............................ மக்களே அறிவாளிகள் எனக் கருதப்பட்டனர்.

2. "எவரேனுமொருவரை ஒரு குறித்த நிலைக்குக் கொணருவதே கல்வி" என ............................ குறிப்பிட்டுள்ளார்.

3. நோக்கம் என்பது யாதேனுமொரு கருமத்தொடரின் ............................ ஆகக் கருதப்படும் இலக்காகும்.

4. கல்வி தொடர்பாக, முழு அகிலத்துக்கும் பொதுவான நோக்கங்களைக் குறிப்பிட மேற்கொள்ளப்படும் முயற்சி பயனயற்றது என.................. ................குறிப்பிட்டுள்ளர்.

5. யாதேனுமொரு நாட்டின் கல்விக் கருமத்தொடரைத் திட்டமிடுகையில் தெளிவான ............................ இருத்தல் அவசியமாகும்.

6. கல்வியின் முற்று முழுதான நோக்கம் .................................. தோற்றுவிப்பதாகும் என தனியாள் குறிக்கோள்களை உயர்வாக மதிக்கும் தத்துவஞானியர்கள் குறிப்பிடுகின்றனர்.

7. பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்ற தத்துவ ஞானிகள் ....................... நோக்கங்களுக்கு முதலிடம் வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

8. தேசிய நோக்கங்களைக் கட்டியெழுப்பிக் கொள்ள உதவுகின்ற .................................... ஐக்கிய நாடுகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டது.

9. சோவியத் நாட்டுக் கல்வி நோக்கங்களைத் தயார்ப்படுத்துகையில் .................................. தத்துவம் பங்களிப்புச் செய்துள்ளது.

10. இலங்கையின் கல்வி நோக்கங்கள் ................................. அடிப்படையாகக் கொண்டே தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

**சொற்பட்டியல்**

மாக்ஸ் வாத, அடைவு, மனித உரிமைகள் சாசனம், ஆர். எஸ். பீற்றர்ஸ், பலவைதயும் அறிந்து, தனியாள் அபிவிருத்தி, சேர் பேர்சிநன், கல்வி நோக்கங்கள், செயற்பாடு விவேகத்தை, சமூக - தனியாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.0 விடைகள்

1. பலதையும் அறிந்த
2. ஆர். எஸ். பீற்றர்ஸ்
3. அடைவு
4. சேர் பேர்சினன்
5. கல்வி நோக்கம்
6. செயற்படு விவேகம்
7. சமூக - தனியாள்
8. மனித உரிமைகள் சாசனம்
9. மாக்ஸ் வாத
10. தனியாள் அபிவிருத்தி

# 8.0 ஒப்படைகள்

1. தனியாளிடத்தே, அறிவு, மனப்பாங்குகள் திறன்கள், ஆக்கத்திறன் வளர்ப்பதே கல்வியாகும் எனும் கருத்தை நீங்கள் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கின்றீர்கள் என்பதைக் காரணங்காட்டி விளக்குக.

2. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் கல்வி நோக்கங்களைத் தனித் தனியே பட்டியற்படுத்தி ஒப்பிடுக.

3. இலங்கைக்கு ஏற்ற கல்விக் நோக்கங்கள் பத்தினைக் குறிப்பிட்டு அவற்றைத் தெரிவுசெய்வதற்கு அடிப்படையாக அமைந்த காரணங் களையும் தருக.

# 9.0 கலைச் சொற்றொகுதி

| | | |
|---|---|---|
| 1. கல்வி | - | Education |
| 2. கல்வி நோக்கங்கள் | - | Aims of Education |
| 3. கல்விக் குறிக்கோள்கள் | - | Objectives of Education |
| 4. கல்வி முறைமை | - | Educational System |
| கல்விக் கருமத்தொடர் | - | Educational Process |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 5. கல்வியியலாளர் | - | Educationist |
| 6. மனப்பாங்குகளை விருத்தி செய்தல் | - | Developing the attitudes |
| 7. நோக்கங்கள் | - | Aims |
| 8. நடத்தை விருத்தி | - | Character development |
| 9. தருக்க ஆற்றல் | - | Logical ability |
| 10. அறிவு | - | Knowledge |
| 11. தத்துவஞானி | - | Philosopher |
| 12. உயர் இலட்சியம்/ உயர்வான | - | Ideal |
| 13. அடைவு | - | Attainment |
| 14. தனியார் விடுதலை | - | Emanicipation of the individual |
| 15. தனியாள் விருத்தி | - | Personal Development |
| 16. ஆளுமை விருத்தி | - | Personality Development |
| 17. புலமையுள்ள/ பலதுமறிந்த | - | Erudite |
| 18. விவேகம்/ நுண்ணறிவு | - | Intelligence |
| 19. அறிவு விருத்தி | - | Cognitive Development |
| 20. வகையீடு / பாகுபாடு | - | Classification |
| 21. விமரிசனப் பகுப்பாய்வு | - | Critical Analysis |
| 22. தூல எண்ணக்கரு சர்வ வியாபகமானஎண்ணக்கரு | - | Abstract Concept |
| 23. பிரபஞ்சத்துக்கும் பொதுவான/ அகில | - | Universal |
| 24. சமூகவாத சிந்தனை | - | Socialistic thinking |
| 25. சமநிலையான விருத்தி | - | Balance Development |
| 26. எண்ணக்கரு | - | Concept |
| 27. கருத்துப் பொருளான | - | Concrete |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள்

1. வீரசிங்ஹ ஹென்ரி - கல்வித் தத்துவப் பிரவேசம்
லேக் ஹவுஸ் - 1977

2. வீரசிங்ஹ ஹென்ரி - கல்வி மூலாதாரக் கட்டுரைகள்
உதய வெளியீடு - ராஜகிரிய. 1980

3. வீரசிங்ஹ ஹென்ரி - கல்வி எண்ணக் கருக்கள்
கீழைத்தேய - மேலைத்தேய.
அரச அச்சகம் - கொழும்பு. 1987

4. Whiteheat A. N. - The Aims of Education

5. Peters R.S. - Concept of Education, London U.K 1969

6. Deurden R. F - Readings on Philosophy of Education, U.K 1974

7. Herst P. H - Logic of Education, London 1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் அத்தியாயம்

# பாடவிதான அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடவிதான அபிவிருத்தி

**உள்ளடக்கம்** பக்கம்


1.0 அறிமுகம் ........ 73

2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 73

3.0 முற்சோதனை ........ 74

4.0 பாடவிதான அபிவிருத்தி ........ 75

4.1 பாடவிதானம் என்பது யாது? ........ 75
4.2 பண்டைய, தற்காலப் பாடவிதானங்கள் ........ 77
4.3 பாடவிதானம் தொடர்பான விரிவான எண்ணக்கரு ........ 79
4.4 பாடவிதானம் தொடர்பான பொது மதிப்பீடு ........ 82
4.5 பாடவிதான அபிவிருத்தி மாதிரியுருக்கள் ........ 90
4.6 பாடவிதானத்தில் அடங்கும் சமய, கலாசார விடய உள்ளடக்கம் ........ 95
4.7 கல்வியும் வேலையனுபவமும் ........ 96
4.8 வெவ்வேறு பாடவிதான ஒழுங்கமைப்பு முறைகள் ........ 97

5.0 சாராம்சம் ........ 105

6.0 பிற்சோதனை ........ 105

7.0 விடைகள் ........ 108

8.0 ஒப்படைகள் ........ 108

9.0 கலைச்சொற்றொகுதி ........ 109

10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள் ........ 110




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

இவ்வத்தியாயத்தின் ஊடாகப் பாடவிதானம் என்பதால் கருதப்படுவது யாது, பாடவிதானத்தின் முக்கியத்துவம் யாது, பண்டுதொட்டு இன்றுவரை, பாடவிதானம் எனும் எண்ணக்கரு விரிவடைந்துள்ள விதம் யாது, பாடவிதானங்களைத் தயாரிக்கையில் கையாளக்கூடியனவெனச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு மாதிரிகள் எவை என்பன பற்றிய அடிப்படை விளக்கத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடவிதான அபிவிருத்தியின் நோக்கங்கள், குறிக்கோள்கள் பற்றியும், நோக்கங்களையும், குறிக்கோள்களையும் தீர்மானித்துக்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. அத்தோடு சமநிலையான பாடவிதானமொன்றுக்கான தேவை, பூரணமான ஆளுமை விருத்தியை ஏற்படுத்துதற்காகச் சமநிலையான பாடவிதானம் துணையாக அமையும் விதம் என்பன தொடர்பாகவும் விளங்கிக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு, பாட விதானத்தினுள், சமய கலாசார அம்சங்கள் பொதிந்துள்ள விதம் வேலை தொடர்பான அனுபவங்கள் பொதிந்துள்ள விதம் என்பவற்றின்பால் முக்கிய கவனஞ் செலுத்தப்படுகின்றது.

கல்விக் கருமத் தொடரின்போது, பாடவிதானம் பயனுடையதொன்றாக இல்லையா என முதலில் தீர்மானித்தல் மிக முக்கியமானதாகும். பாடவிதானம் என்பதை அடிப்படைத் தத்துவார்த்தப் பகுப்பாய்வுக்குள்ளாக்குவதன் மூலம் நாம், பாடவிதானத்தின் உகப்பான-உகப்பற்ற அம்சங்களை இனங்கண்டு கொள்ளலாம்.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

01. பாடவிதானம் எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்தல்.

02. பாடவிதானம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங் களை ஆய்வு செய்தல்.

03. பண்டைக்கால-தற்கால பாடவிதான மாதிரிகளை இனங்காணல்.

04. பாடவிதானத்துக்கான எமது மாதிரியுருவொன்றினைக் கட்டியெழுப் பிக் கொள்ளுகையில், அதில் உள்ளடங்க வேண்டிய மூல அம்சங் களைக் குறிப்பிடல்.

05. பாடவிதானம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு மாதிரிகளை இனங்காணல்.

06. பாடவிதானம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு மாதிரிகளில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளையும், பொருந்தப்பாடு, முரண்பாடு ஆகியவற்றையும் விளக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பாடவிதானத்தில் அடங்கியுள்ள சமய, கலாசார பாட உள்ளடக்கம் பற்றி ஆய்தல்.

08. கல்விக்கும் வேலைப் பயிற்சிக்கும் இடையேயான தொடர்பை விளக்குதல்.

09. வெவ்வேறு பாடவிதான ஒழுங்கமைப்பு முறைகளை இனங்காணல்.

10. பாடவிதான ஒழுங்கமைப்பு முறைகளுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை இனங்காணல்.

## 3.0 முற்சோதனை

இப்பாடத்தைக் கற்க முன்னர் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள். ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமானது என நீங்கள் கருதும் விடையை அவ்வினாக்களின் கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களிலிருந்து தெரிவு செய்து எதிரேயுள்ள கூட்டில் குறிக்க.

1. பாடவிதானம் என்பதால் நீங்கள் கருதுவது யாது?

   i. நீங்கள் கற்பிக்கும் பாடத்திட்டம்.
   ii. கற்பிக்கும்போது பயன்படுத்தும் பாடநூல்களும் ஆசிரியர் கைநூல்களும்
   iii. பாடசாலையில் மேற்கொள்ளப்படும் சகல கருமங்களும்.
   iv. பாடசாலையில் மேற்கொள்ளப்படும் கல்விக் கருமங்கள்.

2. பாடவிதான அபிவிருத்தியில் ஆசிரியருக்கு முக்கிய இடம் கிடைக்கப்பெற வேண்டியதன் காரணம் யாது?

   i. ஆசிரியர் பாடவிடயங்களை அறிந்துவைத்துள்ளமை.
   ii. ஆசிரியர் பாடவிதானத்தைக் கையாண்டு அமுற்படுத்துகின்றமை.
   iii. ஆசிரியர் பாடத்திட்டங்களையும் பாடநூல்களையும் பயன்படுத்துகின்றமை.
   iv. ஆசிரியர் மாணவரை நேரடியாகச் சந்திக்கின்றமை.

3. பாடவிதானமொன்றினைத் தயாரிக்கும்போது அதில் பல்வேறு வகைப்பட்ட பாடங்கள் புகுத்தப்படுவதேன்?

   i. ஆசிரியர்கள் பல பாடங்களைக் கற்பிக்க வேண்டுமாகையால்.
   ii. மாணவர்கள் பல்வேறு பாடங்களைக் கற்பதில் விருப்புக் காட்டுகின்றமையால்.
   iii. மாணவரின் முழு ஆளுமை விருத்தி ஏற்படவேண்டுமாகையால்.
   iv. கற்றலில் பல்வகைமையை ஏற்படுத்த வேண்டுமாகையால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.0 பாடவிதான அபிவிருத்தி

பாடவிதானத்தைக் கையாளல் ஆசிரியரின் பிரதானமான பொறுப்பாகும். எனவே பாடவிதானம் எனும் எண்ணக்கருவைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இதற்காகப் பாடவிதானம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சில வரைவிலக்கணங்களை ஆய்வு செய்தல் முக்கியமானதாகும். பொதுவாகக் கவனிக்கையில் சில வரைவிலக்கணங்கள் மிகக் குறுகியவையாகவும் மற்றும் சில வரைவிலக்கணங்கள் தேவைக்கதிகமாக விரிவானவையாகவும் காணப்படுகின்றன.

## 4.1 பாடவிதானம் என்பது யாது?

இனி நாம், பாடவிதானம் என்பதால் கருதப்படுவது யாது என விளங்கிக் கொள்வதற்காக, அதனுடன் தொடர்புடைய சில வரைவிலக்கணங்களைக் கவனிப்போம்.

> பாடவிதானம் என்பது கற்பிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்படும் ஒரு குறித்த அளவான பாட ஒழுக்கமைப்பாகும்.
>
> - எலிசபெத் -

ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் வகுப்பில் கற்பிக்கப்படும் பாடத்தொகுதியொன்றே பாடவிதானமாகும் என்பதே இவ்வரைவிலக்கணத்தினால் கருதப்படுவதாகும். இவ்வரைவிலக்கணம் எமக்குத் தெளிவான விளக்கமொன்றையும் அளிக்கின்றதா?

இவ்வாறாக, பரீட்சைப் பாடத்திட்டத்துக்கோ, பாடநூலுக்கோ ஆசிரியர் கைந்நூலுக்கோ பாடவிதானம் ஒப்பானதாகக் கொள்ளப்படுகின்றது. இம் மூன்று வகைகளும் ஒன்றுசேர்ந்தபோது பாடவிதானம் பூரணத்துவம் பெறுகின்றது எனச் சிலர் கருதிய போதிலும், கற்பித்தலின் நோக்கங்கள், பாடவிடயங்கள் ஆகிய இரண்டையும் ஒன்றாகக் கருதும் இவ்வரைவிலக்கணம் மிகக் குறுகியது என்பது தெளிவாகின்றது.

> பாடவிதானம் என்பது பாடசாலை மாணவருக்குக் கல்வி தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தயார்ப்படுத்தப்பட்ட அனுபவங்களாகும்.
>
> - போஷம் -

இவ்வரைவிலக்கணத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். பாடசாலைக்கு வெளியிலோ, பாடசாலையினுள்ளேயோ பெறும் அனுபவங்கள் கல்வி விழுமியங்களைக் கொண்டுள்ளமை அதன்மூலம் தெளிவாகின்றது. இது சரியானதெனக் கொள்ள முடியுமா? இது மிகப் பரந்த ஒரு நோக்கமாகும் என்பது தெளிவாதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட இரு அம்சங்களுக்கும் இயைக்கூடியவாறே பாடவிதானம் தொடர்பான நவீன வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில் பாடவிதானமானது தனியே பாடவிடயங்களை மாத்திரமே கொண்டிருந்தது. இது குறுகியதொரு கருத்தாகும். பாடவிடயங்களுக்குக் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் கற்றுக்கொள்பவருக்கும் கிடைத்தல் வேண்டும். எனவே ஆசிரியர்கள்,

1. பாடவிடயங்கள் தொடர்பாகவும்
2. மாணவர்கள் தொடர்பாகவும்

கவனஞ் செலுத்துதல் வேண்டும். எனவே புதிய வரைவிலக்கணத்தைச் சமர்ப்பிக்கையில் பாடவிடயங்களை மட்டுமல்லாது, மாணவர்கள் பற்றியும் கவனஞ் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

பாடவிதானங்கள் தொடர்பாகப் புதிய கண்ணோட்டத்தில் நோக்கும் கல்வியியலாளர்கள் இவற்றைவிட விரிவான கருத்துக்களைத் தந்துள்ளனர். "பாடசாலையில் மேற்கொள்ளப்படும் கூறப்படும் விடயங்களுக்கு அமைய மாணவரிடத்தில் ஏற்படும் மாற்றமாகும்" என்பது பாடவிதானம் தொடர்பாகக் குறிப்பிடப்படும் ஒரு அபிப்பிராயமாகும். இவ்வபிப்பிராயத்துக்கு இயைய, பாடசாலையில் மாணவன் பெற்றுக்கொள்ளும் அனைத்து அனுபவங்களும் பாடவிதானத்துள் இடம்பெறுகின்றன. மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் அவ்வனுபவங்கள் தொடர்பான முழுப் பொறுப்பு பாடசாலையைச் சார்கின்றது. இப்பாடவிதானம் பாடத்திட்டத்தில் அல்லது பாடநூல்களில் அல்லது ஆசிரியர் கைந்நூல்களில் இடம்பெற்றுள்ளனவா? அது பாடசாலையில் சகல இடங்களிலும், சகல நடவடிக்கைகளிலும், சகல சந்தர்ப்பங்களிலும் பொதிந்து காணப்படுகின்றமையை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். இதற்கு அமைய பாடவிதானம் என்பது, பாடசாலையில் உண்மையாக இடம்பெறும் கருமங்களுடன் தொடர்புடையதொன்றாகும். இது மறைந்திருக்கும் பாடவிதானம் (Hidden Curriculum) எனும் பெயராலும் அழைக்கப்படுகின்றது.

இவ்வாறாக நோக்கும்போது, பாடவிதானம் தொடர்பான பல்வேறு வரைவிலக்கணங்கள் உள்ளன என்பதும், முழுநிறைவான வரைவிலக்கணமொன்றினைக் குறிப்பிடுகையில் ஒவ்வொரு கருத்துத் தொடர்பாகவும் கவனஞ் செலுத்துதல் வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

பாடவிதானம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மற்றும் சில வரைவிலக்கணங்கள் உள்ளன. அவற்றுள் சில வரைவிலக்கணங்கள் வருமாறு:

* பாடவிதானம் என்பது, பாடவிடயங்களையும், கற்பித்தல் முறைகளையும், நோக்கங்களையும் உள்ளடக்கியதாகும். அவற்றின் இடைத்தாக்கத்தின் மூலம் உயிர்ப்பான - செயற்படு பாடவிதானம் தயாரிப்படுத்தப்படுகின்றது.
  -பீ.எச். ரேகர் -

* பாடவிதானம் என்பது கல்வி நோக்கங்களையோ கல்விப் பெறுபேறுகளையோ எய்துவதற்காக மேற்கொள்ளப்படும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட உயிர்ப்பான செயற்படுதன்மை கொண்ட வேலைத்திட்டமொன்றாகும்.
  -பீ.எச்.ஹேர்ஸ்ற்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் ஊடாகத் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் சகல கற்றல் நடவடிக்கைகளும் பாடவிதானமாகும். இவை பாடசாலையினுள்ளும், பாடசாலைக்கு வெளியேயும் ஒவ்வொரு மாணவனாலும் தனித்தனியாகவோ மாணவர்கள் சேர்ந்த குழுக்களாகவோ நடைமுறைப்படுத்தப்படுவனவாகும்.

- ஜே.எஃப். கர் -

* "யாதேனும் மக்கட் பிரிவினர் விரிவான குறிக்கோள்களையும் சிறப்பான இலக்குகளையும் எய்தவேண்டும் எனும் நோக்குடன் கற்றல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் தயாரிப்படுத்தப்பட்ட திட்டமே பாடவிதானமாகும்."

- ஜீ. ரேலர், விலியம் அலெக்ஸாந்தர் -

* "மாணவரின் உளவியற்றேவைகள், கிடைக்கப்பெறும் வளங்கள், சமகால கலாசாரப் போக்குகள் ஆகியவற்றுக்கு அமைய பாடசாலையினால் திட்டமிடப்படும் கல்விக் கருமத்தொடரே பாடவிதானமாகும்."

- டேவிட் வர்விக் -

**மேற்படி வரைவிலக்கணங்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தும்போது, பாடவிடயங்கள், சமகாலத் தேவைகள், மாணவனின் தன்மை, கிடைக்கப்பெறும் வளங்கள் போன்ற அனைத்தும் பாடவிதானம் எனும் எண்ணக்கருவினுள் அடங்குகின்றன என்பது தெளிவாகின்றது.**

எனவே பாடவிதானத்தின் உள்ளடக்கத்தில் பல பாடப்பிரிவுகள் உட்படுத்தப்பட்டிருப்பதற்கான குறிக்கோள்கள் உள்ளன என்பது தெளிவாகின்றது. எனவே பாடவிதானமொன்றினைத் தயாரிக்கையில் தேசியக் குறிக்கோள்களையும், தேசிய கல்விக் குறிக்கோள்களையும் கவனத்திற்கொள்ளல் பயனுடையதாகும். நீங்கள் இதுவரையில் கற்ற பகுதியின் மூலம் பெற்ற அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பின்வரும் தொழிற்பாட்டில் ஈடுபடுக.

செயற்பாடு 1


பாடவிதானம் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களுள் இன்றைய இலங்கைச் சமூகத்துக்குப் பொருத்தமான சில வரைவிலக்கணங்களைத் தெரிவுசெய்து குறிப்பிடுக.

## 4.2 பண்டைய, தற்கால பாடவிதானங்கள்

பாடவிதானம் தொடர்பான மாதிரி மிக எளியதாகும். அம்மாதிரிக்கு அமைய ஆசிரியர், பாடம், மாணவன் ஆகிய மூன்று அம்சங்களும் ஒன்று சேரும்போது பாடவிதானம் பூரணத்துவம் பெறுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பண்டைய பாடவிதான மாதிரி

பண்டைக்கால ஆசிரியரின் பொறுப்பு, பாடவிடயங்களின் மூலம் மாணவனுக்கு அறிவைப் பெற்றுக் கொடுப்பதாகும். எனினும் தற்காலத்தில் அறிவைப் பெற்றுக்கொடுப்பது மாத்திரம் போதியதாகாது. தற்போதைய பாடவிதானத்தின் மூலம் முன்னரைவிட விரிவான குறிக்கோள்களை அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு அக்கருமத்தொடர், பண்டைய கருமத் தொடரைப் போன்று எளிதானதல்ல. தற்போது, பூரணமான கல்வி வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டே பாடவிதானம் திட்டமிடப்படுகின்றது. நவீன பாடவிதானம் தத்துவம், உளவியல், சமூகவியல் போன்ற பாடங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். பாடவிதானத்தைத் தயாரிக்கும் போதும், பிள்ளையின் நடத்தைகளைத் தீர்மானிக்கையிலும் அப்பாடங்களின் பங்களிப்பு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வடிப்படையின் மீதே பாடவிதானம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இக்கருத்தைப் பின்வருமாறு வரிப்படத்திற் காட்டலாம்.




புதிய பாடவிதான மாதிரி

தத்துவம், சமூகவியல், உளவியல் ஆகிய சகல பாடங்களதும் பங்களிப்பைக் கருத்திற் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட பாடவிதானக் கொள்கைவாதத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமே பாடப்பகுதிகளும் கற்பித்தல் முறைகளும் தெரிவுசெய்து கொள்ளப்படுகின்றன. நவீன பாடவிதான மாதிரிக்கு அமைய,

1. மாணவனின்பால் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது.

   * மாணவன் எவ்வாறு கற்றுக்கொள்கின்றான்?
   * அவனது தேவைகள் யாவை?
   * அவன் எவ்வாறு அபிவிருத்தியடைகின்றான்?
   * அவன் அறிவை எவ்வாறு பெறுகின்றான்?
   * அவன் எவ்வாறான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றான்?

2. ஆசிரியரின்பால் விசேட கவனஞ்செலுத்தப்படுவதோடு

3. பாடவிதானம் தொடர்பாகவும் கவனஞ் செலுத்தப்படுகின்றது.


பாடவிதானம் தொடர்பாக மேலும் கவனிக்கும்போது

அது,

1. பாடவிடயங்கள்.
2. கற்பித்தல் முறைகள்
3. மதிப்பீடு என மூன்று பகுதிகளாக வகுக்கப்படுகின்றமையை அறிய முடிகின்றது. கற்பித்தல் முறைகளைத் தீர்மானிக்கையில் ஆசிரியர் முக்கிய பொறுப்பை வகிக்கின்றார் என்பது ஈண்டு குறிப்பிடவேண்டிய தொன்றாகும்.

## 4.3 பாடவிதானம் தொடர்பான விரிவான எண்ணக்கரு

பாடவிதானமானது கல்வித் தொகுதியின் ஓர் அம்சமாகும். இந்த கல்வியில் செயற்படு(Functional) கருத்து வலியுறுத்தப்படுகின்றது. செயற்படு கல்வி என்பது யாதேனும் செயல் அல்லது தொழில் அல்லது தொழிற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்படும் கற்பித்தல் செயற்றொடராகும். இவ்வாறான தொடர்ச் சட்டத்தினுள் பாடவிதானமானது, கல்வித் தொகுதியின் ஓர் அங்கமாகக் கொள்ளப்படுகின்றது. "கல்வி என்பது, மனித இனத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள கலாசார அறிவுப் பொக்கிசத்தையும் (Cultural Content) திறன்களையும் (Skills) சுயகற்றற் கருமமாக மாற்றுவதாகும்" என வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்தைச் செயற்பாட்டு வரைவிலக்கணமாகக் கருதலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளதற்கிணைய, எல்லையற்ற கலாசார அறிவுப் பொக்கிசமும் திறன்களுமே மூலாதாரமாகக் கருதப்படுகின்றன. இந்த வரையறையற்ற அறிவுப் பொக்கிசத்திலிருந்தும் திறன்களின் தொகுதியிலிருந்தும் கற்போர் தமக்குத் தேவையான பகுதிகளைத் தெரிவுசெய்துகொள்ளல் வேண்டும். மூலாதாரத்திலிருந்து தேவையான பகுதிகளைத் தெரிவுசெய்து கொள்ளல் கல்விக் கருமத்தொடரின் மிக முக்கியமானதொரு அம்சமாகும் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

இத்தெரிவுக் கருமத்தொடர், வடிகட்டலுக்கு ஒப்பானதாகும். கலாசார அறிவுப் பொக்கிசத்திலிருந்து தெரிவுசெய்து கொண்ட பகுதிகளைக் கற்பதற்கு ஏற்றவாறு - பொருத்தமானவாறு மாற்றியமைத்துக் கொள்ளலையும் தயாரிப்படுத்திக் கொள்ளலையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளலையும், பாடவிதானக் கருமத்தொடர் எனக் குறிப்பிடலாம். இதற்கு அமைய எல்லையற்ற அறிவுப் பொக்கிசத்தைப் பாடவிதானமாக மாற்றுவதன் முக்கியமான கருமமாக அமைவது தெரிவு செய்யும் கருமத் தொடராகும்.

இவ்விடயங்களை அனைத்தையும் பின்வருமாறு வரிப்படமொன்றின் மூலம் காட்டலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித் தொகுதியில் பாடவிதானம் பெறும் இடம்.

மேற்படி மாதிரிக்கு அமையக் கல்வித் தொகுதியினதும் (அமைப்பினும்) பாடவிதான அபிவிருத்தியினதும் மூலாதாரம், வரையறையற்ற கலாசார அறிவுப் பொக்கிசமும் திறன்களின் தொகுதியுமாகும். இவ்வரிப்படத்துக்கு அமைய பாட விதானம் என்பது பாடவிதான அபிவிருத்தித் தொகுதியிலிருந்து கற்பித்தற் தொகுதிக்கு வழங்கப்படும் வேலைத் தொகுப்புத் திட்டமொன்றாகும். எனவே பாடவிதானம் என்பது பாடவிதான அபிவிருத்தித் தொகுதியின் ஒரு பகுதியேயாகும்.

இனி உங்களுக்கு இப்பகுதியை விளக்க முடியுமா? முடியாவிடின், மேற்படி வரிப்படத்தை மீண்டும் கவனியுங்கள். பின்னர் பாடவிதானம். திட்டமிடல்-அமைத்தல் தொடர்பான தகவல்களைப்பற்றி ஆய்த்தறிவோம்.

பாடவிதானம் அமைக்கையில், போதனை வழங்கும் வேலைத்திட்டமொன்று போதனைத் தொகுதியின் ஊடாக தயார்ப்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் இக்கருமம் தொடர்பான முறைமையான ஒழுங்குமுறையான கோலம் காணப்படுகின்றது. இலங்கையில் இக்கருமத்தில் முக்கிய இடம்பெறும் நிறுவனம், தேசிய கல்வி நிறுவகமாகும். அதற்கு இயைய, இந்நிறுவகத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பாடவிதான அபிவிருத்திப் பிரிவினால், ஒவ்வொரு பாடப்பிரிவுக்காகவும், நடைமுறைப்படுத்தப்படும் பாடப்பிரிவு அலகுகளின் மூலம் இப்போதனைத் தொகுதிகள் தொடர்பான கருமங்கள் ஆற்றப்படுகின்றன. இக்கருமங்கள் மேன்மேலும் விரிவடையும் விதத்தைக் கவனிக்கையில், அவ்வப்பாடங்கள் தொடர்பான விசேட நிபுணர் சேவைகள், ஆசிரியர் நற்கூறுகள் (மாதிரிகள்), மூலவளத் தனியாள்கள், பரீட்சைத் திணைக்களம் என்பன பங்களிப்பை வழங்குகின்றமை தெளிவாகின்றது. அத்தோடு பாடவிதான மாற்றங்களின்போது ஆசிரியரின் கருத்துக்கள் வினவியறியப்படுவதோடு அவ்வப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அது தொடர்பான கருத்துக்களை வெளியிடுவதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக ஆசிரியர்கள் எப்போதும் கவனஞ் செலுத்துவது அவசியமாகின்றது. இக்கருமத் தொடரைத் தேசியமட்ட பாடவிதான திட்டமிடல் எனக் குறிப்பிடலாம். பின்வரும் விளக்கப்படத்தின்மூலம் இதனை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.





பாடவிதான அபிவிருத்தி தொடர்பான போதனைத் தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடவிதான அபிவிருத்தி தொடர்பான போதனைத் தொகுதி

மேற்குறிப்பிட்ட போதனைத் தொகுதியின் மூலம் தயாரிக்கப்பட்ட பாடவிதானம் அமுற்படுத்தும் தொகுதியின் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இக்கருமத்தில் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதம கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் தொடர்புறுகின்றனர். ஒழுங்கு முறை பின்வரும் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.




இதற்கு அமைய பாடவிதானக் கருமத்தொடர் கற்பித்தல் கருமத் தொடரிலேயே முற்றுப் பெறுகின்றது. மேற்படி கல்வித் தொகுதியில் பாடவிதானம் பெறும் இடம் தொடர்பான வரிப்படத்துக்கு அமைய இம்முழுக் கருமத்தொடரிலும், வெவ்வேறு அம்சங்களுக்கூடாகப் பரம்பிச் சென்ற முக்கியமான அம்சங்களைக் காணமுடிகின்றது. இதுவே மதிப்பீடாகும். மதிப்பீட்டுக் கருமத்தொடர் காரணமாகப் பாடவிதான அபிவிருத்திக் கருமத்தொடர் தொடர்ந்தும் சீர்திருத்தங்களுக்குள்ளாகின்றது.

## 4.4 பாடவிதானம் தொடர்பான பொது மாதிரியுரு

பாடவிதானத்தைத் தயாரிக்கையில் ஆறு விடயங்களின் பால் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

1. அறிமுகம்
2. நோக்கங்கள் / குறிக்கோள்கள்
3. பாடவிடயங்கள் / கற்றல் அனுபவங்கள்
4. கற்பித்தல் முறைகள்
5. மதிப்பீடு
6. மூலாதாரங்கள் என்பனவே அவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் பாடவிதானம் தயாரிப்படுத்தல் தொடர்பாக எழுதப்பட்டுள்ள வெவ்வேறு நூல்களில் இதற்காக நான்கு மூலாதாரங்களே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. நோக்கங்களும் குறிக்கோள்களும்.
(பாடவிதானத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் யாவை?)

2. பாடவிடயங்கள் / கற்றல் அனுபவங்கள்.
(எப்பாடப் பகுதிகளின் ஊடாக அக்குறிக்கோள்கள், நோக்கங்களின்பால் மாணவனைக் கொண்டு செல்லலாம்?)

3. கற்பித்தல் முறைகள்.
(அக்குறிக்கோள்களின்பால் கொண்டு செல்வதற்காக எவ்வாறான அனுபவங்கள் தேவை)

4. மதிப்பீடு
(பெறுபேறுகளை எவ்வாறு மதிப்பிடலாம்?)

பாடவிதானங்களைத் தயாரிப்படுத்துவோர் பாடவிதானத்தை தயாரிப்படுத்துவது தொடர்பாக முக்கியமான நான்கு அம்சங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இந்நான்கு மூலாதாரங்களும், பாடவிதான அபிவிருத்திக் கருமத்தொடரின்போது கையாளப்படும் அடிப்படையான நான்கு வினாக்களுக்கு வழிகாட்டுகின்றன.

1. இப்பாடவிதானம் எதற்கானது?

2. எவ்வாறான பாடவிடயங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்

3. எவ்வாறான கற்றல் அனுபவங்களையும் வகுப்பு ஒழுங்கமைப்பு முறைகளையும் பிரயோகித்தல் வேண்டும்?

4. பெறுபேறுகளை எவ்வாறாக மதிப்பீடு செய்யலாம்?

என்பனவே அவ்வினாக்களாகும்.

இம்மூலாதாரங்கள் பாடவிதானத் திட்டமிடலில் முக்கிய பங்கை ஆற்றுகின்றன.

இந்நான்கு மூலாதாரங்களும் இவ்வாறாக வேறாக்கிக் காட்டப்பட்டபோதிலும் அவற்றை ஒன்றிலிருந்து ஒன்று தெளிவாக வேறாக்கிக் காட்டப்படக்கூடிய நான்கு அம்சங்களாகக் கருத முடியாது. ஒவ்வோர் அம்சமும் ஏனையவற்றுடன் பரஸ்பர தொடர்பைக் கொண்டுள்ளன. எனவே பாடவிதானத் திட்டமிடல் தொழிற்பாட்டை வெற்றிகரமானதாக்கிக் கொள்ளவேண்டுமெனின், அதன் மூலாதாரங்கள் நான்குக்கும் இடையிலான பரஸ்பர தொடர்பையும், அவை ஒன்றுடனொன்று இடைத் தாக்கம் புரியும் விதத்தையும் விளங்கிக்கொள்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களும் குறிக்கொள்களும்

முன்னைய பாடத்தில் நாம் கல்வி நோக்கங்கள், கல்விக் குறிக்கோள்கள், என்பன பற்றி விரிவாகக் கவனித்தோம். அதற்கேற்ப, நோக்கங்கள் என்பவை, மிக விரிவானதும் நீண்டகால நோக்கில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவையுமான இலக்குகளாகும் என நாம் தீர்மானித்தோம். கல்வியின் ஒரு நோக்கம் நற்பிரசைகளை உருவாக்குவதாகும். நோக்கங்களை எய்துவதற்காகக் குறுகிய காலத்துள் நிறைவு செய்துகொள்ளக்கூடிய சிறப்பான இலக்குகள் தயாரிப்படுத்தப்பட்டுள்ளன. இச்சிறப்பான இலக்குகளை சிறப்பு நோக்கங்கள் எனக் குறிப்பிடலாம்.

நற்பிரசைகளை உருவாக்குதல் கல்வியின் ஒரு நோக்கமாகும். அந்நோக்கத்தை அடைவதற்காகப் பல குறுகிய குறிக்கோள்களை நிறைவுசெய்து கொள்ள வேண்டும். இக்குறிக்கோள்களை மீண்டும் மிகச்சிறுசிறு பகுதிகளாக வகுக்கலாம். இந்நோக்கங்களால் நடத்தையில் சிறு சிறு மாற்றங்களை ஏற்படுத்தலாம். இவ்வாறான குறிக்கோள்களின் ஊடாக நோக்கங்களை அடையலாம்.

"தனியாளின் முழு ஆளுமை விருத்திக்கு வேண்டிய அறிவு, திறன்கள், மனப் பாங்குகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுத்தல் கல்வியின் மற்றுமொரு நோக்கங்களாகும்.

**செயற்பாடு 2**

சமூகக் கல்விப் பாடத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் இலக்குகள் 'நோக்கம்' வகையைச் சேர்ந்தவையா அல்லது 'குறிக்கோள்' வகையைச் சேர்ந்தவையா என வேறுபடுத்திக் காட்டுக.

1. நாட்டின் இயற்கை வளங்களை இனங்காணல். (நோக்கம்/ குறிக் கோள்)

2. நாட்டின் வளங்களைப் பயன்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப முறைகளைப் பிரயோகித்தல். (நோக்கம்/ குறிக்கோள்)

3. பாடசாலை அமைந்துள்ள ஊரில் காணப்படும் வளங்களை வேறுபிரித்துக் காட்டும் திறனைப் பெறல். (நோக்கம்/ குறிக்கோள்)

4. அவ்வளங்களிலிருந்து பயன்பெறும் விதத்தை ஆய்ந்தறிதல். (நோக்கம்/ குறிக்கோள்)

இச்சிறு பயிற்சியின் ஊடாக நீங்கள் நோக்கங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் இடையிலான தொடர்புகளையும் வேறுபாடுகளையும் விளங்கியிருப்பீர்கள். மேற்குறிப்பிட்டவாறு, ஒவ்வொரு விடயத்துக்கும் ஒவ்வொரு அலகுக்கும் ஒவ்வொரு வேளைப் பாடத்துக்கும் பொருத்தமான நோக்கங்களையும் சிறப்பு குறிக்கோள்களையும் முன்கூட்டியே இனங்கண்டு கொள்ளல் வேண்டும். பாடவிதானம் தயாரிக்கையில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய நோக்கங்களைத் தீர்மானிக்கையில், வெவ்வேறு பாடங்களிலிருந்து, பயிற்சிகளையும், வழிகாட் டலையும் ஒத்தாசைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் தத்துவம், சமூகவியல், உளவியல் ஆகிய விடயங்களே முக்கியமானவையாகும். கல்வியின் ஊடாகப் பிள்ளைகளுக்கு எதனைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். கல்வியின் ஊடாக எந் நோக்கங்களை எய்த முடியும்? சமநிலையான கல்வி என்பது யாது? சமநிலையாக கல்வியைப் புகட்டுவதன் மூலம் முழு ஆளுமை வளர்ச்சியைக் கொண்ட பிள்ளைகளை எவ்வாறு ஆக்கிக் கொள்ளலாம்? என்பன போன்ற வினாக்களை முதலில் எழுப்பி அவற்றுக்குரிய விடைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறே அவ்வச் சமூகங்களில் பிள்ளைகளுக்கு எவ்வெவ் விடயங்களைக் கற்பித்தல் வேண்டும்? எந்த அளவுக்கு எவர் கற்பித்தல் வேண்டும்? போன்ற பல்வேறு வினாக்களுக்குரிய விடைகளைச் சமூகவியலின் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம். இந்த உத்தேச குறிக்கோள்களையும் பாடவிடயங்களையும் எவ்வாறாக, எந்த அளவுக்கு ஒவ்வொரு தனியாளுக்கும் கற்பிக்க முடியும் எனத் தீர்மானிப்பது உளவியலாளர்களால் மேற்கொள்ளப்படவேண்டிய கருமமாகும். மேற்குறிப்பிட்ட மூன்று பாடங்களதும் வழிகாட்டலின் ஊடாக சமநிலையான பாடவிதானமொன்றினைத் தயாரித்துக் கொள்ளலாம்.

அவ்வச் சமூகத்துக்குப் பொருத்தமானவாறு பாடவிதானத்தைத் தயாரப்படுத்துதல் வேண்டும் என்பது இதிலிருந்து தெரிகின்றது.- சமூகவியல் பங்களிப்பு. தத்துவார்த்த ஆய்வு என்பவற்றின் மூலம் அவ்வந்நாட்டுக்கு சமூகத்துக்குப் பொருத்தமான கல்வி நோக்கங்களையும் பாட உள்ளடக்கத்தையும் கற்பித்தல் முறைகளையும் தீர்மானித்தல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு சிறப்பாக்கப்பட்ட இலக்குகளை எய்த முனையும்போது தனியாளை எவ்வாறாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்? அப்போது எவ்வெப் பகுதிகளில்- துறைகளில் கவனஞ் செலுத்துதல் வேண்டும் என்னும் வினாக்களும் தோன்றலாம்.

பாடவிதானத்தைத் தயாரிக்கையில் கவனிக்க வேண்டிய விடயங்கள்.

1. பாடவிதானம் யாருக்காகத் தயாரிக்கப்படுகின்றது? இங்கு பிள்ளையின் வயது மட்டம், விவேக மட்டம், தேவைகள், ஆர்வங்கள் போன்றவற்றில் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

2. சமூகத் தேவைகள்:
   நாட்டின் தேவைகள், சமூகத் தேவைகள், பொருளாதார சமூக அபிவிருத்தி போன்றவற்றில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

3. அமுற்படுத்துகையில் தேவைப்படும் வளங்கள்:
   தனியாள்கள், உபகரணங்கள், சேவைகள், பொருள்கள் போன்றன.

4. தயார்ப்படுத்துபவர் யார்?
   பொருத்தப்பாடுடைய நிபுணத்துவச் சேவைகள், மூலவளத் தனியாள்கள் ஆகியோர் பற்றிக் கவனஞ் செலுத்துதல்.

5. செலவு.

6. பிரதிபலன்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடவிதானத்தின் மூலம், நாடும் சமூகமும் தனியாளும் பெறும் பிரதிபலன்கள் பற்றியும் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

இவ்வடிப்படையில் பாடவிதானமொன்றினைத் தயாரிக்கையில், புளூம் அவர்களின் நோக்கங்களின் பகுப்பாய்வைப் பயன்படுத்துவதன்மூலம் எதிர் பார்க்கும் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் எய்தக்கூடியதாக இருக்கும்.

அடுத்ததாக நாம் புளூம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நோக்கங்களின் பாகுபாட்டைக் கவனிப்போம். எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை அடைவதற் காக, முழு ஆளுமை வளர்ச்சியின் ஊடாக பெற்றுக்கொடுக்கப்பட வேண்டி யது யாது? எனும் வினாவுக்கான தெளிவான வழிகாட்டலை, 'பெஞ்ஜமின் எஸ் புளூம்' அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நோக்கப் பகுப்பாய்வின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

எந்நோக்கத்தை இலக்காகக் கொண்டபோதிலும், அந்நோக்கத்தை அடைவதற்காக,

1. அறிதல் ஆட்சி (அறிவு)
2. மனவெழுச்சி ஆட்சி (மனப்பாங்குகள்)
3. உள இயக்கப் ஆட்சி (திறன்கள்)

ஆகியவற்றை வளர்க்கும் குறிக்கோள்களை நிறைவு செய்து கொள்ளல்வேண்டும். பாடவிதானத் தயாரிக்கையில், புளூம் அவர்களின் பகுப்பாய்வில் இடம் பெற்றுள்ள மேற்படி மூன்று புலங்களையும் கவனத்திற் கொள்வதன் மூலம் சமநிலையான பாடவிதானத்தைத் தயாரித்துக் கொள்வதற்கான வழிகாட்டல் கிடைக்கப்பெறும். அத்தோடு, முழுமையான கல்வியைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் முழுமையான ஆளுமையைக் கட்டியெழுப்பலாம்.

பாடசாலைப் பாடவிதானத்தைத் தயார்ப்படுத்த முன்னர், அதற்குரிய நோக்கங்கள்,குறிக்கோள்கள் யாவை என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. அவ்வாறாக நோக்கங்களையும் குறிக்கோள்களையும் விளங்கி, வேறுபடுத்திக் கொண்டதன் பின்னர், அவற்றை எய்தலாம். தொடர்மதிப்பீடு, பரீட்சை முறை ஆகியவற்றின் மூலம் பாடவிதா னத்தின் நோக்கங்கள் எய்தப் பெற்றுள்ளனவா என்பதை அறியலாம். எனவே, பாடவிதானத்தை வெற்றிகரமாகத் தயாரிப்பதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும், அதன் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் தெளிவானதாக்கிக் கொள்ளல் மிக முக்கியமானதாகும்.

பாடத்திட்டத்தின் துணையுடன் கல்வியின் ஊடாக எதனைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்? முன்னைய பாடமொன்றில் நாம் கலந்துரையாடியதற்கு இயைய இதற்குப் பல்வேறு விடைகளை அளிக்கலாம். "கல்வியின் மூலம் அறிவைப் பெற்றுக் கொடுக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்" என்பது அவ்விடைகளுள் ஒன்றாகும். எதற்காக அறிவு? என்பது மற்றுமொரு வினாவாகும். பரீட்சைக்குத் தேவையான அறிவு என்பது ஒரு விடையாக அமையலாம். இது கல்வியின் ஒரு சிறு நோக்கம் மட்டுமேயாகும். கல்வியின் ஒரே ஒரு நோக்கம், பரீட்சையை இலக்காகக் கொண்டு அறிவு புகட்டுவதல்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் கல்வியின் மூலம் பரீட்சைக்கும் யாதேனும் தொழிலுக்கும் தேவையான அறிவைப் பெற்றுக்கொடுப்பதோடு, குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை, ஓய்வு, பொழுதுபோக்கு, கலாசார வாழ்க்கை போன்றவற்றுக்குத் தேவையான அறிவையும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அறிதல் ஆட்சியில் முக்கியமானதாக அமையும் பல்வேறு அம்சங்கள் உள்ளன என்பது இதிலிருந்து தெளிவாகும் மற்றுமொரு விடயமாகும். இந்நான்கு புலங்களுக்காகவும் அறிவை மாத்திரம் பெற்றுக்கொடுத்தல் போதியதாகாது. இதற்காக, தேவையான மனப்பாங்குகளையும், திறன்களையும் வளர்க்க வேண்டியது அவசியமாகும்.

மேலே கலந்துரையாடப்பட்ட விடயங்களைப் பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம். இவ்வட்டவணையைத் துணையாகக் கொண்டு, பாடவிதானத்தில் அடங்க வேண்டிய விடயங்களைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

| பாடவிதான விடயங்கள் | அறிவு | மனப்பாங்குகள் | திறன்கள் |
|---|---|---|---|
| பரீட்சையும் தொழிலும் | 1 | 2 | 3 |
| குடும்பமும் சமூகமும் | 4. | 5 | 6 |
| ஓய்வும் பொழுதுபோக்கும் | 7 | 8 | 9 |
| கலாசார வாழ்க்கை | 10 | 11 | 12 |

யாதேனும் பாடவிதானத்தில் அடங்கியுள்ள அறிவையும் மனப்பாங்குகளையும், திறன்களையும் தெரிவுசெய்து வேறாக்கி, இவ்வட்டவணையின் உரிய கூடுகளுள் அடக்கலாம். இக்கூடுகள் அனைத்தும் நிரம்புவதாக இருப்பின் அப்பாடவிதானம் முழுமையான சமநிலையான ஒரு பாடவிதானமாகக் கொள்ளப்படும். இவ்வட்டவணையின் சில கூடுகள் மாத்திரம் நிரம்புகின்றதாக இருப்பின் அது முழுமையான பாடவிதானமாகாது.

இவ்வட்டவணையை மேலும் விளங்கிக் கொள்வதற்காக உதாரணமொன்றினைக் கவனிப்போம். "உணவும் போசணையும்" என்பது எமக்கு மிகப் பயனுடைய முக்கியமானதொரு பாடப்பகுதியாகும். அப்பாடப்பகுதியில், அறிவுப் புலத்தின் கீழ், உணவு வகைகளில் அடங்கியுள்ள பல்வேறு போசணைகள், உடலுக்குத் தேவையான பல்வேறு போசணைகள் போன்றவை தொடர்பான அறிவு அடங்கியுள்ளது. இவ்வறிவு ஆட்சி மாத்திரம் இடம்பெற்றிருப்பது போதியதாகாது.

உணவு வகைகள் தொடர்பாக நாம் கொண்டிருக்கும் மரபுரீதியான ஆதாரமற்ற நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் களைந்து விஞ்ஞான பூர்வ அடிப்படையிலான பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளல் மனப்பாங்கு வளர்ச்சிப் புலத்தைச் சேர்ந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வறிவு, மனப்பாங்குகள் ஆகியவற்றுக்கு மேலதிகமாக, போசணைப் பெறுமானத்துடன் கூட உணவு வகைகளைச் சந்தையிலிருந்து தெரிவுசெய்து கொள்ளல், அவ்வுணவுப் பொருள்களைப் போசணைப் பெறுமானம் குன்றாதவாறு சமைத்தல் போன்ற திறன்களையும் பயிற்றுவித்தல் அவசியமாகும். மேற்படி விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக, பின்வரும் வினாக்களுக்கு அமையச் சிந்தித்து விடை எழுதுங்கள்.

* உணவும், போசணையும் தொடர்பான மேற்படி அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் என்பன அட்டவணையின் எவ்வெப்பகுதிகளில் இடம்பெறல் வேண்டும். (7,8,9)

* தமது வருமானத்துக்கு அமைவானவாறு, போசாக்குள்ள வேளையுணவைத் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுகிடைக்கப்பெறுகின்ற அநுபவங்கள் அட்டவணையின் எவ்வெக் கூடுகளுள் அடங்கவேண்டும்? (4, 5, 6)

* "சிகிரியாச் சுவரோவியங்களைத் தேசியச் சொத்தாகக் கருதிப் பாதுகாத்தல் வேண்டும்" இக்கருத்து அட்டவணையின் எப்பகுதியில் அடங்குதல் வேண்டும். (மனப்பாங்குகள்)

மேலே கலந்துரையாடியவாறாகவும் விடையளித்தவாறாகவும், பாடவிதானத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் ஏதேனும் அறிவு, மனப்பாங்குகள், திறன்களை அவ்வட்டவணையில் புகுத்தலாம். அவ்வட்டவணையின் ஒவ்வொரு பகுதியும் நிரம்பும் வண்ணம் அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் என்பன உள்ளடக்கப்படின் அப்பாடவிதானம் பூரணமானதொன்றாகும் என்பது தெளிவாகின்றது.

கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும நிலையானவையன்று. இயக்கப்பாடான சமூகத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் மாற்றமடையக் கூடியனவாகும். நாட்டுக்கும், பொதுமக்களது ஏற்றுக்கொள்கைக்கும் இசைய கல்வி நோக்கங்களும் குறிக்கோள்களும் வேறுபடுகின்றன. எனவே, இதற்கு அமைய, பாடவிதானத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் காலத்துக்குக் காலம் மாற்றமடைய வேண்டும் என்பதை நாம் மனதிலிருத்திக் கொள்ளல் வேண்டும்.

புளூம் சமர்ப்பித்த நோக்கப் பகுப்பாய்வுக்கு அமைய அறிதல்ஆட்சி, மனவெழுச்சி ஆட்சி, உளவியக்கப் புலம் ஆகிய அம்சங்களில் வெவ்வேறு பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றை விருத்தி செய்துகொள்வதற்கு ஏற்றவாறு பாடவிடயங்களையும், கற்றல் அனுபவங்களையும், கற்பித்தல் முறைகளையும் திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும். இதற்கு ஏற்ப, பாடவிதானமொன்றில், இடம்பெற வேண்டிய இரண்டாவது மூலாதாரமாகிய பாடவிடயங்கள் கற்றல் அனுபவங்கள் ஆகியவற்றைக் கவனிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடவிடயங்களும் கற்றல் அனுபவங்களும்

பாடவிதானந் தயாரிப்போர் முன்கூறியவாறாக, முதலில் நோக்கங்களையும் குறிக்கோள்களும் தீர்மானித்ததன் பின்னர், எவ்வெப் பாடவிடயங்களையும், கற்றல் அனுபவங்களையும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதைக் கருத்திற் கொள்ளல் வேண்டும். பாடவிடயங்களைச் சேகரித்தல், பாடவிடயங்களைத் தெரிவு செய்தல், அவற்றை ஒழுங்காகக் கோவைப்படுத்தல், ஒழுங்குபடுத்துதல் என்பன மிகக் கவனமாக மேற்கொள்ளப்பட்ட வேண்டியதாகும். இவ்வனைத்துக் கருமங்களின் போதும் நீங்கள் கற்பிக்கும் பிள்ளைகளின் பட்டத்தை நிலையை விளங்கிக் கொள்ளல் வேண்டும். பாட விடயங்களைப் போன்றே மாணவன், சுற்றாடலுடன் தொடர்புற்றுப் பெற்றுக் கொள்ளும் அனுபவங்களும் கற்றலின் போது பெரிதும் துணையாக அமைகின்றது. இக்கற்றல் அனுபவங்களைப் பாடவிதானத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய விதத்தையும், பாடவிதானத் தயாரிப்போர் கவனத்திற் கொள்ளல் வேண்டும். மாணவன் வெவ்வேறு ஊடகங்களின் ஊடாகப் பெறும் அனுபவங்களையும், நற்கற்றற் பேறுகளையும் கோவைப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு பாடவிதானத்தில் காணப்படல் வேண்டும்.

## கற்பித்தல் முறைகள்

பாடவிதானத்தைத் திட்டமிடும் போது நோக்கங்கள், குறிக்கோள்கள் யாவை என்பது பற்றியும் கற்பிக்க வேண்டிய விடயங்கள், கற்றல் அனுபவங்கள் யாவை என்பது பற்றியும் தீர்மானித்ததன் பின்னர், எவ்வாறாகக் கற்பித்தல் வேண்டும், எம்முறைகளைக் கையளல் வேண்டும் என்பனவற்றைத் தீர்மானித்தல் வேண்டும். இங்கு மாணவன் தொடர்பாக உளவியல் ரீதியில் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும். நோக்கங்களையும், குறிக்கோள்களையும் திர்மானிக்கும்போதும், பாடவிடயங்களையும் கற்றல் அனுபவங்களையும் தெரிவு செய்யும்போதும், கற்பித்தல் முறைகளைத் தெரிவு செய்யும்போதும் தத்துவம், சமூகவியல், உளவியல் ஆகிய பாடங்கள் பங்களிப்புச் செய்கின்றன. அப்பாடங்களிலிருந்து உண்மையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியர் கற்பிக்கும் முறையானது பாடங்களுக்கு அமைய வேறுபடுகின்றது. பாட அலகுக்கு மிகப் பொருத்தமான ஏற்ற முறையைத் தெரிவு செய்துகொள்வதற்கான வாய்ப்பும் பாடவிதானத்தில் அமையப் பெறல் வேண்டும்.

உரிய பாட விடயங்களை ஆசிரியர்-மாணவர் தொடர்புகள் பேணப்படும் வண்ணம் மிகவும் பொருத்தமான விதத்தில் மாணவருக்கு எவ்வாறு பெற்றுக் கொடுக்கலாம்? என்பது தொடர்பாகக் கற்பித்தல் முறைகளின் ஊடாகவே கவனஞ் செலுத்துதல் வேண்டும். முதலிரு படிகளையும் நிறைவுசெய்ததன் பின்னரே பொருத்தமான கற்பித்தல் முறைகள், வகுப்பு ஒழுங்கமைப்பு முறைகள் ஆகியவற்றைத் தீர்மானித்தல் வேண்டும்.

## மதிப்பீடு

பாடவிதானத்தைத் திட்டமிடும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய மற்றைய மூலாதாரம் மதிப்பீடாகும். பாடவிதானத்தை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்கையில் இம்மதிப்பீட்டுக் கருமத்தொடர் மிக முக்கியமானதாக அமையும். ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களும் குறிக்கோள்களும் எந்த அளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தப்பட்டுள்ளன என்பதை மதிப்பீட்டின் மூலமே தீர்மானிக்கலாம். மதிப்பீட்டுக்காக முழுமையான மதிப்பீட்டு முறைமையொன்றினைக் கையாளக் வேண்டும். அதற்காக எழுத்துப் பரீட்சைகள், நேர்முகக் கலந்துரையாடல்கள், அன்றாட அறிக்கைகள், தொடர்மதிப்பீடு, ஒப்படைகள் போன்றவற்றைத் துணையாகக் கொள்ளலாம். அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் ஆகிய மூன்று பிரிவுகளையும் சேர்ந்த நோக்கங்கள் பாடவிதானத்தின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பது முழுமையான மதிப்பீட்டுத் தொகுதியின் மூலம் துணியப்படல் வேண்டும்.

இம்மதிப்பீட்டின் ஊடாகப் பாடவிதானத்தின் பெறுமானம், அதன் செயற்படுத்தப்படக்கூடிய தன்மை, குறைபாடுகள், பெறுபேறுகள், வரையறைகள் போன்ற அம்சங்கள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்தப்படும். பாடவிதானமொன்றினைக் கற்பதன் மூலம் அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் வெற்றிகரமானவையா? இல்லையா? என்பதை அளந்தறிதல் மதிப்பீடு பெரிதும் துணையாக அமைகின்றது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. இவ்வாறான இடையீடற்ற மதிப்பீடு மூலமும் தயாரிப்படுத்திக் கொண்ட நோக்கங்களை எந்த அளவுக்கு எய்த முடியும், அவை எந்த அளவுக்கு எய்தப் பட்டன, போன்றவற்றை அறிந்து கொள்ள முடியும்.

### செயற்பாடு 3

உங்களது பாடசாலையின் ஆரம்பப் பிரிவின் அல்லது இடைநிலைப் பிரிவின் ஒரு தரத்துக்குரிய பாடத்திட்டம் பற்றி ஆய்வு செய்து, அதில் மேலே குறிப்பிடப்பட்ட சிறப்பியல்புகள் காணப்படுகின்றனவா இல்லையா என ஆய்ந்தறிக.

## 4.5 பாடவிதான அபிவிருத்தி மாதிரிகள்

மேற்குறிப்பிட்ட மூலாதாரங்கள் நான்கினையும் உள்ளடக்குவதோடு அவற்றைவிட விசேடமான மேலும் சில அம்சங்களையும் உள்ளடக்கியதான பாடவிதான மாதிரிகளைப் பாடவிதான நிபுணர்கள் தயாரிப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு நாட்டினதும் கல்வியியலாளர்கள் தத்தமது நாட்டின் பாடவிதானத்தைத் தயாரிக்கையில் இம்மாதிரியை பின்பற்றுகின்றனர். மாதிரி எனும் சொல்லின் பொருள், யாதேனும் வழிமுறையை உள்ளடக்கிய விஞ்ஞானபூர்வச் செயற்றொடரையே குறிக்கின்றது. முழுமையாக பாடவிதானக் கருமத்தொடர் அதாவது முறைமையை உள்ளடக்கியதாகவே இவ்வாறான மாதிரிகள் காட்டியமைக்கப்பட்டுள்ளன. பாடவிதானம் திட்டமிடுகையில் பின்பற்றக்கூடிய மிகப் பொருத்தமான முறை, யாதேனும் மாதிரிக்கு அமைய அதனைத் திட்டமிடுவதே ஆகும் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

இவ்வாறான மாதிரிகளைச் சமர்ப்பித்தோருள் ரல்ப் ரைலர், டீ.கே.வீலர், டெனிஸ்லோரன், ஹலிவர், கர் (Kherr) ஆகியோர் மிகப் பிரபல்யமானோராவர். இவ்வாறான மாதிரிகளைத் திட்டமிடுவோரின் கோலங்களைப் பின்பற்றுவதன் மூலம் விஞ்ஞானபூர்வமான பாடவிதானமொன்றினைத் தயாரிப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறான மாதிரியாக இருப்பினும், அதில் நாம் மேலே கலந்துரையாடிய, நான்கு மூலாதாரங்களான, நோக்கங்கள், குறிக்கோள்கள்,



12 Form

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடவிடய உள்ளடக்கம், கற்றல் அனுபவங்கள்; கற்பித்தல் முறைகள்; மதிப்பீடு என்பவை அடங்கியிருத்தல் வேண்டும். அவ்வாறான சில மாதிரிகள் சுருக்கமாக இங்கு தரப்படுகின்றன.


*ரல்ஃப் ரைலரின் மாதிரி*

ரல்ஃப்ரைலர் (1949–அ.ஐ.கு.) சமர்ப்பித்த பாடவிதான மாதிரி, நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தயார்ப்படுத்தப்பட்ட பாடவிதான மாதிரியாகக் கருதப்படுகின்றது. நோக்கங்களையே அவர் மாதிரியின் பிதா எனக் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிட்டுள்ள பாடவிதான மாதிரி நான்கு படிகளைக் கொண்டதாகும். இதன் அடிப்படையாகக் கருதப்படும் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் தேடியறிதலுடனே இம்மாதிரி ஆரம்பமாகின்றது. அந்நோக்கங்களையும், குறிக்கோள்களையும், தீர்மானிக்கையில் ஐந்து மூலாதாரங்களைக் கருத்திற் கொள்ளல் வேண்டும் என அவர் குறிப்பிடுகின்றார். அம்மூலாதாரங்கள் வருமாறு:

1. கற்பவர்
2. சமகால வாழ்க்கை
3. பாடம் தொடர்பான நிபுணர்கள்
4. தத்துவம்
5. உளவியல்

அவரது மாாதிரி வருமாறு:

இந்த ஐந்து மூலாதாரங்களுடன், நீங்கள் முன்பு கற்ற 6 அம்சங்களுடனும் கூடிய மாதிரியை ஒப்பிடுங்கள்.




நோக்கங்கள், குறிக்கோள்கள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதன் மூலம் மாதிரியை ஆரம்பித்தல் மிக முக்கியமானதொரு கருத்தாகும். இதனூடாகப் பாடவிடயங்களைத் தெரிவு செய்து கொள்ளவும், கற்பித்தல் முறைகளை ஒழுங்கமைத்துக்கொள்ளவும் வழிகிடைக்கின்றது.

இப்படவிதான மாதிரியின் இறுதிப்படி மதிப்பீடாகும். இவ்வாறாக இறுதியில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு தவிர்ந்தவிடத்து, கருமத்தொடரின் வெவ்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிகளின் போது மதிப்பீடோ, சீர்திருத்தங்களோ இம்மாதிரியில் இடம்பெற வில்லை. இது மாதிரியின் ஒரு குறைபாடாகும். அடையவேண்டிய இடத்தை அடைந்துள்ளோமா என அறிவதற்காகவே மதிப்பீடு அவசியமாகின்றது. அடைய வேண்டிய இடத்தை அடையாவிடின் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை யாது என்பது பற்றியும் குறிப்பிடப்படவில்லை.

இம்மாதிரி தொடர்பாக மேலும் பல குறைபாடுகள் எடுத்துக்காட்டப்பட்டதன் பின்னர், 1967இல் டீ.கே. வீலர் (D.K. Weeler) என்பார் பிறிதொரு மாதிரியைச் சமர்ப்பித்துள்ளார்.

டீ.கே.வீலரின் மாதிரி

"கல்வி என்பது நடத்தைகளை மாற்றுவதாகும்" எனும் கருத்தை அவர் கொண்டிருந்தார். இதற்கு அமைய அனுபவங்களைத் திட்டமிடுவதில் அவர் கவனஞ் செலுத்தினார்.

வீலரின் மாதிரி, ரயிலரின் மாதிரியைப் போன்ற நேர்கோட்டு மாதிரியல்ல. அது வட்டமாதிரியாகும். அம்மாதிரியில் மதிப்பீடானது செயற்றொடரின் இறுதியில் இடம்பெறுவதில்லை. பாடவிதானக் கருமத்தொடரின் ஒவ்வொரு படியின்போதும் மதிப்பீடு இடம்பெற வேண்டும் என்பது இம்மாதிரியில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறாக மதிப்பிடுவதன் மூலம் கிடைக்கும் துலங்கல்களுக்கு அமைய அவ்வப்படிகள் சீர்திருத்தப்படும். இதற்கு அமைய, பாடவிதான கருமத்தொடர் இடையறாது மாற்றமடைகின்ற தொடர்ச்சியான (இயக்கச்) செயற்பாடாகும் என்பது வீலரின் மாதிரியின் மூலம் தெளிவு படுத்தப்படுகின்றது.

வீலர் தமது மாதிரியின் மூலம் கற்றல் அனுபவங்கள், பாடவிடயங்கள் ஆகிய இரு பிரிவுகளையும் வெவ்வேறாகக் காட்டியுள்ளார்.


இனி நீங்கள் ரயிலரினதும், வீலரினதும் மாதிரிகளைக் கவனத்திற்கொண்டு அவற்றுள் எம்மாதிரி இலங்கைப் பாடவிதானத்தில் பங்களிப்புச் செய்துள்ளது என ஆய்ந்தறிக.

பாடவிடயங்களைத் தெரிவுசெய்து கொள்வதற்கே வீலர் முதலிடம் வழங்கியுள்ளார். கற்றல் அனுபவங்கள் பாடவிடயங்களுக்கோ, நூல்களுக்கோ மாத்திரம் வரையறைப்பட்டதல்ல. கல்வியின் மூலம் எய்தவேண்டுமென நாம் எதிர்பார்க்கும் பரந்த விரிவான நோக்கங்களை எய்துவதற்குத் தேவையான சகல அம்சங்களும் நூல்களின் மூலமும் அவற்றிற்குப் புறம்பாகவும் பெற்றுக் கொள்ளக்கூடிய சகல அனுவங்களும் கூட்டாக கற்றல் அநுபவங்கள் என அழைக்கப்படுகின்றன.
(இதன் முக்கியத்துவம் தொடர்பாக மீண்டும் சிந்தித்துப் பாருங்கள்)

வெவ்வேறு பாடங்களின் மூலமும், நூல்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளும் அறிவு, மேற்படி அனுபவங்களைப் போசிக்க உதவுகின்றது. எனவே கற்றல் அனுபவங்களைத் தெரிவுசெய்து கொள்ளலானது, பாடவிடயங்களைத் தெரிவுசெய்ய முன்னர் மேற்கொள்ள வேண்டிய ஒரு படிமுறையாகும் என வீலரின் மாதிரியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(Wheeler)

மேற்குறிப்பிட்டவாறாக, நோக்கங்களையும், குறிக்கோள்களையும் தீர்மானித்தல், கற்றல் அனுபவங்களைத் தெரிவுசெய்தல், பாடவிடயங்களைத் தெரிவுசெய்தல், ஆகிய படிமுறைகளின் பின்னர், இடம்பெறும் படி **கற்றல் அனுபவங்களையும் பாடவிடயங்களையும் ஒழுங்கமைத்தலும் ஒன்றிணைத்தலும் ஆகும்.** பாடவிதானத்தை ஒழுங்கமைக்கையில் இவ்வனைத்துப் படிமுறைகளும் முக்கியமானவையாக அமைகின்றன. இம்மாதிரியில் இறுதிப்படியாகவே மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. பாடவிதானம் பூரணமாக நடைமுறைப் படுத்தப்பட்ட பின்னர் கண்டறியப்படும் குறைபாடுகளுக்கு அமைய அதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். இவ்வாறான பரந்த கருமத்தொடரொன்றின் போது ஈற்றில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு போதியதாக அமைய மாட்டாது.

மதிப்பீட்டின் மூலம் கிடைக்கப்பெறும் துலங்கல்களுக்கு அமைய, எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களும் குறிக்கோள்களும் எய்தப்படவில்லை என அறியப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், பாடவிதானம் சீர்திருத்தப்பட வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. பாடவிதான கருமத்தொடரொன்றினை நீண்ட காலத்துக்கு மாறாது வைத்திருத்தல் இயலாததொன்றாகும் என்பது இப்பாடவிதான மாதிரியின் மூலமும் தெளிவாகின்றது. எனினும் பாடவிதானமானது கணப்பொழுதில் மாற்றமடைவதொன்றல்ல. பொதுவாக 3–5 வருடகாலம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர், பாடவிதான மாற்றம் மேற்கொள்ளப்படுவதுண்டு.

டெனிஸ் லோட்டனின் மாதிரி

**"பாடவிதானம் என்பது சமூகத்தின் கலாசாரத்தினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பகுதியாகும்".** என்பது டெனிஸ் லோட்டன் வழங்கியுள்ள வரைவிலக் கணமாகும். இப்பாடவிதானம் "கலாசாரம்" எனும் சொல்லையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவர் தனது பாடவிதான மாதிரியை பாய்ச்சல் வரைபடமாகவே சமர்ப்பித்துள்ளார். பாடவிதானக் கருமத்தொடரின் வெவ்வேறு படிகளையும் அவற்றின்பால் பங்களிப்புச் செய்யும் காரணிகளையும், செயற்பாட்டின் ஒழுங்குமுறையாக லோட்டன் தனது மாதிரியில் சமர்ப்பித்துள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோட்டன் குறிப்பிடுவதற்கு அமைய, கற்றலுக்கான பகுதிகளைத் தெரிவுசெய்து கொள்ளல், ஒழுங்கமைத்துக்கொள்ளல் என்பவற்றின் ஊடாகவே பாடவிதானம் செயற்படுகின்றது. இத்தேர்வுக்கான மூன்று காரணிகளை லோட்டன் எடுத்துக் காட்டுகின்றார்.

1. தத்துவார்த்தக் காரணிகள்.
2. சமூக விஞ்ஞானக் காரணிகள்.
3. உளவியல் காரணிகள் என்பனவே அவையாகும்.

கலாசார மரபின் மூலம் பாடவிடயங்களைத் தெரிவுசெய்யும்போது இம் மூன்று காரணிகளும் முக்கியமானவையாக அமைகின்றன.

எவ்வாறானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப நாம் முயற்சிக்கின்றோம்? இளஞ் சமுதாயத்தினருக்கு வழங்க வேண்டிய விழுமியங்கள் யாவை? போன்ற வினாக்களுக்கு விடைகாண்பதற்கும், நோக்கங்களின் பயன்படுதன்மை, அறிவு ஆகியவற்றின் தன்மையைத் தீர்மானிப்பதற்கும், தத்துவார்த்தப் பிரிவின் மூலம் ஒத்தாசை கிடைக்கப்பெறுகின்றது. சமூக மாற்றம், அரசியல் மாற்றம், தொழினுட்ப மாற்றம் ஆகியன பற்றிக் கவனஞ் செலுத்தும் பிரிவு சமூகவியற் பிரிவாகும். பிள்ளை மனம் வளர்ச்சியடையும் விதம், கற்றல் கற்பித்தல் தொடர்பான தத்துவங்கள் போன்றவற்றைத் தெரிவுசெய்யும் காரணி உளவியற் பிரிவாகும். இம்மூன்று பிரிவுகளதும் அடிப்படையிலான தெரிவுக்காரணிகளால் கற்றலுக்கு வேண்டிய பாடப்பகுதிகள் கலாசார மரபினாலேயே தெரிவு செய்யப்படுகின்றன.

இப்பாடப் பகுதிகளைக் கற்பித்தலுக்காகத் தயார்ப்படுத்தப்படும் போது பாடசாலை மட்டத்தில் எழும் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்துதல் வேண்டும். எந்த அளவு சிறப்பாகத் திட்டமிடப்பட்ட பாடவிதானமாக இருந்த போதிலும், பாடசாலையில் நிலவும் நிலைமைகளுக்கு அமைய கற்பித்தல் கடினமானதாக அமையின் அதனால் எவ்வித பயனும் ஏற்படாது என்றே கூறவேண்டும். இன்றேல் சொற்பப்பயனே கிடைக்கப்பெறும்.

பாடசாலை மட்டத்தில் அத்தியாவசியமான மூன்று வளங்கள் பற்றிக் கவனஞ் செலுத்துவது அவசியமாகும்.

(1) மனித வளங்கள்.
(2) பௌதிக வளங்கள்
(3) நேரம் என்பனவே அவையாகும்.

இக்காரணிகளுக்கு அமையத் திட்டமிடப்பட்டுத் தயார்ப்படுத்தப்படும் பாட விதானம் அடுத்ததாக பாடசாலைத் தொகுதிக்கு அனுப்பப்படுகின்றது.

பாடவிதானக் கருமத்தொடர் ஒரு கோட்டுக் கருமத்தொடர் என்பது இதன் மூலமும் தெளிவாகின்றது. மதிப்பீட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான வாய்ப்புக்கள் இன்மையே இம்மாதிரியின் பிரதானமான குறைபாடாகும். அத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறலிவெல் (Halliwell), கர் (Kherr) ஆகியோரும் வேறு விதமான இரு பாடவிதான மாதிரிகளைச் சமர்ப்பித்துள்ளனர். எந்நாடாயினும், தமது நாட்டு பாடவிதான மாதிரியைத் திட்டமிடுகையில், இப்பாட விதானமாதிரிகளுள் ஏதேனுமொன்றினைப் பின்பற்ற வேண்டி ஏற்படுகின்றது.

செயற்பாடு 4

1. ரல்ஃப் ரயிலர், டீ.கே.வீலர், டெனிஸ் போடன் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாடவிதான மாதிரிகளைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆய்வு செய்க.

    1. பொது இயல்புகள்
    2. வேற்றுமைகள்
    3. விசேட தன்மைகள்
    4. குறைபாடுகள்
    5. இலங்கைப் பாடவிதானத்தில் ஏற்படுத்தும் தாக்கம்/ பங்களிப்பு.

## 4.6 பாடவிதானத்தில் அடங்கும் சமய கலாசார விடய உள்ளடக்கம்.

இதுவரையில் நாம் கலந்துரையாடிய பாடவிதான மாதிரிகளுக்கு அமைய, பாடவிதானமொன்றினைக் கட்டியெழுப்பும்போது, அடித்தளமாகவிளங்கும் கலாசார பாரம்பரியத்தில் சமய மூலாதாரங்களுக்கும் முக்கிய இடம் கிடைக்கப் பெறுகின்றது என்பது தெரிகின்றது. யாதேனுமொரு நாட்டின் பொதுமக்கள் உடமையாக்கிக் கொண்டுள்ள கலாசாரத்தைச் சந்ததி சந்ததியாக ஊடுகடத்தும் பொறுப்பு பாடசாலையையே சார்கின்றது. அவ்வாறாக ஊடுகடத்தும் போது அதற்குத் துணையாக அமையும் வாகனமாகத் தொழிற்படுவது பாடவிதானமாகும்.

பாடவிதான மாதிரியின் அடிப்படைப் படிமுறையாகிய, நோக்கங்களையும், குறிக்கோள்களையும் தீர்மானிக்கையில் மேற்படி சமய, கலாச்சாரப் பின்னணி பெரிதும் துணையாக அமைகின்றது. தத்துவார்த்த வழிகாட்டலானது, முழு அகிலத்தினதும்- பொதுக் கல்வியில் பங்களிப்புச் செய்வதோடு, அவ்வந் நாடுகளின் சமய, கலாசார மரபுகளுக்கேற்ப அந்நாட்டின் பாடவிதானத்தைத் திட்டமிடலிலும் தேசிய நோக்கங்களையும் குறிக்கோள்களையும் தீர்மானிப்பதிலும் பெருந்துணை புரிகின்றது. அவ்வவ் நாடுகளின் கலாச்சாரங்கள் வேறுபடுகின்றமையினாலேயே நாட்டுக்கு நாடு, நோக்கங்களும், குறிக்கோள்களும் வேறுபடும் அதேவேளை, பாடவிதானங்களிலும் வேறுபாடு ஏற்படுகின்றது.

அடிப்படை நோக்கங்களையும் குறிக்கோள்களையும் தீர்மானித்துக் கொண்டதன் பின்னர், பாடவிடயங்களைத் தெரிவு செய்கையிலும், சமய, கலாசார பாடவிடய உள்ளடக்கத்தின் பங்களிப்பு பாடவிதானத்துக்குக் கிடைக்கப் பெறுகின்றது. முழுமையான கல்வியையும் முழுமையான ஆளுமை வளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்காக "புளூம்" சமர்ப்பித்த கல்வி நோக்கங்களான, அறிதல்ஆட்சி, மனவெழுச்சி ஆட்சி உள-இயக்கஆட்சி ஆகிய மூன்று பிரிவுகளிலும் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்த உதவும். உணர்ச்சிப் புலத்தை விருத்தியடையச் செய்வதற்காக சமய, கலாசார விடய உள்ளடக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பெருமளவு ஒத்தாசை கிடைக்கப் பெறுகின்றது. கலாசாரக் காரணிகளும் சமயக் கற்பித்தல்களும் பாடவிடயப் பகுதிகளுடன் சேரும் போது, அறிவு வளர்ச்சியடையவும் மனப்பாங்குகளை மாற்றியமைக்கவும் அவை துணையாக அமைகின்றன. சமய, கலாசார பாடங்களைக் கற்பதன் மூலமும் அப்பாடங்களைக் கற்கும் நுட்பமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும் மனப்பாங்குப் புலத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தலாம். யாதேனும் பாடப்பகுதி, மனப்பாங்குப் புலத்தினை விருத்தி செய்ய உதவாவிடின் அது சமநிலையான-முழுமையான கல்வியாக அமையமாட்டாது. எனவே சமநிலையான-முழுமையான பாடவிதானமொன்றினைக் கட்டியெழுப்புகையில், மையப் (Core) பாடமாக, கலாச்சார மரபுகள், சமயப்பாடப் பகுதிகள் ஆகியன பாடவிதானத்தில் அடக்கப்படவேண்டியது அவசியமாகும்.

ஒவ்வொரு தனியாளையும் முழுமனிதனாக மாற்றுவதற்காக இம் மனப்பாங்குப் புலத்தை விருத்திசெய்ய வேண்டுமாதலால், சமய-கலாசாரப் பாடங்கள் அதற்குப் பெரும் துணையாக அமைய வேண்டும். எனவே பாடவிதானத்தினுள்ளேயே, சமய கலாசார மரபுகள் தொடர்பான பாடவிடயங்களை உள்ளடக்குவதும், பொருத்தமானவாறு அவற்றைத் தொடர்புபடுத்தும், சமநிலையான கல்வியைப் புகட்டுவதில் பெருமளவுக்குப் பங்களிப்புச் செய்யும்.

## 4.7 கல்வியும் வேலை அனுபவமும்

புளூமினது நோக்கப்பாகுபாட்டில் உள இயக்கப் புலத்தை விருத்தி செய்வது தொடர்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது. முழு ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான சமநிலையான பாடவிதானமொன்றினைக் கட்டியெழுப்பும்போது வேலை தொடர்பான அனுபவம் பெறப்பட்டிருக்க வேண்டியது அவசியமாகும். பாடவிதான மாதிரிகளிலும் பாடப்பகுதிகள்-கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. கற்பித்தல் கருமத்தொடரை ஒழுங்கமைக்கும் போது, அது வெறுமனே செயற்பாடற்ற மாணவர் குழுவினர் பெறும் பயனற்ற கல்வியாக அமையாது வேலையில் ஈடுபட்டபடி கற்கும் உயிர்ப்பான-தொழிற்பாடுடைய-செயற்படு கல்வியாகத் திட்டமிட்டு, கற்பித்தல் நுட்பமுறைகளைத் தீர்மானித்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது, பாடவிதானத் திட்டமிடுவோரினதும் கல்வியியலாளர்களதும் பிரேரணைகளாகும்.

இவ்வாறாக, நன்மனப்பான்மைகளைக் கட்டியெழுப்புதல், ஒவ்வொருவரும் செயலாற்றியபடி கற்றுக் கொள்ளக்கூடிய சுற்றாடலை அமைத்துக் கொடுத்தல் என்பவற்றை முக்கியமானதாகக் கொண்டு முக்கியமானவையாகவும் முழுமையான தனியாளாக, முழுமையான பிரசையாக, சமூகத்தில் காலடி எடுத்து வைக்க உதவக் கூடிய, சரியான கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமெனின், வேலை தொடர்பாக கல்வியையும் பாடவிதானத்தில் புகுத்த வேண்டியது அவசியமாகும்.

பெரும்பாலான வேளைகளில் தத்துவ ஞானியர்கள் கூட பாடவிதானந் திட்டமிடுவோருக்கு வழிகாட்டுகின்றனர். மாக்ஸ், காந்தி, டூயி, போன்ற கல்வித் தத்துவஞானியர்கள் பாடசாலைக் கல்வியானது, மனித வேலைக் கலாசாரத்துக்கு அமைய ஒழுங்கமைய வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர். மனிதன் முழுமையாக விருத்தியடையவும், முழுமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையை விருத்தி செய்யவும் எதிர்காலத்தில் தப்பிப் பிழைத்துவாழ்தலை (Survive) உறுதிப்படுத்திக் கொள்ளவும் துணையாக அமையக்கூடிய ஒரே ஒரு வழி, உழைப்புச் சக்தியை விருத்தி செய்துகொள்வதாகும் என மாக்ஸ் காட்டியுள்ளார். மனிதன் ஓர் உழைக்கும் - வேலை செய்யும் விலங்கு எனக் குறிப்பிட்டு, உழைப்பு, அதன் முக்கியத்துவம் என்பன பற்றிச் சிறப்பாக வலியுறுத்தியபடி கால்மாக்ஸ் சமர்ப்பித்த தத்துவார்த்த வழிகாட்டலானது பெரும்பாலான நாடுகளின் பாடவிதானந் திட்டமிடுவோருக்கும் கல்வியியலாளர்களுக்கும் புதுப்புது பாடவிதானங்களைக் கட்டியெழுப்ப வழிகாட்டியுள்ளது.

பின்வரும் பயிற்சிகளில் ஈடுபட்டு, நீங்கள் இதுவரையில் பெற்ற அறிவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

செயற்பாடு 5

1. பாடசாலைக் கல்விப் பாடத்தில் வேலைக் கலாசாரத்தின் முக்கியத் துவத்தை வலியுறுத்திய தத்துவஞானியர்களைக் குறிப்பிடுக.

## 4.8 வெவ்வேறு பாடவிதான அபிவிருத்தி முறைகள்

கல்வி வரலாற்றின் ஆரம்பந்தொட்டு இன்றுவரை பல்வேறு கல்வி நோக்கங்களை எய்தும் நோக்குடன் வெவ்வேறு பாடவிதானங்கள் தயாரிப்படுத்தப்பட்டுள்ளன. கல்விக் கருமத்தில் பல்வேறு பாடவிதானங்கள் தயாரிப்படுத்தப்பட்டுள்ளன. கல்விக் கருமத்தில் பல்வேறு பாடங்களின் மூலம் கிடைக்கப்பெறும், பயன்கள் பற்றிக் கவனஞ்செலுத்தி, வெவ்வேறு பாடவிதானங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. 20ஆம் நூற்றாண்டு ஆரம்பந் தொடக்கம் தற்காலம் வரை பாடவிதானம் தொடர்பாகப் பல்வேறு அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. உதாரண மாக, பாடவிதானத்தைப் பொருத்தமானவாறு அலகுகளாக வகுத்தலானது இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கியமான படிமுறையாகக் குறிப் பிடலாம். பாடவிதான அபிவிருத்தியைக் கவனிக்கையில், பாடவிதானத்துக்குரிய பாடப்புலத்தை ஒழுங்கமைக்கும்போது, பின்பற்றப்பட்டுள்ளனவும், பின்பற்ற வேண்டியனவுமான ஒழுங்கமைப்பு முறைகள் நான்கினை நாம் இனங்கண்டு கொள்ளலாம்.

1. பாடம் சார்ந்த பாடவிதானம்
2. மையப் பாடவிதானம்
3. செயற்பாடுகள் தொடர்பான பாடவிதானம்
4. ஒன்றிணைக்கப்பட்ட பாடவிதானம்

என்பனவே அவையாகும்.

பாடம் சார்ந்த பாடவிதானம்

பாடவிதானந் திட்டமிடலில், கலாசாரத்தின் மீது ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி நோக்கங்கள் மட்டுமின்றி, பாடவிடயங்களைத் தெரிவுசெய்வது தொடர்பான கோட்பாடுகளும் செயற்றொடர்களும் மிக முக்கியமானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே கல்வி நோக்கங்கள் எய்தப்படலோ எய்தப்படாமையோ பாடவிதானத் திட்டமிடலின் செயற்றிறனிலேயே தங்கியுள்ளன. பாடவிதானத் திட்டமிடலில் பிரதானமானவையாகக் கருதப்படும் மூன்று அங்கங்கள் உள்ளன. பயிற்றப்பட்ட தொழில் சார்ந்த தனியாள் பிரிவினரும், கற்பித்தலில் உதவக்கூடிய பௌதிக வளப் பிரிவும் நிருவாக ஒழுங்கமைப்புப் பிரிவுமே அவையாகும். பாடம் சார்ந்த பாடவிதானத்தின் வரலாறு மிகப் பழங்காலம் வரை நீண்டு செல்வதை இங்கு நினைவூட்டுதல் அவசியமாகின்றது. முறைமையான பாடசாலைக் கல்வி முறை ஆரம்பிக்க முன்னர் தொட்டே, பாடஞ் சார்ந்த பாடவிதானத்துக்கான வரலாறு உண்டு என்பது தெளிவாகின்றது. வெவ்வேறான பல பாடங்களை உள்ளடக்கிய பாடவிதான ஒழுங்கமைப்புக் கோலமே இதனால் கருதப்படுவதாகும்.

## பாடம் சார்ந்த பாடவிதானத்தின் விசேட இயல்புகள்

1. உழைப்புப் பிரிவுத்தத்துவத்துக்கு அமைய பாடவிடயங்களை வகைப் படுத்தி ஒழுங்கமைத்தல், அன்றாடம் உலகில் பெருமளவில் அறியப்பட்டு வரும் விடயங்களை மீண்டும் பயன்படுத்தல், சூழலைப் பற்றி முறை யாகக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல், அவற்றை ஏனையோருக்கு விளக்குதல் என்பவற்றுக்காக இவ்வாறாக வகைப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. ஒருவாறாக நோக்கும் போது இப்பாட ஒழுங்கு ஆராய்ச்சியாளர்களுக்குப் பயனுடையதாக அமைகின்றது. அதாவது ஒவ்வொரு பாடவிடயத்தையும் மிக இலகு வாகப் பெற்றுக் கொள்ளவும், விளங்கிக் கொள்ளவும் இதன்மூலம் வழிபிறக்கின்றது. அத்தோடு, எந்த மாணவனும், சுய முயற்சியினால் மிக இலகுவாகத் தமது கலாசார மரபுகளை உரிமையாக்கிக் கொள் ளும் திறன் வளர்ச்சியடைகின்றது. பாடவிடயங்களைக் கற்றதன் பின்னர் உறுதியான சமுதாயமொன்றின் இடையீடற்ற வளர்ச்சிக்குத் தேவையான திறன்களைப் பெற்றுக் கொள்வான்.

2. கற்பித்தற் கருமத்தொடர், நுட்பமுறைகள் என்பன, பெரும்பாலும், விரிவுரைகள், கலந்துரையாடல்கள், வினாவிடைகள், எழுத்துமூலப் பயிற்சிகள், வாய்மொழிமூல அறிக்கைகள், தவணை வினாப்பத்திரங்கள் ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

இப்பாடவிதானத்துக்கு அமைய கற்றல்-கற்பித்தல் கருமத்தொடரில் செயற்பாடு மிகக் குறுகிய அளவிலேயே கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இது அறிவுப் பிரிவை அடிப்படையாகக் கொண்டுள்ளமை தெளிவாகத் தென்படும் அதேவேளை, மனப்பாங்குகள், திறன்கள் ஆகியவற்றில் எவ்வித கவனமும் செலுத்தப்படாமையையும் காண முடிகின்றது.

## ஒழுங்குமுறைப்படுத்தல்

1. **எளிமையானதிலிருந்து சிக்கலானதுக்குச் செல்லல்**

   எந்த அளவுக்கு ஆழமான பாடவிடயமாக இருப்பினும் அதனை மிக எளிதாக ஆரம்பித்து படிப்படியாகச் சிக்கலான நிலைக்குச் செல்லல்

Form No. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கற்பித்தல் முறையின் தன்மையாகும். பாடப்பிரிவில், கலை, விஞ்ஞானம், அழகியல் போன்ற அம்சங்களைச் சேர்ந்த பாடவிடயங்களைக் கற்றல் கற்பித்தல் கருமத்தொடரின்போது மேற்குறிப்பிட்டவாறு செயற்படுத்தலாம்.

2. அறிந்தவற்றிலிருந்து அறியாதவற்றுக்குச் செல்லல்

இது 'படிமுறை' முறை எனவும் அழைக்கப்படுகின்றது. யாதேனும் சில பாடவிடயங்களை முதலில் கற்பித்து அதனடிப்படையில் ஏனைய விடயங்களைக் கற்பித்தலே இம்முறையாகும்.

3. முழுமையிலிருந்து பகுதிகளுக்குச் செல்லல்

உதாரணமொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் இதனை மேலும் விளங்கிக் கொள்ளலாம். சமூகக்கல்விப் பாடத்தைக் கற்பிக்கையில், "ஐக்கிய நாடுகள் நிறுவனத்தை" ஒரு முழுமையாகக் கொண்டு, அதன் வரலாறு, குறிக்கோள்கள் என்பன தொடர்பான விடயங்களைப் பின்னர் சமர்ப்பித்து, அதன் உபபகுதிகளைப் பின்னர் விரிவாகக் கற்பிக்கலாம்.

4. காலப்பகுதிமுறை

பண்டைக்கால, இடைக்கால, பிற்கால நிகழ்வுகளை ஒழுங்குமுறைப்படி எடுத்துக்காட்டிப் பாடவிடயங்களைக் கற்பித்தலே இம்முறையாகும். வரலாறு இலக்கியம் போன்றவற்றை இவ்வாறாக காலப்பகுதி முறைப்படி கற்பிப்பதற்காகத் தாயர்ப்படுத்திக் கொள்ளலாம்.

இப்பாடவிதானம் திறன் வளர்ச்சியிலோ சமூகத் திறன் வளர்ச்சியிலோ எவ்வித கவனமும் செலுத்துவதில்லை.

மையப் பாடவிதானம்

பாடம் சார்பான பாடவிதானத்தில் காணப்படும் பிரதானமான குறைபாடாகச் சமர்ப்பிக்கப்பட்ட, பாடங்களைத் தனித்தனியே கற்பித்து, மாணவர்களுக்கு அறிவைப் பெற்றுக்கொடுக்கும் முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் இதன் ஆரம்பத்துக்கு வித்திட்டுள்ளது. அத்தோடு 19ம் நூற்றாண்டில் கல்வித் தத்துவ ஞானியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அபிப்பிராயத்தின்படி, பாடங்களைத் தனித்தனியே கற்பிப்பதைவிட சில பாடங்களை ஒன்றிணைத்துக் கற்பிப்பதன் மூலம் மாணவரின் அறிவை வளர்த்துக் கொள்ள முடியும் என்பது வெளியிடப்பட்டது. அக்காலத்தில் ஏற்பட்ட தொழினுட்ப, விஞ்ஞான விருத்தி காரணமாக, சமூகரீதியில் சில விசேட விடயங்களைக் கற்பித்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எனவே கற்பித்தலுக்கான பாட ஒழுங்கமைப்பின்போது மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டி ஏற்பட்டமையே மையப் பாடவிதானத்தின் ஆரம்பத்துக்குக் காரணமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972 இல் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் போது 10,11ஆந் தரங்களில் பயன்படுத்தப்பட்ட பாடவிதானத்தை மையப் பாடவிதானத்துக்கு அமையத் தயார்ப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**மையப் பாடவிதானத்தின் பிரதானமான அம்சங்கள்**

1. **மையப் பாடவிதானத்தின் ஊடாக சமூகப் பெறுமானங்களுக்கு முதலிடம் வழங்குவதால் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல்.**

சமூகத்தின் தப்பிப் பிழைத்து வாழ்வுக்கும் அபிவிருத்திக்கும் பல்வேறு திறன்களைக் கொண்ட தனியாள்கள் தேவை.

உ-ம்: பொறியியலாளர், ஆசிரியர்கள் போன்றோர்

அன்றாடம் எழும் சமூகப்பிரச்சினைகளைத் தீர்ப்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறன்களைக் கொண்ட தனியாள்களைத் தோற்றுவிக்க வேண்டுமென்பதே பாடவிதானத்தினால் எதிர்பார்க்கப்படுவதாகும்.

2. சமூகத்தில் நிலவும் சில எதிர்பார்ப்புக்களை அடைதல், சமூகத்துக்கு இயைபான பண்புகளுக்கு இயைய நடந்து கொள்ளல், வேலையில் ஈடுபடுதல் என்பனவே மையப் பாடவிதானத்தின் நோக்கமும் அடிப்படையுமாகும்.

3. மையப் பாடவிதானமொன்றில் அடங்கியிருக்க வேண்டிய பாடப்புலங்களின் வரையறைகளை வரையறுத்துக் கூறுவது கடினமானதாகும். எனினும் ஒரு சமூகத்தில் வாழும் போது எழும் பிரச்சினைகளின் தன்மை அவற்றுக்கான காரணங்களை, அதற்கான தீர்வுகள் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, தோன்றும் தேவைகள் பற்றிய அறிவை ஒழுங்கமைத்தல் வேண்டும் என்பதும் இப்பாடவிதானத்தினால் எதிர்பார்க்கப்படுவதாகும்.

4. சமூகத்தில் வெற்றிகரமாக வாழ்வதற்குத் தேவையான அடிப்படையான விடயங்களை, சமூக வாழ்க்கை தொடர்பான கோட்பாடுகளைக் கற்பித்தல் மூலம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது மையப் பாடவிதானத்தின் நோக்கமல்ல. ஏனெனில் இது கற்றற் கருமத்தொடரில் இடையீடின்றி நிகழ்வதொன்றாகும்.

5. பொதுவான கற்பித்தல் முறையொன்றே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. பொது வாழ்க்கை முறைக்கு வழிகாட்டும் கருத்துக்கு இசைவான பொதுக் கற்பித்தல் முறையொன்றைத் தயார்ப்படுத்துவதே இப்பாடவிதானத்தின் குறிக்கோளாகும்.

6. மையப்பாடவிதானத்தில் ஆசிரியர்-மாணவர் ஆகியோரின் ஈடுபாட்டுடன் தொழிற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கான வாய்ப்பு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர், மாணவர் ஆகிய இரு பிரிவினரதும் ஒத்துழைப்புடன் பல்வேறு பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வதோடு அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. மையப் பாடவிதானத்தின் நெகிழ்ச்சியான தன்மையுடையதாதலால் விசேடமான சந்தர்ப்பங்களின்பால் விசேட கவனஞ் செலுத்தக்கூடிய வாய்ப்பு உண்டு.

8. விசேடமான திறன்களை ஒழுங்குபடுத்துவதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கப்பெறுகின்றது.

9. ஏற்றுக்கொள்ளப்பட்ட பாட அலகுகளுக்கு அமைய பாடவிடயங்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இதன்மூலம் கிடைக்கப்பெறும்.

10. மையப் பாடவிதானத்தில், மையப் பாடங்களுடன் தொடர்புடைய ஆசிரியர் குழுவினரின் தலைமைத்துவத்துடன் கல்வி நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். எனவே மையப் பாடவிதானத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர் பொதுக் கல்வி பற்றிய விரிவான விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டியதோடு, கல்வியின் சமூக அடிப்படை தொடர்பான பயிற்சியையும் பெற்றிருக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்.

## செயற்பாடுகள் தொடர்பான பாடவிதானம்

மாணவனின் அனுபவங்களை அதிகரித்துக் கொள்வதற்காகத் திட்டமிடப்படும் ஒரு பாடவிதானக் கோலமாக இதனைக் குறிப்பிடலாம். பிளேட்டோ, ரூஸோ, போன்ற கல்வித்தத்துவ ஞானியர்கள், கல்விக் கருமத்தொடரின் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்ட போதிலும், செயற்பாடுகள் தொடர்பான பாட விதானத்தை அவர்கள் தீர்க்கமாகச் சமர்ப்பிக்கவில்லை. ஏறத்தாழ 1896இல் ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் சிகாகோ பல்கலைக் கழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தொழிற்பாடுகள் பற்றிய பாடவிதானத்தை இவ்வாறான பாடவிதானத்தின் முதற்படியாகக் கருதலாம். செயற்பாடுகள் தொடர்பான முதலாவது பாடவிதானமே இதுவாகும் எனவும் குறிப்பிடலாம். ஜோன் டூயியின் தலைமைத்துவத்துடன் திட்டமிடப்பட்ட இப்பாடவிதானத்தின் பிரதானமான நோக்கம், வெவ்வேறு தொழிற்பாடுகளினைப் பிரபல்யப்படுத்துவ தாகும். இப்பாடவிதானத்தில் பாடங்கள் தொடர்பான பொதுவான தொழிற் பாடுகளும், விளையாட்டு-வெவ்வேறு தொழில்கள் ஆகியன சார்ந்த தொழிற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டிருத்தல் அதன் சிறப்பியல்பாகும். ஜே.எல். மேரியம் எல்ஸ்வர்த், கொலின்ஸ், டபிள்யு.எச்.கில் பெற்றிக் போன்ற கல்வியாளர்கள் செயற்பாடு தொடர்பான பாடவிதானங்களைத் தயாரித்தோருள் முக்கிய இடம்பெறுவோராவர். 1918இல் டபிள்யு. எச். கில் பெற்றிக் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட முயற்சிமுறை, செயற்பாடு தொடர்பான பாடவிதானத்தின் பரம்பலில் பெருமளவிற்குப் பங்களிப்புச் செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு தொடர்பான பாடவிதானத்தின் அம்சங்கள

1. தொழிற்பாடுகளுக்கு முதலிடம் வழங்குதல்.

2. அத் தொழிற்பாடுகளை, மாணவரின் விருப்புக்கு அமையத் தெரிவுசெய்தலும் அவை மாணவரின் விருப்புக்களை வளர்க்கக்கூடியதாக அமைந்திருத்தலும் மாணவரின் ஏதேனும் விருப்பு தொழிற்பாடொன்றின் மூலம் நிறைவு பெறும் போது மற்றுமொரு விருப்பு தோன்றும். எனவே அவ்வாறான புதிய விருப்புக்களை நிறைவுசெய்யக்கூடிய திருப்திப்படுத்தக்கூடிய விதத்திலான புதுத் தொழிற்பாடுகள் இவ்வாறான பாடவிதானத்தில் இடம்பெற்றிருத்தல் மிக முக்கியமானதாகும்.

3. தொழிற்பாடுகள் தொடர்பான பாடவிதானம், மாணவரின் விருப்புக்களுக்கு அமையவும் அவற்றுக்குப் பொருத்தமானவாறும் திட்டமிடப்படுகின்ற மையால், அவ்விருப்புக்கள் அவ்வப்போது மாற்றமடையலாம். எனவே அவற்றுக்குப் பொருத்தமானவாறு பாடவிதானத்தைத் திருத்தியமைக்க வேண்டி ஏற்படுகின்றது. எனவே தொழிற்பாடுகள் தொடர்பான பாடவிதானம் நெகிழ்ச்சியுடையதாக இருத்தல் மிக முக்கியமானதாகும். எனவே பாடவிடயங்களுக்கு இடையே நற்றொடர்பு காணப்படலும் பாடவரையறைகள் நெகிழ்வுடன் கூடியதாக இருத்தலும் சிறப்பான தன்மைகளாக உள்ளன.

4. கூட்டுத் தொழிற்பாடுகளுக்கும் குழுத் தொழிற்பாடுகளுக்கும் மிக முக்கியமான இடம் வழங்கப்படுகிறது.

5. தொழிற்பாடுகள் பற்றிய பாடவிதானத்தைத் தயாரிக்கும்போதோ, திட்டமிடும் போதோ ஆசிரியர்களும் மாணவர்களும் அதில் கலந்து கொள்ளல்.

6. எனவே தொழிற்பாடுகள் பற்றிய பாடவிதானத்தைத் தயாரிக்கும்போதோ, திட்டமிடும் போதோ ஆசிரியர் மிக முக்கிய இடம்பெறுகின்றார். மாணவரின் விருப்புக்கு இயைபான தொழிற்பாடுகளைத் தயாரித்தலும் மாணவரின் துணையைப் பெற்று அவ்வாறான தொழிற்பாடுகளைத் தயார்ப்படுத்தலுமே ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுவனவாகும்.

7. எனவே தொழிற்பாடுகள் பற்றிய பாடவிதானத்தை முன்கூட்டியே தயார்ப்படுத்துவது அவசியம் என்பது மேற்குறிப்பிட்ட காரணங்களிலிருந்து தெளிவாகின்றது.

8. தொழிற்பாடுகளைத் திட்டமிடும்போது, கல்வி நோக்கங்கள், திட்டமிடல், அமுற்படுத்தல், பகுத்தாய்தல், மதிப்பீடு செய்தல் போன்ற முக்கியமான படிகளின்பால் விசேட கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தொழிற்பாடுகள் தொடர்பாகப் பாடவிதானமொன்றினை வெற்றிகரமாக அமுற்படுத்துவதில் பின்வரும் காரணிகள் பங்களிப்புச் செய்யக்கூடும்.

1. இவ்வாறானதொரு பாடவிதானத்தைத் தயார்ப்படுத்தும் போதும் அமுற்படுத்தும் போதும், ஆசிரியர் மாணவர் ஆகிய இரு பிரிவினரதும் ஈடுபாடு காணப்படல், தொழிற்பாடு தொடர்பான பாடவிதானத்தைத் தயார்ப்படுத்தும்போது இருபிரிவினரதும் ஈடுபாட்டுடன் நோக்கங்கள் தீர்மானிக்கப்படவேண்டியதோடு, தொழிற்பாடுகளில் ஈடுபடல் மதிப்பீடு ஆகியவற்றில் இரு பிரிவினரும் பங்குகொள்ளல் வேண்டும்.

11. தொழிற்பாடுகள் தொடர்பான பாடவிதானத்தை அமுற்படுத்தும்போது, பிரச்சினை தீர்க்கும் முறையே மிகமுக்கியமானதாக அமைகின்றது. எனவே இப்பாடவிதானம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகளின் மூலம் மாணவர்களுக்கு விளையாட்டு, சங்கங்கள் - கழகங்கள் சுற்றுலாக்கள் போன்ற பாட இணைநடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

**ஒன்றிணைந்த பாடவிதானம்**

பாடங்களைத் தனித்தனியே கற்பிக்கையில் எழும் கஷ்டங்களையும் குறைபாடுகளையும் தீர்த்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியின் விளைவே ஒன்றிணைந்த பாடவிதானமாகும் எனக் குறிப்பிடலாம். ஒன்றிணைந்த பாடவிதானத்தில் பாடங்களிடையே ஒற்றுமையும், கலப்பும் ஏற்படுத்தப்படுகின்றன. கூட்டுமொத்தமாகக் கிடைக்கப்பெறும் விளக்கம் மிகப் பொருளுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையினால், அக்கருத்து, ஒன்றிணைக்கப்பட்ட பாடவிதானத்தின் வளர்ச்சியில் பெருமளவுக்குப் பங்களிப்புச் செய்துள்ளது.

**ஒன்றிணைந்த பாடவிதானத்தின் பிரதான அம்சங்கள்**

1. பாடவிதானத்துள் சில பாடங்கள் ஒன்றிணைக்கப்படல் அல்லது கூட்டிணைக்கப்படல் இதன் முக்கியமான இயல்பாகும். எனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட பாட அலகுகளில் பிளவு காணப்படுவதில்லை.

2. பாடவிதானத்தைச் சேர்ந்த கல்வி வேலைத்திட்டங்கள் வெவ்வேறு தொனிப்பொருள்கள், தலைப்புக்கள், அநுபவங்கள், தொழிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகள், செய்திட்டங்கள் ஆகியவற்றின்மீது கட்டியெழுப்பப்பட்டவையாகும். அவற்றின் அடிப்படையிலேயே வேலைத்திட்டங்கள் அமுற்படுத்தப்படுகின்றன.

3. இக்கல்வி வேலைத்திட்டங்களுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளுக்காக தயார்ப்படுத்தப்படும் நேர அட்டவணை நெகிழ்ச்சியுடையதாக இருத்தல் வேண்டும். இவ்வேலைகள் கூடுதலான அளவு நேரம் இவற்றில் ஈடுபடச் செய்வதற்காக தயார்ப்படுத்தப்பட்டிருப்பதே இதற்கான காரணமாகும்.

4. உரிய ஆசிரியரின் ஒத்துழைப்புடன் ஒன்றிணைக்கப்பட்ட பாடவிதானத்தில் ஒன்றிணைக்கப்பட்ட தொழிற்பாடுகளைக் கட்டியெழுப்புவது அவசியமாகும். அத்தோடு அத்தொழிற்பாடுகளை முறையாகத் திட்டமிடலும் முக்கியமானதாகும்.

5. உரிய ஆசிரிய குழுவினரின் திறன்களை ஒன்றிணைப்பதன் மூலம் கல்வி வேலைத்திட்டங்களைத் திட்டமிடல், தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்ளல்.

6. மாணவரின் விருப்புக்கள், திறமைகள் ஆகியவற்றின் ஊடாக வெளிக்கொணரப்படும் தொழிற்பாடுகளில் கூடிய கவனஞ்செலுத்த வேண்டுமென்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். எனவே மாணவர் மையக் கல்விக்கான வாய்ப்புக்கிடைக்கின்றது

7. வெவ்வேறு தொழிற்பாடுகளின் ஊடாக ஆராய்வுக்கும் அவதானிப்புக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றமையால், அது மாணவரின் சுயாதீனமான தொழிற்பாடுகளுக்குத் துணையாக அமைகின்றது.

மாணவர்கள் கூட்டாகவோ குழுக்களாகவோ தொழிற்பாடுகளில் ஈடுபட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட பாடவிதானத்தின் மூலம் மாணவர் மையக் கல்விக்கு வழிகோலப்படுகின்றமையாயினால் ஆசிரியர் வழிகாட்டியாக மாறுகின்றார். இந்நிலைமைகளின் கீழ் ஆசிரியர் மாணவர் தொடர்பை நன்கு பேணக்கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 சாராம்சம்

பாடவிதானம் என்பது விரிவான ஓர் எண்ணக்கருவாகும். இதற்கென பல வரைவிலக்கணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பாடவிடயங்கள் சமகால தேவைகள், மாணவரின் ஈடுபாடு, காணப்படும் வளங்கள், தேசியக் கல்வி நோக்கங்கள் போன்ற அனைத்தும் பாடவிதானம் எனும் எண்ணக்கருவினுள் தெளிவாகின்றன.

தேசியக் கல்வி முறைமையின் வெற்றியும் தோல்வியும் பெருமளவுக்குப் பாடவிதானத்தின் மீதே தங்கியுள்ளது என்பது தென்படுகின்றது.

நாட்டின் மக்களின் நோக்கங்கள் காலத்துக்குக் காலம் மாற்றமடைகின்றமையால், அவற்றிற்கு அமையப் பாடவிதானமும் மாற்றமடையும்.

புதிய விஞ்ஞான தொழினுட்ப விருத்தியும், ஞானக் கோவையுடன் சேர்ந்துகொள்ளும் புத்தறிவுப் பொக்கிசமும் மக்களது எதிர்பார்ப்புக்களதும் விருப்பு வெறுப்புக்களதும் மாற்றங்கள் ஆகிய அனைத்தும் பாடவிதானத் திட்டமிடுவோரால் கருத்திற் கொள்ளப்பட வேண்டியனவாகும்.

பாடவிதானத்தைத் திட்டமிடுகையில் பொதுமாதிரியைப் பயன்படுத்திய போதிலும் அம்மாதிரியின் மீது கட்டியெழுப்படும் பாடவிடயங்களும் கற்றல் முறைகளும் மதிப்பீட்டு முறைகளும் அவ்வவ் நாட்டுக் கலாசார தேசிய மரபுகள் உரிமைகளுக்கும் சுற்றாடற் காரணிகளுக்கும் அமைய வேறுபட்டவையாக அமையலாம்.

தத்துவம், சமூகவியல், உளவியல் ஆகிய பாடங்களின் இடையீட்டற்ற பங்களிப்புக் காரணமாக அவ்வவ் நாட்டில் அமுற்படுத்தப்படும் பாடவிதானங்களில் மாற்றங்கள் காணப்படுகின்றன.

பாடவிதானத்திட்டமிடல் முறைகள் நான்கு உள்ளன. பாடம், மையப்பாடம், செயற்பாடுகள் ஒன்றிணைந்த பாடம் தொடர்பானவையாகும்.

## 6.0 மீற்சோதனை

நீங்கள் இதுவரை வாசித்துச் சேகரித்துக்கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளித்து உங்களது அறிவை உறுதிப்படுத்திக் கொள்க.

ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைக் கீழே தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பாடவிதானம் தொடர்பான புதிய வரைவிலக்கணமொன்றினைச் சமர்ப்பிக்கும்போது (1) ..................................(12) .................. ...................... ஆகிய இரு அம்சங்களிலும் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

2. உண்மையாகவே பாடசாலையினுள் நிகழும் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய பாடவிதானம் .................................. பாடவிதானமாகும்.

3. .................................. என்பது யாதேனும் கருமத்தையோ தொழிலையோ செயற்பாட்டையோ தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்படும் கற்பித்தற் கருமத்தொடராகும்.

4. நோக்கங்களால் .................................. சிறு மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

5. கால்மாக்ஸ், டூயி காந்தி, ஆகிய தத்துவஞானியர்கள் கல்வியில் ........................ முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளனர்.

சொற்கள்

| | |
|---|---|
| செயல் ரீதியான கல்வி | பாடவியங்கள் |
| மறைவான | மாணவர்கள் |
| வேலைக் கலாசாரத்தின் | நடத்தையில் |

பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

6. பாடவிதானங்கள் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. "பாடவிதானம் என்பது கற்பித்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட ஒரு குறித்த அளவு பாடவிடயங்களாகும்" எனும் கருத்தை வெளியிட்டவர் யார்?

   1. போபும்

   2. எலிசபெத்

   3. டயிலர்

   4. ஹர்ஸ்ற்



Form 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாடவிதானம் தயாரிக்கையில் மாதிரிமுறை கையாளப்படுகின்றது. அதற்கு ஏற்ப, பண்டைய பாடவிதானமாதிரியில் இடம்பெற்றிருந்த அம்சங்கள் எத்தனை?

1. 2

2. 3

3. 4

4. 5

8. பாடவிதானத்தின் எம்மூன்று அம்சங்கள் தொடர்பாகவும் மதிப்பீட்டுக் கருமத்தொடரின் மூலம் ஆய்ந்தறியலாம்?

1. பெறுபேறுகள், குறிக்கோள்கள், செயற்படுதன்மை.

2. செயற்படுதன்மை, குறிக்கோள்கள், பெறுமானம்.

3. பெறுமானம், நோக்கங்கள், பெறுபேறுகள்.

4. பெறுமானம், செயற்படுதன்மை, பெறுபேறுகள்.

9. பாடவிதானம் தொடர்பான பல்வேறு வரைவிலக்கணங்களைப் பலர் சமர்ப்பித்துள்ளனர். டெனிஷ் லோடன் அவர்கள் சமர்ப்பித்த வரை விலக்கணம் யாது?

1. பாடவிதானம் என்பது கல்விக்குறிக்கோள்களையோ பெறுபேறு களையோ எய்துவதற்காக அமுற்படுத்தப்படுகின்ற. ஏற்கனவே திட்டமிடப்பட்ட செயற்படு வேலைத்திட்டமாகும்.

2. பாடசாலையினால் திட்டமிடப்பட்டு அமுற்படுத்தப்படும் அனைத் துக் கற்றல் நடவடிக்கைகளும் பாடவிதானமாகும்.

3. பாடவிதானம் என்பது ஒரு சமூகத்தின் கலாசாரத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியாகும்.

4. யாதேனும் மக்கட் பிரிவினருக்காக விரிவான நோக்கங்களையும் சிறப்பானகுறிக்கோள்களையும் எய்தும் இலக்குடன் கற்றலுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் தயார்ப்படுத்தப் பட்ட திட்டமே பாடவிதானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. "பாடவிடயங்களிற் போன்றே மாணவர் தொடர்பாகவும் சம அளவில் கவனஞ் செலுத்த வேண்டியது ஆசிரியரின் பொறுப்பாக அமைதல் வேண்டும்." இது ஒரு

1. அறிதலாகும்

2. மனப்பாங்காகும்

3. திறனாகும்

4. நடத்தையாகும்

## 7.0 விடைகள்

1. பாடவிடயங்கள், மாணவர்கள்

2. மறைவான

3. செயல்ரீதியான கல்வி

4. நடத்தையில்

5. வேலைக் கலாசாரத்தின்

6. 2

7. 2

8. 4

9. 3

10. 2

## 8.0 ஒப்படைகள்

1. பாடவிதானமொன்றினைக் கட்டியெழுப்புகையில் கவனத்திற்கொள்ள வேண்டிய மூலாதாரக் காரணிகள், இலங்கை பாடவிதானத் திட்டமிடுவோரினால் எந்த அளவுக்கு கவனத்திலெடுக்கப்பட்டுள்ளன என ஆராய்க.

2. 1972ஆம் வருடத்துக்கு முன்னர் இலங்கைப் பாடசாலைகளில் அமுற்படுத்தப்பட்ட பாடவிதானத்தைக் கருத்திற்கொண்டு நீங்கள் அறிந்து வைத்துள்ள கோட்பாடுகளுக்கு அமைய அதன் சிறப்பான தன்மைகளையும் குறைபாடுகளையும் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1972ஆம் வருடத்தில் இலங்கை பாடவிதானத் திட்டமிடுவோரால் ஏற்படுத்தப்பட்ட பாடவிதான மாற்றங்களும் சீர்திருத்தங்களும் புதிய பாடவிதானக் கொள்கைகளுடன் எந்த அளவுக்குப் பொருந்துகின்றன எனக் கலந்துரையாடுக.

4. 1978-1979ஆம் வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பாடவிதான சீர்திருத்தங்கள் புதிய பாடவிதானக் கொள்கைகளுடன் எந்த அளவுக்குப் பொருந்துகின்றன எனக் கலந்துரையாடுக.

5. இலங்கைக்குப் பொருத்தமான புதிய பாடவிதானமொன்றினைத் தயார்ப்படுத்துவதாக இருப்பின் அது தொடர்பாக நீங்கள் சமர்ப்பிக்கும் பிரேரணைகள் யாவை?

## 9.0 கலைச்சொற்றொகுதி

| | | |
|---|---|---|
| 01. | தொடர்மதிப்பீடு | Continuous assessment |
| 02. | ஒழுங்குமுறையான கோலம் | Sequential pattern |
| 03. | மாதிரி/ மாதிரியுரு | Model |
| 04. | கற்றற்பேறுகள்/ பெறுபேறுகள் | Outcomes of learning |
| 05. | போதனை முறை | Instructional system |
| 06. | தொழிற்பாட்டுக் கல்வி | Functional Educat[illegible] |
| 07. | செயற்படும் தொகுதி | Operative-System |
| 08. | இயக்க | Dynamic |
| 09. | [illegible]/ யதார்த்தமான | Realistic |
| 10. | ஆளு[illegible] விருத்தி | Personality development |
| 11. | நன்மை[illegible]ள்/ பிரதிபலன்கள் | Benefits |
| 12 | [illegible]ம்/ மூலம் | source |
| 13 | மூல அம்சங்கள் | Basic elements |
| 14. | [illegible]ங்கள் | Patterns |
| 15. | [illegible]யீடு/ [illegible]ருப்பு | Classification |
| [illegible] | நிலையான/ உறுதியான | Static |
| 17. | கடத்தல் | Transmission |
| 18. | ஒன்றிணைப்பு | Integration |
| 19. | எண்ணக்கரு | Concept |
| 20. | கலாசாரப் பாரம்பரியங்கள்/ கலாசார மரபுகள் | Cultural Heritage |
| 21. | கலாசார அறிவுப் பொக்கிசம் | Culturally Accumulated knowledge |
| 22. | கலாசாரப் போக்குகள் | Cultural trends |
| 23. | காரணிகள் | Factors |
| 24. | மறைவான பாடவிதானம் | Hidden curriculum |
| 25. | மையப்பாடம் | Core subject |
| 26. | திறன்களின் திரட்டு | Quantum of skills |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. மேலதிக வாசிப்புக்கான நூல்கள்

1. Barrow Robin - Common Sense and the Curriculum
George Allen & Unwin Ltd. 1976.

2. Nisbet Stanley - Purpose in the Curriculum
University of London Press - 1974.

3. Wheeler, D.k. Curriculum Process
University of London Press - 1974.

4. Sterhouse Lawrence - An Introduction to Curriculum
Research and Development -
Heinmann, London - 1975.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினோராம் அத்தியாயம்
கல்வியும் அபிவிருத்தியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் அபிவிருத்தியும்

உள்ளடக்கம் பக்கம்


1.0 அறிமுகம் ........ 113
2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 113
3.0 முற்சோதனை ........ 114
4.0 கல்வியும் அபிவிருத்தியும் ........ 114
4.1 அபிவிருத்தி எண்ணக்கரு என்பது யாது? ........ 115
4.2 கல்விக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பு ........ 118
4.3 அபிவிருத்திக் கல்வியும் சமுதாய ஈடுபாடும் ........ 119
4.4 சமுதாய அபிவிருத்தி ........ 122
4.5 உறுதியான சமூகத்துக்குப் பொருத்தமான அபிவிருத்தி ........ 123
4.6 பொதுச் சமூகத்துக்குப் பொருத்தமான அபிவிருத்திக் கல்வி ........ 124
4.7 இலங்கைக்குப் பொருத்தமான அபிவிருத்திக் கல்வியை நோக்கி ........ 125
4.8 ஆயுட்காலக் கல்வி எண்ணக்கரு ........ 127
4.9 ஆயுட்காலக் கல்வி நோக்கங்கள் ........ 128
4.10 கல்வியை மையமாகக் கொண்ட சமூகம் ........ 129
4.11 சமுதாய எண்ணக்கரு ........ 131
4.12 சமுதாயத் தலைமைத்துவம் ........ 132
4.13 ஆசிரியர் ஒரு சனசமுதாயத் தலைவராவார் ........ 133
5.0 சாராம்சம் ........ 134
6.0 பிற்சோதனை ........ 135
7.0 விடைகள் ........ 137
8.0 ஒப்படைகள் ........ 137
9.0 கலைச் சொற்றொகுதி ........ 138
10.0 மேலதிக வாசிப்புக்கான நூல்கள் ........ 139




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பான பொதுவான ஆய்வொன்றினை மேற்கொள்வதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும். "அபிவிருத்தி" எனும் பதம் அண்மைக்காலம் தொட்டு மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வெவ்வேறு தனியாள்கள் வெவ்வேறு அர்த்தங்களைக் குறிப்பதற்காக இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர் என்பது அவர்கள் அச்சொல்லைப் பயன்படுத்தியுள்ள விதங்களை நோக்குகையில் தெளிவாகின்றது. இவ்வாறாக, அபிவிருத்தி எனும் சொல்லைப் பயன்படுத்தி வெளியிடப்படும் கருத்துக்கள் வெவ்வேறுபட்டுக் காணப்படுவதைக் கவனிக்க முடிகின்றது. இவற்றுள் எக்கருத்து உண்மையானது - சரியானது என்பதை ஆய்ந்தறிந்து கொள்வது அவசியமாகின்றது.

அத்தோடு அபிவிருத்திக் கல்வியில் பொதுமக்களின் ஈடுபாட்டைப் பெற்றுக் கொள்வதற்காகக் கையாளப்படும் வழிவகைகள் தொடர்பாகவும் அபிவிருத்திக் கல்வி எண்ணக்கரு தொடர்பாக வெவ்வேறு நாடுகள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பாகவும் ஆயுள்காலக் கல்வி எண்ணக்கரு, கல்விமையச் சமூகம் தொடர்பான கருத்து விரிவடைந்துள்ள விதம் என்பன தொடர்பாகவும் இவ்வத்தியாயத்தின் மூலம் ஆராயப்படுகின்றது.

# 2.0 சிறப்பு நோக்கங்கள்

1. அபிவிருத்தி எண்ணக்கருவை நுணுகி ஆய்தல்.
2. அபிவிருத்தி எண்ணக்கரு, அவ்வப்போது புதுப்புது வரைவிலக்கணக் குள்ளான விதத்தைக் காட்டுதல்.
3. கல்விக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பை விளக்குதல்.
4. அபிவிருத்தியில் கல்விக்கும் சமுதாய ஈடுபாட்டுக்கும் இடையிலான தொடர்பை வெளிக் கொணர்தல்.
5. சமுதாய அபிவிருத்தி என்பது யாது என விளக்குதல்.
6. பொதுச் சமூகத்துக்குப் பொருத்தமான அபிவிருத்திக் கல்வி தொடர்பான கருத்தை ஆய்தல்.
7. இலங்கைக்குப் பொருத்தமான அபிவிருத்திக் கல்வி தொடர்பான கருத்துக்களை ஆய்தல்
8. சமுதாயத் தலைவர் என்ற வகையில் கல்வியியலாளரின் பொறுப்புக்களை ஆய்ந்தறிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 முற்சோதனை

இவ்வினாக்களுக்கு விடையளிக்க முயற்சியுங்கள். அதற்காக இம்மொடியூல் உங்களுக்குத் துணையாக அமையும்.

1. கல்விக்கும் அபிவருத்திக்கும் இடையே நேர்த்தொடர்பு காணப்படுகின்றதா அல்லது மறைத் தொடர்பு காணப்படுகின்றதா? அத்தொடர்புகளைத் தீர்க்கமாகக் குறித்துக்கூற இயலுமா?

2. அபிவிருத்தி என்பதால் கருதப்படுவது அதிகமதிகமாகப் பணஞ் சேகரித்துத் தனவந்தராக மாறுவது தானா?

3. அபிவிருத்தியடைந்த நாடுகள் மூன்றினையும் அபிவருத்தியடைந்துவரும் நாடுகள் மூன்றினையும் குறிப்பிடுக. அந்நாடுகள் காணப்படும் கணடங்களையும் குறிப்பிடுக.

4. அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் இடையிலான சமனின்மைகள் 5 இனைக் குறிப்பிடுக.

5. "எல்லையற்ற தேவைகள் எண்ணக்கரு", "அடிப்படைத் தேவைகள் எண்ணக்கரு" ஆகிய ஒவ்வொன்றினாலும் கருதப்படுபவை யாவை?

## 4.0 கல்வியும் அபிவிருத்தியும்

கல்விக்கும் அபிவிருத்திக்கும் இடையே பரஸ்பரத்தொடர்பு காணப்படுகின்றது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு அபிப்பிராயமாகும். கல்வித்துறையில் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளை கல்வித்துறையில் குறைந்த அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது. கல்வித் துறையில் அபிவிருத்தி பெற்றுள்ள நாடே, ஏனைய அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்தியைக் காட்டுகின்றது என்பதை "ரின்பர். ஜன் ஹென்ட்ரிக்", "ஸ்ருமிலின்" போன்ற ஆராய்ச்சியாளர்கள் காட்டியுள்ளனர்.

"கல்வி", "அபிவிருத்தி" ஆகிய எண்ணக்கருக்கள் சுயாதீனமாகப் பயன்படுத்தப்படினும் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்படினும் இச்சொற்களால் கருதப்படுபவை யாவை என ஆய்ந்தறிந்து கொள்வது அவசியமாகின்றது. ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தைக் குறிக்கும் நோக்குடன் தான் இப்பதங்களைப் பிரயோகிக்கின்றனரா? இன்றேல் வெவ்வேறு நோக்குடன்தான் இப்பதங்களைப் பிரயோகிக்கின்றனரா? இன்றேல் வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு கருத்துக்களைக் குறிப்பதற்காக இவற்றைப் பயன்படுத்துகின்றனரா? இவ்வத்தியாயத் தொகுதியின் 1 தொடக்கம் 5 வரையிலான அத்தியாயங்களில் நீங்கள் விளங்கிக் கொண்டதற்கு இயைய "கல்வி" என்பது பல்வேறு கருத்துக்களைக் கொண்ட பரந்த கருத்துப் பொருளான ஓர் எண்ணக்கருவாகும். எனவே இவ்வெண்ணக்கருவை எளிதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைவிலக்கணப்படுத்திவிட முடியாது. அத்தோடு மேன்மேலும் ஆழமாயும் விரிவாயும் நோக்கும் போது அதன் பொருள் மேலும் விரிவானதாக அமைகின்றமையையும் காண முடிகிறது. "அபிருத்தி" என்னும் எண்ணக்கருவும் இவ்வாறாகப் பரந்த கருத்தைக் கொண்டுள்ள ஒரு எண்ணக்கருவாகும். இவ்வெண்ணக்கரு வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு காலப்பகுதிகளில் வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுக்க கூடிய விதத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. தற்போதும் கூட இது வெவ்வேறு பொருளையடக்கக்கூடிய விதத்தில் பிரயோகிக்கப்படுவதைக் காணமுடிகின்றது. எனவே அபிவிருத்தி எண்ணக்கரு என்பது யாது என முதலில் நோக்குவோம்.

## 4.1 அபிவிருத்தி எண்ணக்கரு என்பது யாது?

அபிவிருத்தி எனும் பதம் (அபி + விருத்தி) - மேன்மையான விருத்தி எனப் பொருள்படுகிறது. விருத்தி என்பது, வளர்ச்சி, செல்வம், மேம்பாடு, உயர்ச்சி எனும் பொருள்களைக் கொண்டது. அது ஒரு குறித்த இலக்கை நோக்கிச் செல்கின்ற மாற்றமடையும் செயற்பாட்டுத் தொடராகும் எனவும் குறிப்பிடலாம். இற்றைக்கு ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்கு முன்வர், அபிவிருத்தி எனும் பதம் பொருளாதார அபிவிருத்தியைக் குறிப்பதற்காகப் பிரயோகிக்கப்பட்டது. பொருளாதாரத்தை மேம்படுத்தலே, இதனால் கருதப்பட்டது. தனியார் வருமானம் (தலா வருமானம்) அதிகரித்தல், மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்தல் எனும் கருத்துக்களும் அபிவிருத்தி எனும் சொல்லில் பொதிந்து காணப்பட்டன. இவ்வாறாகப் பொருளாதார ரீதியில் நாடு அபிவிருத்தியடையும் போது அதன் பெறுபேறுகள் விரிகையடைவதால் ஏனைய அனைத்துமே விருத்தியடைகின்றன எனக் கருதப்பட்டது. இவ்வாறாக நோக்குகையில், அபிவிருத்தி எனும் பதம் பெரும்பாலும் பொருளாதார அபிவிருத்தியைக் குறிப்பதற்காகவே பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாகப் பொருளாதார ரீதியில் நாடு அபிவிருத்தியடையும் போது அதன் பெறுபேறுகள் விசாலிப்படைவதன் காரணமாக, ஏனைய அனைத்துத் துறைகளும் விருத்தியடைகின்றன என நம்பப்பட்டது. விவசாயத் துறைகளிலும், கைத்தொழில்களிலும் கூடுதலாக முதலீடு செய்வதும் முதலீட்டு வேகத்தை அதிரிப்பதுமே நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய வழிகளாக அமைந்தன. எதிர்பார்க்கப்படும் மூலதன, உற்பத்தி விகிதத்துக்கு ஏற்ப, பொருளாதார விருத்தி வேகம் அதிகரிக்கும் எனக் கருதப்பட்டது. இவ்வாறாக நாட்டில் அபிவிருத்தி ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அபிவிருத்தி என்பது தனியே பொருளாதார அபிவிருத்தி மட்டும் தானா? அவ்வாறெனின் பொருளாதார வளர்ச்சி எனும் கருத்து, அபிவிருத்தி எனும் எண்ணக்கருவின் சரியான வரைவிலக்கணத்தைக் குறிக்கின்றதெனக் கொள்ள முடியுமா? இவ்வரைவிலக்கணத்தின் வாய்ப்பு தொடர்பான சந்தேகம் எழுந்த போது, தனியே, பொருளாதார அபிவிருத்தி எனும் கருத்தைவிடச் சற்று முன்னிற்கும் சமூக - பொருளாதார அபிவிருத்தி எனும் அபிப்பிராயம் வெளிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிருத்தி எனும் சொல், பொருளாதார மேம்பாடு எனும் அர்த்தத்துடன் தொடர்புபடுத்தப்பட்டமையினால், சிலர் தனியாள் அபிவிருத்தியை அல்லது நாட்டின் அபிவிருத்தியை அவ்வத் தனியாள் அல்லது நாடு கொண்டுள்ள பௌதிகப் பொருள்களின் அளவைக் கொண்டு அளக்க முற்பட்டனர். ஹோர்பிளின், மெயர்ஸ் போன்ற பொருளியலாளர்கள் யாதேனும் நாடு அபிவிருத்தியடைந்துள்ளதா இல்லையா என வகைப்படுத்வதற்கான அளவுகோலொன்றினைத் தயார்ப்படுத்தினர். அதற்கு ஏற்ப, அந்நாட்டு மக்களின் தனியாள் (தலா) வருமானம், சனத்தொகையில் ஆயிரம் பேருக்குரிய வைத்தியர்களினதும், ஆசிரியர்களினதும் எண்ணிக்கை, மோட்டார் வாகனங்கள், ரேடியோக் கருவிகள், குளிர்சாதனக் கருவிகள் போன்ற பல்வேறு பாவனைப் பொருள்கள் எவ்வளவு காணப்படுகின்றன போன்றவை கவனத்திற் கொள்ளப்பட்டன. எனினும் அபிவிருத்தியை அளப்பதற்காகப் பிரேரிக்கப்பட்ட மேற்படி அளவை அம்சங்கள் பொருளாதார அபிவிருத்தியைக் கூட அளப்பதற்குப் பொருத்தமானவையாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனவே அபிவருத்தியை அளப்பதற்கு அவை எவ்விதத்திலும் ஏற்றவையாக அமையவில்லை.

அபிவிருத்தி எண்ணக்கரு, தனியாள் (தலா) வருமான அதிகரிப்புக்குச் சமனானது எனும் கருத்தைக் கவனிப்பின் அதன் காரணமாக மேலும் பல உகப்பற்ற பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும். தனியாள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தனியாளும் முயற்சிப்பின், அதன் காரணமாக முழு மனித வர்க்கமும் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

மனிதனின் சுபாவம், வரையறையற்ற தேவைகளை அடையவேண்டுமென முயற்சிப்பதாகும் எனும் எடுகோளே இங்கு அபிவிருத்தி எனக் கொள்ளப்படுகின்றது. இது எந்த அளவுக்கு நியாயமானது என நுணுகிக் கவனித்தல் வேண்டும். மனிதவர்க்கத்தை வரைறையற்ற தேவைகளின் பால் முடுகச் செய்யின் அதனால் ஏற்படக் கூடிய தீய விளைவுகள் யாவை? உயர்வான மனதைக் கொண்ட மனிதன் இவ்வாறாக, ஆசைகளுக்கு அடிமைப்பட்டு, மனித குலத்தை மதிக்கும் சமூகம் பற்றிக் கவனிக்காது கருமமாற்றுவானா? ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் அல்லது அவற்றை நிறைவுசெய்து கொள்ள முயற்சிப்பதன் மூலம் அவனுக்குத் திருப்தியடைய முடியுமா?

இவ்வாறான வரைவிலக்கணங்கள் பொருளியலாளர்களால் அல்லது வர்த்தகர்களால் மக்கள் மனதினுள் புகுத்தப்பட்டவையா? நிலைமை இதுவாக இருப்பின் தர்க்கத்துக்கு உட்படாத, விவேகத்துக்கு உள்ளாகாத வளர்ச்சி எண்ணக்கருக்களில் தான் நாம் கவனஞ் செலுத்துதல் வேண்டுமா எனும் வினா எழுகிறது. இவ்வாறாக எல்லையற்ற அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் பயணமானது– பேரளவில் நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளும் முயற்சியானது– விரயமாகிச் செல்லும் அதாவது தீர்ந்துசெல்லும் இயற்கை வளங்களின் முன்னிலையில் வெற்றிகரமற்ற, நெகிழ்ச்சியற்ற ஒன்றாகும் என்பது தெளிவானதன் பின்பு அபிவிருத்தி எனும் எண்ணக்கருவுக்கான புதிய வரைவிலக்கணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி என்பதற்கான அர்த்தத்தைக் குறிப்பிடுகையில், எல்லையற்ற தேவைகள் எண்ணக்கருவுக்குப் பதிலாக" அடிப்படைத் தேவைகள் எண்ணக்கரு" எனும் கருத்து சமர்ப்பிக்கப்பட்டது. மனிதனின் நிலைத்திருப்புக்குத் தேவையான அடிப்படைத்தேவைகளை ஒவ்வொருவருக்கும் பெற்றுக் கொடுப்பதே அபிவிருத்தியாகும்" எனும் புதுக் கருத்து வெளியிடப்பட்டது. இவ்வாறாகப் புதுக் கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும், இவை தொடர்பாகப் பொதுவான சமூகநிலை ஏற்படுவது கடினமானதாகும். அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை ஒவ்வொரு நாடும் ஒரே விதமாக ஏற்றுக்கொள்ளுமா? ஒவ்வொரு தனியாளும் இதனை ஒரேவிதமாக ஏற்றுக்கொள்வாரா என்பது சந்தேகத்துக்கிடமானதாகும். எனவே இவ்வரைவிலக்கணம் ஓர் ஏமாற்றுவித்தை தானா எனும் வினா எழக்கூடும். எனினும், அபிவிருத்தி எண்ணக்கருவைக் கருதுகையில், எல்லையற்ற தேவைகள் எண்ணக்கருவை விட, "அடிப்படைத் தேவைகள் எண்ணக்கரு" கூடிய பொருளுடையதாகும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிறுவனப் பொதுச் செயலாளர் அவர்கள் 1962இல் அபிவிருத்தி எண்ணக்கருவைப் பின்வருமாறு விவரித்துள்ளார். "அபிவிருத்தி என்பது வளர்ச்சியுடன் கூடவே மாற்றமடைவதாகும். இம்மாற்றம் சமூக, கலாசார, பொருளாதார ரீதியில் இடம்பெறுவதாகும். அத்தோடு இவை அளவறி முறையிலும் பண்பறி முறையிலும் ஏற்படுவதாகும்".

இவ்வரைவிலக்கணத்தின்படி அபிவிருத்தி என்பது தனியே, பௌதிக அபிவிருத்தியை மட்டும் குறிப்பதில்லை. உள, ஆன்மீக வளர்ச்சியுடன் கூடிய அபிவிருத்தியே இதுவாகும். இதற்கு அமைய அபிவிருத்தி என்பது பொருளாதார அபிவிருத்தியை விட உயர்வானதொன்றாகும்.

அபிவிருத்தி எண்ணக்கருவுக்கு வரைவிலக்கணங்கூற முயற்சிப்பதற்குப் பதிலாக, அபிவிருத்தியை அளப்பதற்கான பிரதானமான மூன்று காரணிகளைப், பிரசித்தி பெற்ற பொருளியலாளரான டட்லி ஸியர்ஸ் அவர்கள் சமர்ப்பித்துள்ளார். அபிவிருத்தியை வரைவிலக்கணப்படுத்தும் போது, உணவு, தொழில், சமானத்தன்மை ஆகிய மூன்று அம்சங்களையும் கருத்திற் கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிடுகின்றார்.

"அபிவிருத்தியின் அர்த்தம்" எனும் தனது நூலில் அவர் ஏழ்மை, சமமின்மை, வேலையின்மை ஆகியவற்றைக் குறிப்பதை இலக்காகக் கொள்ளாத திட்டத்தை அபிவிருத்தித் திட்டமாகக் கூற முடியாது என விளக்கியுள்ளார்.

இவ்வாறாக நோக்கும்போது, அபிவிருத்தி எனும் புது எண்ணக்கருவானது, அடிப்படையில், மனித வாழ்க்கையின் பண்பை மேம்படுத்தக்கூடிய உத்திகள் யாவை எனக் கவனிப்பதேயல்லாது, தனியே வளர்ச்சி வீதம், தனியாள் வருமானம், போன்ற பௌதிகப் பயன்களை மட்டும் கவனத்திற் கொண்டு முடிவெடுக்கக்கூடியதொன்றல்ல எனக் குறிப்பபிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடத்தின் மூலம் இதுவரை பெற்ற அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பின்வரும் பயிற்சியில் ஈடுபடுங்கள்.

செயற்பாடு : 1

அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களை இயன்ற அளவுக்குச் சேகரிக்க.

## 4.2 கல்விக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பு

அபிவிருத்தி எனுஞ் சொல்லுக்குக் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வரைவிலங்கணங்கள் கல்வியிலும் பங்களிப்புச் செய்கின்றன. அபிவிருத்தி என்பதற்குப் பொருளாதார அளவுகோல்கள் மூலம் அர்த்தம் கற்பிக்கப்பட்ட காலப்பகுதிகளில் கல்வியும் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கே முனைந்தது. அதிகமதிகமாக வருமானம் ஈட்டும் வழிவகைகள், உற்பத்தி அளவை அதிகரித்துக் கொள்ளும் விதம்,வளங்களைத் தேடி அறிந்து அவற்றிலிருந்து உச்ச பயனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதம் போன்றவற்றில் கல்வித்துறை கவனஞ் செலுத்தியது. கல்விச் சுட்டிக்கும் பொருளாதாரச் சுட்டிக்கும் இடையே தொடர்பு உண்டு என்பதைக் காட்டுவதற்கே அக்கால ஆராய்ச்சிகளும் ஆய்வுகளும் முயற்சித்தன. அதாவது கல்வி மட்டம்- கல்வித் தரம்- உயரும்போது நாட்டின் பொருளாதார நிலையும் உயரும் என்பதாகும். கல்விக்காகச் செலவு செய்யும் நிதித்தொகையை அதிகரிக்கும்போது தனியாள்(தலா) வருமானம் அதிகரிக்கின்றதெனவும், தனியாள்களைக் கவனிக்கையில், கூடுதலாகக் கல்வி பெற்ற ஒருவர், குறைவாகக் கல்விபெற்ற ஒருவரைவிடக் கூடுதலாக வருமானத்தைப் பெறுகின்றார் எனவும் ஆராய்ச்சிகள் மூலம் காட்டப்பட்டது. 1961 - 62 காலப்பகுதியில் ஐரோப்பிய நாடுகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ரின்பேர்சன், 1962இல் சோவியத் நாட்டில் ஆய்வொன்றினை மேற்கொண்ட ஸ்திரம்லின் போன்றோரும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

அவ்வாராய்ச்சிகளின் போது அறியப்பட்ட விடயங்கள் அந்நாட்டுக் கல்வி முறைமையைத் திட்டமிடுவதில் பெருமளவுக்குப் பங்களிப்புச் செய்துள்ளன. இதற்கு ஏற்பக் , கல்வி முறைமையை மேன்மேலும் திறன்களையும் திறமைகளையும் பயிற்றுவிப்பதில் - விருத்தி பெறச் செய்வதில் - நெறிப்படுத்த வேண்டும் எனும் அபிப்பிராயம் தலைதூக்க ஆரம்பித்தது. பௌதிக மூலதனத்தைப் போன்றே, மனிதவளம் எனும் மூலதனமும் முக்கியமானது என உணரப்பட்ட பின்னர், உழைப்பபாளிகளைப் பெருமளவில் பயிற்றுவிப்பதில் கல்வியியலாளர்கள் கவனஞ் செலுத்தினர். இதன் விளைவாக, ஒவ்வொரு விசேட பிரிவுக்குமென மாத்திரம் பயிற்றப்பட்ட உழைப்பாளிகள் பலர் தோற்றுவிக்கப்பட்டனர். அபிவிருத்தியடைந்த நாடுகளைச் சேர்ந்த கல்வியியலாளர்களும், கல்விக்கு மிகக் குறுகிய வரைவிலக்கணமொன்றினை வழங்கியபடி, உழைப்பாளிகளைப் பயிற்றுவிப்பதில் கவனஞ் செலுத்தினர். இதன் விளைவாக வாழ்க்கையின் பரந்து விரிந்த தன்மையை உணர்ந்துகொள்ளக் கூடிய தனியாள்களைத் தோற்றுவிப்பது தவிர்க்கப்பட்டு, தனியே, "பொறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை" உழைப்பாளிகள் மாத்திரம் தோற்றுவிக்கப்பட்டனர். அபிவிருத்தியடைந்த பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளில், அவ்வுழைக்கும் படையினைத் தமது பொருளாதாரத்துள் ஈர்த்துக்கொள்ளல் கடினமானதாக அமையவில்லை. எனினும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அவ்வாறாகப் பயிற்றப்பட்ட உழைப்பாளிகள் அனைவரையும் தன்னகத்தே ஈர்த்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு அந்நாடுகளின் பொருளாதாரம் வலிமைமிக்கதாகக் காணப்படவில்லை. இந்நிலைமையின் விளைவாக மேற்கல்வி கற்ற, தொழிலற்ற - அரசிடமிருந்து தொழிலை எதிர்பார்க்கக்கூடிய- பெருந் தொகையினர் தோற்றுவிக்கப்பட்டனர்.

அபிவிருத்தி எண்ணக்கருவுக்கு, புதிய வரைவிலக்கணத்தை வழங்கும்போது, தொழிற்பயிற்சி அல்லது, திறன்களை வளர்த்தல் போன்ற குறுகிய நோக்கங்களுக்குப் பதிலாக, மனிதனை முழு ஆளுமை வளர்ச்சியுடையவனாக மாற்றுதலே கல்வியின் பொறுப்பாகும் எனும் கருத்து வெளியிடப்பட்டது. தனியாளின் பண்பளவிலான விருத்தி, அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் ஆகியவற்றின் விருத்தி, போன்ற பரந்த அம்சங்களின் பால் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. தனியாள், எல்லையற்ற தேவைகளைக் கொண்டவனும், அத்தேவைகளை எய்த முயற்சிப்பவனுமாவான் எனும் தவறான மனப்பாங்கு படிப்படியாக மாறி, சிக்கனம், வளப்பாதுகாப்பு, தேவையற்ற - வீண் விரயங்களைத் தவிர்த்தல், கூட்டான ஒத்துழைப்பு, பரோபகாரம், போன்ற மனிதப் பண்புகளின் பால் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டது.

ரோம சமூகத்தினரால் வெளியிடப்பட்ட Limits to Growth "வளர்ச்சியின் வரையறைகள்" எனும் அறிக்கையும், ஷூமாக்கர் அவர்களால் எழுதப்பட்ட Small is Beautiful "சிறியதே அழகானது" எனும் நூலும் இவ்வாறாகக் கல்வியை புது அம்சங்களின்பால் திசை திருப்புவதில் வெற்றி கொண்டன.

கல்வி படிப்படியாக தனியாள் அபிவிருத்தியிலும், சமூக அபிவிருத்தியிலும் கவனஞ்செலுத்தத் தொடங்கியது. சுயாதீனமாகவும் தனித்தனியாகவும் நாட்டை அபிவிருத்தி செய்தல் எனும் எண்ணக்கருவுக்குப் பதிலாக, "பொதுவாகவும் கூட்டாகவும் அபிவிருத்தியடைவோம்" எனும் எண்ணக்கரு பிரபல்யமடைய ஆரம்பித்தது. பொதுக் கிராமம் (அடண்க் கிராமம்) எனும் எண்ணக்கரு விசாலிப்படைந்தவுடன் அபிவிருத்தி தொடர்பாகவும் புதிய கண்ணோட்டத்தில் நோக்குவதில் அனைவரும் ஆர்வம் காட்டினர்.

## 4.3 அபிவிருத்திக் கல்வியும் சமுதாய ஈடுபாடும்.

அபிவிருத்தி என்பது மனிதனையே மையமாகக் கொண்ட ஒரு கருமத்தொடராகும் என்பது தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது; முற்காலத்தில் அபிவிருத்தி என்பது, சேமித்தல், முதலீடு செய்தல், தொழிற்சாலைகள், நீர்ப்பாய்ச்சல் திட்டங்கள், வலுச்சக்தி, பெருந்தெருக்கள், பாரிய கட்டடங்கள், பிற பௌதிக உற்பத்திகள் போன்றவற்றின் அடிப்படையிலேயே வரைவிலக்கணப்படுத்தப்பட்டது. சில வேளைகளில் தற்போதும் கூட சிலரால் இவ்வாறான கருத்து வெளியிடப்படுகின்றது. எனினும் அபிவிருத்திக் கருமத்தொடரில் சகல திசைகளிலும் பரம்பிக்காணப்படும் சக்தி மனிதனேயாவான். இறுதியில் இச்சக்தியே மனித சிந்தனையும் நடத்தையுமாகும் எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். இந்த மனித சிந்தனையும் நடத்தையும் கல்வியின் ஆதிக்கங்களுக்கு உட்பட்டவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு அமைய அபிவிருத்திக் கல்வி என்பது மனிதனையே மையமாகக் கொண்டுள்ளது என்பது தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. மனித உழைப்புத்திறனையும், திறமைகளையும் மெருகூட்டுவதற்குப் பதிலாக, மனிதத் தன்மையையும் மனிதனை மதிக்கும் தன்மையையும் வளர்க்க வேண்டியதன் அவசியம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. மனிதனிடத்தே காணப்படும் நமைச்சலை நீக்கி, அவனை மேம்படுத்துவதே கல்வியின் நோக்கமாக அமைதல் வேண்டும் எனும் கருத்து பரவியவண்ணமுள்ளது. மனிதனின் மேம்பாட்டுக்கு, உயர்வான சேவைகளைப் புரியக்கூடிய நிலையை எய்தக்கூடிய திறமைகளைக் கொண்டுள்ள அனைவருக்கும் அந்நிலையை எய்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே கல்வியின் பொறுப்பாகும். மனித்தன்மையின் யதார்த்த நிலையை ஒவ்வொருவருக்கும் விளக்குதல்-உணர்த்துதல் வேண்டும் எனும் கருத்து தற்போது பரம்பிய வண்ணமுள்ளது.

இதற்கு ஏற்ப, கல்வி, கல்வி அபிவிருத்தி ஆகிய எண்ணக்கருக்களின் மையப்படுத்தப்பட்ட சக்தி காரணமாக, மனிதனுக்காக வேண்டி, மனிதத் தன்மையை மேம்படுத்த வேண்டிய தேவை மேன்மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாறாக கல்வியை ஒவ்வொருவருக்கும் அமைத்தானதாக ஆக்கி, முழுச் சமூகத்துக்கும் கல்வியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனும் தேவையே தற்காலத்தின் அடிப்படை இலக்காக மாறியுள்ளது.

கல்வி இனியும் வரப்பிரசாதம் பெற்ற ஒரு வகுப்பினருக்கு மாத்திரம் உரியதாகாது. அது பொதுமக்களின் ஓர் உரிமையாக மாறி வருகின்றது. ஒவ்வொருவருக்கும் பொதுக் கல்வியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனும் அபிப்பிராயம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சமுதாயத்துக்காகவே கல்வி எனும் எண்ணக்கரு மேன்மேலும் விருத்தியடைந்து முன்னுரிமை பெற்று வருகின்றது. மேலிருந்து கீழ் நோக்கிப் பாய்ந்து செல்லும் வலுச்சக்தி முறையொன்றின் வழியே கல்வியை அமுற்படுத்த முடியாது என்பதும் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலை சமுதாயத்துக்குரியதாகும். சமுதாயத்தின் அபிவிருத்தியே பாடசாலையின் எதிர்பார்ப்பாக இருத்தல் வேண்டும். இவ்விரு நிறுவனங்களும் பரஸ்பரத் தொடர்புடன் கருமமாற்றுதல் வேண்டும். கடந்த ஐந்து தசாப்தங்களுள் சனநாயக, பொதுவுடைமைத் தத்துவங்கள் அமுற்படுத்தப்பட்டதன் பின்னர், கல்வியானது மனிதனின் பிறப்பு உரிமையாக மாறியுள்ளது. ஒவ்வொரு மனிதனிடத்தேயும் கல்வி அமைக்க வேண்டும் எனவும், கல்வியின் ஊடாக மனிதனின் ஆளுமை விருத்தி செய்யப்படல் வேண்டுமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாகப் பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையில் நிலவிய சேய்மை நிலை அற்றுப் போயிற்று. சமூகவியலுக்கு அமைய, சமுதாயம் என்பது, யாதேனுமொரு பிரதேசத்தில் பொதுவான ஒழுக்க நெறிகளையும், நிறுவனங்களையும் ஏற்றுக் கொண்டவாறு, ஒருவருடனொருவர் சமூகத் தொடர்புகளைக் ஏற்படுத்திக்கொண்டு, "நாம்" எனும் பொது உணர்வுடன் வாழக்கூடிய போக்கைக் கொண்ட மக்கட் தொகுதியினராகும்.

கல்வியின் மூலம் சமுதாயத்தின் மனதில் புத்துணர்வை ஏற்படுத்துதல் வேண்டும் என்பதும் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஓர் அபிப்பிராயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் "கற்றவனல்ல" எனுந் தவறான உணர்வு சமூகத்தின் மனதினுள் குடிகொண்டிருத்தல் ஏற்றதல்ல. சமுதாயத்தின் அறிவை ஞானத்தை மலரச் செய்வதன் மூலம் இந்த இழிவுணர்வைக் களையலாம். இது தொடர்பான பல முக்கியமான கருத்துக்கள் கடந்த பத்தாண்டு காலத்துள் கல்வித்துறையுள் புகுந்துள்ளன. மாகாத்மா காந்தி, மார்டின் லூதர்கிங், அடம் கர்ல், பவ்லோ பிரயர், ஜூலியஸ் நியரேரே போன்ற நவீன கல்வியியலாளர்களும் அரசியல் சிந்தனையாளர்களும் இக்கருத்துக்களை மேன்மேலும் போதித்துள்ளனர்.

நிலவுகின்ற முறைசார் பாடசாலைக் கல்வியானது, நிலவுகின்ற வகுப்பு வேறுபாடுகளைக் கொண்ட சமூகத்தை மேன்மேலும் அவ்வாறே பேணி வைத்திருக்க உதவுகின்றது எனவும், நமைச்சலுக்குள்ளானோரை அதே நிலையில் வைத்திருப்பதற்கு அது மறைமுகமாக உதவுகின்றது எனவும், அடம் கர்ல் தனது "Education for Liberation" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலைமை, பெரும்பகுதி மக்கள் தொடர்ந்தும் கல்வியறிவற்ற, தாழ்மையான உழைப்பாளிகளாயும், சிறு பகுதி மக்கள் கல்வியறிவுள்ளோராயும் கட்டளை பிறப்பிப்போராயும் நிருவாகிகளாயும் இருக்கும் நிலை ஏற்பட வழிவகுக்கும் எனவும் அவர் எடுத்துக் காட்டுகிறார்.

இது மனிதத்தன்மையைத் தாழ்நிலைப்படுத்துவதாகும் எனக் குறிப்பிடும் பவ்லோ பிரயர், இந்நிலைமையை நீக்குவதற்காக சமுதாயத்தைக் கற்றறிந்தோராக மாற்றுதல் வேண்டும் எனக் காட்டியுள்ளார். "விடுதலைக் கல்வி" (Pedagogy of the Oppressed) எனும் நூலில், பவ்லோ பிரயர், ஒவ்வொரு தனியாளிடத்திலும், காணப்படும் உள்ளார்ந்த திறன்கள், திறமைகள் என்பவற்றை மேம்படுத்த முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். நீண்டகாலமாக தான், தாழ்வான, கவனியாது விடப்படவேண்டிய ஒருவர் எனும் கருத்து சமுதாயத்தில் இடம்பெற்றுள்ளமையால், அவர்களிடத்தே மனிதத்துவம் நசுக்கப்பட்டுக் காணப்படுகின்றது. இந்நிலைமையிலிருந்து சமுதாயத்தை மீட்கும் போது அவர்கள் உயிர்ப்பான தொழிற்பாடுடைய தனியாள்களாக மாறுகின்றனர். அவ்வாறாக, தொழிற்பாடுடைய சமுதாயமொன்றினைத் தோற்றுவிப்பதன் மூலம் தேசிய உற்பத்தி மேன்மேலும் அதிகரிக்கின்றது. இவை எல்லாவற்றையும் விட மேலதிகமாக, மனிதரிடத்திலே மனிதத்துவம் தொடர்பான உணர்வு வளர்ச்சியடையும்.

மனிதத்துவம் மேற்கொணரப்படுவதுடன் பரஸ்பர ஒத்துழைப்பு, சகோதரத்துவம், நல்லெண்ணம், ஒன்றியவாழ்வு என்பன வளர்ச்சியடையும். ஒருவரையொருவர் தோற்கடித்து தான் முன்னேறிச் செல்லும் போட்டி மனப்பான்மை குறைவடையும். அவ்வாறான நிலைமை கல்வியின் மூலம் ஏற்படுத்தப்படின் அதன் மூலம் சமூக அபிவிருத்தியும், தேசிய அபிருத்தியும் ஏற்படும். மனி தன், அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு சக்தியாகையால், மனிதனை முழுமையாக அபிவிருத்தியடைந்த ஒருவனாக மாற்றுவதற்காக, அவனிடத்தே பண்பளவிலான வளர்ச்சி ஏற்பட வேண்டும் . எனவே அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட சமூகத்தினுள் அபிவிருத்தி ஒழுக்கநெறிகள் நுழைதல் வேண்டும். பாடசாலைகள், ஏனைய கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊடாகவும் கல்வி ஊடகங்களினூடாகவும் இந்த அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கநெறிகள் சமுதாயத்தினால் கவர்ந்துகொள்ளப்படல் வேண்டும். கல்வியின் ஒவ்வொரு படியின்போதும் சமுதாய ஈடுபாட்டைப் பெற்றுக் கொள்ளவதன் ஊடாக அபிவிருத்திச் செயற்றொடரைப் பொருளுள்ளவாறு வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்ளலாம்.

செயற்பாடு : 2

நீங்கள் பெற்ற அறிவை, பின்வரும் செயற்பாட்டை நிறைவு செய்வதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

"வளர்ச்சியின் வரையறைகள்" (Limits to Growth) (மார்க வெளியீடு) எனும் அறிக்கையை வாசித்து 21 ஆம் நூற்றாண்டில் உலகம் எதிர் நோக்கவுள்ள ஐந்து சவால்களைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்று பற்றியும் குறிப்புக்கள் எழுதுக.

## 4.4 சமுதாய அபிவிருத்தி

சமுதாய அபிவிருத்தி என்பது, முழுச் சமுதாயத்திலும் பொருளாதார, சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு கருமத்தொடராகும். இதற்காகச் சமுதாயத்தின் உயிர்ப்பான செயற்படு ரீதியிலான ஈடுபாட்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மனித நல்வாழ்வுக்குத் தேவையான பல விடயங்களை ஒன்றிணைத்து அமுற்படுத்துவதே சமுதாய அபிவிருத்தி என்பதால் கருதப்படுகின்றது. அவ்விடயங்கள் வருமாறு:

(1) சுயமுயற்சியுனும், ஒற்றுமையுடனும் செயற்படுவதற்கும் புதிய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவதற்கும் மனிதரிடத்தே அதற்கான திறன்களை விருத்தி செய்தல்

(2) சமுதாய ஈடுபாட்டுடன் மேற்கொள்ளும் முயற்சிகளை மேன்மேலும் விருத்தி செய்துகொள்ளலாம். சமுதாயத்தின் நல்வாழ்வை உரியவிதத்தில் ஏற்படுத்திக் கொள்வதற்காக, பௌதிக, பொருளாதார, சமூகப்பிரிவுகளை ஒரேயடியாக விருத்தி செய்தல் வேண்டும். இதற்காக, சமுதாய அபிவிருத்திக்காக, வெவ்வேறு அபிவிருத்திப் பிரிவுகளையுள்ளடக்கிய ஒன்றிணைக்கப்பட்ட வேலைத்திட்டங்களைத் திட்டமிடவேண்டியது அவசியமாகும்.

சமுதாய அபிவிருத்தியின் போது சமுதாயமே அவ்விருத்தி செய்யப்படுகின்றது. வ்வேசாய அபிவிருத்தி பற்றிக் கருதும்போது நாம் மிக மிகத் திருப்பதிகரமாக சமுதாயத்தின் மீதே கவனஞ் செலுத்துகின்றோம். அதாவது ஒவ்வொரு துறையிலும், தமது அபிவருத்தியை எய்துவதற்காக, சுறுசுறுப்புடனும் ஆர்வத்துடனும் உயிர்ப்புடனும் தொழிற்படுகின்ற அங்கத்தவர்களைக் கொண்ட சமுதாயத்தையே கருதுகின்றோம்.

சமுதாய அபிவிருத்தியின் இலக்கானது, பொருளாதார அபிவிருத்தியுடன் பின்னிப்பிணைந்த சமூக அபிவிருத்தியாகும். சமுதாய அபிவிருத்தியில் சமூக அபிவிருத்தி என்பதால் பின்வருவனவே கருதப்படுகின்றன.

* சமுதாயத்துள் பரஸ்பர தொடர்புகளை விருத்தி செய்தல்.
* சமுதாயத்துள் சுயமுயற்சிக்கான திறனையும் ஆர்வத்தையும் வளர்ப்பதும் அதற்கான தன்னம்பிக்கையை உறுதிப்படுத்துதலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி தொடர்பாக சமுதாயத்தினர் காட்டும் நடுநிலையான தன்மையைக் களைவதே கல்வியின் ஊடாக மேற்கொள்ளக் கூடியதாகும். சமுதாயத்தின் நடுநிலைத்தன்மையை நீக்கி, அவர்களிடத்தே தன்நம்பிக்கையை வளர்த்தல் வேண்டும். இதற்காகச் சமுதாயத்தினரிடத்தே காணப்படும் திறமைகளை வளர்த்தல் வேண்டும். பரஸ்பர தொடர்புகளை வளர்க்க வேண்டுமெனின், பொறுப்புக்களை ஏற்கும் திறமை, தலைமைத்துவத்துவத் திறமை, கலந்துரையாடல் மூலம் முடிவுகளை மேற்கொள்ளும் திறன் என்பன விருத்தியடைதல் வேண்டும். இதற்கு அமைய பொருளாதாரத்துறை, சமூகத்துறை ஆகிய இரண்டு துறைகளிலும் விருத்தியை ஏற்படுத்துதல் வேண்டும்.

## 4.5 உறுதியான சமூகத்தைத் தோற்றுவிப்பதற்கான அபிவிருத்தி.

உலகில் காணப்படும் இயற்கை வளங்கள் வரையறைக்குட்பட்டவையாகும். நீண்ட காலமாக உயிர்ச்சுவடுகளாகப் படிந்த நிலக்கரி, கனிய எண்ணெய், உலோக வகைகள் போன்றவை, கணித்தறியக்கூடிய அளவுக்கு வரையறைபட்டுக் காணப்படுகின்றன. எனினும் வரலாற்றில் என்றுமில்லாதவாறு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் விருத்தியடைந்துள்ளமையால், வளங்களைப் பெருமளவில் கண்டறியவும் இனங்கண்டு கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவ்வாறாகப் புது வளங்களைக் கண்டறிந்தமையாலும் இனங்கண்டுள்ளமையாலும் முழு உலகும் எதிர்நோக்கும் பிரதானமான பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வதில் விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். 1972 உரோமர் சமூகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட "வளர்ச்சியின் வரையறைகள்" எனும் அறிக்கையில் வெளியிடப்பட்ட அபாய அறிவிப்பு சகலரதும் கவனத்தைப் பெற்றுள்ளது. தற்போது நிலவும் விதத்தில் தொடர்ந்தும் பேரளவில் வளங்கள் நுகரப்படின் மேலும் அரை நூற்றாண்டு காலம் கழிய முன்பதாகவே உலகில் காணப்படும் அரிய இயற்கை வளங்களான நிலக்கரி, கனிய எண்ணெய், இரும்புத்தாது போன்ற பெறுமதி மிக்க வளங்கள் தீர்ந்துவிடக் கூடும் என்பதே அவ்வறிக்கையின் சுருக்கமாகும். இந்த அபாய அறிவிப்புடன் வெளியிடப்பட்ட "வளர்ச்சியின் வரையறைகள்" எனும் அறிக்கை தொடர்பாகப் பிற்காலத்தில் பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்ட போதிலும் அதன் மூலம் குறிப்பிடப்பட்ட பிரதானமான கருத்து மிக முக்கியமானதாகும். இந்த நவீனமயமாக்கல் கருமத்தொடரினதும், ஆசைகளை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளும் முயற்சியினதும் பெறுபேறு, உலகின் இயற்கை வளங்கள் தீர்ந்துபோவதும், சுற்றாடல் மாசடைதல் போன்ற விளைவுகள் தோன்றுவதுமேயாகும்.

எனவே கல்வி எவ்வாறான அபிவிருத்திக்கானது எனும் பிரச்சினையை மீண்டும் கவனிக்க வேண்டி ஏற்பட்டது. இதற்கு ஏற்ப, தனியான பொருளாதார அபிவிருத்தி தனியாள் வருமானத்தை அதிகரித்தல் போன்ற வழிவகைகள் மீண்டும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. புவியில் உள்ள இந்த வரையறைக்குட்பட்ட வளங்களை இவ்வாறாக உரிய விதத்தில் நுகருவதற்காக, நுகர்வுச் சமூகமொன்றிற்குப் பதிலாக தர்க்கரீதியான விவேகமுடைய சமூகமொன்றினைத் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் எழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாது, இறவாது நிலவுகின்ற ஒரு சமூகத்துக்கு ஏற்ற கல்வி எவ்வாறானது என்பது இதற்கு ஏற்பத் தீர்மானிக்கப்பட்ட வேண்டியதாகும். எல்லையின்றி நுகரும் பிரிவின்பால் கவனஞ் செலுத்துவதற்காக நுகருவோரைக் கொண்ட போட்டிப்பாங்கான கல்வியை வழங்கினால், அதனை அபிவிருத்தி எனும் பெயரால் அழிவை நோக்கி முகப்படுத்தப்படும் ஒரு செயலாகும் எனக் குறிப்பிடலாம். எனவே எதிர்காலத்தைத் தூரதிருஷ்டியுடன் நோக்கி, பொருத்தமான கல்விமுறை எது எனத் தீர்மானிக்க வேண்டிய ஏற்படுகின்றது.

## 4.6 பொதுச் சமூகத்துக்குப் பொருத்தமான அபிவிருத்திக் கல்வி

உலகுக்கு ஏற்ற அபிவிருத்தி மாதிரியுரு எது என்பது தொடர்பான பொதுவான தீர்மானத்தை எடுப்பது கடினமானதாகும். பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியானது 'வரையறையற்ற ஆசைகள்' எண்ணக்கருவுடன் தொடர்புற்றுக் காணப் படுகின்றது. மனிதனின் தேவைகளை நிறைவு செய்ய உதவும். 'திறந்த அபிவிருத்தி மாதிரியுரு' வொன்றினை அவர்கள் சமர்ப்பிக்கின்றனர். மூன்றாம் உலக நாடுகளுள் பெரும்பாலானவை, மூடிய அபிவிருத்தி எண் ணக்கரு தொடர்பான கருத்துக்களை வெளியிடுகின்றனர். விசேடமாக, இலத்தீன் அமெரிக்க நாடுகளினதும், ஆசிய, ஆபிரிக்க நாடுகளதும் அர சியல் தலைவர்கள், பொருளாதார, கல்வி நிபுணர்கள் ஆகியோரும் உலகின் பெரும்பாலான விஞ்ஞானிகளும் இது தொடர்பாக "மூடிய" அபிவிருத்தி எண்ணக்கருவையே கொண்டுள்ளனர்.

"உலகம் ஒன்று எனும் கருத்து அதாவது பொதுக் கிராம எண்ணக்கரு" முன்னரைவிட இப்போது மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெற்றுக்கொள்ளல்,வள வீண் விரயத்தைத் தவிர்த்தல், சிக்கனத்தை விருத்தி செய்வதும் தேவையற்ற ஆசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொள்ளாதிருத்தலும் போன்ற பொருளுள்ள நடவடிக்கைகளையும் எண்ணக்கருக்களையும் விருத்தி செய்வதற்கு ஏற்ற கல்வி அமுற்படுத்தப்படல் வேண்டும். போட்டி மனப்பான்மைக்குப் பதிலாக, ஒற்றுமை, ஒத்துழைப்பு ஆகியவற்றை விருத்தி செய்தல் வேண்டும். ஒற்றுமையுடனும், ஒத்துழைப்புடனும் கருமாற்ற வேண்டிய பல்வேறு சந்தர்ப்பங்களை நாம் எதிர்நோக்குகின்றோம். அபி விருத்திச் சிந்தனைக்காக, இவ்வாறான பொதுவான கூட்டுத்திறன்களை விருத்தி செய்வது அவசியமாகின்றது.

மூன்றாம் உலக நாடுகள் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ' சுய துங்கியிருப்பு' எண்ணக்கருவையே அபிவிருத்தி வழிவகையாகக் கருதுகின்றமை தெரிகின்றது. தொடர்ந்தும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் மீது துங்கியிருப்பதைக் கைவிட்டு, சுய சக்தி, சுயமுயற்சி, தன்னம்பிக்கை, தன்மானம் போன்றவற்றைப் பிரதானமானவையாக மதித்து புதிய அபிவிருத்தித் தத்துவத்துக்கு அமையச் செயற்பட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தொடர்ந்தும் அபிவிருத்தி யடைந்த நாடுகளைப் பின்பற்றி அல்லது அந்நாடுகளின் பொருளாதார நிபுணர்களால் சிறப்புரைத்துக் காட்டப்பட்ட திறந்த பொருளாதார முறையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றிக் கருமமாற்றுதல் தமது நாடுகளின் அபிவிருத்திக்கு எந்த அளவுக்குப் பொருத்தமானது எனும் வினாவை எழுப்புகின்றனர். தத்துவார்த்த நுண்ஆய்வொன்றில் ஈடுபடும்போது, தெளிவான பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. மனித வர்க்கத்தின் நிலைத்திருப்பு, பொதுச் சமுதாயத்தின் நல்வாழ்வு போன்ற பரந்த – விரிந்த வினாக்கள் தொடர்பாக நுண்ணாய்வுடன் நோக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இவ்வாறாக அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பான விரிவான பாகுபாட்டைச் சமர்ப்பித்து அதனை மீண்டும் மீண்டும் கலந்துரையாடலுக்குள்ளாக்கி, பொதுமக்களின் அறிவை – ஞானத்தை மலரச் செய்வது கல்வியின் மூலம் ஆற்றக்கூடியதொன்றாகும். அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பாக மீண்டும் வாதங்கள் புரிந்து, கலந்துரையாடுவதன் மூலம் மக்களிடத்தே ஞான விழிப் புணர்வு தோன்றும். இதன்மூலம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

பொதுவாக ஒவ்வொரு நாட்டுக்கும் விசேடமாக இலங்கைக்கும் பொருத்தமான 'அபிவிருத்தி' யாது என்பது தொடர்பான சரியான தீர்மானத்தை மேற் கொள்வது மிக அவசியமாகும். இதற்காகத் தத்துவ ஞானியர்கள், பொருளி யலாளர்கள், சமூகவியலாளர்கள், வரலாற்றியலாளர்கள், மானிடவியலாளர்கள், கல்வியியலாளர்கள் போன்ற வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் ஒன்று சேர்ந்து நாடுகளுக்குப் பொருத்தமான அபிவிருத்தித் தத்துவம் எது என்பதைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

நாட்டின் தேசிய கொள்கைகளைத் திட்டமிடுவதற்கும், கல்விக் கொள்கைகளைத் திட்டமிடுவதற்கும் இப்பரந்த குறிக்கோள்களை அறிந்திருத்தல் மிக முக்கிய மாகின்றது. இவ்வாறான குறிக்கோள்களைத் தீர்மானிக்கும் போது அபிவிருத்தியில் தேசியத் தன்மை காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துதல் வேண்டும். நாட்டின் அபிவிருத்தி, அந்நாட்டு மக்களின் சிந்தனையை உணர்ந்து அவர்களது ஆரம்பிக்கும் சக்தியினை மூலமாகக் கொண்டு, அவர்களது எதர்கால எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்து கொடுப்பதொன்றாக அமைய வேண்டும். அத்தோடு அது இயன்ற அளவுக்கு அந்நாட்டின் திறன்கள், வளங்கள் ஆகியவற்றின் மீது தங்கியிருத்தல் வேண்டும். இதனை எய்துவதற்காகக் கல்வியானது, விசேடமாக, அபிவிருத்தி தொடர்பான சரியான சிந்தனையின் ஊடாகத் தோன்றிய தேசிய அபிவிருத்தி' மாதிரிகள் பெருந்தொகையானவற்றுக்கு இடமளிப்பதொன்றாக இருத்தல் வேண்டும். இவ்வாறாக அபிவிருத்திச் சுட்டிகளைத் தெளிவாக அறிந்து கொண்டு கல்வியைத் திட்டமிடல் வேண்டும். இவ்வாறாகத் திட்டமிட்டுக் கொள்ளும் அபிவிருத்தி முயற்சிகள் யாவும், கட்டியெழுப்ப முயற்சிக்கும் அபிவிருத்தியின்பால் மக்களை முகப்படுத்துவனவாக அமைதல் வேண்டும்.

## 4.7 இலங்கைக்குப் பொருத்தமான அபிவிருத்திக் கல்வியை நோக்கி...

இலங்கைக்குப் பொருத்தமான அபிவிருத்தித் தத்துவம் ஒன்றினைக் கட்டியெழுப்புகையில் மேலே கலந்துரையாடப்பட்ட பொதுச் சமூகத்துக்கும் சிறப்புச் சமூகங்களுக்கும் பொருத்தமான தத்துவத்தின்பால் கவனஞ் செலுத்துதல் வேண்டும். பாடசாலைக் கல்வியின் ஊடாக அடிப்படைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு மாணவனும் தேசிய உற்பத்திக்குக் கைகொடுக்கக்கூடிய, நாட்டுப்பற்றைக் கொண்ட தனியாளாக மாறுதல் வேண் டும். பொதுமக்களிடத்தே, உற்பத்தியில் பங்குபற்றக்கூடிய அளவு, திறன்கள், மனப்பாங்குகள் போன்றவற்றை ஏற்படுத்துவதற்கு ஏற்ற சக்தியை வளர்த்தல் வேண்டும்.

தேசிய அபிவிருத்திக்காக, நாட்டுப்பற்று, உள்நாட்டுப் பாவனைப்பொருள்களை நுகருவதன் முக்கியத்துவம், தேசிய வளங்களை உச்ச அளவு சிக்கனத்துடன் பயன்படுத்தல், அவற்றின் மூலம் பயன்பெறல் ஆகியவற்றில் மக்களை ஊக்குவிக்கும் சக்தியையும் மக்களுக்குப் புத்துணர்வூட்டும் சக்தியையும் கல்வியின் ஊடாகப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். எனவே அபிவிருத்தி என்பது மனிதனை மையமாகக் கொண்ட ஒரு கருமத்தொடராக அமைதல் வேண்டும். மற்றைய அனைத்துக் காரணிகளும் நிறைவு பெற்றபோதிலும் மனிதன் இன்றி நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. எனவே தேசிய அபிவிருத்திக்குத் தேவையானவாறும், நாட்டுப்பற்று வளரக்கூடியவாறும் கல்வி புகட்டுவது மிக முக்கியமானதாகும்.

வேலை செய்யும் திறனைக் கொண்ட கைகளுக்கும் புது ஆக்கங்களை நிர்மாணிக்கும் கைகளுக்கும் அதற்குத் தேவையான வசதிகளும் வரவேற்பும் கிடைக்கப் பெறல் வேண்டும், வேலைசெய்தபடி கற்கும் - கற்றபடி வேலைசெய்யும் மாணவர் குழுவினரைத் தோற்றுவிக்கக்கூடியவாறு கல்வியைத் திட்டமிட வேண்டியுள்ளது. அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட கல்வியின் ஊடாக அபிவிருத்தி ஒழுக்க நெறிகளைப் பொதுமக்களது மனதுள் புகுத்துதல் வேண்டும். அவ்வாறான அபிவிருத்தி ஒழுக்க நெறிகளைப் பொதுமக்கள் மனதினுள் புகுத்தக்கூடிய திறமையைக் கல்வி கொண்டிராவிடின், அந்நாட்டு அபிவிருத்திக்குக் கல்வியினால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள், பொறுப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை எனக் கொள்ளலாம்.

நாட்டின் இயற்கை வளங்கள் தொடர்பான உண்மைநிலையைப் பொது மக்களுக்கு விளக்குவதற்கும், அவ்வளங்களை விருத்திசெய்வதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் பொதுமக்களைப் பழக்குவது- பயிற்றுவது அபிவிருத்தி ஒழுக்க நெறியாகும். செயல் மூலமும் முன்மாதிரிகளின் மூலமும் அக்கருத்துக்களை நிறைவு செய்தல் வேண்டும். அபிவிருத்தி ஒழுக்க நெறியொன்றினுள் புகுமிடத்து, புதுப்புது வாய்ப்புப்பார்த்தல்களுக்கும் பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்கும், தேசிய வளங்களைத் தேடியறிந்து உச்சப் பயன்பெறுவதற்காகவும் குறைந்தளவு வளங்களைக் கொண்டு உச்ச பயனைப் பெறுவதற்கும் முயற்சிப்பர். அப்போது மட்டுமே கிடைக்கப்பெறும் உதவிகளைக் கொண்டு உச்சப்பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நாட்டின் ஒவ்வொருவரும் குடும்பத்தின் அங்கத்தவர்களாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், பொதுப் பிரச்சினைகளின்போது ஒற்றுமையாகக் கருமமாற்றுவதற்கும், வீழ்ந்துள்ள படுபாதாளத்திலிருந்து கரையேறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவாறு ஒற்றுமையுடன் ஒத்துழைப்புடன் கருமமாற்றுவதற்கும் பொருத்தமான உளத் திருப்பத்தைக் கல்வியின் ஊடாக ஏற்படுத்துதல் வேண்டும். பொதுமக்களிடைத்தே ஒற்றுமை, சகோதரத்துவம், ஆகியவற்றை வளர்த்தல் கல்வியின் பொறுப்பாகும். அபிவிருத்திக் கருமத்தொடருக்காகப் பொதுமக்கள் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு கல்வியைத் திட்டமிடுதல் வேண்டும். இதற்கு ஏற்பக் அபிவிருத்தித் தத்துவத்தைக் கட்டியெழுப்புதல், அச்செய்தியைப் பொதுமக்களின் மனதினுள் புகுத்துதல், அபிவிருத்திக் கருமத் தொடருக்கு ஏற்ற ஒழுக்க நெறித் தொகுதியொன்றினைக் கட்டியெழுப்புதல், உரிய சிந்தனையை ஏற்படுத்திப் பயிற்சியளித்தல் என்பன கல்வியினால் ஆற்றப்பட வேண்டிய பொறுப்புக்களாகும்.

### 4.8 "வாழ் நாள் கல்வி" எண்ணக்கரு (ஆயுட்காலக் கல்வி)

வாழ்நாள் கல்வி எண்ணக்கரு தற்போது மிகப் பிரபல்யமடைந்து வருகின்றது. யுனெஸ்கோ நிறுவனத்தினால், எட்கா போரே அவர்களது தலைமைத்துவத்தில் நியமிக்கப்பட்ட ஏழாவது சருவதேசக் கமிட்டியின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட "வாழ்க்கைக்காகக் கல்வி – இன்றைக்கும் நாளைக்கும் பொருத்தமான கல்வி" எனும் அறிக்கையில் இடம்பெற்றுள்ள கருத்துக்களின் ஊடாக இது மேலும் தெளிவாகின்றது.

ஆயுட் காலக் கல்வி எண்ணக்கருவில் விரிவான அர்த்தம் பொதிந்துள்ளது.

* மனிதனுக்கு பிறப்பு தொட்டு இறப்பு வரை கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
* நாட்டுமக்கள் ஒவ்வொருவருக்கும் கல்வி புகட்டுதல்.
* கல்வியைப் பாடசாலைக்கும் முறைமையான கல்வி நிறுவனங்களுக்கும் மாத்திரம் வரையறைப்படுத்தாதிருத்தல்.
* அனுபவங்களின் ஊடாகக் கல்வி பெறல்.
* மனிதன் தனது வாழ்நாள் முழுவதிலும், கற்கிறோம் என்ற உணர்வுடனோ கற்கிறோம் என்ற உணர்வு இன்றியோ கற்றுக் கொள்ளல்.

இந்த இயற்கையான இயக்க எண்ணக்கரு கூட்டுமொத்தமாக முற்றுமுழுதாக செயற்படுத்தப்பட்டுள்ளது. கற்றலானது மாணவர்களால் பாடசாலைக் காலத்துள் பெறப்படவேண்டியதொன்றாகும் எனும் காலங்கடந்த மனப்பாங்கை மறுதலிக்க வேண்டியது அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.9 ஆயுட்காலக் கல்வி நோக்கங்கள்

வாழ்நாள் முழுவதிலும் கற்றுக் கொள்ளவேண்டும் எனும் ஆர்வத்தின் மூலம் உச்சப் பயனைப் பெற்றுக்கொள்ளல்.

தனியாளுக்கு வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொருத்தமானதைத் தெரிவு செய்து கொள்ளக்கூடிய திறனைப் பெற்றுக்கொடுத்தல். வழங்கப்படுவதையோ சொல்வதையோ அவ்வாறே பெற்றுக்கொள்ளும், ஏற்றுக்கொள்ளும் ஒருவராக இருப்பதைவிட தனக்குத் தேவையானது எது, தேவையற்றது எது, தான் விலைக்கு வாங்கக் கூடிய பொருள் எது, வாங்கக்கூடாத பொருள் எது என்பதை உணர்ந்து விளங்கிக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல்.

ஒவ்வொருவருக்கும் தாம் வாழுகின்ற எப்போதும் மாற்றமடைந்த வண்ணம் காணப்படும் சுற்றடலுக்கு ஏற்றவாறு ஆக்கபூர்வமாக இயைபாக்கமடையக்கூடிய திறனைப் பெற்றுக்கொடுத்தல். இங்கு தனியாள் உயிர்ப்பற்ற தொழிற்படாத ஒருவராக அன்றி, உயிர்ப்புடன் துடிப்புடன் சமூக நடவடிக்கைகளில் தொடர்பு கொண்டு மாற்றமடையும் சுற்றாடலை விளங்கிக் கொண்டு அச்சுற்றாடலுடன் யாதேனும் கருத்துக்களைச் சேர்க்கக் கூடிய ஒருவராகவும், மாற்றப்படவேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு தனியாளும் தனது வாழ்க்கையில் உச்ச நிலைக்கு வளர்ச்சியடைவதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதோடு போசிக்கப்படவும் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு தனியாளதும் அபிலாசைகளையும் ஆர்வங்களையும் நிறைவு செய்யவேண்டுமென்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். அதாவது ஒவ்வொரு தனியாளையும் உடல், விவேக அம்சங்களிலும், சமூக, மனப்பாங்கு அம்சங்களிலும் பூரண வளர்ச்சி பெற்றவராக மாற்றுவதே இதனால் கருதப்படுவதாகும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் எதிர்கொள்ளக்கூடிய திறனையும் ஆயத்த நிலையையும் தனியாளிடத்தே விருத்தி செய்வதும் ஆயுள்காலக் கல்வியின் ஊடாக எதிர்பார்க்கப்படுவதாகும். ஆயுட்காலக் கல்வியில், தரம் வழங்குதல், சான்றிதழ் வழங்குதல், பரிசு வழங்குதல் என்பன இடம்பெறுவதில்லை. ஒவ்வொருவருக்கும் தத்தமது திறன்கள், விருப்பு வெறுப்புக்கள், தேவைகள் ஆகியவற்றுக்கு அமையக் கல்விபெறும் சுதந்திரமும் உரிமையும் கிடைக்கப்பெறும்.

தொழில் ரீதியில் வெவ்வேறு துறைகளில் அவ்வப்போது பயிற்சிகளைப் பெற வழிகிடைப்பதும், அதன் ஊடாகப் புதிய தொழினுட்ப உலகுக்குப் பொருத்தமான சிக்கலான திறன்களைப் பெற்ற சந்ததி தோன்றுவதுமே இதன் பெறுபேறுகளாகும். ஒவ்வொரு தனியாளும் ஒவ்வொரு சமூக அலகு என்ற வகையில், சமனான முக்கியத்துத்தைக் கொண்டிருப்பதால் தனியாளின் ஆளுமையை வளர்த்து இயன்ற அளவுக்கு முழுமையான வாழ்க்கையை நடத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பது மற்றுமொரு நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக, நவீன சமூகத்துக்குத் தேவையான, 21ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான, இடையீடின்றிக் கல்வியைப் பெறுவதில் ஈடுபட்டுள்ள. சவால்களை எதிர்நோக்கக்கூடிய மனிதனை உருவாக்குவதற்கு ஏற்ற கல்வி எண்ணக்கருவாகவே ஆயுட்காலக் கல்வி எண்ணக்கரு குறிக்கப்படுகின்றது. மனித வரலாற்றின் உயரிய காலப்பகுதியொன்றில் ஆயுட்காலக் கல்விக் கருமத்தொடர் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனப் பிரரேரிக்கப்பட்டுள்ளமையால், புதுச்சிந்தனைகள், தருக்கங்கள், நுண்ணாய்வுகள் ஆகியவற்றின் ஊடாக ஒவ்வொரு தனியாளுக்கும் தாம் தொடர்பான உண்மைக குகையொன்றினைப் பெற்றுக் கொள்ளலாம். எப்போதும் ஆராய்சிக்கும் நுண்ணாய்வுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளமையினால், விஞ்ஞான, பூர்வமாக உண்மையை ஆய்ந்தறிவதற்கான வாய்ப்பு எப்போதும் தடையின்றிக் கிடைக் கப் பெறுகின்றது, இதற்கு ஏற்ப, ஆயுட் காலக் கல்வியானது, மனித வருக்கத்தின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துகின்ற, சுய வெற்றியை ஈட்டித் தருகின்ற ஒரு தொடர்ச்சியான செயற்றொடராகும். இந்நோக்கத்தை எய்துவதற்காக முறைசார் கல்வியிலும் முறைசாரா, முறையில் கல்வித் துறைகளிலும் சில, சீர்திருத்தங்களை மேற் கொள்ள வேண்டியுள்ளது. தேவையான எவரேனுமொரு தனியாளுக்கு, தேவையான எவ்வேளையில், தேவையான எவ்வறிவையும் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை அமைத்துக் கொடுத்தல் அவசியமாகின்றது. இதற்காக கல்வி மையச சமூகமொன்றினைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

## 4.10 கல்வி மையச் சமூகம்

கல்விமைய சமூகமொன்றினுள்ளேயே ஆயுட்காலக் கல்வி எண்ணக்கரு பயன் தர முடியும். கற்றலில் ஈடுபடும் சமூகத்தையே இது குறிக்கின்றது. அவ்வாறானதொரு சமூகத்தைத் தோற்றுவிக்க வேண்டியதன் தேவை ஆயுள்காலக் கல்வி எண்ணக்கருவின் ஊடாக உறுதிப்படுத்தப்படுகின்றது. கல்விமையச் சமூகத்தைத் தோற்றுவிப்பதற்காக ஒரேடியாகவே மூன்று துறைகளில் சீர்திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். நிலவுகின்ற முறைமையான (Formal) துறையைப் புது எண்ணக்கருவுக்குப் பொருத்தமானவாறு ஒழுங்குபடுத்துவதும், இது வரைகாலமும் குறிப்பிடத்தக்க அளவு கவனம் செலுத்தப்பட்டாத, முறைமையற்ற (Informal) முறைசாரா (Nonformal) கல்வித்துறைகளை மனிதனுக்குக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் வண்ணம் ஒழுங்குபடுத்துவதும் அதன் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்து கொள்வதற்கான வழிவகைகளை மேற்கொள்வதும் அவசியமாகும்.

கல்வி மையச் சமூகத்தில் காணப்பட வேண்டிய தன்மையானது, இதற்கு முன்னர் கல்வித்துறையில் காணப்பட்ட தன்மைகளைவிட, நெகிழ்ச்சியானதும், எளிதானதுமாக இருத்தல் வேண்டும். தற்போது கல்வித்துறையில் காணப்படும் உறுதியான சட்டதிட்டங்கள், நெகிழ்தன்மையற்ற கருமத்தொடர்கள் ஆகியன காரணமாக, பெருந்தொகையான மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன. ஆயுட் காலக் கல்வி எண்ணக் கருவுக்கு அமைய, சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் தத்தமது வாழ்நாள் பூராவிலும் அல்லது தேவையான வேளையில், யாதேனுமொரு முறையில் தான் விரும்பிய இடத்தில் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கப் பெறல் வேண்டும். தற்போது காணப்படும் பாடசாலை முறையில் ஏனியில் ஏறுவகைதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று, கீழிருந்து மேலாக ஏற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. கல்வி மையச் சமூகத்தில், முறைசார் - முறைசாரா முறைமையற்ற ஆகிய மூன்று அம்சங்களையும் கல்விக்கருமத் தொடரில் பங்கு கொள்ளச் செய்தவன் மூலம் ஒவ்வொருவரும் தான் விரும்பும் வேளை, தாம் விரும்பிய இடத்திற்குச் சென்று, தேவையான அளவு கல்வியைப் பெற்றுக் கொள்ள வாய்யப்புக் கிடைக்கப் பெறுகின்றது.

கல்வியைப் பெற்றுக் கொடுக்கையில் பாடசாலை தவிர்ந்தவிடத்து, தொடர்பாடல் ஊடகங்களுக்கும் முக்கிய இடம் கிடைக்கப் பெறுகின்றது. பாடாசைலையின் பொறுப்புக்கள் தற்போது காணப்படுவதைவிட விரிவடைகின்றன. அத்தோடு பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பும் மேலும் நெருக்கமடையும் என்பதில் ஐயமில்லை

கல்வி மையச் சமூகத்தில் கற்றற் கருமம், முழுநேரக் கருமமொன்று மாத்திரமல்ல. அது குறைநேர, ஓய்வுநேர கருமமாகவும் செயற்படும். ஆயுள்காலக் கல்வியில் மனதைச் செலுத்தியதன் பின்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் கல்விக்காகச் செலவு செய்யயக்கூடிய சமூகமொன்று தோன்றும். அவர்களுக்குத் தமக்குத் தேவையான விதத்தில் கல்வி பெறக்கூடிய வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கப் பெறுகின்றது.

கல்வி மையச் சமூகத்தில் கல்வி பெறுபவரே முக்கிய இடத்தைப் பெறுகின்றார். கற்க வேண்டியது யாது? கற்றுக்கொள்ளும் நேரம் எது? எவ்வளவு கற்றல் வேண்டும்? ஆகிய அனைத்தும் கற்பவராலேயே தீர்மானிக்கப்படும். இது சுய முயற்சியினாலும் சுய விருப்பினாலும் நிகழும் கல்வியாகும். இதற்கு அமைய, தற்போது பாடசாலையில் காணப்படும், கூட்டு முறையைவிட, கல்வி மையச் சமூகத்தின் கல்வி முறை தனியாள் மையமானதாக மாறும். இக்கல்வி தனியாளுக்குப் பொருளுள்ள தொன்றாகையால், பெற்றுக்கொள்ளும் கல்வி பெறுமதியையும் கொண்டதாகும். கல்வி மையச் சமூகத்தில் வளருகின்ற. ஆயுள்காலக் கல்வியில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் உயிர்ப்பற்ற செயற்படாத கலாசாரத்திலிருந்து வெளியேறி, செயற்படுதன்மை கொண்ட. கற்றுக்கொள்ளும் ஒரு கூட்டத்தினராக மாறுவர் என்பது திண்ணம்.

இவ்வறான கல்வி மையச் சமூகத்தில் நிலவுகின்ற முற்று முழுதான சமூகமும் அவனது பாடசாலையாகும். வீடு, அயற் சமூகம், வேலைத்தலம், ரேடியோ, பயணங்கள், அலுவலகம், கடைகள் தொழிற்சாலைகள், நூலகங்கள், கேளிக்கைக் கொட்டகைகள், தொல்பொருள் காட்சிச்சாலைகளை போன்ற எண்ணற்ற கற்றல் வளங்கள் மூலம் தனியாளுக்குக் கல்வி கடைக்கப் பெறுகின்றது.

இவ்வாறான புதுச் சமூகத்தில் கல்வியானது பெரும்பாலும் விஞ்ஞானம், தொழிநுட்பம் ஆகியவற்றிலேயே தங்கியிருக்கும். கல்விக்கும் வேலை செய்வதற்கும் இடையில் உள்ள இரட்டைப் பிரிப்புநிலை அற்றுப்போகும். அவையிரண்டும் சமாந்தரமாகச் செல்லும். அதாவதுகற்றபடி வேலை செய்கின்ற - வேலை செய்தவாறு கற்கின்ற சமூகமொன்று தோன்றும். மேற் கூறியவாறு எளிய நெகிழ்ச்சியான ஆனால் தொடர்ச்சியான கல்வி வாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்களைப் பெற்றுக் கொடுப்பதானது கல்வி மையச் சமூகத்தினால் ஆற்றப்பட வேண்டிய தொன்றாகும். வாழ்நாள் பூராவும் கற்கின்ற, கற்றற் சுற்றாடலொன்றினைச் சமூகத்தினுள் தோற்றுவிப்பதும் வாழ்நாள் பூராவிலும் கிடைக்கப்பெறும் அனுபவங்களை முழுமையான ஆளுமையின் நிலவுகைக்காக அமுற் படுத்துவதும், ஆயுள்காலக் கல்வியின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றமையினாலும், நேர்நோக்கங்களை எய்துவதற்கும் ஏற்றவாறு, கல்விமையச் சமூகத்தை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அதன் மூலம் ஒவ்வொருவரும் எவ்வேளையிலும் தமக்குத் தேவையான கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல் வேண்டும். எதிர்கால உலகில் வாழ்வதற்குத் தேவையான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்குப் பாடசாலையையும், பாடசாலைக்கு வெளியேயான யதார்த்த உலகையும் தயார்ப்படுத்துதல் வேண்டும். சமூகத்தின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் உபகரணத்தையும் கற்றலுக்கான துணையாகக் கொள்ளலாம். ஒவ்வொரு தனியாளுக்கும் கற்றுக்கொள்ளக் கற்பிப்பதன் மூலம் ஒவ்வொரு புறப் பொருளையும் தனது விளக்கத்தை விரிபுபடுத்திக் கொள்வதற்காக அவன் பிரயோகிப்பான். அதன் ஊடாக ஆயுட்காலக் கல்வி கிடைக்கப்பெறும். இவ்வாறாகக் கல்விக் கருமத்தொடரில் எப்போதும் தொடர்பு கொள்கின்ற தனியாள்களே நவீன தொழினுட்ப, விஞ்ஞானபூர்வ யுகத்துக்குத் தேவையாக உள்ளது.

## 4.11 சமுதாய எண்ணக்கரு

சமூகம் என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டுள்ளன. "ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் பொது ஒழுக்க நெறிகளையும் நிறுவனங்களையும் ஏற்றுக் கொண்டும் ஒருவருடனொருவர் சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டும், நாம், எனும் பொது உணர்வுடன் வாழும் மக்கட் கூட்டத்தினரே சமூகம் ஆகும்" என்பது சமூகவியலாளர்களின் கருத்தாகும்.

"மிக அணித்தான மக்கட் கூட்டமே சமூகமாகும்" என மேலும் சுருக்கமாக இதனைக் குறிப்பிடலாம். சமூகம் என்பது அதனைவிடப் பரந்த ஆனால் பொதுவான கலாசாரத்தினால் பிணைந்து, பொது நோக்கங்களை மையமாகக் கொண்ட குறித்த தனித்தன்மைகளைக் கொண்ட மக்கட் கூட்டமாகும்.

சமூகம் அண்மித்த வெளியைச் சேர்ந்தாகும். அதனைச் சேர்ந்தோர், தாம் வாழும், கற்கும், விளையாடும், பொழுதுபோக்கும் இறுதியில் இறந்து மடியும் வெளியுடன் தொடர்புற்றுக் காணப்படுகின்றனர். எவ்வாறான மக்கள் கூட்டத்தினரை எடுத்து நோக்கினும் அவர்கள் ஒவ்வொருவரும், ஒரு குறிப்பிட்ட அடிப்படைச் சமூகத்தைச் சேர்கின்றனர். அடிப்படையான யாதேனும் சமூக மாற்றங்களுக்கான அத்திவாரம் இடப்பட வேண்டிய இடம் இதுவாகும். தனியாளின் அறிவு விரிகையடையும் போது தமது சமூகம் தொடர்பான காட்சிப்புலம் படிப்படியாக விரிவடைகின்றது. அறிவு விரிகையடையும் அளவுக்கு ஏற்ப, சமூகமானது படிப்படியாக, பிரதேசம், மாகாணம், நாடு, உலகம், அண்டம் ஆகிய ஒவ்வொன்றையும் தனது சமுதாயமாக மாற்றிக் கொள்கின்றான். சமூக அபிவிருத்திக் கருமத்தொடரில் சமூகத்தை விட சமுதாயமே தீர்க்கமான காரணியாகக்கின் கருதப்படுகின்றது. சமுதாயத்தையே அபிவிருத்தியின் அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.18 சமுதாயத் தலைமைத்துவம்

அபிவிருத்திக் கருமத்தொடரில் ஊரில் உள்ள மக்கட்கூட்டத்தினரை அடிப்படை அலகாகக் கருத நவீன சமுதாய அபிவிருத்திக் கல்வியியலாளர் முயல்கின்றனர்.

அத்தோடு அபிவிருத்தி என்பது மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் ஒரு கோலமன்று. மாறாக அது கீழிருந்து ஆரம்பிக்க வேண்டிய ஒரு கருமத் தொடராகும் என்பது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சமுதாயத்தில் பல சக்திகளும் பல திறமைகளும் பொதிந்துள்ளன. அச்சக்திகளையும் திறமைகளையும் அவர்களாகவே உணர்ந்து கொள்ள வழிசெய்வதும் அவர்களது சொந்தச் சிந்தனா சக்தியையும், ஆரம்பிக்கும் திறனையும் பிரயோகித்து அவர்களது பரஸ்பர ஒத்துழைப்பு, ஒத்தாசை ஆகியவற்றின் ஊடாகப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதையும் விளங்கிக் கொள்ளலே முக்கியமானதாகும். இவ்வடிப்படையின்கீழ், தத்தமக்கு உதவிபுரிந்து கொள்வதற்காக, பொதுமக்களுக்கு உதவும் முறையே சமுதாய அபிவிருத்தியாகும் என விளக்கம் கூறலாம்.

இவ்வடிப்படைக்கு அமையக் கருதி, சமுதாயத்துக்குத் தலைமைத்துவத்தை வழங்கும் தலைவரொருவரால் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய சக்திகள் பல உள்ளன. ஒவ்வொரு தனியாளும் முக்கியமானவர் எனும் அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு, சமூகத்துடன் கருமமாற்ற வேண்டும் என்பது புதிய கருத்தாகும். ஒவ்வொரு தனியாளும் தனது பிரதேசத்துக்காக ஊருக்காக நட்டுக்காக உலகத்துக்காக யாதேனும் சேவையை ஆற்றலாம் என்பது இங்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு தனியாளும் மதிப்பளிக்கப் படவேண்டியவர் எனக் கருதப்படுகிறார். ஒவ்வொருவரதும் கருத்தை மதித்தல் வேண்டும். அத்தோடு ஒவ்வொருவரதும் சொந்த நன்மையை விட பொது நன்மை முக்கியமானது எனக் கருதப் பழக்குதல் வேண்டும். பிரச்சினைகள், மோதல்கள் கலகங்கள் ஏற்படின் அவற்றை சமாதானமான கலந்துரையாடல்கள் மூலம், அகிம்சை முறை மூலம் ஒழுக்க நெறிகளையும் விழுமியங்களையும் கருத்திற் கொண்டு தீர்த்துக் கொள்ளல் வேண்டும்.

மேற்கூறியவாறு தொழிற்படுவதற்குத் தேவையான அறிவு, மனப்பாங்குகள் திறன்கள் போன்றவற்றை, வளர்த்துக் கொள்வது சமுதாயத் தலைவரின் பொறுப்பாகும். இவ்வடிப்படையில் சமுதாய அபிவருத்தி என்பது மனித குலத்தின் உயரிய ஒழுக்க நெறிகளை -குணாதிசயங்களை வெளிக் கொணர்ந்து அக்குணாதிசயங்களை வளர்ப்பதன் மூலமும் அவற்றுக்கு வலிமையூட்டுவதன் மூலமும் அப்வொழுக்கக் குணாதிசயங்களை ஆக்க பூர்வமாகப் பொது நன்மைக்காகப் பிரயோகிப்பதன் மூலமும் சுற்றாடலை ஒழுங்கமைத்துக் கொள்ளல் சமுதாயத் தலைவரின் பொறுப்பாகும்.

மேல்மட்டத்திலிருந்து திட்டமிடப்பட்டு தயாரிப்படுத்தப்பட்ட அபிவிருத்த் வேலைத்திட்டம் மக்கள் மீது பலவந்தமாகச் சுமத்தப்பட்டது. அத்திட்டம் மக்களுக்குப் பொருத்தமானது என முடிபு செய்து அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக மக்கள் பிரயோகிக்கப்பட்டனர். இதுவே பண்டைக்காலத்தில் சமுதாய அபிவிருத்தியாகவும் சமுதாயத்துக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதாயும் கருதப்பட்டது. எனினும் தற்காலச் சமுதாய அபிவிருத்தியானது கீழிருந்து மேல் நோக்கிப் பாய்ந்து செல்வதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொதுமக்களின் ஈடுபாட்டுடன், வாய்ப்பிருப்பின் மக்களின் ஆரம்பிக்கும் சக்தியையும், ஆர்வத்தையும் பயன்படுத்திக் கொண்டு, பொதுமக்களுக்குச் சிறப்பான வாழ்க்கை முறையொன்றினை ஏற்படுத்திக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு அமுற்படுத்தப்படும் ஒரு முயற்சியே சமுதாய அபிவிருத்தியாகும்."

பொதுமக்களின் ஆரம்பிக்கும் சக்தி, சுயவிருப்பின் பேரில் அல்லது தன்னிச்சையாக வெளிக்கொணரப்படாவிடின், பொதுமக்களிடத்தே, ஆர்வத்தையும், தொழிற்படுதன்மையையும் ஏற்படுத்துவதற்கான விருப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நுட்பமுறைகள் மூலம் அபிவிருத்தியின்பால் சமுதாயத்தை முகப்படுத்துதல் வேண்டும். சமுதாயத்தலைவரின் செயற்பங்கை இதற்கமைய விளங்கிக் கொள்ள முடிகின்றது.

## 4.13 ஆசிரியர் ஒரு சமுதாயத் தலைவராவார்.

ஆசிரியர் பொதுமக்களை அஞ்ஞான இருளிலிருந்து மீட்டு, அவர்களை விஞ்ஞான ஒளியின்பால் கொண்டு செல்கின்றவராகவும் அதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கருமமாற்றும் முன்னோடியாகவும் இருத்தல் வேண்டும். மிக விரைவாக மாற்றமடைகின்ற ஒரு சமூகத்தில் பொதுமக்களுக்கு புதிய உலகத்தை அறிமுகஞ்செய்து கொடுத்து, சரியான வழிகாட்டலை வழங்கி அவர்களுக்குத் தைரியமூட்டும் பெரும் பொறுப்பும் ஆசிரியரையே சார்கின்றது.

பாடசாலைக்கு வரும் பிள்ளைகளின் அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் ஆகியவற்றை வளர்த்து, அப்புதிய ஞானத்தையும் சக்தியையும் பிள்ளைகளின் ஊடாக சமுதாயத்துள் பரப்பி, அதன் மூலம் சமுதாயம் முழுவதையும் ஒளிமயப்படுத்தும் கருமத்துக்காக ஆசிரியர் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பண்டைய கல்விமான்கள் இல்லாத ஊர்களில், அல்லது சமூகங்களிற் போன்றே, நவீன சமூகங்களிலும் சமுதாயத் தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய யாதேனும் உறுதியான அடிப்படையிலிருந்து பொருளுள்ள மாற்றமொன்றுக்கு வழிகாட்டியபடி, நிலையான அத்திவாரமொன்றினை இடக்கூடிய சக்தியை ஆசிரியர் கொண்டுள்ளார். அவர் தனது பொறுப்புக்களை - கடமைகளை நன்கு உணர்ந்து தனது சக்திகளையும் ஆற்றல்களையும் நன்கு விளங்கிக் கொண்டு, செயற்படுபவராக இருப்பின் சமுதாயத்துக்குத் தலைமைத்துவத்தை வழங்குகையில் அவர் பெறும் இடம் தொடர்ந்தும் அவ்வாறே நிலவும் என்பதில் ஐயமில்லை. கீழிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் அபிவிருத்திக் கருமத் தொடரொன்றினைத் திட்டமிட்டு அமுற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படையையும் சக்தியையும் கிராம மட்டத்தில் விருத்தி செய்வதற்காக ஆசிரியர் செயலாற்ற முடியும். பொதுமக்களின் அறிவை மலரச் செய்து அவர்கள் பின்னிப் பிணைந்திருக்கும் மௌனக் கலாசாரத்திலிருந்து அவர்களை மீட்டு அவர்களை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வது ஆசிரியரின் பொறுப்பாகும். இதற்குத் தேவையான பல திறன்களை ஆசிரியர் கொண்டுள்ளார். அவர் தனது பாடசாலையாக சமுதாயத்தைக் கருதலாம். அச் சமுதாயத்துக்கு வழிகாட்டுபவராக, அவர்களது ஞானத்தை மலரச் செய்பவராக ஆசிரியர் செயலாற்றுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பாடசாலையில் கற்கும் மாணவான் நாளை. சமுதாய கருமமாற்றுகின்ற வர்களுக்கு வழிகாட்டுகின்ற ஒருவராக மாறலாம். எனவே ஆசிரியர் தனது சமுதாயத்தின் அபிவிருத்தித் தலைமைத்துவச் செயற்பங்கைச் சரிவர உணர்ந்து கொண்டு கருமமாற்றுவராயின் அச்சமுதாயத்தை விருத்திசெய்து அவர்களுக்கு வழிகாட்டி, தேசத்தவனாக்கிப் புத்துணர்வு ஊட்டக் கூடிய ஒருவராக மாறலாம். இவ்வாறாக சமுதாயத் தலைமைத்துவ செற்பங்கை ஏற்றுக் கொள்வதற்குத் தேவையான சக்தியை ஒவ்வொரு ஆசிரியரும் தன்னிடத்தே வளர்த்துக் கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

**செயற்பாடு : 3**

பின்வரும் செயற்பாட்டை நிறைவுசெய்து, நீங்கள் பெற்ற அறிவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

1. நீங்கள் தற்போது கற்பிக்கும் பாடசாலையின் அயற் சமுதாயத்தை அபி விருத்தி செய்வதற்காக, உங்கள் பாடசாலையும் ஆசிரியர் குழாமும் இதுவரையில் ஆற்றியுள்ள கருமங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

2. உங்களது அயற் சமுதாயத்தை ஆய்வு செய்து அச்சமுதாயத்துக்குத் தலை மைத்துவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காகப் பிரயோகிக்கக்கூடிய பொருத்த மான வேலைத்திட்டமொன்றினைத் திட்டமிடுக.

## 5.0 சாராம்சம்

அபிவிருத்தி எண்ணக்கருவின் வரலாற்று விரிகை தொடர்பான விளக்கத்தை இவ்வத்தியாயத்தின் மூலம் நீங்கள் பெற்றிருப்பீர்கள் என எண்ணுகிறோம். கல்விக்கும் அபிவிருத்திக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பது இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் தெளிவாகி உள்ளது. நாடு என்ற வகையில் கவனிப்பினும் தனியாள் என்றவகையில் நோக்கினும் அக்கூற்று பொருளுடையதாகின்றது.

அபிவிருத்தி எனும் எண்ணக்கரு, காலத்துக்குக் காலம் புதுப்புது வரை விலக்கணங்களுக்குட்பட்டு, தற்போது, நிலவுகின்ற, மனித மைய அபிவிருத்தி எண்ணக்ககரு வரை விரிகையடைந்துள்ளது. ஆரம்பத்தில் பொருளாதார பண்புசார்ந்த அளவுசார்ந்த பிரிவுகளின் கவனத்தை ஈர்த்த அவ்வெண்ணக்கரு தற்போது ஆன்மீகப் பண்பு சார்ந்த பிரிவில் கூடிய கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்கு அமையக் கல்வியியலாளர்கள் தமது கவனத்தைச் செலுத்தும் விதமும் வேறு பட்டுள்ளது. நவீன உலகுக்கும் எதிர்கால உலகுக்கும் எவ்வாறான அபிவிருத்தி எண்ணக்கரு பொருத்தமானது என்பது தொடர்பான பல்வேறு அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்புதிய அபிப்பிராயங்களின் ஊடாகவே "அடிப்படைத் தேவைகள் எண்ணக் கரு" தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவாக மாற்றமடைகின்ற உலகினை எதிர்கொண்டு, அபிவிருத்தியை நோக்கி மனிதன் காலடியெடுத்து வைக்கும் பயணத்தில் நாளுக்கு நாள் கிடைக்கப்பெறுகின்ற புத்தறிவை பொதுமக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு 'ஆயுட்காலக் கல்வி, எண்ணக்கரு', கல்விமையச் சமூக எண்ணக்கரு' என்பனவற்றில் தற்காலத்தில் கவனஞ்செலுத்தப் படுகின்றது. ஒவ்வொரு தனியாளும் தமது வாழ்நாள் பூராவும் கற்றல் வேண்டும். இக்கருமத்தின் போது கல்வியைத் தனியே, முறைசார் பாடசாலைக்கு மட்டும் வரையறுத்துவிட முடியாது. முறைசாரா, முறைமை அற்ற, பிரிவுகளின் ஊடாகவும் அதற்கான ஒத்து ழைப்பு கிடைக்கப்பெற வேண்டும். அவ்வாறான கல்வி மையச் சமூகத்தில் ஆசிரியர் தொடர்ந்தும் பாடசாலைக் கல்வியில் மாத்திரம் ஒட்டியிராது. சமுதாயக் கல்வியின் முன்னோடியாக, வழிகாட்டியாக, தலைமைத்துவம் வழங்கிச் செயற்பட வேண்டும் என்பதும் தற்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு அபிப்பிராயமாகும். இதன் மூலம் ஆசிரியரின் செயற்பங்கு விரிகையடைந்துள்ளது.

## 6.0 பிற்சோதனை

கல்வியும் அபிவிருத்தியும் தொடர்பான இவ்வத்தியாயத்தை நீங்கள் வெற்றி கரமாகக் கற்றுள்ளீர்கள் எனக் கொள்வோம். நீங்கள் பெற்ற அறிவைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளித்து உங்களது அறிவுமட்டம் தொடர்பான சுயமதிப்பீட்டில் ஈடுபடுங்கள்.

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவினதும் இடைவெளியை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைச் சொற்பட்டியலிலிருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. பொருளாதாரச் சுட்டிக்கும் கல்விச் சுட்டிக்கும் இடையே ........................ உண்டு என்பது ஆராய்ச்சிகள் மூலம் தெளிவாகியுள்ளது.

2. பாடசாலையும் சமுதாயமும் பரஸ்பர ................................ கருமமாற்று வதன் மூலம் கல்வி அபிவிருத்தி ஏற்படுகின்றது.

3. கல்வியானது விசேடமாக, அபிவிருத்தி தொடர்பான ........................ இன் மூலம் தோன்றும் பெருந்தொகையான அபிவிருத்தி மாதிரிகளுக்கு இடமளிக்கக் கூடியதாக அமைதல் வேண்டும்.

4. ஆசிரியர் ........................................ இருந்த படியே தலைமைத்துவம் வழங்க வேண்டிய ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பட்டியல்

தொடர்பு, ஒற்றுமையுடன், ஆக்கபூர்வ சிந்தனை, சமுதாயத்துள்

பின்வரும் ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

5. திருப்திகரமான சமுதாயம் காணப்படின் அங்கு சமுதாய அபிவிருத்தி நிகழும் எனக் கருதலாம். அச் சமுதாயமே சகல அம்சங்களிலும் அபிவிருத்தியை நோக்கி முன்னேற வேண்டுமெனின் அவர்கள்,

   1. சுறுசுறுப்புடன் உற்சாகத்துடன் உயிர்ப்புடன், கருமமாற்ற வேண்டும்.
   2. ஒவ்வொருவரும் தம்மை மட்டும் கருத்திற்கொண்டு கருமமாற்றுதல் வேண்டும்.
   3. சமூகக் குறிக்கோள்கள் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   4. கற்கும் போட்டியில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

6. இறவாது, அழியாது காணப்படும் சமூகத்துக்குப் பொருத்தமற்றதும், அபிவிருத்தி எனும் பெயரில் அறிவை நோக்கிச் செல்வதுமான கல்வி எனக் குறிப்பிடப்படுவது.

   1. சமுதாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்படும் கல்வியாகும்.
   2. நுகர்வுவாத போட்டிமுறைக் கல்வியாகும்.
   3. ஆளுமை விருத்திக்காக வழங்கப்படும் கல்வியாகும்.
   4. சமுதாய அபிவிருத்தியை மேம்படுத்தும் கல்வியாகும்.

7. ஒரு நாட்டை அபிவிருத்தி செய்யும் போது கட்டாயமாக வளர்க்கப்பட வேண்டிய காரணி.

   1. பொருளாதாரமாகும்.
   2. பயன்படுத்தக்கூடிய வளங்களின் அளவாகும்.
   3. மனித உழைப்பாகும்.
   4. அறிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கற்றலானது, பிள்ளை, பாடசாலை நேரத்துள் மட்டும் பெற்றுக் கொள்ள வேண்டியதொன்றாகும் எனும் கருத்தை மறுதலிக்கும் கல்வி எண்ணக்கரு யாது?

1. ஆசிரியர் மையக் கல்வி

2. மாணவர் மையக் கல்வி

3. ஆயுட்காலக் கல்வி

4. முறைமையில் கல்வி.

9. எவராயினும் தான் விரும்பும் வேளை, விரும்பிய இடத்துக்கு வந்து, விரும்பிய அளவு கற்றுச் செல்லக் கூடிய வாய்ப்பை அளிக்கும் கல்விமுறை,

1. முறைமையில் கல்வியாகும்.

2. கற்றல் மையக் கல்வியாகும்.

3. முறைசாராக் கல்வியாகும்.

4. ஆயுட்காலக் கல்வியாகும்.

## 7.0 விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தொடர்பு | 5. | 1 |
| 2. | ஒற்றுமையுடன் | 6. | 2 |
| 3. | ஆக்கபூர்வ சிந்தனையுடன் | 7. | 3 |
| 4. | சமுதாயத்துள் | 8. | 3 |
| | | 9. | 2 |

## 8.0 ஒப்படைகள்

1. இலங்கைக்குப் பொருத்தமான அபிவிருத்திக் கருமத்தொடரைக் கட்டியெழுப்பும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய கோட்பாடுகளைக் கலந்துரையாடுக.

2. "பாடவிதானத்தின் ஊடாக நல்லொழுக்க விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்" கலந்துரையாடுக.

3. ஆயுட்காலக் கல்வியை பொருளுள்ளதாக்குகின்ற, கற்றல் மையச் சமூகத்தை உருவாக்குவதற்காக, ஆசிரியர் நிறைவேற்றக் கூடிய பொறுப்புக்களைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.0 கலைச் சொற்றொகுதி

| | | |
|---|---|---|
| 1. கல்வி எண்ணக்கரு | - | Concept of Education |
| 2. மாதிரி | - | Model |
| 3. உண்ணோக்குகை | - | Introspection |
| 4. முடிய அபிவிருத்தி எண்ணக்கரு | - | Retarted Programme Concept |
| 5. பண்புசார் விருத்தி | - | Qualitative Development |
| 6. நிகர தேசிய உற்பத்தி | - | Gross National Product |
| 7. நியதி | - | Determinant |
| 8. சனசமூக அபிவிருத்தி | - | Community Development |
| 9. வலிமை | - | Strength |
| 10. தலா வருமானம் தனியாள் வருமானம் | - | Per Capita Income |
| 11. போக்கு | - | Trend |
| 12. செயற்பங்கு | - | Role |
| 13. அடிப்படைத் தேவை எண்ணக்கரு | - | Concept of basic need |
| 14. ஆயுட்காலக் கல்வி | - | Life long Education |
| 15. உணர்வு | - | Consciousness |
| 16. திறந்த அபிவிருத்தி மாதிரி | - | Open Development model |
| 17. அபிவிருத்தி | - | Development |
| 18. அபிவிருத்திக் கல்வி | - | Development Education |
| 19. சமூகம் | - | Society |
| 20. சமுதாயம் | - | Community |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10.00 மேலதிக வாசிப்புக்கான நூல்கள்

1. சந்திரசேகரம். ப- கல்வித் தத்துவம்

2. பேராசிரியர் அரம்பத்த. தர்மசேன
சனசமூகமும் கல்வியும் - கொழும்பு பல்கலைக்கழகம்,
கல்விப்பீட வெளியீடு. 1982.

3. அத்துகோராள தாயா ரோஹன
புதிய கல்விக் கட்டுரைகள்- கொடகே சகோதரர்கள் வெளியீடு 1982

4. அத்துக்கோரள - தயா ரோஹன
வாழ்க்கைக்கான கல்வியும் விடுதலைக்கான கல்வியும்.
- ஷிக்ச மந்திர வெளியீடு. 1986

5. போராசிரியர் ரஞ்ஜித் ருபேரு
புதிய கல்வி எண்ணக்கருக்கள் - இலங்கைத் தேசிய நூலக சேவைகள்
சபை - 1988

6. ஜயா கஜநாயக்க, - ஜே. டி. பத்திரண,
பதிப்பாசிரியர்: முதியோர் கல்வியும் அபிவிருத்தியும் 1,2,3 ஆம்
இதழ்கள்.
தேசிய பூரண கல்விக் கழகம், கொழும்பு, 1984, 85, 87.

6. Coombs P. H. & Manager A-
Attacking Rural Poverty - How Non - Formal
Education Can Help
- John- Hofkin Unversity Press

7. Curle Adam -
Education for Liberation
New York - 1973.

8. Lengrand Paul -
An Introduction to Life Long Education
Unesco - 1970.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by

**AJ PRINTS**

No: 1B, P.T. De SilvaMawatha, Dehiwala

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org